2826

T.N.L.A Debates

Official Report

Vol. III No. 3

21st March 1985

25th March 1985

C

D

V211,31 N85

N85·3·25

136323

26/86

வெளியீடு 24-10-1985

Issued 24—10—1985

2826

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 21, 1985 - தொகுதி III எண் 3

Thursday the 21st March 1985 - Volume III No 3


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3-50 paise.

N85·3·3

136323
சென்னை-600 008.

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் 273—280

2. ஒத்திவைப்புத் தீர்மானம்:

கோவை, (குறிச்சி) தேசீய நூற்பாலைக் கழகத்திற்குச் சொந்தமான உணவு விடுதியில் உணவு உட்கொண்ட தொழிலாளர்கள் உடல்நலம் பாதிக்கப்பெற்றது. 280—285

3. கவன ஈர்ப்புகள்:

(அ) மஞ்சள் நோயால் நெல் பயிர் பாதிப்பு 286—287

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தரமான உணவுப் பொருள் வழங்குவது 287—290

4. அறிவிப்புகள்:

கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1985 (ஆ.இ.) 291

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1985 291

(ஆ) சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 298

6. அரசினர் தீர்மானங்கள் :

(அ) விதி 33-ஐத் தளர்த்தல் 291

(ஆ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம் 292

7. அரசினர் தனித் தீர்மானம் :

அரசியலமைப்பு (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவிற்கு ஏற்பளித்தல் 292—298

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் 332

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1985, மார்ச் 21, வியாழக்கிழமை.**

**பங்குனி 8, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள."

பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன. ஆனால் உயர்ந்தவரிடத்தில் மட்டும் உள்ள அருளாகிய செல்வமே செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வமாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### திருப்பூர் காட்டன், ஸ்பின்னிங் மற்றும் வீவிங் மில்ஸ்.

9. (*வினா எண். 293)—**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐந்து மாத காலமாக மூடிக்கிடக்கும் திருப்பூர் காட்டன், ஸ்பின்னிங் மற்றும் வீவிங் மில்லை மாநில அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** இல்லை.

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆப் ஹாண்டுலூம்ஸ் கட்டுப்பாட்டின் கீழ் கோவையில் ஜோதி மில்ஸ், ஜெயலட்சுமி மில், மது ஸ்பின்னிங் மில்ஸ் எடுத்திருப்பதைப் போல திருப்பூர் காட்டன் மில்ஸ் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு செயற்குறிப்பு இல்லை என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ரிலீப் அண்டர்டேக்கிங் மெஷரின்போது

இந்த ஆலைக்கு ஓராண்டு காலம் இரண்டு நிபந்தனைகள் மீ
ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தானே சீர்செய்வதற்காக அரச
அனுமதி அளித்தது. அது இன்னும் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி
அரசே ஏற்கின்ற ஆலைகளில், தொழிலாளர்களைப் பங்குதாரர்
களாக ஏற்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவ
அவர்களே, அரசு ஏற்குமா என்பது செயற் குறிப்பில் இல்ல
என்று சொன்னேன். எனவே, இவ் வினாவிற்குப் பதில்
எழவில்லை.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி
பஞ்சாலை முதலாளிகள், சுதந்திரமான முறையில் பஞ்சாலை
களை கொள்ளையடித்து மூடிவிட்டு போய் விடுகிறார்களே,
இதனை நிரந்தரமாகத் தடுப்பதற்கு உரிய சட்டத்தை அரசு
கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு ரிலீப் அண்டர்டேகிங் ஆக்ட் 1969-ன் கீழ்
இம்மாதிரி தொழிலாளிகள் வேலையை இழக்கக் கூடாது. அது
தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக ரிலீப் அண்டர்டேக்கிங்
மெஷராக இந்த ஆலையை அரசு எடுத்து உள்ளது. ஓராண்டு
காலம் அதற்கு அனுமதி அளித்து ஏற்கனவே உள்ள கடன்களைச்
சீர்செய்யவும், தொழிலாளிகளுக்குத் தொடர்ந்து வேலை
கொடுக்கவும் அனுமதி அளித்துள்ளது. இது ஒரு தனியார்
நிறுவனம் ஆகும். சுமார் 600 தொழிலாளர்கள் வேலை
செய்கிறார்கள். அது தான் நிலைமை.

திரு. ஆர். செங்காளியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,
கோயம்புத்தூரிலே திருப்பூர் காட்டன் மில் மாத்திரம் அல்ல,
ஜனார்த்தனா மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ், பத்மா மில்ஸ், ராமகிருஷ்ணா
இண்டஸ்ட்ரீஸ் போன்றவை மூடப்பட்டிருக்கின்றன. 6 மாதத்
திலிருந்து இரண்டு ஆண்டுக்காலம் ஆயிற்று. அரசு உடனடியாக
எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர்
அவர்களே, ஏற்கனவே தமிழ்நாடு அரசு இரண்டு ஆலைகளை
எடுத்து, கசப்பான உணர்ச்சிகள், அனுபவங்கள் ஏற்பட்டு இருக்
கின்றன. அந்த நிறுவனங்களில் தொடர்ந்து லாபம் இல்லை
என்றாலும் கூட நஷ்டம் இல்லாமல் நடத்தமுடியாமல் இருக்
கிறது. ஜனார்த்தனா மில் கூட தங்களுக்கு இதுபோல ரிலீப்
அண்டர்டேக்கிங் மெஷர்ஸ்லே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
விண்ணப்பித்துக்கொண்டு இருக்கிறார்கள். தேசியமயமாக்க
வேண்டிய பெரிய பொறுப்பு இந்திய பேரரசிடம் இருக்கிறது.
தமிழ்நாட்டு அரசினால் முடிந்தது இவ்வளவுதான்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மில்கள்
மூடுவது என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. வருடக் கணக்கில்
மில்கள் மூடப்பட்டு, ஆயிரக்கணக்கில் தொழிலாளிகள் பட்டினி
கிடக்கின்றபோது, அரசாங்கத்திற்கு ஒரு பெரிய பொறுப்பு
ஏற்படுகிறது. ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்டில், பிற எல்லா மில்
களையும் நீங்கள் எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்ல
வில்லை. குறைந்த பட்சம், அதனுடைய நிர்வாகத்தில், அரசாங்
கத்தினுடைய பிரதிநிதியை வைத்துக்கொண்டு, வங்கிக் கடன்கள்
போன்றவைகள் கொடுக்க வைத்து, கிடைக்கின்ற பணத்தை
மானேஜிங் டைரக்டரும், மற்றவர்களும் எடுத்துக்கொள்ளாமல்
மேற்பார்வை பார்த்து ஒழுங்காக தொடர்ந்து மில்லை நடத்து
வதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க முன்வருமா ?
ஏனென்றால் அது உங்களைச் சேர்ந்த கடமை. அதைச் செய்ய
முன்வருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ரிலீஃப் அண்டர்டேகிங் சட்டத்தின் கீழ்
ஏற்கனவே தமிழகத்தின் சார்பில் ஒரு உதவி இயக்குநரை அந்த
நிர்வாகக் குழுவில் உறுப்பினராக சேர்க்கப் சொல்லியிருக்
கிறோம். 9—3—1985 அன்று சேர்த்திருக்கிறோம். ஏற்கனவே
கடன் கொடுத்ததன்படி அது சம்பந்தமாக தனியாகப் பேசி, ஒரு
சமரச முடிவு ஏற்படுத்த வேண்டுமென்று ஆலை அறிவுறுத்தப்
பட்டிருக்கிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, கோவை மாவட்டத்தில் இருக்கிற நூற்றுக்கும் மேற்பட்ட
நூற்பாலைகளில், இப்போது இரண்டு மூன்று ஆலைகள் மூடப்படு

இன்ற நிலையில் வந்திருக்கிறது. அதுவும் குறிப்பாக அந்த திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்லை மூடுவதற்கான காரணம், தொழில் தகராறா அல்லது நிர்வாகத்தினரிடையே, பங்குதாரர்களிடையே தகராறா என்பதை அரசு அறியுமா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில் ஏற்கனவே திருவாங்கூர் மாநில வங்கியிடமிருந்து வாங்கிய கடனை நிதி நிலை சரியாக இல்லாத காரணத்தால் கொடுக்க முடியாத நிலையில், அந்த ஆலையை 21—10—1984 முதல் மூடவேண்டிய நிலை ஏற்பட்டது.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு இந்தப் பஞ்சாலையை ஏற்று நடத்துவதற்கான குறிப்பு ஆய்வில் இல்லை என்றால், தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் மூலமாவது நடத்துவதற்கு தமிழக அரசு பரிந்துரை செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பரிந்துரை செய்யும்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது இந்த ஆலையை எடுப்பதற்கு இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழகம் தொழில் வளர்ச்சி பெறவேண்டும் என்ற அரசாங்கத்தினுடைய கொள்கையை ஒரு பக்கத்தில் அறிவித்துக்கொண்டு, இப்படி மூடப்படக் கூடிய மில்லை எதிர்காலத்திலாவது, தமிழக முதலமைச்சரை கலந்துகொண்டு எடுப்பதற்கு அரசு யோசிக்குமா என்று கேட்பதோடு, 600 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த 600 தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே இரண்டு ஆலைகளை புதுக்கோட்டையில் காவிரி ஸ்பின்னிங் ஆலையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சூப்பர் சோமசுந்தரம் ஸ்பின்னிங் மில்லையும், மாண்புமிகு முதல்வர் புரட்சித்



தலைவர் அவர்கள்தான் எடுத்து, தொழிலாளர்கள் வேலை இழக்கக் கூடாது என்பதால், தொடர்ந்து நஷ்டம் வந்தாலும், அந்த மில்களை ஏற்று நடத்திவருகிறார்கள். இன்றைக்கும் ஓராண்டு காலம் இந்த திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்லுக்கு காலத் தவணை கொடுத்து வருகிறோம். அவர்கள் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கோயம்புத்தூர் உதவித் தொழிலாளர் நல அலுவலர் தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டு வருகிறார்கள். விரைவில் சுமூகமான முடிவு ஏற்படும் என்று நம்புகிறேன்.

## முத்தனேந்தல் சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ்.

குறுகிய கால வினா. 4.—(*வினா எண். 863)-- **திரு. க. பாரமலை :** மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதி முத்தனேந்தல் சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் நிர்வாகத்தை நிரந்தரமாகத் தமிழ்நாடு அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** இல்லை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது முதல் கேள்விக்கு பதிலளிக்கும்போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். சோமசுந்தரம் மில்லை தமிழக அரசே ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது கொஞ்சம் கொஞ்சமாக ஆறு, ஆறு மாதமாக தள்ளிக்கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. இந்த மாதம் 30 ஆம் தேதியோடு காலக் கெடு முடிகிறது. ஆகவே தனியாரிடத்திலே விடப்படுகின்ற நிலை ஏற்படுமோ என்ற அச்சம் தொழிலாளர்கள் மத்தியில் இருக்கிறது. இதைத் தொடர்ந்து அரசு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்கு சட்டத்தின் கீழ் இதை எடுத்து, அந்த நிர்வாகத்தை 4—11—1977 முதல் தமிழக டெக்ஸ்டைல்ஸ் கார்ப்போ

ரேஷன் எடுத்து, அதனுடைய பருவம் ஆண்டுக்காண்டு நீட்டிக்கப்பட்டு, தற்போது 30—9—1985 வரை நீட்டிக்க மத்திய சர்க்காருடன் கடித போக்குவரத்து மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தொடர்புகொண்டு வருகிறார்கள். எனவே தொழிலாளர் நலம் பாதுகாக்கப்படும்.

திரு. க. பாரமலை: சமீபத்தில் ஒரு பத்திரிகை குறிப்பில் இப்படி நலிந்த ஆலைகளை அரசு நடத்துவதற்குப் பதிலாக தனியாரிடம் ஒப்படைக்கின்ற ஒரு யோசனை இருப்பதாக, வெளியே வந்திருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, தனியார் நடத்தித் தோல்வி கண்டு, அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, அதனை நடத்த முடியாத நிலையில், அரசு மேற்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. இதை அரசு தொடர்ந்து தானே எடுத்து நடத்துவதற்கு வழிவகை செய்யுமா?

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மத்திய அரசோடு மாநில அரசு கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறது.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, பொதுவாக பிரச்சினையைத் தட்டிக் கழிக்காமல் பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவதுதான் எங்கள் அரசின் நிலை என்று சொல்லப்படுகிறது. அந்த அடிப்படையில் மூடப்பட்டிருக்கிற பஞ்சாலைகளில் வேலை செய்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து தவிப்பதைத் தடுக்க அரசே எடுத்துக்கொள்ள வேண்டும், ஆனால் அது இயலாது என்று சொல்கிறார்கள். வேலை இழந்திருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு மாற்று மார்க்கமாக இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, எடுத்துக்கொண்ட பிரச்சினையே இன்னும் முடியவில்லை, தட்டிக் கழிக்கிற பழக்கம் எங்களுக்கு இல்லை. தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுப்பதற்கு மத்திய அரசோடு தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.



திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மில்லை மிஸ்மேனேஜ்மெண்ட்டினாலோ அல்லது வேறு காரணத்தினாலேயோ மூடி விடுகிறார்கள். மாநில அரசோ மத்திய அரசோ எடுக்க வேண்டுமென்று சொல்கிறபோது எடுக்க மறுக்கிறார்கள். அந்த சமயத்திலே ஒர்க்கர்ஸ் அதை ஏற்று நடத்த முன்வந்தால் அரசு அதை ஏற்றுக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இதுவரையிலும் யாரும் இந்த நூற்பாலையை எடுத்து நடத்த தைரியமாக முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அப்படி யாராவது ஒருவரைக் கொடுப்பார்களானால் அரசு அதை நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

திரு. ஆர். செங்காளியப்பன்: தலைவர் அவர்களே, என்.டி.சி. மூலமாக கோயம்புத்தூரில் 10 ஆலைகள் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். தமிழக அரசு ஜோதி மில்லையும் விஜயலட்சுமி மில்லையும் இந்த ஹாண்ட்லூம் டிபார்ட்மெண்ட் மூலமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எடுக்கப்பட்ட அந்த 10 மில்களும் நல்ல லாபத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லாபம் இல்லை, நட்டத்தில் இருக்கின்றன என்று சொன்னார்கள். தமிழகத்திலே குறிப்பாக கோயம்புத்தூரினைப் பொறுத்தவரையிலும் எடுத்த ஆலைகள், எல்லா ஆலைகளும் அங்கே மிஷினரிகள் புதுப்பிக்கப்பட்டு, லாபத்தைச் சம்பாதிக்கின்றன, மற்றவைகள் வேண்டுமானால் நட்டத்திலே இருக்கலாம், மத்திய அரசு . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றியெல்லாம் விவரமாக மானியத்தின் மீது பேசும்போது பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தனியார் மில்களில் ஏற்படுகிற லாபநட்டத்தைப்பற்றிச் சொல்கிறார்கள். காவேரி மில்ஸ், சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் ஆகியவற்றில் நட்டம் ஏற்பட்டது என்பதைத்தான் சொல்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்படி மூடப்பட்ட ஆலைகளை எடுப்பதற்கு அரசு தயாராக இல்லையென்றால் மத்திய அரசை அனுமதி மத்திய அரசே எடுத்துக்

[1985 மார்ச் 21

கொள்ளச் செய்வதற்கோ அல்லது அந்தத் தொழிலாளர்களுக்கு அன்-எம்ப்ளாய்மெண்ட் ரிலீப் கொடுப்பதற்கோ ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, செயற்குறிப்பில் இல்லை என்று சொன்னது தற்போதுதான் இல்லை என்று சொன்னேன். நிச்சயமாக அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கு மாற்றுப் பரிகாரம் தேட இந்த அரசு முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துறையிலிருந்து இந்தச் செயலகத்திற்கு மூலக்கேள்விக்கு அனுப்பப்பட்டிருக்கிற பதிலில் "அரசின் பரிசீலனையில் உள்ளது" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "இல்லை" என்று தெரிவித்திருக்கிறார்கள். அமைச்சர்கள் விடைகளைத் திருத்தும்போது திருத்திய விடைகளைப் பேரவைச் செயலகத்திற்கு முன்னதாகவே அனுப்பிவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கோவை, (குறிச்சி) தேசிய நூற்பாலைக் கழகத்திற்குச் சொந்தமான உணவு விடுதியில் உணவு உட்கொண்ட தொழிலாளர்கள் உடல்நலம் பாதிக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. இராமநாதன், ஆர். நடராசன், கு. சுப்பராயன், பொ. உத்திராபதி, கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், வி. பி. சிந்தன், மற்றும் வி. தங்கவேலு ஆகியோர் "கோவை, குறிச்சியில் 14-3-1985 தேசிய ஜவுளி கார்ப்பரேஷன் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் ஆலையில் (சாரதா) உள்ள கேன்டீனில் சாப்பிட்ட 220-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் திடீரென்று வாந்தி, மயக்கம்





1985 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

ஏற்பட்டு மிகவும் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருப்பதால் அப்பகுதி வாழ் மக்கள் தொழிலாளர்கள் இடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் குறிச்சியிலே உள்ள தேசிய ஜவுளி கார்ப்பரேஷன் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் ஆலையில் உள்ள கேன்டீனில் உப்புமா சாப்பிட்ட 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மயக்கம் அடைந்திருக்கிறார்கள். அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் சொல்வதற்குக் காரணம் மில் உணவு விடுதியிலே அவர்களால் வழங்கப்பட்டிருக்கிற உப்புமா என்ன கலந்த காரணத்தினாலோ அதைச் சாப்பிட்டவுடன் மயக்கம் அடைந்திருக்கிறார்கள். ஏதோ ஒரு இடத்திலே நடந்த சம்பவமாக பார்க்காமல் பொதுவாக கடந்த சில தினங்களாக தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்து இத்தகைய செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற காரணத்தினால் மதிய உணவிலே பல்வேறு இடங்களில் இருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கிற . . .

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: I am on a point of order. இப்படிப்பட்ட இம்பார்டெண்ட் ஸ்கீமிலே மாசு கற்பிக்கக்கூடிய அளவிலே பேசுவது சரியல்ல. ஒரு புனிதமான ப்ரோகிராமாக அது இருக்கிறது. ஆகவே அதற்கு மாசு கற்பிக்க வேண்டாம். ஸ்பெஸிபிக்காக குறிப்பிட்டுச் சொன்னால் அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கலாம். இதற்குத்தான் என்னிடத்திலே இப்போது விளக்கம் இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன்: மதிய உணவுபற்றியும் நான் தனியாக கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை பொது விவாதம் ஆக்காமல் இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொன்னால் போதுமானது.

**திரு. கு. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, 200 பேர் மயக்கம் அடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதற்கு பின்னால் கோவை மாவட்டத்தில் தொழிலாளர்களுக்கு மத்தியில் இதனால் கடுமையான ஆத்திரமும், அதிருப்தியும் ஏற்பட்டு இருக்கிறது. இது சட்டம் ஒழுங்கை பாதிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிற காரணத்தால் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உள்ள என்.டி.சி. நிறுவனத்தைச் சேர்ந்த சாரதா மில்லில் தான் 14 ஆம் தேதி விடியற்காலை 3 மணிக்கு 200 தொழிலாளர்கள் அங்கே உள்ள கேண்டீனில் உப்புமா சாப்பிட்டு அவர்களுக்கு அந்த உணவில் ஒரு சந்தேகமான நிலை ஏற்பட்டது. இந்த உப்புமாவில் விஷம் கலந்து இருக்குமோ என்ற ஒரு சந்தேகமான நிலை ஏற்பட்டது. அதை தொடர்ந்து அந்த தொழிலாளர்கள் வாந்தி எடுக்கவும், மயக்கமுற்று விழவும் ஆரம்பித்தார்கள். அந்த முறையில் தான் 200 பேர்கள் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு கோரமான சம்பவம். இந்த ஒரு இடத்தில் இப்போது வந்திருக்கிறது என்று நமக்குப் பட்டாலும் கேண்டீன்கள் என்பது அந்த தொழிற்சாலையின் நிர்வாகத்தின் நேரடியான பொறுப்பில் இருக்க வேண்டிய ஒரு அமைப்பு. தொழிலாளர்களுடைய நன்மைக்காக மட்டும் அல்ல. தொழிலாளர்களின் பாதுகாப்பும் அதில் உள்ளடங்கியிருக்கிறது. அங்கே சாப்பிட்ட அந்தத் தொழிலாளர்கள் இரவு நேரத்தில் வந்து வேலை செய்கிறார்கள், விடிய விடிய வேலை செய்கிற அவர்கள் வேலை செய்கின்ற இடத்தில் களைப்பு ஏற்பட்டு அவர்கள் சாப்பிடு வதற்காக செல்கின்றபோது இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இது தொழிலாளர்கள் மத்தியில் மிகப் பெரிய பயத்தை உருவாக்கியிருக்கிறது. இதனுடைய பொறுப்பாளிகள்; இந்தத் தொழிற்சாலை நிர்வாகிகளும்தான். மத்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் இயங்குகிற ஆலை. அதனால் மட்டும் அதனுடைய முக்கியத்துவம் அதிகம் என்று நான் சொல்ல வில்லை. அங்கே கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் ஒழுங்காக கடைப்பிடிக்கப்படவில்லை. ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வேண்டிய இந்த மாதிரியான வசதிகளை





செய்வதற்கு கேண்டீன் அமைக்க வேண்டும் என்றால் தொழிற் சாலையின் விதிகளுக்கு உட்பட்டு அவைகள் அமைக்கப்பட வேண்டும், நடத்தப்படவேண்டும். அதற்கு தேவையான நிதி உதவிகளை கூட நிர்வாகத்திலிருந்து தரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கு. ரமணி :** இவைகளை எல்லாம் குறிப்பிடுவதற்கு காரணம் விதிகளை அவர்கள் பின்பற்றியிருக்கிறார்களா என்பது தான் பிரச்சினையாக இருக்கிறது. இதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். சொல்லட்டும். ஆனால் தொழிற்சாலைகளில் விதிகளுக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டர்கள் கூட கவனிக்க வேண்டியுள்ளது. இந்த கேண்டீன் நடத்துவதில் நிர்வாகம் எப்படிப்பட்ட நிலைமையில் நடத்துகிறார்கள்? ஒழுங்காக நடத்துகிறார்களா? இல்லையா? என்பதுகூட அதில் உள்ளடக்கி வருகிறது என்பது என்னுடைய கருத்து. இப்படி ஏற்பட்டு இருக்கக்கூடிய ஒரு நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் அவர்களுக்கும் மட்டும் அல்ல, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படக் கூடாது. கேண்டீன்கள் சுத்தமாக இருக்கவேண்டும். அதற்கு ஒரு கண்காணிப்புக் குழு வேண்டும். அதற்கு நிர்வாகத்திலும் பொறுப்பு வேண்டாமா? அது சம்பந்தமாக சரியான முறையில் நாம் விவாதித்து இந்த இந்த முறையில் இதை நடத்த வேண்டும் என்றும், விதிகளை அமலாக்க வேண்டும் என்றும் நாம் விவாதிக்க வேண்டும். அதனால் சில முடிவுகள் வந்தால் இதை ஒழுங்காக செய்ய முடியும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால் மற்ற அலுவல்களை நிறுத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.20.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களிடமிருந்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்துள்ளது.

[1985 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவையை அடுத்துள்ள குறிச்சியில் அமைந்துள்ள தேசிய நூற்பாலைக் கழகத்திற்குச் சொந்தமான ஆலையில் இரவு நேரத்தில்—நைட் ஷிப்ட்—சுமார் 240 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 14—3—1985 அதிகாலை சுமார் 2 மணியிலிருந்து 3 மணிக்குள் 157 தொழிலாளர்கள் இச்சடி அருந்தினார்கள். அவர்களில் 15 பேருக்கு வாந்தியும் மயக்கமும் ஏற்பட்டது. காலை 6-15 மணி அளவில் 78 தொழிலாளர்கள் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும், 79 தொழிலாளர்கள் பீளமேட்டிலுள்ள தொழிலாளர்கள் ஈட்டுறுதி மருத்துவமனையிலும்—அதாவது இ.எஸ்.ஐ. மருத்துவமனையிலும்—அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் சிகிச்சை பெற்று மருத்துவமனையிலிருந்து வீடுகளுக்குத் திரும்பியிருக்கிறார்கள். இச்சடி தயாரிக்கும்போது தற்செயலாக அதில் அரணை (Wild lizard) விழுந்திருக்கிறது என்பதற்காக—அந்தக் காரணத்திற்காக இது ஏற்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதார மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கூறியுள்ளார். அதாவது டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த். இச்சடியின் உணவு மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. பொதுச் சுகாதாரத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் தேவையான தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தொழிற்சாலைகளிலே இருக்கக்கூடிய—இயங்கிக் கொண்டு வருகின்ற இப்படிப்பட்ட கான்டீன்களிலே சுத்தமாகச் சாப்பாடு கொடுக்க வேண்டும்; தரமான சாப்பாடு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாம் இங்கே பல ஆண்டுகளாக இந்த மன்றத்திலே இருந்து கொண்டிருக்கின்றோம். ஏறத்தாழ நான், 22 ஆண்டுகளாகப் பார்த்த வரையிலே இதுதான் முதன் முறையாக ஒரு தொழிற்சாலையிலே நடைபெறுகின்ற கான்டீனிலே இப்படிப்பட்ட ஒரு சம்பவம் ஏற்பட்டிருக்கிறது என்கிற நிகழ்ச்சி வருகிறது. ஆகவே, இதனாலே, அலட்சியமாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதுவொரு பெரிய பிரச்னையாக வருவதாக எனக்குத் தெரியவில்லை.



1985 மார்ச் 21] [டாக்டர் எச். வி. ஹண்டே]

ஏனென்றால், பலயிடங்களிலே அந்தந்தக் கான்டீன்களிலே அங்கேயிருக்கக்கூடிய கமிட்டிகள் இருக்கின்றன; மேனேஜ் மெண்ட் கமிட்டிகள் இருக்கின்றன; லேபர் கமிட்டிகள் இருக்கின்றன; அவர்களும் இந்தக் கான்டீன்களுடைய கண்காணிப்பாளர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர் களெல்லாம் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் நம்முடைய கவனத்திற்கு—அதாவது பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டினுடைய கவனத்திற்கு வருமேயானால் உடனடியாக நாம் கவனிக்கின்றோம். அதே நேரத்திலே, இது ஒரு பெரிய பிரச்னையாக இங்கே தெரியவில்லை என்று நான் சொல்லுகின்ற நேரத்திலே, இதை அலட்சியப்படுத்த வேண்டு மென்று சொல்லவில்லை. ஆங்காங்கு இருக்கக்கூடிய மேனேஜ் மெண்ட், லேபரிலே இருக்கக்கூடிய தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து கண்காணிப்பது ஒரு நல்ல யோசனை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்—கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் ரமணி அவர்கள் சொன்ன அந்தக் கருத்து அந்த வகையிலே நிச்சயமாகப் பயன்படும் என்றுதான் நான் கருதுகிறேன்.

i.e., somethings like persons inside the factory themselves having a sort of a committee to check the contents of food.

நல்ல வகையிலே கண்காணித்து சுத்தமாக வைத்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு ரமணி அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்து பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலேதான் இருக்கிறது. ஆகவே, இதிலே எந்தவிதமான பிரச்னையும் இப்பொழுது, இதை ஒத்தி வைக்கக்கூடிய அளவிற்கு இல்லை என்றும், அதே நேரத்திலே எல்லாவகையான நடவடிக்கை களையும் நாம்—அரசாங்கத்தில் இருக்கக்கூடிய நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த டைரக்டரேட் ஆஃப் பப்ளிக் ஹெல்த் ஏற் கனவே எடுத்துக்கொண்டு வருகின்ற காரணத்தினாலே அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

[1985 மார்ச் 21

### 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) மஞ்சள் நோயால் நெல் பயிர் பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ந. சிவஞானம். மெ. ஆண்டி அம்பலம், எஸ். சிவராமன், ப. தீர்த்தராமன், மற்றும் இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில், நெல் பயிரில் மஞ்சள் நோய் ஏற்பட்டுள்ள காரணத்தால் விவசாய உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

தமிழ்நாட்டில் தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை மாவட்டத்தில் நெற்பயிரில் மஞ்சள் நிறம் படர்ந்து பயிர் பாதிக்கப்பட்டது. இவ்வாறு தாக்குண்ட பயிர்களில் பலதரப்பட்ட பரிசோதனைகள் விவசாயத் துறையினாலும், வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளாலும் நடத்தப்பட்டன. இது ஒரு நோயா அல்லது பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்து இன்மையா என்று ஆராயப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் குறிப்பாக தஞ்சை, திருச்சி, மதுரை போன்ற மாவட்டங்களில் இந்நோயால் பாதிக்கப்பட்ட 45,000 எக்டேரில் தஞ்சையில் 24,000 எக்டேரும், மதுரையில் 18,000 எக்டேரும் பாதிக்கப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பரப்பில் 14,000 எக்டேரில் மழை பெய்தவுடன் மஞ்சள் நிறம் மறைந்துவிட்டது. தஞ்சாவூரிலிருந்து தாக்கப்பட்ட பயிர் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள



1985 மார்ச் 21] (டாக்டர் கா. காளிமுத்து)

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்திற்கு சோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில் ஹைதராபாத்திலிருந்து, அகில இந்திய நெல் ஆராய்ச்சி நிபுணர்களை இங்கு அழைத்து, பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடச் செய்து, நோய்க்கான காரணங்களை ஆராய்ந்து வருகின்றனர். மேலும், வேளாண்மைத் துறை அடியிற்கண்ட முயற்சிகளை செய்து வருகிறது.

1. பச்சை தத்துப் பூச்சியை கட்டுப்படுத்துவது.

2. இந்நோயை எதிர்த்து நிற்கும் (Resistant Variety) நெல் ரக விதைகளை விநியோகிக்க ஏற்பாடு செய்தல்.

3. இந்நோயை எதிர்க்கவல்ல மற்றும் அதிக உற்பத்தித் திறன் உள்ள மேலும் புதிய ரகங்களை தெரிந்தெடுத்தல். தற்போது நடவு செய்துள்ள நவரை பயிரில் எந்தவித பாதிப்பும் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவரவர்களே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக பூச்சி மருந்து, விதைகள் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? என்னுடைய தொகுதியிலுள்ள வத்திராயிருப்பும் இதே நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. இதைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, மானிய விலையில் விதைகள், பூச்சி மருந்துகள் வழங்குவதுபற்றி அரசு பரிசீலிக்கும். அதைப்போலவே, வத்திராயிருப்பு பகுதியிலே இதுபோன்ற பாதிப்பு இருந்தால் அங்கேயிருக்கின்ற விவசாய பெருமக்களுக்கும் நிவாரணம் கிடைக்க ஆவன செய்யும்.

### (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தரமான உணவுப் பொருள் வழங்குவது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உணவு உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்ட மக்களுக்கு தரமான உணவு வழங்கப்படாததால் அப்பகுதி மக்களின் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1985 மார்ச் 21

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, விளவங்கோடு மற்றும் கல்குளம் தாலுக்காக்களில் முறையே சுமார் 4.58 இலட்சம் மற்றும் 4.76 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். விளவங்கோடு தாலுக்காவிலுள்ள 99,566 குடும்ப அட்டைகளுக்கு அதிலுள்ள 169 நியாயவிலைக் கடைகள் மூலமும் கல்குளம் தாலுக்காவிலுள்ள 1,03,127 குடும்ப அட்டைகளுக்கு அதிலுள்ள 167 நியாயவிலைக் கடைகள் மூலமாகவும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன. 1984 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை விளவங்கோடு தாலுக்காவில் மாதமொன்றுக்கு சுமார் 1,000 டன் அரிசியும், 70 டன் கோதுமையும், 190 டன் சர்க்கரையும், கல்குளம் தாலுக்காவில் சுமார் 1,700 டன் அரிசியும், 85 டன் கோதுமையும், 195 டன் சர்க்கரையும் வழங்கப்பட்டுள்ளன.

2. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், உணவு அட்டைதாரர்களுக்கு புழுங்கல் அரிசி, பச்சரிசி இரண்டும் வழங்கப்படுவதாகவும், இந்திய உணவுக் கழகத்திலிருந்து பெறப்படும் தரமான அரிசியும் கோதுமையுமே இந்த மாவட்டத்தில் வழங்கப்படுவதாகவும் கூறியுள்ளார். மணவாழ் மற்றும் கடலோர மக்கள் பச்சரிசி விநியோகத்திற்கு ஆட்சேபம் தெரிவித்ததால் அவர்களுக்கு புழுங்கல் அரிசியே வழங்கப்படுவதாகவும் கூறியுள்ளார். இதுவரை அரிசி தரமற்றதாக உள்ளதென எந்தவித புகாரும் பெறப்படவில்லை என்றும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அலுவலர் ஆகியோர் தரமான அரிசியே தரப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கப்படுவதாக ஒரு அறிக்கை இங்கே படிக்கப்பட்டது. அதில் ஒரு விவரத்தை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இது சம்பந்தமாக புகார்கள் ஏதுவும் வரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து நானே இது சம்பந்தமாகப் பேசியிருக்கிறேன். அது இருக்கட்டும். மனிதன் சாப்பிடுவதற்கு பயன்படுத்திக் கொள்ளமுடியாத அளவிற்கு



1985 மார்ச் 21] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

நாற்றம் அடிக்கக்கூடிய மிக மோசமான அரிசியை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளில் அங்கே விநியோகிக்கப்பட்டது. அதிலும் பிரத்தியேகமாக பெல்ட் ஏரியா என்ற முறையில் அந்த ஏரியாவிற்கு வெளியிலே இருந்து அரிசி வாங்கி வழங்குவதில் சிரமம் இருக்கிறது. இந்தப் பின்னணியில் இப்படி நாற்றமடிக்கக்கூடிய, மோசமான அரிசியை வாங்கிச் சாப்பிடுவதால் பலருக்கு நோய்கள்கூட ஏற்பட்டிருக்கின்றன. இந்நிலையில் இதைத் தவிர்த்து தரமான நல்ல அரிசியை அந்தப் பகுதி மக்களுக்கு குறிப்பாக பெல்ட் ஏரியா மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்கும் என கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் உணவு உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் தமிழகம் இருக்கிறது, ஆனால் என் பகுதியில் அரிசி கிடைக்கவில்லையே என்று முதலில் கேட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 75,000 டன் அரிசி மாதம் ஒன்றுக்கு பொது மக்களுக்கு குறைந்த விலையில் விநியோகிக்கப்படுகிறது. அதில் தான் அந்தத் தாலுகாவிற்கு சுமார் ஆயிரம் டன் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்தேன். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 100 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும் ரூ. 1.75, ரூ. 2 என்று இந்த விலைகளில் வெளிமார்க்கட்டில் ரூ. 3, ரூ. 3.25 என்றிருக்கும்போது, ரூ. 1.75, ரூ. 2 என்று குறைந்த விலைக்கு பொதுமக்களுக்கு அரிசி விநியோகிக்கப்படுகிறது. சத்துணவிற்காக 25,000 டன் இனாமாக வழங்குவதைச் சேர்த்து மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன் அரிசி பொது மக்களுக்குப் போய்ச் சேருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதியில் அவர்கள் சொன்னதுபோல் அரிசித் தட்டுப்பாடு இல்லாமல் அந்தப் பகுதியில் உள்ள 170 நியாயவிலைக் கடைகள் மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் ஆயிரம் டன் அரிசி வழங்கப்படுகிறது. தரமான அரிசிதான் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் வழங்கப்படுகிறது. அந்தப் பகுதி மக்களுக்கு தரமான அரிசி கிடைக்க அதுவும் குறைந்த விலையில் இந்த நியாயவிலைக் கடைகள் மூலமாக கிடைக்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது. தொடர்ந்து இது கண்காணிக்கப்படும்.

(முற்பகல் 9-30)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கம்மியான விலையில் அரிசி விநியோகம் செய்வதால் அரசுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே குறைந்த விலையில் கொடுக்கப் படவில்லை என்று நான் சொல்லவில்லை. பிரச்சனை என்னவென்றால், தரமான அரிசி விநியோகிக்கப்படாததன் காரணமாக, அந்தப் பகுதியிலுள்ள பல ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் கடைகளில் அரிசியை வாங்காமல், வெளிச் சந்தையில் அதிக விலையில் வாங்கக்கூடிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் இந்தப் பிரச்சனையை இங்கே கொண்டு வரவேண்டிய துரதிருஷ்டவசமான நிலை ஏற்பட்டது. ஆகவே, அரசுக்கு ஒரு பக்கம் நஷ்டம் ஏற்படுகிறது; இன்னொரு பக்கத்தில் மக்களுக்கும் அதனால் பயன் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், இந்த சிவில் சப்ளைஸ் கோடவுன்களில் சேமித்து வைத்திருக்கின்ற அரிசி நல்லமுறையில் பாதுகாக்கப்படாததன் காரணமாக, இப்படி துர்நாற்றம் அடிக்கக்கூடிய, மக்கள் அதைப் பயன்படுத்த முடியாத நிலையில் அரசு விநியோகம் செய்வதாக எங்களுக்குக் கிடைத்த தகவல். அரிசியை வாங்கக்கூடிய நேரத்திலே, நல்ல அரிசியாக இருந்திருக்கலாம். அதைப் பல நாட்களுக்குப் பிறகு மக்களுக்கு விநியோகம் செய்வதினால், இப்படி சிரமம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் முறையில், நல்லமுறையில் அரிசியைப் பாதுகாத்து, மக்களுக்குப் பிறகு நல்ல அரிசியாக கொடுப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசு எடுக்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குறைபாடுகளை மனதில் கொண்டு, அந்தப் பகுதியில் மட்டுமல்ல; தமிழகம் முழுவதிலும் அரிசியை கெட்டுப் போகாமல் பாதுகாக்கவும், நல்ல அரிசியை வாங்கி விநியோகம் செய்ய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு அரசின் சார்பாக அறிவுரை வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், அந்தப் பகுதியில் நல்ல அரிசி கிடைப்பதற்குரிய நடவடிக்கையை அரசு நிச்சயமாக எடுக்கும்.



## 4. அறிவிப்புகள்.

### கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1935.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 6. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதி 33-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

### (ஆ) நிகழ்ச்சி நிரலில் மாற்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30 (3)-ன்கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் (5) அரசினர் சட்ட முன்வடிவு (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின்கீழ் உள்ளதை, இனம் (6) அரசினர் தனித் தீர்மானம் என்று உள்ளதற்குப் பின் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

## 7. அரசினர் தனித் தீர்மானம்.

### அரசியலமைப்பு (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவிற்கு ஏற்பளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1984 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது".

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், இருக்கின்ற பொருள்கள், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், எந்த வகையிலும் பாதிக்காத முறையிலே, நாம் கருத்துரு சொல்லுகின்ற அளவிலே இல்லை. இந்தத் தீர்மானத்தின் முக்கியமான நோக்கம், நாகாலாந்து, மேகாலயா, அருணாசலப் பிரதேசம், மிசோரம் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் உள்ள பழங்குடி மக்களுக்காக விதிதாசார முறைகளில் அளிக்கப் பட்டுள்ள இடங்களைப் பற்றிய சிலபல குறைபாடுகளை அவர்கள் பன்னெடுங்காலமாக வற்புறுத்தி வந்ததன் காரணமாக, அங்கே





அவர்களுக்கு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் ஒதுக்கப் பட்டுள்ள இடங்களைப்பற்றி ஆராய்ந்து அறிந்து, அதை செம்மைப்படுத்தி, ஒழுங்குபடுத்துகின்ற முறையில் கொண்டு வந்து, எவ்வளவு இடங்களை அந்த மக்களுக்கு நாடாளு மன்றத்தில் ஒதுக்கப்படலாம் என்றும், எவ்வளவு இடங்களை சட்டமன்றங்களில் ஒதுக்கலாம் என்றும் வரையறுப்பதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தத் திருத்தம் அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய விதிமுறைகளிலே சேர்க்கப்பட்டாலொழிய அதை நடைமுறைப் படுத்த இயலாது. ஆகவேதான் மத்திய அரசு 53-வது அரசியல் அமைப்புச் சட்டத்தினை, சட்டத்திருத்தத்தினைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. மக்கள் அவையில் நிறைவேற்றி, பின்னர் மாநிலங்களவையில் நிறைவேற்றி அதற்குப் பிறகு இது சட்டமாக ஆகவேண்டும் என்றால் இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களில் சரிபாதி மாநிலங்கள் இந்தத் திருத்தத்தை நிறைவேற்றி ஒப்புக் கொண்டு தீரவேண்டும். அப்படி சரிபாதி மாநிலங்கள் ஏற்றுக் கொண்டால்தான் இது அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெறும். அப்படி மாநிலங்களிலே நிறைவேற்றுகின்றபோது மூன்றில் இரண்டு பகுதி மக்களின் வாக்குகளைப் பெற்று நிறைவேற்ற வேண்டும் என்பது மட்டும் போதாது. அவ்வாறு, மொத்த மாநிலங்களில் பாதி மாநிலங்கள் நிறைவேற்றவேண்டும். அவ்வாறு பாதி மாநிலங்கள் நிறைவேற்றவேண்டும் என்பதற்காகத் தான் எல்லா மாநில சட்டமன்றப் பேரவைகளுக்கும் இந்தத் திருத்தத்தை மத்திய அரசு அனுப்பி வைத்திருக்கின்றது. அதை யொட்டி இந்த மாநிலமும் இந்தக் கருத்துக்கு ஆதரவு தருகின்றது என்ற முறையில் இந்தத் திருத்தத் தீர்மானத்தை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையிலே தான் இது இந்த அவையின் முன்பு கொண்டுவரப்படுகின்றது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினை இல்லை. இங்கே பழங்குடி மக்கள் ஒதுக்கீட்டினைப் பொறுத்தவரையில் இந்த சட்டமன்றத்தின் மூலமாக தெளிவாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இதிலே குறைபாடுகள் அமைந்த மாநிலங்கள் நாகலாந்து, மேகாலயா, மிசோரம், அஸ்ஸாம், அருணாசலப் பிரதேசம் ஆகியவைதான். இவைகளுக்காக இந்தத் திருத்தத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதில் ஒன்றும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 21

ஆட்சேபணை நமக்கு இல்லை. ஆகவே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இந்த மாநிலத்திற்கு மறுப்பு இல்லை என்ற முறையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இது வரவேற்கப்படக்கூடிய சட்டத் திருத்தம் என்பதில் எந்தவிதமான குறைபாடும் இல்லை. இதனை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால் உங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரே இந்தச் சட்டத் திருத்தத்திலே பேசுகின்றபோது சில கருத்துக் களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள் ரொம்ப ரத்தினச் சுருக்கமாக. அவற்றையும் இணைத்து சிபாரிசு செய்யவேண்டும் என்பதற்காக அதை மட்டும் வாசித்து அமர்கிறேன்.

"Shri **R. RAMAKRISHNAN**: This is relevant, Sir. As far as the tribals in Tamil Nadu are concerned, we have mainly the Narikuravans and Shugali tribes. Mr. Deputy Chairman, Sir, you had also an occasion to visit and see the Toda huts. Many things have been done for them. We have allotted land and done everything under the 20-Point Programme. Our only request is that the Central Government should include in the list of Scheduled Tribes the equivalent of Shugali tribes"

என்று அவர்கள் சுருக்கமாக தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அந்த சக்கிலியர் என்ற பிரிவினரையும், நரிக்குறவர்களையும் இந்த ஷெட்யூல்ட் ட்ரைபிலே இணைக்கவேண்டும் என்ற திருத்தத்தை உங்களுடைய கட்சியின் சார்பாக் வலியுறுத்தி நாடாளு மன்றத்திலே ஒரு உறுப்பினர் பேசியிருக்கிறார். எனவே அவர் களையும் இதிலே இணைத்து அவர்களுக்கு உரிய சலுகைகளை வழங்க இந்த அரசு முனையவேண்டும் என்று எங்கள் கழகத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் வரவேற்கப்படவேண்டிய சட்டம்தான். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், ஆதி மலைவாசிகள், பழங்குடியினர், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் என்ற இப்படிப்பட்ட



1985 மார்ச் 21] [திரு. கு. ரமணி]

பிரச்சினையே நமக்கு இல்லை என்று அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் மலைப் பிரதேசங்களில் இருக்கும்படியான இப்படிப்பட்ட ஹில் ட்ரைப்ஸ் என்பவர்கள் பலவிதமான ஹில் ட்ரைப்ஸ் இருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன வகைப்படுபவர்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கின்றது என்று எனக்குப் படுகின்றது. எனவே அரசாங்கம் அதற்கு வேண்டிய ஆய்வை நடத்தி தகுந்த முடிவுக்கு வருவது நல்லது. இப்போது பாராளுமன்றத்திலிருந்து வந்திருக்கும்படியான இந்த ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் சம்பந்தப்பட்ட இந்தத் திருத்தம் அவர்களுடைய ரெப்ரசன்டேஷன் எனப்படுகின்ற அந்த இட ஒதுக்கீடு அதாவது பிரதிநிதித்துவம் சட்டமன்றங்களிலும் பாராளுமன்றங்களிலும் கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டது. அதைப்பற்றி விவாதம் நடக்கும்போது பாராளுமன்ற மேலவையிலே பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது நமது முன்னவர் சொல்லி யிருக்கக்கூடிய அந்த நான்கு, ஐந்து இடங்களுக்கு மட்டுமல்ல, அஸ்ஸாம் உட்பட, மேற்கு வங்கம், உத்திரப் பிரதேசம், பீகார், மணிப்பூர், ஒரிஸ்ஸா போன்ற பகுதிகளில் கூட இப்படிப்பட்ட ஹில் டிரைப்ஸ் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்தப் பிரதிநிதித்துவம் தேவை இருக்கிறது. அதைப்பற்றி கூட தகுந்த முறையில் மத்திய அரசு கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பாராளுமன்ற மேலவையில் கோரி இருக்கிறார்கள்.

(முற்பகல் 9-40)

அதே மாதிரி இந்த ஹில் டிரைப்ஸ்களுக்கு, அரசியல் சட்டத்தின் கீழே மாவட்ட சுயாட்சியை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்படிப் பட்ட வசதிகள்கூட செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை நாம் ஆதரிக்கும்போது இந்த மாதிரி நான்கு, ஐந்து மாநிலங்களில் இன்னும் அந்த நிலைமை பாக்கி இருக்கிறது; அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை, பாராளுமன்றத்திலேயே எழுந்துள்ளது என்பதை நாம் கவனத்தில் கொண்டு, இதில் வேறு எதுவும் இல்லை, நாம் சும்மா ஆதரிப்பது என்பது மட்டும் அல்ல, பிரச்சனைகள் இருக்கின்றன; இருந்தாலும் இப்பொழுது வந்திருப்பது பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கான நல்ல சட்டம். ஆனால், சர்வாம்சமும் பொருந்திய சட்டம் ஆகிவிடவில்லை. இருந்தாலும் இதை நாம் வரவேற்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

[1985 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி இந்திய அரசமைப்புச் சட்டத்திலே திருத்தங்கள் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாகவே—நான் முதலிலே குறிப்பிட்ட மாநிலங்களாகிய—நாகாலாந்து, மேகாலயா, அருணாசலப் பிரதேசம், மிசோரம், அஸ்ஸாம் ஆகிய பகுதிகளிலிருந்து வந்து, கடைசியிலே அதை ஒழுங்குபடுத்துவதற் கென்று ஒரு குழு அமைத்து, அவர்கள் ஆராய்ந்து செய்த அறிவுரையின் பேரிலே சட்டத் திருத்தம் செய்வதன் மூலமாகத் தான் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற முறைக்கு மத்திய அரசு வந்து அதைச் சட்ட வடிவிலே கொண்டு வந்து, பாராளு மன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு மாநிலங்களுடைய அனுமதியைப் பெறவேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டமாகும்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் பழங்குடிகள் இருக்கிறார்கள்; பழங்குடிகளுக்குச் சில பல வசதிகள் செய்யப் படுகின்றன. ஷெட்யூல்ட் காஸ்ட் என்று சொல்லப்படுகின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன, என்ன வசதி வாய்ப்புகள் எல்லாம் அளிக்கப்படுகின்றனவோ, அவை முழுவதும் பழங்குடி களுக்கு அளிக்கப்பட வேண்டும்; அளிக்கப்பட்டு வருகின்றன— இட ஒதுக்கீடு போன்றவைகளில் எல்லாம் கூட.

அதைத் தவிர, மத்திய அரசு சிலபல தனி நிதிகள், நல்வாழ்வு நிதிகள் எல்லாம் ஒதுக்கி, பழங்குடி மக்களைத் தனியாக உயர்த்த வேண்டுமென்பதற்காகச் சிலபல பொருளாதாரச் சலுகைகளும் மற்றவைகளும் மத்திய அரசின் மூலமாகச் செய்யப்படுகின்றன.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் பழங்குடி மக்கள் என்று கருதப்பட்டவர்கள் 1 சதவிகிதத்திலிருந்து 1½ சதவிகிதம்தான் இருக்கிறார்கள்; 18 சதவிகிதம் தாழ்த்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள்; 53, 54 சதவிகிதம் பிற்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்ற அடிப்படையிலே, நம்முடைய மாநிலத்தில் கணக்குப் பார்க்கும்போது ஓரளவுக்கு அதிகமாகத் தொடர்ந்து சேர்ந்தாற்போல இருக்கிறவர்கள் என்று எடுத்துக் கொண்டிருக்கிற வகையிலேதான் ஏற்காடு தொகுதியும்,



1985 மார்ச் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சேந்தமங்கலம் தொகுதியும், உப்பிலியாபுரம் தொகுதியும், பழங்குடி மக்களுக்கு என்று மூன்று சட்டமன்றத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் பழங்குடி மக்கள் எல்லா மலைகளிலும் இருக்கிறார்கள். நீலகிரி மலை, ஆனை மலை, பச்சைமலை என்று எல்லா மலைகளிலும் பழங் குடியினர் சிறுசிறு பகுதிகளாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ரமணி அவர்கள், ரகுமான்கான் அவர்கள் கூறுவது போன்றும் இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தனிச் சலுகைகள், டிரைப்ஸ் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பழங் குடியினருக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்தச் சலுகைகள் பெற்று அவர்கள் வாழ வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள், நரிக்குறவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய அடிப்படையிலே வற்புறுத்தவோ, சேர்க்கவோ நம்மால் இயலாது என்றாலும் ஒரு வகுப்பினரை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கலாமா, அல்லது நீக்கலாமா என்று தீர்மானிக்கின்ற முழு அதிகாரமும் மாநில அரசுக்கு உண்டு. ஆனால், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் பட்டியலிலே ஒரு வகுப்பினரைச் சேர்க்க வேண்டுமென்றால் அதை முடிவு செய்ய வேண்டியது மத்திய அரசாகத்தான் இருக்கிறது. ஆகவே, நரிக்குறவர்களை, மற்றவர்களைச் சேர்க்க வேண்டுமென்பதை முடிவு செய்யவேண்டியது மத்திய அரசுதான்.

மீனவப் பெருங்குடி மக்கள் தங்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று பல ஆண்டுக்காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். அதற்காகப் பல முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இங்கே நான் கேட்டபொழுது கூட, அப்படி மற்றவர்களைப் போன்று தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கிற வசதி வாய்ப்புகள், கஷ்டங்கள், நஷ்டங்கள், இன்னல்கள், இழப்புகள்—எவை, எவை இருக்கின்றனவோ, அவை— மீனவர்களைப் பொறுத்தவரையிலே இருப்பதாலே மீனவர்களைச் சேர்ப்பதிலே கூட தமிழக அரசுக்கு ஆட்சேபணை இருக்காது என்று நாம் கருத்து தெரிவித்திருந்தாலும் மத்திய அரசிலே

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 21

முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அவர்கள் சொல்கிற நரிக்குறவர் மற்றவர்கள் இதிலே இடம்பெறவில்லை. அவர்கள் எல்லாம் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள்; நாடோடிகளாக இருக்கிறார்கள். பொருளாதாரத் துறையில், கல்வித் துறையில் அவர்களை மேம்பாடடையச் செய்ய வேண்டுமென்றால் அவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலே கொண்டுவர வேண்டுமென்று தனியாக மத்திய அரசுக்கு எழுதி, அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வற்புறுத்தலாம். இப்போது இதிலே அவர்களைச் சேர்த்துக்கொள்ள இயலாது, என்று கூறி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1984 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்தி மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள, இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கின்றது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1985.

**(ஆய்வுசெய்தல்)**

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 19—11—1984 ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பெற்ற 1984 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 22/1984) இப்பேரவை நிராகரிக்கிறது."



1985 மார்ச் 21]

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, நான் இத்தீர் மானத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நீர் வழங்கல்
மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1985) * ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப்பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. பொன்னுரங்கம்
அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவைமுன் விவாதத்
திற்கு வைக்கப்பெறுகின்றன.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு
நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவின்மீது என்னுடைய
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே இரண்டு திருத்தங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.
முதல் திருத்தத்திற்கு அவசியமே இல்லை. முதலில் 'நீர் வழங்கல்
என்னும் பொருளைக் கவனித்து வருகின்ற துறையின் பொறுப்
பினைக் கொண்டுள்ள அரசுச் செயலாளர் வாரியத்தின் தலைவராக
'இருப்பார்' என்று இருக்கிறது. காரணம் என்னவென்றால்
அடுத்து வருகின்ற திருத்தம், 'அரசு பொது நலனுக்காக அவ்வாறு
செய்வது பொருத்தமானது என்று கருதினால் அறிவிக்கை
வாயிலாக வாரியத்தின் தலைவராக அலுவல் முறை சாரா
ஒருவரை, அதாவது அதிகாரி அல்லாத ஒருவரை எப்போது
வேண்டுமானாலும் நியமிக்கலாம்' என்று இருக்கிறது.

இரண்டாவதாக இப்படி வாரியத்தின் தலைவராக அதிகாரி
அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டால் அவர் சட்டமன்ற உறுப்
பினராக இருந்தால் அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினராக

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 21

இருந்தால் வாரியத்தின் தலைவராக இருக்கிறார் என்று காரணம் காட்டி அந்தப் பதவி செல்லாது என்று வாதாடக் கூடாது. அதற்கு வகை செய்கின்ற வகையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் அதிகாரி அல்லாத ஒருவரை வாரியத்தின் தலைவராக நியமிப்பதற்குக் கொண்டுவரப் பட்டிருப்பது இந்தச் சட்டத் திருத்தம். வெளிப்படையாகச் சொன்னால் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரை இந்த வாரியத்தின் தலைவராக ஆக்குவதற்குச் செய்யப்படுகின்ற ஏற்பாடு இது. ஆக குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்றல் வாரியம் இனிமேல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகமாக ஆகின்ற முயற்சியாக இது இருக்குமோ என்கிற ஐயப்பாடு இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, முன்னேற்றக் கழக ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது வாரியத்தின் தலைவராக யார் இருந்தார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, எலக்ட்ரிசிட்டி போர்டினுடைய தலைவராக ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்தார். ஹவுசிங் போர்டு தலைவராக ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்தார். குடிசைமாற்று வாரியம் போன்ற மக்கள் தொடர்புடைய பல்வேறு பிரச்சனைகளை தீர்க்கக்கூடிய வாரியங்களின் தலைவர்களாக சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள். எனவே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களை இன்றைக்கு வாரியத்தினுடைய தலைவராக நியமிக்கும்போது, குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருக்கக்கூடிய சூழ்நிலைகளை நாம் கவனத்திலே கொள்ள வேண்டும்.

பொதுமக்களுடைய நன்மையைக் கருதி, ஒரு வாரியத்தினுடைய தலைவராக அதிகாரி அல்லாத ஒருவரை நியமிக்கிறோம் என்ற கருத்தைத் தெரிவிக்கும்போது அது நடைமுறையிலே பல பிரச்சனைகளை உருவாக்காதா என்பதைப் பார்க்க வேண்டும். நான் இப்படிச் செல்வதால் இதை நான் எதிர்க்கிறேன் என்று பொருள் அல்ல.



1985 மார்ச் 21] [திரு. அ. ரகுமான்கான்]

இன்றைக்கு குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்றல் வாரியத்தில் 13 பேர்கள் இருக்கிறார்கள். அதிலே 6 பேர் நாமினேஷன் மூலம் வருகிறார்கள். அவர்கள் மக்களுடைய பிரதிநிதிகள் அல்ல. ஏற்கெனவே குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்றல் வாரியப் பணியை சென்னை மாநகராட்சி செய்து வந்தது. அதிலிருந்து பிரிக்கப் பட்ட ஒரு பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிற ஒரு வாரியத்திலே மக்களுடைய பிரதிநிதிகள், சென்னை மாநகராட்சியில் தேர்தல் நடத்தாததால் இல்லை.

(முற்பகல் 9-50)

ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பு முழுக்க முழுக்க அதிகாரிகள் கையில் ஒருபுறத்திலே போய்விடுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இதிலே இல்லை. இந்த நிலையில் மீண்டும் ஒரு கட்சியினுடைய ஆதிக்கமோ அல்லது வேறு தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சலுகை செய்யவேண்டிய நிலையிலே ஒருவரைப் போடும்போது, அங்கே ஜனநாயகப்படுத்துகின்ற காரியம் நடைபெறுவதற்கு பதிலாக வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன என்பதற்காகத்தான் நான் இங்கே சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். உதாரணமாக இங்கே கொண்டு வந்திருக்கிற மசோதாவிற்கும் நான் சொல்வதற்கும் சம்பந்தம் இல்லை என்று கருதக்கூடாது. வாரியத் தலைவராக குடிசை மாற்று வாரியத்திற்குப் போட்டிருக்கிறீர்கள். வீட்டு வசதி வாரியத்திற்குப் போட்டிருக்கிறீர்கள். இந்த அரசாங்கமே 3 பேரை வாரியத் தலைவராக போட்டிருக்கிறது. முதலிலே யாரைப் போட்டார்கள் என்றால், திரு. செல்லையா அவர்களைப் போட்டார்கள். பிறகு வெங்கடேசன் என்பவரைப் போட்டார்கள். அவர்களுக்குப் பிறகு திரு. வேலூர் நாராயணன் அவர்களை நியமித்தார்கள். அவர்களுடைய பதவியும் அடிக்கடி மாற்றப்பட்டது. நான் அதற்குள்ளே போகவிரும்பவில்லை. இங்கே அரசாங்கமே ஒப்புக்கொண்டது, இந்த வீட்டுவசதி வாரியத்திலே ஊழல் செய்திருக்கிறார்கள் என்று. நான் சொல்ல வில்லை. மன்னிக்க வேண்டும். இந்த வீட்டு வசதி வாரியத் தலைவர் ஊழல் செய்திருக்கிறார் என்று சொல்லி...

136323

[1985 மார்ச் 21

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவிற்கு எள்ளளவும் தொடர்பு இல்லாத சில கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றார்கள். இது தொடர்பான சட்டமுன்வடிவுகள் இந்த அவையில் வைக்கிறபோது அல்லது இது தொடர்பான மானியக் கோரிக்கைகளை வைக்கிறபோது அந்தக் கருத்துக்களை தெரிவிப்பதுதான் முறையானதாகும்.

**திரு. அ. ரகுமான்கான்:** வாரியத்தின் தலைவராக அதிகாரி அல்லாத ஒருவரை நியமிப்பதாலே பல கேடுபாடுகள் வருகின்றன. அந்த கேடுபாடுகள் வரக்கூடாது என்பதைச் சுட்டிக் காட்டுகிறபோது இதுபோன்ற ஒரு வாரியத்தினுடைய தலைவராக போட்ட நிலையில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று அரசாங்கமே எலக்ட்ரிசிட்டி போர்டு சேர்மன் விஜயராகவன் தலைமையிலே ஒரு கமிஷன் போட்டு, அந்த ஊழல் குற்றங்களைச் செய்தவர்களை பற்றி எல்லாம் ஒரு அறிக்கையாக இந்தச் சபையிலே வைப்போம் என்று சொல்லி, அது குறிப்பிலே ஏற்றப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவது, ஹவுசிங் போர்டிலே போட்ட தலைவர் தப்பு செய்திருக்கிறார் என்று அரசாங்கமே ஒப்புக்கொண்டு இன்னும் அந்த ரிப்போர்ட் இங்கே வைக்கப்படவில்லை. இப்படிப் பட்ட நிலையில். . . . . . (குறுக்கீடுகள்).

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். வாரியங்களுக்கு அதிகாரிகள் அல்லாதவர்களைப் போடக்கூடாது என்று சொல்லுகிறார்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயும் அப்படி இருந்தது . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மாதிரியான விவாதங்கள் வேண்டாம். நேற்று கூட ஒரு விவாதம் நடைபெற்றது. அதைப் பற்றி கூட நீங்கள் பேசினீர்கள். நான்தான் இங்கே இருந்தேன், பச்சையப்பாஸ் டிரஸ்ட் பற்றிப் பேசும்போது. அதிலே அப்படிப் போகும்போது, இதிலே இப்படி வரும். எனவே நாம் ஒரு ஸ்டான்டிலேயே போவோம். இந்த மாதிரி இதிலே வேண்டாம். பில் சம்மந்தமாக மட்டும் பேசுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெளிவாகச் சொல்லியதைப் போல, குடிசை மாற்று வாரியத் தலைவராக, சுற்றுலா வாரியத்தினுடைய தலைவராக,



1985 மார்ச் 21] [திரு. அ. ரகுமான்கான்]

அரசு அதிகாரிகளாக அல்லாதவர்களைப் போடுவது குறித்து நான் எதிர்க்கவில்லை. தெளிவாக நான் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அப்படி போட்டிருக்கிறோம். இப்போதும் நான் போடுவதை எதிர்க்கவில்லை. ஆனால் நான் விரும்புவது எல்லாம், இன்றைக்கு சென்னை மாநகராட்சியிலே மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத அளவில், தேர்தல் நடத்தப் படவில்லை. ஆனால் இப்போது குடிநீர் அகற்றல், மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்தைத் தனியாகப் பிரித்து, அதை தனி வாரியமாக. . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** குடிநீர் அகற்றுவது அல்ல, குடிநீர் வழங்குவது.

**திரு. அ. ரகுமான்கான்:** குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியத்திற்கு மிகப் பெரிய பொறுப்புகள் உண்டு. அந்த வாரியத்திற்கு என்று பல சொத்துக்கள் இருக்கின்றன. அந்த வாரியத்திலே ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். எந்த வாரியத்திற்கும் இல்லாத அளவிற்கு, அதற்கு வரி விதிக்கின்ற அதிகாரம் இருக்கின்றது. இவ்வளவும் இருக்கக்கூடிய அந்த அமைப்பிலே மக்களுடைய பிரதிநிதிகள் இடம் பெறவேண்டும் என்ற கருத்தை வரவேற்கிறபோது, போர்ட் ஆப் டைரக்டர்ஸ் என்று போடுகிறபோது, தேர்தல் நடத்தி, மக்கள் அதிலே பங்கேற்கிற வகையிலே ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது தலைவராகப் போடுகிறவர்கள் தப்புச் செய்யக்கூடாது என்பதற்கு, இன்னொரு வாரியத் தினுடைய ஊழலைப் பற்றி எடுத்துக் காட்டி இதுபோன்ற தவறுகள் நடந்துவிடக் கூடாது என்று ஜாக்கிரதை உணர்ச்சி யோடு இந்தச் சர்க்கார் இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படுகிறது. காரணம் இந்தத் தப்புச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம், கமிஷன் ரிப்போர்ட் வைப்போம் என்று சொல்லி, இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதற்காகத்தான் நான் இதைச் சொன்னேனே தவிர, வேறு அல்ல. இங்கே இருக்கக்கூடிய சட்டத் திருத்தத்தைப் பற்றிச் சொல்லவேண்டும் என்று சொன்னார்கள். ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு).

[1985 மார்ச் 21

**திரு. செ. செம்மலை:** தலைவர் அவர்களே, அவர் சொன்னதில் சில பகுதிகள் தவறானவை. அந்தப் பகுதிகளை நீக்க வேண்டும் என்பதற்காக கேட்டுக் கொள்கிறேன். எடுத்துச் சொல்ல அனுமதிக்க வேண்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவாதத்தில் பேசும் போது பதில் கொடுத்து விடுங்கள். இப்போது அதை நீக்கிக் கொண்டு இருக்க முடியாது. அதற்காகத்தான் உறுப்பினர்கள் பேசும்போதே ரெஸ்ட்ரெய்ன்ட்டாகப் பேசுங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு, கூச்சல் குழப்பம்) நீங்கள் பதில் சொல்லும்போது பேசலாம். பொதுவாக உறுப்பினர் ரகுமான்கானுக்குச் சொல்கிறேன். அலிகேஷன் பற்றிச் சொல்லும்போது அமைச்சருக்கு அதுபற்றி நோட்டீஸ் கொடுத்து விட்டால் அவருக்குப் பதில் சொல்ல எளிதாக இருக்கும் (குறுக்கீடு) ஏனென்றால் அவருக்கு அது என்ன என்று தெரிய வேண்டாமா?

**திரு. சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வதுபோல் எந்த வாரியத் தலைவர் மீதும் எந்த ஊழல் குற்றச்சாட்டையும் சொல்லி, எந்தக் கமிஷன் ரிப்போர்ட்டும் கொடுக்கப்படவில்லை. அதைத் தவறாகச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறு என்றால் உரிமைப் பிரச்னை எழுப்ப விதி இருக்கிறது அதை எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) இப்பொழுது அவர் பேசினால் என்ன ஆகிவிடப் போகிறது. நீங்கள் பேசும்போது பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) தவறாக இருந்தால் எழுதிக் கொடுங்கள்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கமிஷன் ஆப் இன்குயரி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தால் அதைப்பற்றி அவர் பேசியிருக்கவே கூடாது. அப்படி பேசியது தவறு. பதிவேட்டிலே அது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அது சரியல்ல, அதை நீக்க வேண்டும் . . .

**திரு. அ. ரகுமான்கான்:** விஜயராகவன் தலைமையிலே ஒரு கமிஷன் போடப்பட்டிருக்கிறது. அதைத்தான் சொன்னேன். பேக்ட் அது. . . .



1985 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களே விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி இங்கே பேசுவது சப்ஜுடிஸ் ஆகும், எனவே அதைப்பற்றி அவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசாரணைக் கமிஷனைப் பற்றி பேசுவது சப்ஜுடிஸ் ஆகாது. கோர்ட்டில் இருப்பதைப் பற்றி பேசினால்தான் சப்ஜுடிஸ் இருந்தாலும் நான் என்ன சொல்கிறேன் என்றால், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சற்று ரெஸ்ட்ரெயின்ட்டாகப் பேச வேண்டும். அப்படி அவர் கூறியது தவறாக இருந்தால் நீங்கள் அதை உரிமைப் பிரச்சனையாகக் கொண்டு வாருங்கள், அல்லது நீங்கள் பேசும் போது அதற்கு பதில் சொல்லுங்கள், தவறாக இருந்தால் அப்போது எடுத்துச் சொல்லுங்கள். இப்போது ரகுமான்கான் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** குடிநீர் வழங்குகிற துறை, கழிவு நீர் அகற்றுகின்ற துறை என்று அந்த வாரியத்திற்கு பெயர். ஆனால் குடிநீர் வழங்குவதற்குப் பதிலாக குழாய்களிலே கூட இன்றைக்குக் குடிநீர் அல்லாத சாக்கடைப் போன்ற நிறத்தில் உள்ள தண்ணீரெல்லாம் என்னுடைய தொகுதியிலே வந்து இங்கே பாட்டிலிலே கூடக் கொண்டு வந்து காண்பிக்கப்பட்டது. அது வேறு விவகாரம்.

ஆனால் சென்னை மாநகராட்சி கவனித்து வந்ததை இன்றைக்கு மெட்ரோ பாலிட்டன் என்று ஆக்கி புறநகர் பகுதிகளில் உள்ள நகராட்சி பேரூராட்சிகளில் குறிப்பாக திருவொற்றியூர் முனிசிப்பாலிட்டி, மாதவரம் டவுன்ஷிப், செயின்ட் தாமஸ் மவுண்ட் பகுதியிலே இருக்கிறது டவுன்ஷிப்' அதுபோலவே தாம்பரம், குரோம்பேட்டை போன்ற நகராட்சி—பேரூராட்சிகளின்—அதிகாரங்களை எடுத்துக் கொண்டு, சென்னை மாநகராட்சியின் அதிகாரத்தையே பறித்துக் கொண்டு, இன்றைக்கு தனியாக இந்த அமைப்பு இயங்க ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. . . .]

இதற்குச் சொல்லப்படும் காரணம், உலக வங்கி கடன் தருகிறது. சென்னை நகரத்திலேயும், புறநகர்ப் பகுதியிலேயும் குடிதண்ணீர் வழங்க வேண்டும், கழிவு நீர் அகற்ற வேண்டும், அதற்காக உலக வங்கி கடன் தருகிறது, அதைப் பெற வேண்டும். சுமை அதிகமாயிருக்கிறது மாநகராட்சிக்கு: எனவே அதைப் பிரித்து நாம் பணியாற்ற வேண்டியிருக்கிறது, என்று காரணம் காட்டி 1978-லே மாண்புமிகு இராகவானந்தம் அவர்கள் அமைச்சராக இருந்தபோது அந்த வாரியம் தனியாக இயங்குவதற்காக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படி ஒரு வாரியம் அமைக்கப்படுவது ஏன் என்று அன்றைக்கே அந்த வாரியம் அமைக்கப்பட்டதை எதிர்த்திருக்கிறோம். செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று அன்றைக்கே சொல்லியிருக்கிறோம். காரணம் சென்னை மாநகராட்சியே அந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அப்பொழுதும் கூட சாலைகளில் இருக்கக் கூடிய தேங்கியிருக்கிற தண்ணீரை, வடிகால் பண்ணக் கூடிய ஒரு அமைப்பு சென்னை மாநகராட்சிலேயே இருந்துக் கொண்டிருந்தது. அதையே அட்டானமஸ் பாடியாக மாற்றி சென்னை மாநகராட்சிக்கு உட்படுத்தி அந்தக் காரியத்தைச் செய்யலாம் என்று சொன்னோம். செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னோம்.

ஆனாலும், பெரும்பான்மை இருந்த காரணத்தாலே அது அன்றைக்கு நிறைவேற்றப்பட்டு விட்டது. குடிதண்ணீர் வழங்குவதற்காக இந்த வாரியம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வாரியத்தினுடைய நோக்கம் அதுதான். ஆனால் நான் ஆதாரத்தோடு கேட்க விரும்புகிறேன். என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலே தண்ணீரே இல்லை. வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாறுவேடம் கூட போட வேண்டிய அவசியம் இல்லை. என்னோடு சாதாரணமாக வரட்டும். நான் கூட்டிப்போகத் தயாராக இருக்கிறேன். குழாய்களிலே தண்ணீர் கிடைக்காமல், ஒவ்வொரு வீடுகளிலும், சிந்தாதிரிப்பேட்டை பகுதியிலும், மற்றும் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பரியல் கிரவுண்ட் பகுதியிலும், வாடர் தோட்டம் பகுதியிலும், காக்ஸ் காலனி பகுதியிலும், ஜோதி மாநகரிலும், இன்னும் அருளி காந்தி தெருவிலும், மன்னார்சாமி கோயில் பகுதியிலும் மற்றும் பல இடங்களில் எல்லாம்





தாய்மார்கள் வரிசையாக நின்றுக் கொண்டு தண்ணீர் கிடைக்காது பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-00)

அந்த குடிதண்ணீர் வழங்குகின்ற காரியத்தை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு சென்னை நகரத்து மக்களுடைய குடிதண்ணீர் பிரச்சனையை தீர்க்க வேண்டியது பெரிய சிக்கலாக இருக்கிறது. கோடைக்காலம் வேறு வருகிறது. எனவே இது மீண்டும் ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், நிரந்தரமாக சென்னை நகர மக்களின் பிரச்சனையை தீர்ப்பதற்கு கட்டளை கால்வாய் திட்டம் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். பிறகு அதை விட்டுவிட்டு, கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? ரூ. 800 கோடி செலவில், 12 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்கு, கிருஷ்ணா நதியிலிருந்து கொண்டுவரப்போவதாக சொன்னார்கள். பகீரதன், கங்கையை கொண்டு வந்ததைப் போல, இங்கே கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் வந்துவிட்டதாக விளம்பரம் செய்யப்பட்டது. முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வருகை தந்தார்கள். விளக்குகள் போடப்பட்டன. வாயில்கள் அமைக்கப்பட்டன. கிருஷ்ணா நதி நீர் வந்துவிட்டதாக ஒரு தோற்றத்தை உண்டாக்கினார்கள். கிருஷ்ணா நீர் சென்னைக்கு வருவதற்கு வெட்டுகின்ற கால்வாய்க்கான பல ஏக்கர்கள் வனத் துறைக்குச் சொந்தமானது. வனத்துறை அந்த நிலங்களை இழக்க வேண்டியதாக உள்ளது என்று சொல்லி இன்றைக்கு அந்த வனத்துறையில் . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்தக் கூடிய முறையில் ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றிய சில கருத்துக்களை எடுத்துச் சொல்வதன் மூலம் புதியதாக பிரச்சனைகளை கிளப்ப வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கிருஷ்ணா நீர்த் திட்டம் விரைவாக சென்னைக்கு வரவேண்டுமென்ற ஆர்வம் அனைவருக்கும் இருக்கிறது. அந்த வகையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

[1985 மார்ச் 21

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் கொண்டுவரப்பட்டு, குடிதண்ணீர் பிரச்சனையை தீர்க்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பம். ஆனால், இந்த திட்டத்திலே அக்கறை காட்டுவதாக சொல்லுகின்ற நேரத்தில், இதில் இருக்கக் கூடிய பிரச்சனைகளையும் தெரிந்துகொள்ள இந்தச் சபைக்கு உரிமை உண்டு. மத்திய அரசு ..... (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்னைகளை தெரிந்துகொள்ள உரிமை உண்டு. இதில் இரண்டு மாநிலங்கள் தொடர்பு கொண்டுள்ளன. இத்திட்டம் விரைந்து முன்னேற்றம் காண்கின்ற திட்டம். அந்த வகையில் திட்டமிட்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்லக் கூடிய கருத்துக்கள் புதியதாக பிரச்சனைகளை தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கக்கூடாது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் சிக்கல் வருவதற்கு இடமே இல்லை. இருக்கின்ற நிலைமையை சொல்லுகிறேன். எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும். வாட்டர் போர்டு கமிஷன் இதற்கு சரியான, இணக்கமான பதிலை தரவேண்டும். தரவில்லை. அதுபோல வனத் துறையில், எங்களுடைய இடம் பாதிக்கப்படுகிறது, பல ஏக்கர்கள் என்று சொல்லி அவர்களும் தடையாக இருக்கிறார்கள். அந்த நிலைமையும் மாற வேண்டும். மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்க வேண்டும். இவைகள் எல்லாம் கிருஷ்ணா நதி நீர் விரைவிலே கொண்டுவருவதற்கு தடைகற்களாக இருக்கின்றன. நான் இந்த மன்றத்தின் சார்பாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த நீரை விரைவிலே கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். காரணம் 'பானை இங்கே, தண்ணீர் எங்கே?' என்று என் தொகுதி மக்கள் கேட்கிறார்கள். கோடைக் காலம் வரப்போகிறது. எல்லா தொகுதி மக்களும் கேட்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள், இந்த இலாக்கா பொறுப்பை ஏற்றபோது கூட. 'நான் குடிதண்ணீர் பிரச்சனையை தமிழகம் முழுவதும் தீர்க்கிறேன்' என்று சொன்னார்கள். குடிதண்ணீர் கேட்ட ஒரே காரணத்திற்காக ஒரு கிராமத்திலே துப்பாக்கி



1985 மார்ச் 21] [திரு. அ. ரகுமான்கான்]

பிரயோகமே நடைபெற்றது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். அப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் இங்கே நடைபெறாத சூழ்நிலையை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, கருத்துக்களை திரித்து கொடுக்கக்கூடாது. குடிதண்ணீர் கேட்டதற்காக துப்பாக்கி பிரயோகம் நடைபெறவில்லை. ஒரு ஊரிலிருந்து குடிதண்ணீர் எடுக்கின்றபோது, அங்கே இருக்கின்ற மக்கள் அங்கே எடுக்கக்கூடாது என்று சொன்னதன் விளைவாகத் தான் சில சம்பவங்கள் ஏற்பட்டன.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, குறுக்கீடுகள் இருந்ததற்காக என்னுடைய நேரத்தை தயவு செய்து நீட்டித்து கொடுக்க வேண்டும். காரணம் நான் சில நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள், நான் பிரச்சனையை திசை திருப்புவதாகச் சொன்னார்கள். காளப்ப நாயக்கன்பட்டியிலே பானை ஊர்வலம் நடத்தப்பட்டது. தாய்மார்கள் அந்த ஊர்வலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. தாய்மார்கள் அந்த உத்தரவை மீறி போன நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அதுபற்றிய குறிப்பு போலீஸ் மானியத்திலே வைக்கப்பெற்றது. போலீஸ் அதிகாரி செய்த காரியம் தவறு என்ற முடிவிற்கு வந்து, விசாரணை நடத்தப்பட்டதும், முடிவுகள் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீஸ் மானியத்திலே சொல்லப்பட்டு டேபிளில் வைக்கப் பட்டிருக்கிறது. ஆக பிரச்சனையை நான் திசை திருப்பவில்லை. குடிநீர் பிரச்சனையை தீர்ப்பதற்கு இந்த வாரியம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கழிவுநீர் பற்றி சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். குறிப்பாக கழிவு நீர் அகற்றுகின்ற காரியம் இன்றைக்கு சென்னையிலே நடக்கிறதா என்றால், பல இடங்களில் பாதாள சாக்கடைகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. பலர் தவறி விழுந்து மரணம் அடைகின்ற சூழ்நிலைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்பு கிறேன். இங்கே சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவரப்படு கின்ற புழலேரியைப் பற்றி மக்கள் நலன் கருதி, உங்கள் மூலம்

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புழலேரியிலிருந்து வருகின்ற தண்ணீர் சென்னை கீழ்ப்பாக்கத்தில் இருக்கின்ற நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து சுத்தம் செய்யப்பட்டு, அனுப்பப்படுகின்றது. ஆனால் புழலேரிக்குப் பக்கத்திலே இப்போது புதியதாக ஒரு இறைச்சிக் கூடம் கட்டுகின்ற நிலையில், அந்த மீட் கார்ப்பொரேஷன் ஒரு நாளைக்கு இவ்வளவு ஆடுகள், மாடுகள், பன்றிகள் என்று வெட்டப்போவதை பத்திரிகையில் கொடுத்துள்ளதைப் பார்த்தேன். ஒரு நாளைக்கு 300 ஆடுகள், 200 பசுக்கள், 30 பன்றிகள் வெட்டப்பட்டு, ரத்தமாக, தசையாக, மாமிசமாக, எலும்பாகப் போகின்ற காலக் கட்டத்தில், இந்தக் குடிநீர் வழங்குகின்ற இடம், புழலேரிக்குப் பக்கத்தில் இருப்பது தொத்து நோய்கள் பரவுவதற்கான அபாயகரமான நிலையில் இருக்கிறது. சுற்றுப்புறச் சூழலுக்கென்று நாம் ஒரு அமைச்சரைத் தனியாக வைத்திருக்கிறோம். எனவே நான் சொல்லவிரும்புகிறேன். இங்கே கழிவு நீரை அகற்றுகின்ற காரியத்தைச் செய்கின்றபோது, குடிநீரிலே இதுபோன்று தொத்து நோய்கள் பரப்புகின்ற காரியங்கள் நடைபெறுவது சரியாக இருக்குமா? அதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். கடுமையானது நிர்வாகச் சிக்கல். தயவு செய்து அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதில் பேச்சிலே இதற்கு பதில் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாகச் சிக்கல் என்னவென்று கேட்டால், இப்போது ஒரு தொகுதி இருக்கிறது என்றால், குப்பைகளும் இருக்கின்றன, சாக்கடைகளும் இருக்கின்றன. அதே நேரத்தில் கழிப்பிடங்களும் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் தெருக்களிலே மழைக்காலத்தின்போது, வெள்ளமாக மழை நீர் தேங்கியும் நிற்கிறது. மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களிடத்தில் பொதுமக்கள் வந்து, இருக்கின்ற குப்பைகள் அகற்றப்படவேண்டும், கழிவு நீர் அகற்றப்பட வேண்டும், கழிப்பிடங்கள் சுத்தமாக இல்லை, தண்ணீர் தேங்கி நிற்கிறது சுத்தம் செய்யப்படவேண்டும் என்று சொல்கிறபோது, மாநகராட்சிக்கு தொலைபேசியின் மூலம் பேசினாலோ. அல்லது நேரடியாகச் சென்றாலோ. அவர்கள் சொல்கிறார்கள். ஐயா, மன்னிக்க வேண்டும். இது எங்கள் அதிகாரத்திற்குட்பட்டதல்ல. கழிவுநீர்





அகற்று வாரியத்திற்குச் சொல்லுங்கள் என்கிறார்கள். கழிவுநீரை அகற்றி குடிநீர் வழங்குகின்ற வாரியத்திற்குப் போனால், ஐயா இது எங்களுடைய அதிகாரத்திற்குட்பட்டதல்ல என்று சொல்கிறார்கள். இவற்றைக் கேட்டால் சொல்கிறார்கள், கழிப்பிடத்தை மேற்பார்வையிடுவது மாநகராட்சியாம். கழிவுநீரை அகற்றுவது வாரியமாம், குப்பை அகற்றுவது மாநகராட்சியாம். அதேநேரத்தில் சாக்கடைகளில், கால்வாய்களில், கங்கையாக, காவிரியாக சென்னை நகர வீதிகளிலே பெருக்கெடுத்து ஓடுகின்றதே, அதை அகற்றுவது வாரியமாம்.

அதுமட்டுமல்ல, நான் உங்கள் மூலம் நினைவுபடுத்த விரும்புகிறேன். மழைக் காலத்திலே இன்றைக்கு தெருக்களிலே வெள்ளமாக மழை நீர் ஓடுகின்றது என்றால் அதை அகற்றுகின்ற காரியம் மாநகராட்சியாம். நான் கேட்க விரும்புகிறேன், மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் எங்கே போய்ச் சொல்வது? ஆனால் தேர்தல் காலத்திலே அமைச்சர் பெருமக்கள் பேசுகிறார்கள், ரகுமான்கானுக்கு மூன்று முறை ஓட்டு போட்டீர்களே. சட்டமன்ற உறுப்பினராக ஆக்கினீர்களே, அவர் இதையெல்லாம் அகற்றினாரா என்று கேட்டார்கள், அதற்கு நான் பதில் கூட சொன்னேன். ஆளுங்கட்சி என்பது திருமணமான பெண்ணைப் போல, அதுதான் குழந்தை பெற்று எடுக்கமுடியும். எதிர்க்கட்சி என்பது குறைகளைத்தான் சொல்லமுடியும். திருமணம் ஆகாத ஒரு பருவப் பெண்ணைப் போல, அந்த அமைச்சர் பெருமக்கள் என்னைப் பார்த்து இப்படி கேட்டார்களே, அதிகாரம் அவர்கள் கையில், உத்தரவு போடும் இடத்தில் அவர்கள் இருக்கிறார்களே, நாங்கள் குறைகளைத்தான் சொல்லமுடியும். அதிகாரிகளிடத்தில் தான் சொல்ல முடியும், அமைச்சர்களிடத்தில் தான் சொல்ல முடியும், என்று சொன்னோம். இப்போது அதிகாரிகள் கூட நாங்கள் இந்தக் குறைகளைச் சுட்டிக்காட்ட அழைத்தால் வர மறுக்கிறார்கள், அமைச்சர்களும் வர மறுக்கிறார்கள். இப்போது புதிய அமைச்சர் பொறுப்பேற்று இருக்கிறார்கள். என்னுடைய இனிய நண்பர் காளிமுத்து அவர்கள். எனவே அழைத்தால் வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, மக்கள் நலன் கருதி.

ஆக இன்னும் சொல்லப்போனால், ஆளுங்கட்சியில் இருக்கின்ற நம்முடைய சகோதர, சகோதரி உறுப்பினர்களிடம் கூட இது போன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன. கட்டுப்பாட்டின்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 21

காரணமாக நேரடியாக அவர்கள் சொல்லமுடியாத சூழ்நிலை இருக்கலாம். ஆனால் அவர்களுக்கும் சேர்த்து நான் சொல்கிறேன். இன்றைக்குப் பல்வேறு தொகுதிகளில் இதுபோன்ற நிலைமைகள் இருக்கின்றன. இதனாலே நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிர்வாகச் சிக்கலைப் பற்றி சொல்லும்போது, வேடிக்கையாகச் சொல்கிறேன், ரெட் டேப்பிசம்—பாம்பு வந்து விட்டால், அதை எப்படி அகற்றுவது என்பதற்கு அதிகாரி உடனடியாகச் செய்ய மாட்டாராம், அதை வலது பக்கம் அடிப்பதா, இடது பக்கம் அடிப்பதா என்று மேல் உத்தரவுக்காக அனுப்புவாராம். அதற்குப் பிறகு கம்பால் அடிப்பதா அல்லது வேறு கருவிகளைப் பயன்படுத்தி அடிப்பதா என்று கேட்பாராம். அதற்குப் பிறகு வலது பக்கம் அடிப்பதா, இடது பக்கம் அடிப்பதா என்று கேட்பாராம். . .. (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நாம் இந்தக் கதைகளை எல்லாம் அங்கே கல்லூரிக் காலத்திலே, மேடையிலே ஏறி, ஏறி, பேசி பழகிய கதைகள். ஆகவே இவைகள் மூலமாக என்ன புதிய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறாரோ தெரியவில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** அருமை நண்பர், அமைச்சர் காளிமுத்துவும், நானும் பல பட்டிமன்றங்களில் தனியாக நின்று பல கருத்துக்களை வாதித்து இருக்கிறோம். அவருடைய பகுதிகள் எனக்கு ஞாபகம். அதுபோல் என்னுடைய பகுதிகளும் அவருக்கு நினைவாக இருக்கும். (குறுக்கீடு)

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டுமானால் வெளியே பட்டிமன்றம் வைக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** நானும் இப்போது வெளியே இருந்து கொண்டு நீங்கள் மேடைகளிலே இருபது ஆண்டுகளுக்கு முன்னாலே பேசிய அதே வாசகங்களை பயன்படுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். ரெட் டேப்பிசம் இருக்கிறது என்பதை விளக்குவதற்காக நான் ஒரு ருசிகரமான உவமையை கூறினேன்.



1985 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உவமை ருசிக்கதக்கதாக இருக்கிறது. பாம்புக்கு இடதுபக்கம், வலதுபக்கம் என்று சொன்னார்கள் அது என்ன என்று புரியவில்லை. பாம்புக்கு தலைப் பக்கம் வால் பக்கம் என்று கேள்விப்பட்டதுண்டு. ஆனால் பாம்புக்கு வலது பக்கம் இடது பக்கம் என்று சொன்னதை இதுவரை கேள்விப் பட்டதில்லை, அதை விளக்க வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ளாததற்காக நான் வருத்தப்படவில்லை. அதிகாரிகள் உண்மைகளை புரிந்துகொள்ளாமல் வலதுபுறம், இடதுபுறம் என்று சொல்லி காலத்தை வீணடிக்கிறார்கள் என்பதைத்தான் சொல்கிறேன். உங்கள் சந்தேகத்திற்கு இடம் கொடுக்கிற வகையில் நிலைமைகள் இருக்கின்றன. கழிவுநீர் அகற்றும் வாரியத்திலே உள்ள நிர்வாகிகள், அதிகாரிகள் இதுபோன்று காலத்தைக் கடத்திக்கொண்டு வீணாக்கி கொண்டிருக்கிறார்கள். இது மக்களுடைய பிரச்சினை. இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது.

இன்னும் ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த வாரியத்திலே 13,700 பேர்கள் பணியாற்றுகிறார்கள். மாநகராட்சியிலே அவர்கள் எஸ்டாபிளிஷ்மெண்டிலே இருந்தார்கள், இப்போது அவர்களே தான் இந்த வாரியத்தினுடைய தொழிலாளர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சென்னை மாநகராட்சியிலே இருந்தபோது எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்கப்பட்டு அரசாங்கத்தினுடைய எல்லாச் சலுகைகளும் அவர்களுக்கு உண்டு என்று இருந்தது. இன்றைக்கு அதே தொழிலாளர்கள் வாரியத்திற்கு வந்த பிறகு எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்கப்பட்ட பிறகும்கூட அந்தச் சலுகைகள் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றதா என்றால் கிடையாது. ஏன் இந்த இரட்டை நிலை.

அடுத்து நாலாவது சம்பள கமிஷன் அறிவிக்கப்பட்ட பிறகு அரசு அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் என்று 200, 300 கொடுத்து அது அவர்கள் சம்பளத்திலே பிடிக்கப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் பேசினார்கள், அந்தக் கருத்திலே யிருந்து இங்கேயும் மாறமாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த வாரியத்திலே தொழிலாளர்களுக்கு இடைக்கால

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 21

நிவாரணம் 200, 300 கொடுத்துவிட்டு அதைச் சம்பளத்திலே
பிடித்துக் கொள்வதற்கான உத்திரவுகளைப் போட்டிருக்கிறார்கள்
என்றால் இதுதான் தொழிலாளர் நலம்பற்றிப் பேசுகின்ற ஒரு
சர்க்கார் செய்யககூடிய நியாயமான காரியமா?

கழிவுநீர் அகற்றும் பணியிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்
பாதாளசாக்கடையிலே இறங்கி சுத்தம் செய்கின்றார்கள், அவர்
களுக்கு சிறப்பூதியம் கொடுத்து ஊக்கப்படுத்தவேண்டும், அவர்கள்
இந்த 20 ஆம் நூற்றாண்டிலே நம்மைப் போன்ற மனிதர்கள்
கழிவுநீரில் மூழ்கி சுத்தப்படுத்துகிறார்கள், அவர்கள் சிறப்பு
ஊதியம் கேட்டால் டிபார்ட்மெண்ட் பரிசீலிக்கப்படும் என்றும்
கவனிக்கிறேன் என்றும் சொல்கிறார்களே தவிர எது எதற்கோ
செலவு செய்கிறார்களே, எதை எதையோ விஸ்தரிப்பதற்காக
பணத்தைச் செலவு செய்கிறார்களே அந்த ஏழைத் தொழிலாளர்
களுக்கு இதைச் செய்யக்கூடாதா என்று கேட்டு இந்தக் கழிவு நீர்
அகற்றும் குடிநீர் வழங்கும் காரியம் நல்ல முறையிலே செய்யப்
படுகின்ற வகையிலே அதற்கு இருக்கின்ற ஆயிரக்கணக்கான
சொத்துக்களை உள்ளடங்கிய அந்த நிர்வாகத்திற்கு, அந்த
வாரியத் தலைவர் பொறுப்பை அதிகாரிகள் அல்லாதவர்களை
மக்கள் பிரதிநிதிகள் மாநகராட்சியில் இல்லாதபோது—அதிகாரி
களைப் போடுவது என்றால் குறைந்த அளவுக்கு போடலாம்,
போடுவது என்றால் ஜனநாயகத்தைப் பாதிக்கின்ற காரியங்கள்
நடைபெறும். மக்கள் பிரதிநிதிகள் அல்லாதவர்கள் அந்த வாரியத்
தலைவர் பொறுப்பை வகிக்கக்கூடாது என்று நான் சொல்ல
வில்லை, கடந்த காலத்திலே நடந்த தவறுகள் நடந்துவிடாமல்—
அரசாங்கமே கமிஷன் போட்டது—தவறுகள் தடுக்கப்பட
வேண்டும் என்று கேட்டு குடிநீரை வழங்குங்கள், கழிவு நீரை
அகற்றுங்கள் என்று கேட்டு, இல்லையென்றால் மக்களுடைய
பிரச்சினை தீர்க்கப்படாத குற்றத்திற்கு நீங்கள் ஆளாவீர்கள்,
ஓட்டு எங்களுக்குத்தான் என்று நீங்கள் சந்தோஷப்படுகிற
விவகாரம் வேறு. நீதிமன்றத்திலே கூட சிலர் தப்பித்துவிடலாம்,
ஆனால் அதற்காக அவர்கள் நிரபராதிகள் என்று பொருள் அல்ல,
தேர்தலிலே வெற்றி பெறுவது வேறு, மக்கள் பிரச்சினையைத்
தீர்ப்பது வேறு என்று சொல்லி என்னுடைய உரையை நிறைவு
செய்கிறேன்.



1985 மார்ச் 21] [திரு. ஜி. அனந்த கிருஷ்ணா]

**திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்ட மசோதாவினுடைய ஆப்ஜெக்ட்ஸ்
அண்ட் ரீசன்ஸ்-லே குறிப்பிடப்பட்டுள்ள ரூரல் டெவலப்மென்ட்
டிபார்ட்மெண்டு முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் கீழ் உள்ள வாட்டர்
சப்ளை என்று இரண்டாக பிரிந்ததன் பலனாக அந்தத் துறை
யைச் சேர்ந்த செயலாளரை சேர்மெனாக நியமிப்பதில் எனக்கு
ஆட்சேபணை இல்லை. ஆனால் நான்-அபிசியல் சேர்மென்
என்று புதியதாக இந்த மசோதாவில் இண்டர்ட்யூஸ் செய்யப்
பட்டு இருக்கிறது. 1978-ல் இயற்றப்பட்ட இந்தச் சட்டத்தில்
இதுவரை அதிகாரிகள் தலைவராக இருந்தார்கள். இன்றைக்கு
ஒரு நான்-அபிசியல் சேர்மேனாக கொண்டுவரப்படுகிறது என்றால்
இதற்கு உள்நோக்கம் ஏதாவது இருக்கிறதா என்று சந்தேகப்பட
வேண்டியதாக இருக்கிறது.

ஏன் என்று சொன்னால் எங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தி
லிருந்து 12 கிராமங்கள் சென்னை நகராட்சியோடு சேர்க்கப்
பட்டு இருக்கின்றன. இந்தக் குடிநீர் வடிகால் வாரியம்
இதுவரையில் அந்தப் பகுதிகளில் ஏதேனும் நீர் வழங்குவதன்
மூலமாகவோ, அல்லது கழிவு நீரை அகற்றுவதன் மூலமாகவோ
எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை.
திருவான்மியூர், வில்லிவாக்கம் போன்ற பகுதிகளில் இன்றைக்கு
எங்கள் மாவட்டத்திலிருந்து சென்னை மாநகராட்சியோடு
சேர்க்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் குடிநீர்
வடிகால் வாரியத்தினுடைய செயல்முறைகள் இதுவரையிலும்
நுழைந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பகுதிகள் பஞ்சாயத்து
கீழ் இருந்த நிலைமையை விட இன்றைக்கு மிகவும் சீர்கெட்ட
நிலைமையில் இருக்கிறது. எனவே அதிகாரிகள் தலைமையில்
இருக்கின்ற இந்த வாரியத்திலே பல சீர்கேடுகள் இருப்பதன்
காரணமாக இப்படி ஒரு நான்-அபிஷியல் சேர்மென் நியமிக்க
வேண்டும் என்ற யோசனை அரசுக்கு வந்து இருக்கிறது என்று
நினைக்கக் கூட இடம் இருக்கிறது. அதற்கு எல்லாம் இங்கே
விளக்கங்கள் தரப்படவில்லை. இன்றைக்கு புதியதாக நான் —
அபிஷியல் சேர்மென் ஏன் நியமிக்க வேண்டும் என்பதற்கு இந்த
சட்டத்திலே அதனுடைய ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசனில் எந்த
விதமான விளக்கமும் கிடையாது. இந்த விளக்கம் இல்லாத
நோக்கில் இதற்கு ஆங்கிலத்தில் சொல்வார்கள் "ஆப்ளிக்
மோட்டீவ்" என்று அப்படி ஆப்ளிக் மோட்டீவ் இருப்பதன்

காரணத்தை வேண்டி தான் செய்து இருக்கிறார்களோ என்று
தோன்றுகிறது. இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
விளக்கினால் நலமாக இருக்கும். இந்த நோக்கங்கள் இருக்கும்
என்று கருதுவதால் ஒரு நான்-அபிஷியல் சேர்மேனாக
நியமிப்பது தவறாகும். நாங்கள் இதை ஆட்சேபிக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. சா. துரைசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
இந்த சட்டமுன்வடிவை ஒட்டி ஒருசில உணர்வுகளை சொல்ல
நான் ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பாக உரையாற்றிய
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பல்வேறு
கருத்துக்களைச் சொன்னார்கள். நாங்கள் கொஞ்சம் அடக்க
மாக இருக்கவேண்டும் என்பதற்காக சிலவற்றை எல்லாம்
தாங்கிக் கொண்டு அமைதியாக அவையில் அமர்ந்து இருக்கிறோம்.
நீங்கள் சொன்னது போலவே நாங்களும் சொன்னால் அதை
நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய மனப்பக்குவத்தை பெற்றுக்
கொள்ள வேண்டும் என்பதை முதலில் எனது வேண்டுகோளாக
நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு சென்னை பெருநகர் குடி-நீர் வழங்கல் மற்றும்
கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் வாயிலாக சென்னை மாநகரில்
ஆற்றிக்கொண்டு இருக்கக்கூடிய பணிகள் பற்றியும் அப்படி
சிறப்பாக பணியாற்றக் கூடிய அந்த வாரியத்திற்கு மக்களுடைய
அன்றாட பணிகளை, தேவைகளை மக்களுடைய பிரச்னைகளை
உடனுக்குடன் களைவதற்கு அந்த வாரியத்திற்கு மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்ட அல்லது மக்கள் பிரதிநிதி ஒருவர் இருப்பார்களா
னால் அந்த பணிகளை சரியாக செய்ய முடியும் என்ற காரணத்
தால்தான் இன்றைக்கு அதிகார பற்று அற்றவரை வாரிய தலைவ
ராக நியமிக்க வேண்டும் என்ற ஒரு சட்ட முன்வடிவை
தமிழகத்தின் தள நாயகர் புரட்சித்தலைவர் அவர்கள் அரசு
கொண்டு வந்திருக்கிறது. மக்களுக்கு ஆற்றுகின்ற பணி
நேரடியாக போய்ச் சேரவேண்டும் மக்களது குறைகளையும்
உடனுக்குடன் களையவேண்டும். இன்றைக்குப் பல்வேறு
பிரச்சினைகளில், சிக்கல்களில் ஒரு சில பணிகள் எல்லாம் துவங்
கப்பட்டு இருக்கின்றன. அப்படி துவங்கப்பட்டு இருக்கிற பணி





களை எல்லாம் விரைவாக முடிக்கவும், மக்களுடைய பிரச்சினை
களை எல்லாம் உடனுக்குடன் செயல் ஆற்றவும் இப்படிப்பட்ட
அதிகார பற்று அற்ற, அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
அரசிலிருந்து பிரதிநிதிகளை நியமித்தால்தான் அந்தப் பணிகள்
சிறப்பாக இருக்கும். அந்த அடிப்படையில் வாரியத் தலைவர்
களை நியமிக்க வேண்டுமென்ற அந்த அற்புதமான திட்டத்தைக்
கொண்டுவந்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு
எங்களது நன்றியையும், வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக்
கொள்கிறோம்.

(முற்பகல் 10-20)

இங்கே ரகுமான்கான் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில்,
வாரியத் தலைவர்களை நியமிப்பது பற்றிக் குறிப்பிடுகின்ற
நேரத்தில், அதற்கு உள்நோக்கம் கற்பித்துச் சொன்னார்கள்.
தான் திருடி, அயலாரை நம்ப மாட்டாள் என்கிற ஒரு பழ
மொழியைக் கிராமங்களிலே சொல்லுவார்கள். தாங்கள் எந்தத்
திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அந்தத் திட்டங்களிலே
தங்களுக்கு என்ன பங்கு இருக்கிறது என்று கருதித் திட்டம்
தீட்டியவர்கள் இன்றையும் இதிலேயும் அந்தக் கருத்தைச்
சொல்கிறார்கள் என்று நினைக்கின்றபொழுதுதான் எங்களுக்கு
வேதனையாக இருக்கிறது. தமிழகத்தின் தளநாயகன் புரட்சித்
தலைவரவர்கள் ஆட்சியிலேதான், இங்கே சொன்னாரே, வாரியத்
தலைவர்களெல்லாம் மாற்றப் படுகிறார்களே ஏன் என்று
கேட்டாரே, அந்த அற்புதமான செயல்முறை, யார் மீதாவது
புகார்கள் வந்தால், யார் மீதாவது குறைபாடுகள் வந்தால் அதைப்
பற்றித் தட்டிக் கேட்கின்ற தலைமை அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்திலேயும், இந்த ஆட்சியிலேயும்
இருக்கின்ற காரணத்தினாலேதான், தவறு செய்தார் அல்லது அந்த
வாரியத் தலைவருக்குள்ள மரபுகளை மீறினார் என்று காலக்
கட்டங்களில் தெரிந்தபிறகு நடவடிக்கைகளை மேற்கொள்கி
றார்கள். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வரக்கூடாது
என்பதற்காகத்தான் நாங்கள் உங்களிடத்திலே ஆரம்பத்திலேயே
சொன்னோம். தவறு செய்பவர்கள் அல்லது தவறு செய்வதாகக்
கருதப்படுவர்கள் மீது விசாரணை போன்றவைகளையெல்லாம்
செய்ய வேண்டுமென்று சொன்னோம். ஆனால் நீங்கள் செய்ய
வில்லை. அதனால்தான் குடிநீர் வடிகால் வாரியத்திலேயும்,

[திரு. அ. ரகுமான்கான் ] [1985 மார்ச் 21

மற்றும் குடிசைமாற்று வாரியத்திலேயும் கடந்த காலங்களில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி, வீராணம் போன்ற திட்டங்கள் நாட்டு மக்களால் கேவலப்படுத்தப்பட்டன. ஆனால், ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன் என்கின்ற கொள்கையில் தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் மிகவும் அழுத்தமான நம்பிக்கை கொண்டு பணியாற்றி வருபவர்கள். அதனாலேதான் இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில், கமிஷன் என்று சொன்னார்கள். அது கமிஷன் அல்ல, அந்த வாரியத்தில் ஏற்பட்ட புகார்களை ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மூலம் விசாரிக்கச் சொன்னார்கள். தங்களுடைய பார்வைக்கு வந்த அந்தப் புகார்கள் மீது விசாரிக்கச் சொல்வது என்பது வேறு; கமிஷன் என்பது வேறு. ஆகவே, நீங்கள் தவறான ஒரு கருத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மீது. . . .

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத் தலைவர் ஊழல் செய்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டு, அதை விசாரிப்பதற்காக போடப்பட்டிருப்பது கமிஷன் அல்லது கமிட்டி. இரண்டும் ஒன்றுதான். ஏதோ அதை விசாரித்துச் சொல்லுங்கள் என்று சொல்லவில்லை; ஸ்பெசிஃபிக்காக, விஜய ராகவன் அவர்களுடைய தலைமையில் — இப்பொழுது எலக்ட்ரிசிட்டி போர்டினுடைய சேர்மெனாக இருக்கக்கூடிய அவர்களுடைய தலைமையிலே போடப்பட்டு, அந்த அறிக்கை இங்கே வைக்கப்படும் என்றுகூட நாவலர் அவையிலே உறுதி கொடுத்திருக்கிறார்.

**திரு. சா. துரைசாமி:** துணைத் தலைவரவர்களே, வாரியத் தலைவர் மீது அல்ல: வீட்டு வசதி வாரியத்தில். ஆகவே, . . . .

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, வாரியத் தலைவர் பொறுப்பு ஏற்று, அவர்களுடைய பொறுப்பு ஏற்ற காலத்திலே நடைபெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்பாளியா இல்லையா அல்லது அவர்கள் அதில் சம்பந்தப் பட்டிருக்கிறார்களா என்பதற்காக விஜயராகவன் தலைமையிலே மட்டும் அல்ல; அம்புரோஸ், மணி போன்றவர்களுடைய தலைமையிலேயும் கமிட்டிகள் போடப்பட்டிருக்கின்றன.



1985 மார்ச் 21]

**திரு. சா. துரைசாமி:** துணைத் தலைவரவர்களே, கமிட்டி போடப்பட்டது உண்மை. என்னுடைய கருத்து என்ன வென்றால், போடப்பட்ட அந்த விசாரணை என்பது வாரியத்தின் மீதே தவிர, வாரியத் தலைவர் மீது அல்ல என்பதுதான் என்பதை மீண்டும் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படு கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்திலே ஒருவர் தலைவராக இருக்கிற காலத் திலே சில தவறுகள் நடைபெற்றதாக அரசுக்குத் தெரிந்து, அப்படியொரு குழுவையேகூட நியமித்திருக்கலாம். ஆனால், அப்படித் தவறுகள் நடைபெற்றதாக அரசுக்குத் தகவல் வரு... நேரத்தில் அவைகள் களையப்பட வேண்டுமென்கின்ற வகையிலே நடவடிக்கை எடுத்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, விவாதம் திசை திரும்பிக் கொண்டிருக்கிறது... இருக்காகச் சொல்கிறேன். இதே சென்னைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய திரிசூலத்தில், ஆளுகின்ற சட்டமன்ற உறுப்பினர் ... செய்தார் என்று சொல்லி, செங்கற்பட்டு கலெக்டர் ... போட்டும், தப்புதான், தவறுதான், சட்டத்தைக் கையில் ... கொண்டார் . . . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே ஒரு பிரச்சினையைச் சொல்லுகின்றபொழுது அந்தப் பிரச்னைக்குத் தான் பதிலைக் கேட்டுக்கொண்டு நிற்க வேண்டும். பிறகு ஒவ்வொரு பிரச்னையாக நாம் தோண்டித் துருவி ஆரம்பித்தால் ஒவ்வொன்றுக்கும் அதற்குப்பிறகு தனித்தனியாகத்தான் நாங்கள் பதில் அளிக்க வேண்டியிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சம்பந்தப்பட்ட பிரச்னையில் மட்டும் விளக்கம் கேட்க வேண்டும்.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவரவர்களே, ஒரு வாரியத்திலேயோ அல்லது ஒரு அமைப்பிலேயோ தவறுகள் ஏற்பட்டால், அது தலைவர் மீதாக இருந்தாலும், அல்லது மற்றவர்கள் மீதாக இருந்தாலும், நடவடிக்கை எடுக்கப்படுவது

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 21

என்பது, அல்லது விசாரணை நடத்துவது என்பது அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்று அமைச்ச
ர்வர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின்
ஆட்சியிலேயே அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு
மாநகராட்சி மன்றமே கலைக்கப்பட்டது என்பதை மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இப்போது எந்தத் தலைவர் மீதும் எந்தக்
குற்றச் சாட்டும் நிரூபணம் ஆகவில்லை. அப்படி எந்தத்
தலைவர் மீதும் முத்திரை குத்துகின்ற அளவுக்கு எந்தவிதமான
சிக்கலும் வரவில்லை. அதனால்தான் அந்த பதிலை நான்
சொல்ல நேர்ந்தது.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இப்படி யார் தவறு செய்தாலும் அதை
விசாரிக்கின்ற அல்லது அதைக் கட்டுப்படுத்துகின்ற, அதை
முறைப்படுத்துகின்ற ஆற்றல் பெற்ற புரட்சித் தலைவர் அவர்கள்
தனித்தனி வாரியங்களை இப்படி அமைத்து மக்களுக்குப்
பணியாற்றிக்கொண்டு வருவது பாராட்டத்தக்க ஒன்றாகும்.
அப்படிப்பட்ட நல்ல பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற
சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் இன்றைக்கு
சென்னையிலே ஒரு சிறப்பான பணியை மேற்கொண்டிருக்கின்ற
அதேநேரத்தில் ஒரு மிக முக்கியமான வரலாற்றுச் சிறப்பு மிக்க
திட்டமான கிருஷ்ணா நதி நீர்த்திட்டத்தைக் கொண்டுவர இருக்
கின்றது. தமிழகத்தினுடைய புரட்சித் தலைவர் அவர்கள் இந்த
மிகப் பெரிய திட்டத்தைச் சென்னை மாநகருக்காகத் தீட்டி
200 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து அதோடுமட்டு
மல்லாமல் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார்
அவர்களையும் அழைத்து வந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்று
கின்ற நிகழ்ச்சியை அற்புதமாக நடத்தி அதன் பின்னர்
இன்றைக்கு வேலைப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
எனவே இது வீராணம் போல் அல்லாமல் மக்களுக்கு நல்ல
முறையில் பயன்தரத்தக்க திட்டமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்
கின்றது.



1985 மார்ச் 21] [திரு. சா. துரைசாமி]

எனது தொகுதியிலே இன்றைக்கும் இருக்கிறாள் காலிக்குடம்
சிலையாக. வீராணம் திட்டம் சென்னைக்குக் கொடுக்கப்படும்
என்று சொல்லி அதற்காக சிலையெல்லாம் அமைத்ததற்குப் பிறகு
அந்தப் பணிகள் நடைபெறாமல் முற்றுப்பெற்றுவிட்டது. அந்த
நிகழ்ச்சி போல் அல்லாமல் கிருஷ்ணா நதி நீர்த்திட்டம் சென்னை
நகர மக்களுக்கு வழங்கப்படுகின்ற அற்புதமான காலம் வரப்
போகின்றது. அப்படிப்பட்ட நல்ல முறையில் பணியாற்றிக்
கொண்டிருக்கின்ற இந்த வாரியத்திற்கு மேலும் பல பணிகளைச்
செய்கின்ற வகையில் ஒரு சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு மாநகராட்சியால் அங்கீகரிக்கப்படுகின்ற
லே-அவுட்களில் எல்லாம் பள்ளிக்கு இடம் கேட்கிறார்கள்.
லைப்ரரிக்கு இடம் கேட்கிறார்கள், விளையாட்டிற்கு இடம்
கேட்கிறார்கள். ஆனால் கழிவு நீரகற்று வாரியம் தன்னுடைய
பணிகளைச் செய்கின்ற வகையில் மேல்நிலைத் தொட்டிகளை
அமைத்து குடிநீர் வழங்குகின்ற வகையில் பம்பிங் ஸ்டேஷன்
அமைத்து அந்தப் பணிகளைச் செய்வதற்குரிய வகையில்
இடம் ஒதுக்கப்படுகின்றதா என்பதையும் மாநகராட்சி கவனித்து
தன்னுடைய அங்கீகாரத்தை லே-அவுட்டிற்கு வழங்குகின்ற
நிலைமை இருக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு இடங்களில் தனியார் தெருக்களில்
அந்தக் கழிவு நீர் செல்லுகின்ற பாதை அமைக்கப்படாமல் அந்தப்
பணி தடைபட்டுக் கொண்டிருக்கின்றது. அப்படி தடைப்
படுவதால் அங்கீகாரம் செய்யப்பட்ட தெருக்களில் கூட அந்தக்
கழிவு நீரகற்றுகின்ற பணி தாமதப்படுகின்றது. எனவே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கழிவு நீரகற்றும் பணி
களைப் பொறுத்தவரையில் அவை தனியார் தெருக்களாக இருந்
தாலும் அந்த மக்களின் நியாயமான உணர்வுகளைப் புரிந்து
அந்தப் பகுதிகளிலும் கழிவு நீரகற்றுகின்ற பணியைச் செய்ய
வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க ஆசைப்படுகிறேன்.
காரணம் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று
தனியார் தெருக்கள் அங்கீகாரம் பெறாத பகுதிகளில் 500 வீடுகள்,
800 வீடுகள் என்று வந்துவிட்டதற்குப் பிறகு அவர்கள் இன்னும
அடிப்படை வசதிகளைக்கூட பெறாத நிலைமை இருந்தால
எப்படி சுகாதாரச் சீர்கேடு வராமல் இருக்கும். ஆகவே பொது

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் மக்களுடைய பிரச்சனை களை உணர்ந்து அந்த சட்ட விதிகளைத் தளர்த்தியாவது தனியார் நெருக்களுக்கும் கழிவு அகற்றுகின்ற வசதிகளை செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இதுவரையில் முட்டுக்காடு தண்ணீர் மேலநகர் போன்ற இடங்களுக்குச் சென்றுகொண்டிருந்தது. அது இப்போது செல்லவில்லை. பாலாற்றிலே இருந்து தண்ணீர் கொண்டுவரப்பட்ட காரணத்தால் அந்த முட்டுக்காடு தண்ணீர் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது. 30 ஆண்டுகாலமாக மடுவங்கரை பகுதியைப் பொறுத்தவரையில் மாநகராட்சியின் குடிநீர் வழங்குகின்ற துறையின் வாயிலாக, அதாவது பைப்பின் மூலமாக தண்ணீர் கொடுக்கப்படவில்லையானால், லாரிகளின் மூலமாக டேங் வைத்து தண்ணீர் வழங்கி வருகிறார்கள். அந்த முறையை மாற்றி இந்த முட்டுக்காடு தண்ணீரை மேலநகர், காமராஜர்புரம், கே. ஆர். ராமசாமி நகர், மடுவங்கரை போன்ற பகுதிகளுக்கு வழங்கி அவர்கள் இதைப் பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அது மாத்திரமல்ல, இன்றைக்கு கோட்டூர், ஸ்ரீராம் நகர், பள்ளிப்பட்டு, சங்காடுதாங்கல் போன்ற பகுதிகளில் எல்லாம் கழிவுநீர் செல்கின்ற அந்தப் பாதை அமைக்காமல், அந்தப் பணியைத் துவங்குவதற்கு இடம் கிடைக்காமல், பம்பிங் ஸ்டேஷன் அமைப்பதற்கு இடம் இல்லாத காரணத்தினால் அந்தப் பணி தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பணியைத் துரிதப்படுத்தி, இடத்தைப் பெற்று, துவங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, இன்றைக்குக் குடிநீர் வழங்கும் முறையை எடுத்துக்கொண்டால், சென்னை மாநகரத்தில் உடனுக்குடன் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு, குடிநீர் பிரச்னை இந்த அரசால் சமாளிக்கப்பட்டது. அதைப் போலவே இந்த ஆண்டு கடுமையான தண்ணீர் பிரச்சனை வரக்கூடும் என்று அஞ்சி அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்கு முன்பாகவே தேவையான அத்தனை



வசதிகளையும் பெற்று, இன்றைக்குச் சென்னை மாநகரத்தி லுடைய குடிநீர் பிரச்சனையைச் சமாளிக்கக்கூடிய வகையில். அதனுடைய பணியை முடுக்கி விட வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, மக்களுடைய முக்கியமான, அத்தியாவசியமாக விளங்கிக் கொண்டிருக்கிற இப்படிப்பட்ட ஒரு வாரியத்திற்கு அதிகாரப் பற்றற்றத் தலைவரை நியமிப்பது என்பது மிக முக்கியமான ஒன்றாகும். அந்தப் பணியைப் புரட்சித் தலைவருடைய ஆட்சி சிறப்பாகச் செய்யும். மற்றைய கால கட்டங்களில் நடந்ததைப் போல. குடிநீர் வடிகால் வாரியத்தில் முன்பு நடந்ததைப் போல இங்கே நடைபெறாது. அப்படிப்பட்ட பணிக்கு இடமில்லை தங்களுடைய கொள்கைகளில் தோற்றவர்கள், தங்களையே குற்றம் சாட்டுகின்ற சூழ்நிலையில் இங்கே பேசுவது உகந்தது அல்ல என்று சொல்லி, புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல திட்டங்களைச் செயல்படுத்த இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நான்-அபிஷீயல் சேர்மனைப் போடுவதனால் இந்த போர்ட் எபிஷீயன்டாக பங்க்ஷன் பண்ணும் என்ற நோக்கத்தோடு இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இன்று ட்வாட் போர்டில் கூட நான்-அபிஷீயல் சேர்மன்தான் போடப்பட்டிருக்கிறது. ஆனால் நான்-அபிஷீயல் சேர்மன் போடப்பட்டால் அது எபிஷீயன்ட் பங்க்ஷனிங் என்பதற்கு உத்தரவாதம் அல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், ட்வாட் போர்டிலே இன்றைக்கு நான்- அபிஷியல் சேர்மன் இருந்ததற்குப் பிறகும்கூட அந்த போர்ட் சரியான முறையில், மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறை பிரச்சனைக்கு தீர்வு ஏற்படுத்தவில்லை என்பது அனைவருக்கும் நன்கு தெரிந்ததுதான். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சரி, இன்று குடிநீர்ப் பற்றாக்குறை சம்பந்தமாக ட்வாட் போர்ட் செயலாற்றுவது பற்றி பல விமர்சனங்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றனர். இன்று ட்வாட் போர்ட் எக்ஸ்பீரியன்சை வைத்துப் பார்ப்போ மானால் இன்று நான்-அபிஷீயல் சேர்மன் போடுவது எபிஷீயன்ட் பங்க்ஷனிங்குக்கு அஸ்திவாரம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

எபிஷியன்ட் பங்க்ஷனிங் என்பது மக்களுடைய பிரச்னைகளைக் காலாகாலத்திலே பார்த்து அதற்கு முடிவு ஏற்படுத்திக் கொள்வது என்பதுதான். அந்த முறையிலே இன்று சென்னை நகரத்திலும் சரி, தமிழகத்தினுடைய பல பகுதிகளிலும் சரி, குடிதண்ணீர் பற்றாக்குறை பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று சென்னை நகரைப் பொறுத்த அளவிலே சில கருத்துக்கள் சொல்வதற்கு முன்னாலே, பல இடங்களிலே, இன்றைக்கு ட்வாட் போர்ட் ஆனாலும் சரி அல்லது எக்ஸ்டென்டட் ஏரியாவானாலும் சரி, டாங்குகள் கட்டப்பட்டிருக்கின்றன; ஆனால் கிணறுகள் தோண்டவில்லை. கிணறு இருக்கும். தண்ணீர் இருக்காது. இப்படிப்பட்ட பல குறைபாடுகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. நிச்சயமாக அதைப் போக்குவதற்குத் தகுந்த அளவிலுள்ள நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒரு ஏற்பாடு என்ற முறையிலேதான் இந்த போர்டை பங்க்ஷன் பண்ண வைக்க வேண்டும்.

அதில் இன்னொரு எக்ஸ்பீரியன்ஸ் சொல்ல வேண்டுமென்றால், ஒரு நான்-அபிஷியல் சேர்மேன் ( Function ) பண்ணக்கூடிய போர்ட்டில் தொழிலாளர்கள் விக்டிமைசேஷன் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறது. சங்கம் வைத்தால்கூட அந்தத் தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். தனியார் முதலாளிகள்கூடச் செய்யாத அளவுக்கு இன்றைக்கு ஒரு நான்-அபிஷியல் பங்க்ஷன் பண்ணக் கூடிய ஒரு அரசு ஸ்தாபனத்திலே இப்படிப்பட்ட ஒரு நிலை — ஒரு சங்கம் கூட வைத்துக் கொள்வதற்கு முடியாத நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ஆகவே ஒரு நான்-அபிஷியல் சேர்மேன் போட்டால் எபிஷியன்ட் பங்க்ஷனிங் என்று சொல்வது ஜஸ்டிபை ஆகாது. சென்னை நகரில் சட்டமன்ற விடுதிகளில் போடப்பட்டிருக்கிற அந்தக் குழாய்களில் வருகிற தண்ணீரில் கூட அட்டைகள் சிலநேரங்களில் வருகின்றன. இன்றைக்கு நாங்கள் இருக்கிற எ.என்.எச். சட்டமன்ற விடுதி அருகில் ஒரு ஓடை இருக்கிறது. அந்த ஓடை சரியாக சுத்தம் செய்யப்படுவதில்லை. அதனால் அந்தப் பகுதியில் கொசுக்களின் தொல்லை மிக அதிகமாக இருக்கிறது. நான் இதை எதற்காக சொல்கிறேன் என்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி





என்பது தினமும் பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்து போகிற சென்னை நகரத்தின் முக்கியமான கேந்திரப் பகுதியில் இருக்கிறது. அப்படி அந்தப் பகுதியில் இருக்கிற பிரச்னைகள் கூட இந்த வாரியத்தினால் தீர்க்கப்படவில்லை. ஒருவேளை அவை பொதுப் பணித் துறையின் பொறுப்பிலே இருக்கிறது என்று அவர்கள் பதில் சொல்லலாம். சென்னை நகரத்தினுடைய முக்கியமான பகுதியில் இருக்கிற இடத்தில் கூட பிரச்னைகளை வாரியம் தீர்க்கவில்லை என்பது மிகவும் துரதிஷ்டமான விஷயம்.

இன்னொன்று இதோடு இணைக்கப்பட்டிருக்கிற எக்ஸ்டெண்டட் ஏரியாவில் குடிதண்ணீர் விநியோக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கிணறு, வெட்டப்பட்டு, தொட்டிகள் கட்டப்பட்டு எல்லா ஏற்பாடுகள் செய்யப்பட்டதற்கு பின்னாலும் மின் வாரியத்திலிருந்து மின் இணைப்பு கிடைப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. பஞ்சாயத்திலிருந்து மின் வாரியத்திற்கு பாக்கிகள் இருக்கின்றன; ஆகவே இணைப்பு கொடுக்க முடியாது என்று மின் வாரியத்தில் சொல்கிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டு குடிதண்ணீர் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இன்றைக்கு குடிதண்ணீருக்கு பற்றாக்குறை இருக்கிறது. தண்ணீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்ததற்குப் பிறகும் பஞ்சாயத்திலிருந்து லைட் போட்டதற்கும், மற்றவைகளுக்கும் வர வேண்டிய பாக்கிகள் இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி மின் இணைப்பு கிடைக்காத நிலை இருக்கிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சென்னை நகரத்தோடு இணைக்கப்பட்டிருக்கிற பகுதி வில்லிவாக்கம் பகுதி. அந்தப் பகுதியில் குடிதண்ணீர் விநியோகம் கோரி நிறைய மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குடிதண்ணீர் வசதி காலாகாலத்தில் செய்யப்படவில்லை என்று புகார்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதியிலே உள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு அமைச்சர் அவர்கள் பிரத்யேகமான நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிதண்ணீர் பிரச்னையை சென்னை நகரத்திலும், சென்னை

[திரு. ஜெ. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 21

நகரோடு இணைக்கப்பட்டிருக்கிற பகுதிகளிலும் தீர்த்து வைக்
கிற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு இந்தச்
சட்ட முன்வடிவு பயன்படும் என்று நாங்கள் எண்ணுகிறோம்
என்று கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு
உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை, இந்த வாரியத்திற்குப்
பயன்படக்கூடிய வகையிலே எடுத்து விளக்கி இருக்கிறார்கள்.
இரண்டு திருத்தங்களை இந்தச் சட்ட முன்வடிவின் மீது இங்கே
நாம் அவையிலே வைத்திருக்கிறோம்.

ஒன்று, உள்ளாட்சி செயலாளர் இதனுடைய தலைவராக இருப்
பார்கள் என்கிற அந்த நிலைமை மாறி, அது இரண்டு பிரிவுகளாக
பிரிக்கப்பட்ட காரணத்தினால் நகராட்சி நீர் வழங்கல் துறைச்
செயலாளர் இதனுடைய தலைவராக இருப்பார்கள் என்பதாகும்.
மற்றொன்று, அலுவல் சாராத ஒருவரை இதனுடைய தலைவ
ராகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு வகை செய்வதாகும்.
ஆகவே இந்த இரண்டு திருத்தங்களையும் உள்ளடக்கி இந்தச்
சட்ட முனவடிவு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இந்த இரண்டு
திருத்தங்களை மட்டும் வைத்துக்கொண்டு, வல்லவனுக்கு புல்லும்
ஆயுதம் என்பதைப் போல் பல்வேறு கருத்துக்களை இதன்
தொடர்பாக சொல்லி இருக்கிறார்கள். ஒரு சிறப்புச் சொற்
பொழிவை இங்கே நிகழ்த்தி இருக்கிறார்கள் என்று சொல்லத்
தக்க அளவிற்கு அவர்களுடைய எண்ணங்களை எடுத்துச்
சொல்லி இருக்கிறார்கள். முதலில் இப்படி ஒரு தனி அமைப்பு
தேவையா? இப்படி ஒரு சட்ட முன்வடிவு வைக்கப்பட்டபோதே
நாங்கள் எதிர்த்தோம் என்று தெரிவித்தார்கள். இப்படி ஒரு
தனி அமைப்பு எதற்காக தேவைப்பட்டது என்று அவர்களே
சுட்டிக்காட்டினார்கள். உலக வங்கி போன்றவைகளுடைய உதவி
களைப் பெற்று குடிதண்ணீர் வழங்குவதற்கு, கழிவு நீர் அகற்றுவ
தற்கு, இருக்கிற பணிகளை நாம் மேம்படுத்துவதற்கு சில ஏற்பாடு
களைச் செய்வதற்காக ஒரு தனி அமைப்பு தேவையென்று



1985 மார்ச் 21] [டாக்டர் கா. காளிமுத்து]

அப்போது எடுத்துச் சொல்லப்பட்டது. அப்போதே இந்தச்
சட்டமுன்வடிவிற்கான எதிர் கருத்துக்களும் எடுத்துச் சொல்லப்
பட்டு, இது தனி அமைப்பாக இருக்க வேண்டியதின் இன்றி
யமையாமையை விளக்கத்தக்க வகையில் அமைச்சர் அவர்களின்
பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, அரைத்த மாவையே

(முற்பகல் 10-40)

மீண்டும் அரைக்க நான் விரும்பவில்லை. ஆனால் இதிலே
நிர்வாகச் சிக்கல் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்
களே கூட மாநகராட்சிக்கு என்ன என்ன அதிகாரம், இந்த
வாரியத்திற்கு என்ன என்ன அதிகாரம் என்று பட்டியல் போட்டு
கூட காட்டினார்கள். அவர்கள் அவ்வளவு தெளிவாகச்
சொன்னதற்குப் பிறகு இதிலே நிர்வாகச் சிக்கல் இருப்பதாகத்
தெரியவில்லை. சில பணிகளை மாநகராட்சியும் இந்த வாரியமும்
கூட்டுப்பொறுப்பாகச் செய்யவேண்டியதிருக்கும். மாநிலத்திலே
பல்வேறு பிரச்சனைகளில் இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதை
நாம் காண்கிறோம்.

ஒரு நகரத்தில் இருக்கிற அனைத்துத் திட்டங்களும் உள்ளாட்சி
மூலமாக நடக்கவில்லை. சில பொதுப்பணித் துறை மூலம்
நடைபெறுகின்றன; சில போக்குவரத்துத் துறை மூலம் நடை
பெறுகின்றன; சில நெடுஞ்சாலைத் துறை மூலம் நடைபெறு
கின்றன. சில பணிகள் மாநில அரசுக்கே தொடர்பு இல்லாமல்
மத்திய அரசு மூலமாக நடைபெறுகின்றன. ஆகவே, இதிலே
மக்களுக்கு பயன் ஏற்பட வேண்டுமென்பதுதான் முக்கியமானதே
தவிர இது யாருடைய பொறுப்பிலே இருக்கிறது என்பது இந்த
சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் அவ்வளவு முக்கியமானது
அல்ல என்று நான் கருதுகிறேன்.

சில ஏற்பாடுகளை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்ற
நோக்கத்திலேதான் இந்த அமைப்பே தோற்றுவிக்கப்பட்டது.
அது தன்னுடைய கடமையை ஒழுங்காக, தெளிவாக நிறை
வேற்றிக் கொண்டிருக்கிறது. நான் இன்னும் குறிப்பிட வேண்டு
மென்றால், வறட்சி ஏற்பட்ட நேரத்திலே சென்னை மாநகரிலே
குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டபோது இந்த வாரியம் விரைந்து செயல்
பட்டு இயங்கியது என்பதும் பொதுமக்களுடைய பாராட்டு

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 மார்ச் 21

தலைப் பெற்று இயங்கியது என்பதும் நிச்சயமாக எவரும் மறுக்க முடியாதது. ஆக, அந்த வகையிலே இந்த வாரியம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இதிலே சிலபல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்; சில பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டி னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். குடிநீர் வழங்கல் என்பதும் கழிவுநீர் அகற்றுதல் என்பதும் ஒரு தொடர் நடவடிக்கை. இன்னும் சொல்லப் போனால் அன்றாடம் நடைபெற வேண்டுமென்கின்ற ஒரு நடவடிக்கை. ஒரு காலகட்டத்தை நாம் நிர்ணயம் செய்து, இதோடு குடிநீர் வழங்கிவிட்டோம், இதோடு கழிவுநீர் அகற்றி விட்டோம், அதனால் வாரியத்தை மூடிவிடப்போகிறோம் என்ப தல்ல. இது தொடர்ச்சியாக நடைபெற வேண்டிய பணி. ஆக, தொடர்ச்சியாகப் பணிகளைச் செய்கிறோம் என்பதினாலே பல்வேறு இடங்களில் கோரிக்கைகள் எழும். பல்வேறு இடங்களிலே தேவைகள் எழும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தன்னு டைய தொகுதியிலே குடிநீருக்கு சிக்கல் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர் அமைச்சரை அழைத்தால் வருவாரா என்று கேட்டார். அமைச்சர் நிச்சயமாக வருவார். அமைச்சரை அழைத்துக்கொண்டு போகும்போது உங்களுக்கு ஏதாவது சிக்கல் வரலாமே தவிர அமைச்சர் வருவதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, அலுவல் சாராத ஒருவரை இதிலே தேர்ந்தெடுப்பதற்கு வகை செய்கிறோம் என்கிற கருத்தை வைத்துக்கொண்டு, அலுவல் சாராத ஒருவர் தலைவராக வந்தால் இந்த அமைப்பு சரிவர இயங்குமா என்ற கேள்விக் குறியை விஸ்வரூபம் எடுக்கவைத்தால் அது மக்களாட்சியினுடைய மாண்பை சீர்குலைக்கக்கூடியது, மக்கள் பிரதிநிதிகளுடைய தனித் தன்மையை அழிக்கக்கூடியது. இப்படிப்பட்ட ஒரு முடிவான கருத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்துவிடக்கூடாது. தவறுகள் நடைபெற்றால் அந்தத் தவறுகளைக் களைவதற்கு நாம் பல்வேறு நடவடிக்கை களைச் செய்திருக்கிறோம். அந்தத் தவறுகள் நீடித்து,



1985 மார்ச் 21] [டாக்டர் கா. காளிமுத்து]

தொடர்ந்து நடக்க வேண்டுமென்ற கருத்துக்கு யாரும் வந்துவிட மாட்டார்கள். ஆக, தவறுகளைப் போக்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அவர்கள் குறிப்பிட்டதைப்போலவே கூட சில அமைப்புகளிலே தவறுகள் நடைபெற்றன என்று அரசின் கவனத்திற்கு வரும் போது உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துவந்திருக் கிறது. ஆகவே, நான் இப்போது கூறுவது இதனுடைய பணி இன்னும் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்பதுதான். அந்த வகையிலே தான் இந்தச் சட்டத் திருத்தம் இங்கே வந்திருக்கிறது.

இந்தச் சட்டத் திருத்தத்தை முன்வைத்துக்கொண்டு பல்வேறு கருத்துக்களை இங்கே சொன்னார்கள். கிருஷ்ணா நதித் திட்டம் வருமா? அதிலே தடை கற்கள் எவ்வளவோ இருக் கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித் தார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். தடை கற்கள் இருந்தாலும் அதை தகர்த்தெறிகின்ற தடந்தோள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகை யிலே குடிநீருக்கு தலைநகரத்து மக்கள் அல்லல்படாத வகையில் இந்த வாரியம் சிறப்பாக இயங்கும், பணிகளைச் செய்யும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்கள் துணை புரியும் என்பதைக் கூறி, இந்தச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக எடுத்துச்சொன்ன விளக்கத்தில், இந்த வாரியத்தினுடைய தலைவராக இந்தத் துறையைச் சேர்ந்த அரசாங்க அதிகாரி இடம் பெறுவதைத் தவிர்த்து, அலுவல் சாராத ஒருவரை தேர்ந்தெடுக்க வழிவகைச் செய்கிறது என்று சொன்னார்கள். அதன் பின்னால் இறுதியிலே சொல்லுகிற போது மக்கள் ஆட்சி முறையிலே அப்படி அலுவல் சாராத ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கின்ற முறையில் எதிர்ப்ப என்பது, மக்களாட்சி முறைக்கு ஏற்றது அல்ல என்ற கருத்தைச் சொன்னார்கள். தேர்ந்தெடுப்பது என்று சொன்னால், யார்.

[திரு. க. அன்பழகன்] [1985 மார்ச் 21

யார் சேர்ந்து தேர்ந்தெடுப்பது? அல்லது நாமினேஷன் செய்யப் படுவதை, அரசாங்கத்தால் நியமிக்கப்படுவதை தேர்ந்தெடுப்பது என்ற பொருள்பட அமைச்சர் கூறினாரா? ஆட்சிப்பீடத்திலே இருப்பவர்கள், அவர்களுடைய பொறுப்பிலே இருக்கிற ஒருவரை நியமிப்பது என்பது மக்களாட்சி முறைக்கு முழுமையாக ஏற்றது என்று அமைச்சர் வாதிட முடியுமா? அல்லது நாமினேஷனை தேர்தல் என்று அவர் கருதுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே பேசும் போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். மக்கள் தொடர்பான சில துறைகளைக் கவனிப்பதற்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இப்படிப்பட்ட அலுவல் சாராதவர்கள் தலைவர்களாக இருந்தார்கள் என்று குறிப்பிட்டார். அதே நடைமுறையைத்தான் நாங்களும் பின்பற்றுகிறோம்.

**திரு. அ. ரகுமான்கான்**: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே சொல்வது வேறு. பேராசிரியர் அவர்கள் எழுப்பிய கேள்வி வேறு. அதிகாரி அல்லாத ஒருவரைத் தலைவராக நீங்கள் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கவில்லை. நியமனம் செய்யப்படுகிறார்கள். நீங்கள், தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று பேச்சிலே குறிப்பிட்டீர்கள். நாமினேஷன் வேறு, எலக்ஷன் வேறு.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**: விளக்கத்திற்கு நன்றி.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி

"1985 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.



1985 மார்ச் 21]

பிரிவுகள் 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் முடிவுற்றன. அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுப்படி, பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 25—3—1985 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 10.48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

**IN MADRAS CITY.**

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

**IN MOFUSSIL OF TAMIL NADU.**

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appai Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

**IN OTHER STATES.**

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

70/86

2826

24

வெளியீடு 11-12-1985 Issued 11—12—1985

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 25, 1985 - தொகுதி III எண் 4

Monday the 25th March 1985 - Volume III No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009**

விலை: ரூ. 3-50 காசுகள் **Price Rs. 3-50 paise.**

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

121. ஏற்கனவே 27—1—1983 ஆம் தேதியன்று அவைமுன் வைக்கப்பட்ட அறிவிக்கையின் திருத்தப்பட்டியல் குறித்து கல்வி-அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் 22—7—1982 ஆம் நாளிட்ட 1613 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப் படுத்தல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 19/1976) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

122. அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக திரு. வி. சி. குழந்தைசாமி அவர்களை மறுநியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 22—9—1984 ஆம் நாளிட்ட 1258 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

123. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

31. 1984-85 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

32. 1984-85 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

33. 1984-85 ஆம் ஆண்டு இறுதி துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

## உள்ளடக்கம்.

25—3—1985

2 1 ... 85

பக்கங்கள்


**1. வினாக்கள்-விடைகள்:**

உடுக்குறியிட்ட வினாக்கள் ... 333–342

**2. தகவல் கோரல்:**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் ... 342–343

**3. கவன ஈர்ப்புகள்:**

(அ) கொசுத் தொல்லையால் சென்னை நகர மக்கள் அவதிப்படுவது ... 343–348

(ஆ) விளவங்கோடு வட்டம், ஓசியானிக் புரா டக்ட்ஸ் மீன் பதவிடும் தொழிற்சாலையின் கழிவு நீரால் மக்கள் பாதிக்கப்படுவது ... 348–351

**4. அறிவிப்புகள்:**

(அ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே. செ.) ... 351–352

(ஆ) குழுக்களுக்கான தேர்தல் ... 354

(இ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.) ... 355

(ஈ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.) ... 35[illegible]

(உ) கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள், 1984-85 (ஆ.இ.) ... 35[illegible]

(ஊ) நிதி [illegible] சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.) ... 46[illegible]

எங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. திருத்துறைப்பூண்டியில் சுமார் 1,800-க்கும் மேற்பட்ட குழந்தைகள் படிக்கிறார்கள். கணிசமான அளவில் பெண்கள் கிராமத்திலிருந்து வருவதால் சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, அந்தப் பங்குத்தொகையை எடுத்துக் கொண்டு, பெண்கள் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு, இந்த ஆண்டாவது திருத்துறைப்பூண்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதி அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு திருத்துறைப்பூண்டியில் தனியாக உயர்நிலைப்பள்ளி துவக்கப்பட்டபின், மேல்நிலைப்பள்ளியைப் பற்றி பரிசீலனை செய்வதாக பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நாம் ஜூன் மாதத்தில் அதுபற்றி பரிசீலிக்க இருக்கிறோம். அதற்குள் அந்த உயர்நிலைப் பள்ளியோ, மேல்நிலைப் பள்ளியோ துவக்குவதற்கான முன்னேற்பாடுகளை செய்து அனுப்பியிருக்கிறார்களா என்று பார்த்து அதற்கான கருத்துரு அந்தப் பள்ளியிலிருந்து வந்தபிறகு, அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கவும், அதைப்பற்றி பரிசீலிக்கவும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது உயர்நிலைப்பள்ளியைத் தான். மேல்நிலைப் பள்ளி என்று தவறாக போடப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக, உயர்நிலைப்பள்ளிக்கு அரசாங்கத்தின் விதிப் பிரகாரம் கட்டிடங்கள் கொடுக்கப்பட்டுவிட்டது. பங்குத்தொகை கட்டி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இவ்வளவும் அமைச்சர் அவர்கள் அனுமதித்த பிறகுதான் செய்து முடிந்தாகிவிட்டது. ஆகவே, இது ஒரு கட்டத்தோடு நின்று இருப்பதினால், அமைச்சர் அவர்கள் தயவு செய்து இந்த ஆண்டு அந்த உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அமைச்சர் அவர்களும் வாக்குறுதி கொடுக்க வேண்டும் என்று கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் தம்முடைய மூலக் கேள்வியிலேயே 'மேல்நிலைப்பள்ளி' என்று தான் கொடுத்திருக்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்தபிறகு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட வேண்டும் என்ற கருத்துருவை வரவேற்கிறேன். அதுபற்றி அரசும் அக் கறை கொண்டிருக்கிறது. ஆனால் முறையாக செயல்பட வேண்டும். சென்ற ஆண்டு நாங்கள் பரிசீலனைக்கு எடுக்கின்ற போது ஒருவேளை அந்தப் பங்குத்தொகை கட்டப்படாமல் இருக் கலாம் என்று நான் நினைக்கிறேன். இப்போது என்னிடத்தில் தரப்பட்டு இருக்கின்ற விவரத்தின்படி பங்குத்தொகை செலுத்தப் படவில்லை என்றுதான் துறையிலிருந்து எனக்கு எழுதி அனுப் பியிருக்கிறார்கள். ஆகவே அதனை விசாரித்து தகவல் தெரிவிப் பார்களானால் நாங்கள் முயற்சி எடுக்கிறோம்.

11.—(*வினா எண் 381) **திரு. சா. துரைசாமி**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதைப் பகுதியில் மகளிர்க்கென தனியாக மேல் நிலைப் பள்ளி துவங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : (அ) இல்லை.

(ஆ) எழாது.

**திரு. சா. துரைசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, பெண்களுக்காக தனியாக உயர்நிலைப் பள்ளியாக மாற்றிய சைதை மாதிரி உயர்நிலைப் பள்ளியில், பெண்கள் பள்ளிக்குத் தனியாக கட்டிடம் இல்லை. உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டி ருக்கின்ற அந்தப் பள்ளிக்கு கட்டிடங்கள் கட்ட அரசு பரிசீலனை செய்யுமா என்றும் மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே சொல்லப்பட்ட கேள்விக் குப் பதிலாக நான் சொன்ன கருத்துக்களைத்தான் இதற்கும் சொல்ல விரும்புகிறேன். ஒரு உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்றாலும் அல்லது உயர்தர ஆரம்பப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டும்

பக்கங்கள்

5. அரசினர் தீர்மானங்கள் :

(அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் 352

(ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் 352

(இ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல் 353

(ஈ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் 353–354

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் ;

(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985 355–35

(ஆ) பொது விற்பனை வரி இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985 357

(இ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1985 469–470

7. இறுதித் துணை நிதி அறிக்கை, 1984-85—பொது விவாதமும், வாக்கெடுப்பும்: 358–470

திரு. ஜே. மூக்ம்மது கனி 358–359

திரு. செ. செம்மலை 359–368

திரு. ஆர். ஈஸ்வரன் 368–373

திருமதி பா. வளர்மதி 373–381

திரு. அ. ரகுமான்கள் 381–400

டாக்டர் கே. பி. இராமலிங்கம் 400–413

திரு. கு. ரமணி 413–428

திரு. ந. சிவஞானம் 428–435

டாக்டர் கே. சமரசம் 435–446

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் 446–449

திரு. பொ. உத்திரபதி 450–456

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் 456–46

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 461–46

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 47

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, மார்ச் 25, திங்கட்கிழமை.

பங்குனி 12, ரக்தாட்சி — திருவள்ளுவர் ஆண்டு, 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

" அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள்."

சேர்க்கும் திறன் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பெண்களுக்கான மேல்நிலைப் பள்ளிகள்

—*.(வினா எண்: 131) திரு. பொ. உத்திரபதி: மாண்புமிகு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப் பூண்டியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க பொது மக்கள் பங்குத் தொகை கட்டப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(ஆ) எழாது.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு 1980 ஆம் ஆண்டில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்த ஆணையின்படி, அங்குள்ள பெற்றோர் சங்கமும், நாலும் சேர்ந்து அதற்குறிய பங்குத்தொகையை பொது மக்களிடமிருந்து வசூல் செய்து கட்டியிருக்கிறோம். அந்த அடிப்படையில், இரண்டு முறைகள் அதனை அமைத்துக்கொடுப்பதற்காக அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தினாலும், சென்ற ஆண்டு அது விடுபட்டு விட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொன்னார்கள். இது

என்றாலும், அந்த ஊரிலிருந்து அந்தப் பள்ளிக்கான கருத்துரு ஒன்று அனுப்பப்பட வேண்டும். இந்த உயர்நிலைப் பள்ளியை பொறுத்தமட்டில் அப்படி மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்ற கருத்துரு வரவில்லை என்றுதான் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, முதலில் அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பிறகு கட்டிடங்களைப் பொறுத்த வரையில் அரசு அந்தத் துறைக்கு கட்டிடங்களுக்காகப் பணம் ஒதுக்குவதைப் பொறுத்து, அந்தப் பள்ளிக்குக் கட்டிடங்களைக் கட்ட நாம் முயற்சிக்கலாம்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பங்குத் தொகையைக் கட்டுவதற்கும் தயாராக இருக்கிறார்கள். எனவே பங்குத் தொகையைக் கட்டினால் நடப்பு நிதி ஆண்டிலேயே அதை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு முயலுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தயாராக இருக்கிறோம் என்று சொல்வது மட்டும் சரியல்ல. அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு பணத்தைக் கட்டி கருத்துருவும் அனுப்ப வேண்டும். பணம் கட்டிய ஊர்களுக்குக் கூட நாம் தர முடியாத சூழ்நிலை சில சமயங்களில் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, முதலிலே பணத்தைக் கட்டி அவர்களுடைய கடமையைச் செய்ததற்குப் பிறகுதான் எங்களிடத்திலே கேட்க வேண்டும்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியப் பணிகள் அனைத்தையும் பெண்களுக்கு மட்டும் ஒதுக்க வேண்டும் என்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? பரீட்சார்த்தமாக சென்னையில் மட்டுமாவது அப்படி நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு அப்பாற்பட்ட துணைக் கேள்வி என்றாலும் பொதுவாக பெண்களுக்கு முக்கியத்துவம் தந்து ஆசிரியப் பணியிலே நிறைய பெண்கள் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.





## சென்னை நகரில் கொசு ஒழிப்புப் பணி.

12(* வினா எண் 220) **திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் கொசு ஒழிப்புப் பணிகளின் கீழ் கழிவு நீர் தேங்கி நிற்கும் கூவம் ஆற்றிலும், அடையாறு ஆற்றிலும் கடல் நீரை விடுவதற்கு சென்னை மாநகராட்சியால் பொதுப் பணித் துறைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (அ) மற்றும் (ஆ) இப்படி திட்டம் எதும் அரசுக்கு வரவில்லை.

**திரு. சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கிற அடையாறு, கூவம் ஆகிய ஆறுகளின் இரு பகுதிகளிலேயும் கழிவு நீர் அதிகமாகத் தேங்கிக் கிடப்பதால்தான் சென்னையிலே கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று மாநகராட்சி அதிகாரிகளிடத்திலே சொன்ன நேரத்தில், அதற்கு மாற்று ஏற்பாடு என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டேன். அப்போதுதான் இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். அறிவித்ததோடு மாத்திரம் அல்ல, அதற்கான பணிகளைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கென்று அவர்கள் அனுப்பிய செயற்குறிப்பு ஏதாவது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இல்லை என்றால் அந்த செயற்குறிப்பு வந்த பிறகு கடல் நீரை அடையாறு ஆற்றிலும், கூவம் ஆற்றிலும் விடுவதற்கு அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூவம் ஆற்றைப் பொறுத்த மட்டிலும் நேப்பியர் பாலத்தின் கீழிருந்து கூவம் ஆற்றின் முகத்துவாரம் வரை உள்ள சேற்றுப் படுகைகளை அகற்றுவதற்கு 25 லட்சம் ரூபாய் செலவில் தூர்வாரி-டிரட்ஜர் ஒன்று வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. அதைத் தவிர கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் ஏற்படும் மணல் மேட்டை அகற்றுவதற்காக கூடுதலாக ஒரு டிராக்லின் எக்ஸ்கவேட்டர் என்ற கருவி

கூவம் ஆற்றின் முகத்துவாரத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய இரண்டு இயந்திரங்களின் உதவியால் தேவைப்படும் போது கூவம் ஆற்றின் முகத்துவாரத்தில் உள்ள மணல் அவ்வப் போது அகற்றப்பட்டு அந்த ஆற்றுத் தண்ணீர் கடலிலே உட் புகுத்தும் பணி செய்யப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி அடையாற்றைப் பொறுத்த மட்டில் அந்த அடை யாறு முகத்துவாரத்தில் உள்ள மணல் மேட்டை நிரந்தரமாக அகற்ற மாநகராட்சி ஆணையர் மணல் விசைக் குழாய் என்ற அமைப்பை ஏற்படுத்தலாம் என்ற கருத்துருவை தெரிவித் தார்கள். என்றாலும் அரசுக்குப் பரிந்துரை செய்த நீர்பாசனத் துறை லைமைப் பொறியாளர் அவர்கள் அந்தக் கருவி ஏற்றுக் கொள்வதிற்கில்லை என்றும், அப்படி புதியதாக இரண்டு கருவி களையும் வாங்குகிற நேரத்தில் 45 லட்சம் ரூபாய் கூடுதல் செல வாகிறது என்றும்; அதற்கு பராமரிப்பு செலவு என்று ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம் ரூபாய் ஆகும் என்றும், இவ்வளவும் செய்தால் கூட நிரந்தரமாக அந்த மணல் மேட்டை அகற்ற முடியாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே அங்கே வைக்கப்பட்டிருக்கக்கூடிய இயந்திரங்கள் வாயிலாக மனித சக்தியைப் பயன்படுத்தி, மணல் மேடு அகற்றும் பணி அங்கே நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அந்த முறைதான் சிக்கன மாகவும் சரியாகவும் இருக்கும் என்றும் கருதப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த முறையில் தான் இப்போது இருக்கக் கூடிய ஊழியர்களுடைய எண்ணிக்கையை வைத்துக் கொண்டு, தங்கு தடை இன்றி அடையாற்றில் உள்ள தண்ணீர் கடலுக்குள் போய்ச் சேர வழி வகை செய்திருக்கிறது என்பதைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. சா. துரைசாமி: இந்தக் கழிவு நீர் கடலில் தங்கு தடை யின்றி சேரவர்வது கடுமையான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால் அந்தக் கழிவு நீர் அப்படியே தேங்கி நிற்கிறதே ஒழிய, கடலில் கலப்பதேயில்லை. ஆகவே கடலில் கலக்காத காரணத்தால் அதிகமான தேக்கம் தேங்கி கொசுக்கள் சென்னை மாநகர் முழுவதையும் தொல்லை படுத்திக்கொண்டிருக் கிறது. எனவே அந்தக் கழிவு நீர் கடலில் கலக்கின்ற வகையில் பணிகள் முடுக்கிவிடப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, பயன்படுத்தக் கூடிய ஆட்களினுடைய எண்ணிக்கை போதுமானதாக இருக்கிறது. அந்த ஆட்கள் ஒழுங்காக வேலை செய் கிறார்களா என்பதை கண்காணிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலந்தைகுளம் அருகே அணைக்கட்டு.

13—(*வினா எண் 604) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, இலந்தைக்குளம் அருகே புதிய அணைக்கட்டு கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதி இலந்தைக்குளம் அருகே புதிய அணைக்கட்டு கட்டும் வேலை குறித்த கருத்து ஏற்றுக்கொள்ளப் பட்டு திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலந்தைக்குளம் அருகே கட்டப்படும் இந்த அணைக் கட்டினால், எத்தனை ஏக்கர் பாசனவசதி அடையும்? எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் தயாரிக்கப்படும்? எப்போது ஆய்வு முடியும்* என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, கோரிக்கை இப்போதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுக்கு விடப்பட்டிருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகுதான் இந்தத் திட்டம் எந்தெந்த இடங்களில் எல்லாம் விஸ்தரிக்கப்படும் என் பதையும், அதனால் எத்தனை பாசனப் பகுதிகள் பயன் அடையும் என்பதையும், அதற்காக எவ்வளவு செலவாகும் என்பதும், அரசுக்கு உரிய தகவல்கள் உரிய அதிகாரிகளால் அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அமைச்சரவர்கள் திருவில்லிபுத்தூருக்கு வருகை தரும்போது சுமார் ரூ. 4½ கோடி செலவில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஏற்கனவே அங்கு ஆய்வு பண்ண வேண்டிய

[1985 மார்ச் 25

அவசியமே இல்லை. ஏக்கச்சக்கமான தண்ணீர் அங்கிருக்கிறது. இல்லங்களில் பல மக்கள் சேதம் அடைந்திருக்கிறார்கள். அதனால் ஆய்வு இவ்வளவு நாட்களிலே முடிவடையும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** ஆய்வைப் பொறுத்த மட்டில், ஆய்வு எத்தகைய தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்பதை இங்கிருந்துகொண்டு, நாங்கள் யாரும் சொல்லமுடியாத நிலையில் இருக்கிறோம். நேரடியாக அங்கேயிருக்கக் கூடிய களப் பணியாளர்கள் அந்த ஆய்விலே ஈடுபடுகின்ற நேரத்திலே ஏற்படுகின்ற பல்வேறு இடையூறுகளைச் சந்திக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே எந்த நேரத்தில் ஆய்வு முடியும் என்பதை சொல்வதற்கில்லையென்றாலும், ஆய்வை துரிதப்படுத்தி, இயன்றவரையிலே, விரைவிலே முடிவுகளை அரசுக்குத் தெரிவிக்க, உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக எத்தனை அணைகள் கட்டுவதற்கான திட்டங்கள், ஆய்வு செய்து முடிந்து, அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது *

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்தில் விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

### வெங்கடேஸ்வரம் கிராமம் அருகே புதிய ஏரி.

14—([வினா எண் 605) **திரு. இரா. தாமரைக்கனி;** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் தொகுதி வெங்கடேஸ்வரம் கிராமம் அருகே புதிய ஏரி அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** திருவில்லிபுத்தூர் தொகுதி வெங்கடேஸ்வரம் கிராமம் அருகே புதிய ஏரி அமைக்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.



1985 மார்ச் 25]

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதி வெங்கடேஸ்வரம் கிராமம் அருகே புதிய ஏரியை அமைக்கும் திட்டம் ஒன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் மிக்க மகிழ்ச்சி. இந்தத் திட்டம் நான்கு வருடத்திற்கு முன்பாகவே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்த ஏரிக்கு ஏற்கனவே ரூபாயும் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அங்கே இருக்கின்ற நிலச் சுவான்தார்கள் தங்களுடைய நிலம் பாதிக்கப்படுகிறது என்று சொல்லி, கோர்ட்டிலே ஸ்டே வாங்கிவிட்டார்கள், ஆகையால் ஏரி அமைக்கும் திட்டம் காலம் கடந்துகொண்டே போகிறது. ஆதலால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோர்ட்டினுடைய ஸ்டேயை அப்புறப்படுத்த வேண்டிய நடவடிக்கையை எடுத்து, இந்த ஏரியை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அரசு நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில், இந்தத் திட்டத்தினால் பாதிக்கப்படுகின்ற நிலச்சுவான்தார்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாதவாறு அரசை தடுத்துவிடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் மக்களுடைய நன்மையைக் கருதி, வழக்கு மன்றத்திலே நீண்டகாலமாகும் என்று கருதும் உண்மையின் அடிப்படையில், வேறு ஒரு பகுதியிலே ஒரு அமைப்பை, ஒரு புதிய கண்மாயைத் தோண்டுவது, அதன்மூலம் அந்தப்பகுதி மக்களுக்கு நன்மை கிடைக்குமா என்று அரசு ஆய்வு செய்யுமே தவிர, வேறு எதுவும் இல்லை என்பதையும், அந்த முறையில் புதிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்தக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு புதிய கண்மாயை அமைக்க, ஆய்வுசெய்யவேண்டுமென்ற தகவலை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்ட கண்மாய். ஆகையால் இந்த ஏரிக்கு ஏற்கனவே ரூபாய் ஒதுக்கப்பட்ட காரணத்தினால், விரைவாக இந்த ஏரியை அமைக்க வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் அந்தப் பணத்தையே இன்னொரு இடத்திலே அதே பணியை மேற்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும்கூட புதிய இடத்திலே அமைய வேண்டிய பணிகள் எத்தகையவை என்பதை ஆய்வு செய்ய வேண்டுமென்பது தவிர்க்கமுடியாததாக இருப்பதால் புதிய ஆய்வுகள் அந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

**திரு. வி. பி. சிந்தன்:** தலைவர் அவர்களே, பல முக்கியமான கேள்விகளை மாண்புமிகு சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது அவையெல்லாம் நிராகரிக்கப்படுகின்றன. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றியெல்லாம் அறையிலே வந்து கேட்கவேண்டும், அவையிலே எழுப்பக் கூடாது. எதனால் கேள்விகள் நிராகரிக்கப்பட்டன என்பதை அறையிலே வந்து கேட்கலாம்.

**திரு. ந. சிவஞானம் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன் வசூல், ஜப்தி போன்ற நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து நான் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன். அதை எப்போது எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள் ?

**THIRU T. R. VENKATARAMANAN :** Sir, I have given a calling attention notice as early as 19th March 1985 over the proposed.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவைபற்றியெல்லாம் என் அறையிலே வந்து கேட்கவேண்டும். நான் காலை 8-30 மணிக்கு வந்துவிடுகிறேன். அவை துவங்குவதற்கு முன் என் அறையில் வந்து கேட்கலாம். இல்லையென்றால் நான் என் அறைக்கு திரும்ப வரும்போது கேட்டுக் கொள்ளலாம்.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) கொசுத் தொல்லையால் சென்னை நகர மக்கள் அவதிப்படுவது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் கழிவு நீரை கூவம் ஆற்றில் விடுவதாலும், நீர் குவளை செடிகள் (ஆகாய தாமரை) கூவத்தில் அதிக அளவு பரவியிருப்பதாலும், சென்னை நகரில் அதிக அளவு கொசுத் தொல்லை இருப்பதால் பொது மக்கள் அடையும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 52 மில்லியன் காலன் குடிநீர் வழங்குகிறது. தோராயமாக நாளொன்றுக்கு 30 மில்லியன் காலன் கழிவுநீர் உற்பத்தியாகி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் கடலுக்கும் அனுப்பப்படுகிறது.

[1985 மார்ச் 25

1960 ஆம் ஆண்டு ஆரம்பம் வரை, சென்னை நகரில் சேகரிக்கப்பட்ட கழிவுநீர் யாவும் கழிவு நீரேற்று நிலையங்களின் மூலம் கடத்தி கடலுக்குள் விடப்பட்டது. கழிவு நீர் செலுத்தும் இடம் வட சென்னையில் காசிமேட்டில் அமைந்துள்ளது. நீண்டகால மேம்பாடு பணியாக, நகரை 5 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலிருந்து வரும் கழிவு நீரையும் தனித்தனியாக வெளியேற்றி சுத்தம் செய்ய திட்டங்கள் தீட்டப்பட்டன. இந்தத் திட்டங்கள் முடிவடைந்து தற்சமயம் 59 கழிவு நீரேற்று நிலையங்கள் மூலம் கழிவு நீர் இறைக்கப்பட்டு, கொடுங்கையூர், கோயம்பேடு, நேசப்பாக்கம், பெருங்குடி ஆகிய இடங்களில் உள்ள 4 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

சென்னை நகரின் நடுவில் கூவம் ஆறு, நகர எல்லையின் அரும்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து கடலில் கலக்கும் இடமான சேப்பாக்கம் வரை செல்கிறது. கீழ்க்கண்ட காரணங்களால் ஆற்றில் கழிவுநீர் கலப்பது நேரிடுகிறது.

(அ) கழிவு நீர் குழாய்கள் தேவையான கொள்ளளவு இல்லாமலும், கழிவு நீர்க் குழாய்களில் வண்டல், சாணங்கள் சேர்ந்து குழாய்களை அடைத்து விடுவதும்.

(ஆ) கழிவு நீரேற்று நிலையங்களில் போதுமான திறன் இல்லாமை.

(இ) கழிவு நீரேற்று குழாய்களில் கசிவு ஏற்படுவதும், போதிய அளவு இல்லாமையும்.

(ஈ) கழிவு நீர் வசதி அமைக்கப்படாத இடங்கள்.

(உ) கூவம் ஆற்றின் கரைகளில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத குடிசைகளிலிருந்து வரும் கழிவு நீர்.

**நிவாரணப் பணிகள் :**

சென்னைக் குடிநீர் வாரியம் அமைத்த பின்னர், கழிவு நீர்க் குழாய்கள் போதுமான அளவு இல்லாத இடங்களிலும், பழுதான இடங்களிலும் அவைகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. கழிவு நீர்க் குழாய்களை வாரியம் திட்டமிட்டு, நவீன இயந்திரங்களைக் கொண்டு பராமரித்து வருவதால், ஆற்றில் கழிவு நீர் வழிந்தோடுதல் தடுக்கப்படுகிறது.



1985 மார்ச் 25]

மொத்தம் 59 கழிவு நீரேற்று நிலையங்களில் 16 நிலையங்கள்
அதிகத் திறன் கொண்ட நிலையங்களாக்கி புதுப்பிக்கப்பட்
டுள்ளன. மின்சக்தி இல்லாத நேரங்களில் நீரேற்று நிலையங்
களை இயக்க ஜெனரேட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும்,
17 கழிவு நீரேற்று நிலையங்களைப் புதுப்பிக்க மதிப்பீடுகள் தயாரிக்
கப்பட்டு வருகின்றன. இரண்டு கழிவு நீரேற்று குழாய்கள்,
தியாகராயநகர், நுங்கம்பாக்கம் பகுதியில் புதுப்பிக்கப்பட்டன.
கிரீம்ஸ் சாலை கழிவு நீரேற்றுக் குழாய் புதுப்பிக்கும் பணி
முடியும் தருவாயில் உள்ளது.

சென்னை குடிநீர் வாரியம் அமைக்கப்பட்ட பின்னர், கழிவு நீர் வசதி இல்லாத பகுதிகளான அமைந்தகரை, அரும்பாக்கம், கிண்டி, வேளச்சேரி ஆகிய பகுதிகளுக்கு கழிவு நீர்க் குழாய்கள் வசதி அமைக்கப்பட்டன.

1979 ஆம் ஆண்டு 76 இடங்களில் கூவம் ஆற்றில் கழிவு நீர் கலப்பதாக கணக்கெடுக்கப்பட்டது. சென்னைக் குடிநீர் வாரியம் அமைத்த பின்னர் அதன் பல்வேறு முன்னேற்றப் பணிகளால் 49 இடங்களில் கூவம் ஆற்றின் கழிவு நீர் கலப்பது நிறுத்தப்பட்டது. மீதம் 27 இடங்களில் சென்னைக் குடிநீர் வாரியமும், மற்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் கழிவு நீர் கலப்பதை தடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இது தவிர கோயம்பேடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உயிரியல் தொடர்புள்ள முறையில் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு புல் பண்ணைக்கு உபயோகிக்கப்படுகிறது. புல் பண்ணையில் மாட்டுத் தீவனத்திற்காக புல் வளர்க்கப்படுகிறது. மீதி உள்ள தண்ணீர் அரும்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு அருகே கூவம் ஆற்றில் விடப்படுகிறது. கோயம்பேடு கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 75 இலட்சம் காலன் கழிவு நீரை சுத்தப்படுத்த இயலும். தற்சமயம் அங்கு சுத்திகரிப்புக்கு அனுப்பப்படும் கழிவு நீர் சுமார் 40 இலட்சம் காலன் அளவு ஆகும்.

கூவம் ஆற்றின் படுகையில் பல இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்க வசதி இருப்பதால், கொசுக்கள் இனப் பெருக்கம் செய்வதற்கு வசதி உள்ளது. மேலும், ஆற்றங்கரையில் உள்ள தண்ணீரிலும் அதிக அளவு தாவரங்கள் வளர்ந்து இருப்பதால், கொசுக்களின் இனப்பெருக்கம் விரைவில் நிகழ ஏதுவாகிறது.

இந்த ஆற்றில் கொசுக்களின் இனப்பெருக்கத்தைக் குறைக்க சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம் போன்ற நிறுவனங்கள் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளன:

1. ஆற்றின் இருகரைகளிலும் உள்ள புதர்கள் வெட்டி நீக்கப் பட்டு வருகின்றன.

2. சென்னையில் கழிவு நீரை கோயம்பேடு அருகில் கூவம் ஆற்றில் விடுவதாலும், நீர் குவளை செடிகள் (ஆகாய தாமரை) அதிக அளவு பரவி இருப்பதாலும் சென்னை நகரில் அதிக அளவு கொசுத் தொல்லை இருப்பதாக அண்ணா நகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்தமையால் 9—3—1985 ஆம் நாள் முதல் நடுவங்கரை பகுதியில் இருந்து நுங்கம்பாக்கம் இரயில் பாலம் வரை உள்ள பகுதியில் உள்ள நீர் குவளை செடிகளை சுமார் 300 மாநகராட்சி தொழிலாளர்களைக் கொண்டு அப்புறப்படுத்தி விட்டும் மற்றும் புகை மருந்து பரப்பி யும், தெளிப்பான்கள் மூலம் மருந்து தெளித்தும் கொசு பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது.

3. தண்ணீர் ஓரத்தில் தினந்தோறும் பூச்சிக் கொல்லி மருந்து, இயந்திரங்களின் மூலம் தெளிக்கப்பட்டும், இயந்திரம் மூலம் இரசாயனப் புகை விடப்பட்டும் கொசு மற்றும் கொசுப் புழுக்கள் கொல்லப்படுகின்றன.

கடந்த ஒரு வாரமாக இந்த நடவடிக்கைகள் தீவிரமாக செய் யப்படுவதன் பயனாக கொசுப் புழுக்கள் எண்ணிக்கை குறைந் துள்ளது.

தமிழ் நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணையர் மற்றும் செயலாளர் தலைவராகவும், சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், பொதுப்பணித்துறை முதலியவற்றின் அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு கொசு ஒழிப்புப் பணிகளின் பயனை அடிக்கடி ஆய்வு செய்து வருகிறது. இக் குழுவின் கூட்டம் 11—3—1985 அன்று நடந்தது. இக்



கூட்டத்தில் கூறப்பட்ட ஆலோசனைகளில் ஒன்று கூவம் ஆற்றுப் படுகைகளை ஒழுங்காக கால்வாய் வெட்டி சீர் செய்து அதன் பயனாக தண்ணீர் தேங்காது ஓடும்படி செய்யலாமா என்று பொதுப்பணித் துறை ஆய்வு நடத்த வேண்டும் என்பதாகும்.

மேற்கண்ட நடவடிக்கைகளால் சென்னை நகரில் கொசுத் தொல்லையை ஒழிக்க சென்னைக் குடிநீர் வாரியம், மாநகராட்சி போன்ற நிறுவனங்கள் எற்கனவே ஆவன செய்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**திரு. இரா. தாமரைக்கனி**: தலைவர் அவர்களே, எந்த எந்தத் தாவரம் இருப்பதால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று ஆராயப்பட்டதா? எந்த எந்தத் தாவரத்தினால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்பதை ஆராய்ந்து அவை களை அறவே களைவதற்கும் துளசி, நொச்சி, ஆவாரம் போன்றவை கொசுத் தொல்லைகளை ஒழிக்கக்கூடிய சக்தி உள்ளவை என்பதால் அவைகளை கூவம் ஆற்றுக் கரையில் வளர்ப் பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**: தலைவர் அவர்களே, கழிவு நீர் இருக்கிற இடத்தில் இருக்கிற எத்தகைய தாவரமாக இருந்தாலும் அதை கொசுக்கள் தங்குகிற இடங்களாக ஆக்கிக் கொள்கின்றன. ஆகவே அத்தகைய தாவரங்களை அடியோடு களைவது தான் ஏற்புடையது என்ற வகையில்தான் மாநகராட்சி நடவடிக்கை எடுக்கிறது. கூவம் ஆற்றில் கழிவு நீர் நிற்பதால் தான் கொசுத் தொல்லை ஏற்படுகிறது. ஆகவே கழிவு நீர் அங்கே தேங்காமல் இருக்க கால்வாய் கட்டுகிற ஏற்பாட்டை அரசு செய்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி**: தலைவர் அவர்களே, ஓரே மருந் தைப் பயன்படுத்துவதால் மருந்தின் எதிர்ப்பு சக்தியைத் தாங்கக் கூடிய வலு கொசுக்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. எனவே மாற்று மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? மதுரை மாநகராட்சியில் மாற்று மருந்து கண்டுபிடித்து பயன்படுத்தியதால் கொசுக்களை ஒழித்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதேமாதிரி சென்னையிலேயும் பயன்படுத்துவார்களா? சென்னைக்கு வெளி நாட்டுக்காரர்கள் அதிகமாக வருகிறார்கள். அவர்கள் வரும்

போது கூவம் வாடை அடிக்கிறது. ஆகவே கூவத்தில் உள்ள அந்த வாடையை அகற்றுவதற்கு கூவம் மணப்பதற்கு வாரத்திற்கு ஒருமுறை ஹெலிகாப்டரிலே வாசனைத் திரவியங்கள் தெளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** நாற்றத்தைப் போக்கினால் அதுவே போதும். வாசனைத் திரவியங்கள் தெளிக்க வேண்டிய அவசியம் இல்லை. கொசுக்களை ஒழிப்பதற்காக மாற்றுத் திட்டங்கள் தயாரித்து மாற்று மருந்துகளைப் பயன்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 9.20)

**(ஆ) விளவங்கோடு வட்டம், ஓசியானிக் புராடக்ட்ஸ், மீன் பதனிடும் தொழிற்சாலையின் கழிவு நீரால் மக்கள் பாதிக்கப்படுவது.**

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு வட்டம், படந்தாலுமூடு என்னுமிடத்தில் 'ஓசியானிக் ப்ராடக்ட்ஸ்' என்னும் மீன் பதனிடும் தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் கழிவு நீரால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருவாளர்கள் கலா கார்ட்டன்ஸ் தொழிற்சாலை, (பழைய பெயர் ஓசியானிக் ப்ராடக்ட்ஸ்) கன்னியாகுமரி மாவட்டத்தில் களியக்காவிளை, படந்தாலுமூடு கிராமத்தில் 1968 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையில் செம்மீன், லாப்ஸ்டர், கட்டில் மீன் போன்ற மீன் வகைகள் சுத்தம் செய்யப்பட்டு பதப்படுத்தப்பட்டு வந்தது. தற்சமயம் ஐஸ் கட்டியும் இத் தொழிற்சாலையில் தயார் செய்யப்படுகிறது. இத்தொழிற்சாலையிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 3,000 லிட்டர்





கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. தற்சமயம் இந்தக் கழிவு நீரானது சிமெண்ட் கான்கிரீட்டு மூடியிடப்பட்ட கிணற்றில் வெளியேற்றப்படுகிறது. கழிவு நீரின் ஒரு பகுதி தொழிற்சாலையிலுள்ள தென்னை மரங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இத் தொழிற்சாலையை, 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது விதியின்படி, தனது கழிவு நீரை வெளியேற்றுவதற்கான அனுமதி கோரி உரிய முறையில் விண்ணப்பிக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கேற்ப வாரியம் அனுமதிக்கும் காலக் கெடுவுக்குள் கழிவுகளை சுத்திகரிக்காவிட்டால் வாரியம் தக்க குற்றவியல் நடவடிக்கை எடுக்கும். மேலும் இத் தொழிற்சாலை ஏற்கனவே வழங்கப்பட்ட கால கெடுவுக்குள் அதாவது 31—5—1984-க்குள் வாரியத்தின் இசைவுக்கு விண்ணப்பிக்கவில்லை என்று தெரிய வருவதால் அதற்காகவும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வாரியம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பதனிடும் தொழிற்சாலை நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்ட காலமான 31—5—1984-க்குள் அவர்கள் விண்ணபிக்கவில்லை என்று கூறப்பட்டு இருக்கிறது. கழிவு நீர்ப் பிரச்சினையில் இவ்வளவு உதாசீனமாக இருக்கும் நிர்வாகத்தின் போக்குக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படக் கூடிய அளவில் மக்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய இந்தப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பு கொடுப்பதற்கு தற்சமயம் இந்த நிர்வாகத்தின் ஏற்பாடுகளை கவனித்து. அவர்கள் செய்யவில்லை என்றால் உடனடியாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

Section 26 of "Water Prevention and Control of Pollution Act 1974—

இந்தச் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசின் சார்பாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எந்தவிதமான தாட்சண்ணியமும் இல்லாமல் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். நாம் சொன்ன அந்த வேலைகளை உடனடியாக அவர்கள் செய்யவில்லை என்றால் Treatment of Sewerage Water கழிவு நீரை உடனடியாக சீர் செய்யவில்லை என்றால் அந்தத் தொழிற்சாலையை மூடுவதற்கு உத்திரவு போடுவதற்கு தயாராக இருக்கிறது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீர்ப் பிரச்சினை ஏற்படும்போது சில நிர்வாகங்கள் குறிப்பாக இந்த நிர்வாகம் கூட அந்தத் தொழிற்சாலையை மூடிவிடப் போவதாக பயமுறுத்தக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக தொழில்கள் பாதிக்கப்படுகிறது. அதனால் அதில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே தொழில்கள் நடத்துவதற்கு ஒரு பாதிப்பு இல்லாத வகையில் அதேநேரத்தில் கழிவுநீரால் மக்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களை தீர்த்து வைக்க அதற்கான திட்டம் எதையாவது அரசு வகுத்து இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் இப்படிச் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன். உடனடியாக மூடவேண்டும் என்று உத்தரவு போட்டால் அந்தத் தொழிலும் அதில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, ஒரு 6 மாதம் கிரேஸ் டைம் கொடுத்து இருக்கிறோம். அதே சமயத்தில் அந்தச் சட்டத்தின் கீழ் என்ன என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படவேண்டுமோ அத்தனை நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தயாராக இருக்கிறோம். சட்டத்தை மீறி நடவடிக்கை ஏதாவது எடுத்துக் கொண்டால் இங்கே ஒரு சிக்கலை ஏற்படுத்தும். அவர்கள் அந்தச் சட்டத்தின் நுணுக்கத்திற்குள் நுழைந்து தங்களைத் தாங்கள் காப்பாற்றிக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததாக ஆகிவிடும். சட்டத்தின் மூலம் நாம் என்ன





செய்ய முடியுமோ அத்தனையையும் நாம் செய்யத் தயாராக இருக்கிறோம். அப்படி அவர்கள் தொடர்ந்து சட்டத்தின் மூலமாக போட்டு இருக்கக்கூடிய உத்திரவுகளை மீறினால் வேறு எந்த வழியும் இல்லாதபோது கடைசியாக கடைசி ஆயுதமாக இதை வைத்து இருக்கிறோம். ஆகவே அந்த பயத்தின் காரணமாக வாவது உடனடியாக நாம் கொடுக்கக்கூடிய உத்திரவுகளை அவர்கள் செயல் படுத்துவார்கள். அவர்கள் அப்படியும் அதைச் செய்யவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் எனக்கு உதவி செய்யவேண்டும்; தயவுதாட்சண்ணியம் இல்லாமல் அதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கு நாம் அதில் தயக்கம் காட்டக்கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்.

### (அ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. 1985 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம் பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1985).
2. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 2/1985).
3. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1985).
4. 1985 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1985).

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1985 மார்ச் 25

5. 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1985).

6. 1985 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1985).

7. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1985).

8. 1985 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1985).

### 5. அரசினர் தீர்மானங்கள். [illegible]

#### (அ) மதிப்பீட்டுக் குழு — உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 221- வது விதியின் கீழ், 1985-86 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது. .

குடிசையில் இருக்கிறவர்கள், குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் மூலமாக வீடுகளை வாங்கிக்கொண்டு, அவற்றை விற்றுவிட்டு, மீண்டும் குடிசை போட்டு, அதிலே வாழ்கிறார்கள் என்று சொன்னார்கள்.



1985 மார்ச் 25]

#### (ஆ) பொதுக்கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 229 வது விதியின்கீழ் 1985-86 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

#### (இ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 237 வது விதியின் கீழ், 1985-86 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

#### ([illegible]) உரிமைக் குழு — உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 25

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 253 வது விதியின் கீழ், 1985-86 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

### 4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (ஆ) குழுக்களுக்கான தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒற்றை வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதி முறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி), பொதுக் கணக்குக் குழு (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி), பொது நிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி), உரிமைக் குழு (பிரிவிலேஜ் கமிட்டி) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 1.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்,



1985 மார்ச் 25]

### (இ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1985 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரிவிதிப்பை, இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். ஏனென்றால், இதுவரையில் இல்லாத பொருள்களாகிய இரால், தவளை போன்ற நீரினங்களுக்கு, நீரில் உற்பத்தியாகிற அந்தப் பொருள்களுக்கு புதிதாக அதுவும் ரிவைஸ் செய்து போடுகிறார்கள். 5 சதவிகிதம், 5 சத விகிதம் என்று போடுகிறார்கள். ஆகவே இது ஏழை மீனவர்களை பாதிக்கும், அதைப் பிடிக்கிறவர்களைப் பாதிக்கும். அவற்றை குளத்தில் பிடித்து ஜீவனம் செய்கிறவர்களை இந்த வரி பாதிக்கும் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னொன்று, டெக்னிக்கலாக நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் ஒரு நோட்டிபிகேஷனை ரீப்ளேஸ் செய்ய ஒரு பில் வருகிறது. நோட்டிபிகேஷனின் பவர் ஒரு பில்லுக்கு உண்டா, இருக்கிறதா இல்லையா? சட்டத்திற்குள்ள அதிகாரம் நோட்டிபிகேஷனுக்குப் போகிறது. ஆர்டினன்ஸ்க்கு உள்ள அதிகாரம் நோட்டிபிகேஷனுக்குப் போகிறது. நோட்டிபிகேஷன் எப்படி இருக்கலாம் என்றால் க்ளியராக இருக்கிறது. சேல்ஸ் டாக்ஸ் ஆக்டில்—எக்ஸெம்ஷன் அன்ட் ரிடக்ஷன்—நாட்

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 மார்ச் 25

(முற்பகல் 9-30)

பிக்சேஷன், பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம், 1959, செக்ஷன் 17-ன்படி,

"Power of Government to notify exeption and reduction of tax, not fixation .

குறைப்பதற்கோ அல்லது எடுப்பதற்கோ நோட்டிபிகேஷனே தவிர, பிக்ஸ் பண்ணுவதற்கு இருப்பதாகத் தெரியவில்லை. இந்த பில் சட்ட விரோதமானது. இந்த மசோதாவைக் கொண்டு வருவதே சட்ட விரோதமானது. ஆகவே, ஆரம்ப நிலையிலேயே இதை எதிர்க்கிறேன். மேலும், 5 சதவிகிதம், 5 சதவிகிதம் என்று இதுவரைக்கும், 1959-லே இருந்துபோடாத ஒரு வரியை இந்த சர்க்கார், அதுவும் மீனவ நண்பர் என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த சர்க்கார், இந்த ஆட்சி, இதன்மூலம் ஜீவிக்கிற அந்த மீனவர்களை, அவர்கள் பிடிக்கிற பொருள்கள் மீது வரி போடுவதை வன்மையாக நான் கண்டிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இதற்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

### (ஈ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.



1985 மார்ச் 25]

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

### (ஆ) பொது விற்பனைவரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பில்லையும் முதலிலே சொன்ன அதே காரணத்திற்காக நான் எதிர்க்கிறேன். நோட்டிபிகேஷனில் உள்ள பவர் குறைப்பதற்கும், எக்செம்ஷன் பண்ணுவதற்கும் தான். பிக்ஸ் பண்ணுவதற்கு இல்லை. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதற்கு பதில் சொல்லட்டும். டியூப்ஸ், ஹோஸ் பைப்ஸ் இவைகளுக்கு எல்லாம் எந்த சர்க்காரும் வரி போட்டதில்லை. ஆனால், இந்த சர்க்கார், ஏனோ தெரியவில்லை, நடுத்தர வர்க்கத்தினர் பயன்படுத்துகின்ற ஹோஸ் பைப்ஸ், டியூப்ஸ், அதுவும் பிளங்சிபிள் அஸ் ஹோஸ் பைப்ஸ் அத்தனைக்கும் சேர்த்து வரி போடுகிறது. அண்ணா சொன்னார், "வரியைக் குறைப்போம்; வசதியைப் பெருக்குவோம்" என்று, ஆனால், நீங்களோ வரியைப் பெருக்குவோம், வசதியை கூட்ட மாட்டோம் என்கிறீர்கள். ஆகவே, இந்த கடுமையான, மோசமான வரியை நான் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று. அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1985 மார்ச் 25

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

**(உ) கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள், 1984-85 (ஆ.இ.).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1984-85 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது:—

" In pursuance of Article 205, clause (2), read with Article 203, clause (3) of the Constitution of India. I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1984–85 ".

**7. இறுதித் துணை நிதி அறிக்கை 1984-85 பொது விவாதமும் வாக்கெடுப்பும்.**

**திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த தேர்தலில் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் காங்கிரசிலே எனக்கு இடம் கொடுத்து, அங்கு என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட இந்திய தேசிய காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் நண்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய ஒரு மாவட்டம். அது வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம். எனவே, எங்களுக்குக் காவிரி நதியின் உபரி நீர் கிடைப்பதற்கு இந்தச் சட்டப் பேரவையும், அமைச்சர் பெருமக்களும் ஆவன செய்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 25] [திரு. ஜே. முகம்மது கனி]

காவேரி மில் என்ற ஒரு மில் இருக்கிறது. அது வருகின்ற 31—3—1985 க்குள் மூட இருக்கிறது. அதற்கும் அமைச்சர் பெருமக்கள் விரைவிலே நடவடிக்கை எடுத்து ஆவன செய்து, தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அவையிலே அளித்த 1984-85 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை மீதான இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இன்றையதினம் இந்த இறுதித் துணை மதிப்பீட்டின் மூலமாக ஐந்து நல்ல காரியங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, இந்த அவையினுடைய ஒப்புதலுக்காக இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக வேளாண்மைத் துறைக்கும், அடுத்து அரசுப் பணியாளர்களுக்கும், அடுத்து, கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்திற்கும், அடுத்து, தமிழ்நாடு பத்திரிகைத் தாள்-காகித நிறுவனம் ஆகிய இந்த ஐந்து துறைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது எப்பொழுதுமே செய்கின்ற நல்ல காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடுவதுதான் ஒரு அரசினுடைய குற்றமாக அல்லது தவறாகக் கருதப்படும். ஆனால், இன்றைக்குப் புரட்சித் தலைவர் அரசைப் பொறுத்தவரையில், எவ்வளவோ திட்டங்களைத் தீட்டினாலும், அந்த திட்டங்களுக்குப் பலவகைகளிலே நிதி ஒதுக்கீடுகளைச் செய்தாலும், அவ்வப்பொழுது ஏற்படுகின்ற அனுபவத்தின் காரணமாகவும், அவசரத் தேவைகளை முன்னிட்டும் சில திட்டங்களுக்குத் தேவையைக் கருதி கூடுதல் நிதி ஒதுக்கப்படுவதும், கூடுதலாகச் சில திட்டங்களுக்குப் பின்னாலே நிதி ஒதுக்கப்படுவதும் இதுவரையில் வாடிக்கையாக இருந்தாலும், இந்த அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு 'நிதி

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 25

யமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள், நான் முன்பு குறிப்பிட்டுச் சொன்னதைப்போல இந்த ஐந்து துறைகளுக்கும் இன்றைக்கு நிதி ஒதுக்கியிருப்பது, தமிழகத்தினுடைய விவசாயப் பெரு மக்கள், அரசுப் பணியாளர்கள், அதைப்போல சிறு உழவர்கள், தொழில்துறை முன்னேற்றம் ஆகியவற்றுக்கு எந்த அளவிற்குப் பயன்படத் தக்கதாக இருக்கிறது என்பதை இந்த நிதி ஒதுக்கீடு தெளிவாக எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

சிலபேர்கூடச் சொல்லலாம், இந்த நிதியையெல்லாம் ஏன் முன்பே ஒதுக்கியிருக்கக்கூடாது, பிறகு ஏன் ஒதுக்க வேண்டும், அதற்கு என்ன அவசியம் என்று. கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள், "படுத்துக்கொண்டு போர்த்திக் கொண்டால் என்ன அல்லது போர்த்திக் கொண்டு படுத்தால் என்ன" என்று. எனவே, அரசினுடைய நோக்கம், அவ்வப்பொழுது இந்தந்தத் துறைகளுக்கு இவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும், இந்தந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப் படையில் இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்களுடைய அரசாங்கம் இப்படிப்பட்ட சீரிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கம் செய்து இந்த அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்னைகளுக்கு அல்லது இந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதுகூட முக்கியமல்ல.

(முற்பகல் 9-40)

ஆனால் என்னென்ன காரியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கின்றது என்பதைத்தான் நாம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும். என்றைக்குமே வேளாண்மைத் துறையிலே அதிகமாகக் கவனம் செலுத்தி வருகிற புரட்சித் தலைவர் அரசாங்கம் இந்த நிதி நிலை அறிக்கையிலும் கூடுத லாக அதாவது கிட்டத்தட்ட 14 கோடி ரூபாய் என்ற அளவுக்கு இன்றைக்கு ஒதுக்கீடு செய்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவும் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நேரடியாக நெல் வழங்குகின்ற அந்த விவசாயிகளுக்கு மத்திய அரசு என்னதான் விலையை நிர்ணயித் தாலும் அது கட்டுப்படியாகாது என்ற அந்த நிலையில் அவர்



1985 மார்ச் 25] [திரு. செ. செம்மலை]

களுக்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு புரட்சித் தலைவர் அரசாங்கம் இன்றைக்குக் கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 15 ஊக்கத் தொகையாக அளித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

உள்ளபடியே எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி அந்தத் தொழிலில் உற்பத்திப் பொருளுக்கு விலை நிர்ணயிக்கின்றபோது அந்தப் பொருளின் உற்பத்திச் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் அதன் விலையை நிர்ணயிப்பது வழக்கம். ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய உற்பத்திச் செலவைப்பற்றி இதுவரையில் யாரும் கணக்கிட்டதாக இல்லை. இப்படி அவர்களின் உற்பத்திச் செலவுக்கு ஏற்ற அதாவது அந்தச் செலவினை ஈடுகட்டக்கூடியதாக அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கான விலை என்பது இல்லாத நிலைமையில் மத்திய அரசு கொள்முதலுக்கு எவ்வளவுதான் விலையை நிர்ணயித்தாலும் இந்த அரசாங்கம் கொள்முதலுக்கான விலையை அதிகப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசிடம் பலமுறை கேட்டு அவற்றைப் பெற்றாலும் அதுவும் போதாது என்ற நிலைமையில் இன்றைக்குக் கொள்முதலுக்குக் கொடுக்கின்ற விலையோடு ஊக்கத்தொகை யாகக் கூடுதலாகக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வந்திருப்பது உள்ளபடியே விவசாயிகளுக்குச் செய்கின்ற ஒரு பேருதவியாக இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லியாக வேண்டும்.

அடுத்து அரசுப் பணியாளர்களுக்கு இன்றைக்கு அகவிலைப்படி வீதங்களை இந்த அரசு உயர்த்தியுள்ளது. அப்படி ஒரு தடவை, இரண்டு தடவை அல்ல. கிட்டத்தட்ட 9 முறை புரட்சித் தலைவர் அரசாங்கம் அவர்களுக்கு இதை உயர்த்திக் கொடுத்திருக் கின்றது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, அப்படி அகவிலைப் படியை உயர்த்திக் கொடுக்கின்ற நேரத்தில் அப்படி உயர்த்தப் பட்ட தொகையை உடனடியாகக் கொடுத்ததாக வரலாறு இது வரையில் இல்லை. இரண்டு அகவிலைப்படி உயர்த்தித் தருகி றார்கள் என்றால் அதிலே பாதியை பி.எஃப்.பிலே சேர்த்து விடுவார்கள். கையிலே அந்தத் தொகை வந்து சேராது. அப்படி

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 25

கைக்கு வந்து சேராத நிலைமைதான் அன்றைக்கு இருந்தது. அதாவது சர்க்கரை என்பதை வாயிலே சொல்லி, அது இனிக்காத நிலைமையைத்தான் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு அகவிலைப்படியை அதிகமாக ஒவ்வொரு தடவையிலும் நான்கு அகவிலைப்படிகளைக் கொடுத்து அந்த 4 அகவிலைப்படிகளும் கைக்கு வந்து சேர்கிற அந்த ஏற்பாட்டைச் செய்து அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கச் செய்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, 4-வது ஊதியக்குழு ஆரம்பிக்கப்பட்டு அது செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நிலையிலேகூட புரட்சித் தலைவர் அரசாங்கம் அகவிலைப்படியை உயர்த்தி இருக்கின்றது. இப்படி ஊதியக் குழுவினை அமைத்திருக்கின்ற நேரத்திலே அகவிலைப்படியை எந்த அரசாங்கமும் உயர்த்திக் கொடுத்ததாக இதுவரை வரலாறே இல்லை. ஆனாலும், ஊதியக்குழு பரிசீலனை செய்துகொண்டிருந்தாலும் அந்த ஊதியக் குழு தன்னுடைய அறிக்கையை இன்னும் அறிவிக்கவில்லை என்று சொன்னாலும் இடைக்கால நிவாரணமாக புரட்சித்தலைவர் அரசாங்கம் நிவாரணத் தொகையாக 200 ரூபாய் முதல் 300 ரூபாய் வரையில் கொடுத்திருப்பது உள்ளபடியே அரசு அலுவலர்களுக்கு இவ்வளவு சங்கடமான காலத்தில் அவர்களுக்குச் செய்கின்ற பேருதவியாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் 90 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீட்டிற்காகக் கூடுதல் நிதி ஒதுக்கீட்டிற்காக ஒப்புதலை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அடுத்து சிறு உழவர்களுக்கு இலவசமாக மின்சாரம் கிடைக்கின்ற ஒரு நல்ல காரியத்திற்காக 10 கோடி ரூபாயை, சரிக்கட்டுவதற்கான அந்த நிதியினை வழங்கவேண்டும் என்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புதல் கேட்டிருக்கிறார்கள். அது ஒரு மிகப்பெரிய சாதனையாகும். இதுவரையில் இந்த அளவுக்கு விவசாயிகளுக்கு உதவி செய்த அரசாங்கத்தை நான் கண்டதில்லை. புரட்சித் தலைவர் அவர்களின் அரசாங்கம்தான் சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு அவர்களுக்கு அவ்வாறு இலவசமாக வழங்கி அதோடு பெரிய விவசாயிகளுக்கும் ஒரு குதிரைத் திறனுள்ள



1985 மார்ச் 25] [திரு. செ. செம்மலை]

மோட்டாருக்கு 75 ரூபாய் என்றும் கட்டணம் நிர்ணயித்து இன்றைக்கு விவசாயிகளுக்குச் செய்கின்ற பேருதவியான இந்தத் திட்டத்தை இன்றைக்கு அமல்படுத்தி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்த நேரத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒரு கருத்தை நான் வைக்க விரும்புகிறேன். அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் சிறு விவசாயிகள் சில சங்கடங்களைச் சந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சங்கடத்தை நிச்சயமாக மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறு விவசாயிகள் அந்த உதவியைப் பெறுவதற்கு ரெவின்யூ டிபார்ட்மெண்டிலோ, அல்லது தாசில்தாரிடத்திலோ அவர்கள் சான்றிதழ் பெற வேண்டும்.

ஆனால், இன்றைக்கிருக்கின்ற விதிகளின்படி அந்தச் சான்றிதழைப் பெறுவதில் சிறு விவசாயிகள் பெரிதும் தொந்தரவுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சிறு விவசாயிகள் அந்தச் சான்றிதழ் பெற மிகவும் சிரமப்படுகிறார்கள். தாசில்தார் அலுவலகத்தில் வேலைப் பளு காரணமாக, கூடுதலாக தாசில்தார் இல்லாத காரணத்தாலே, அந்தச் சான்றிதழ் பெறுவதிலே சிரமப்படுகிறார்கள், சங்கடப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருவதெல்லாம், இந்தச் சலுகை அறிவித்திருக்கிற நேரத்தில், இப்படிப்பட்ட சான்றிதழ் பெற வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல், ஏற்கனவே உள்ள முறையைப் பின்பற்ற வேண்டும். ஏற்கனவே, புரட்சித் தலைவர் அரசு, சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 12 பைசா என்று நிர்ணயம் செய்து, மின்கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறது. அதே போல், பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்று வசூலித்துக் கொண்டிருக்கிறது. எனவே, யார் யாரிடம் ஒரு யூனிட்டுக்கு 12 பைசா வசூலித்துக் கொண்டிருக்கிறோமோ, அவர்களுக்கு இந்தச் சலுகையை, சான்றிதழ் பெறாமலேயே அளித்துவிடுவது உகந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 25

தற்பொழுது, இப்படிச் சான்றிதழ் பெறுவதற்கு 3 மாதம், 4 மாதம் ஆகிவிடுகிறது. ஆனால், மின்சார வாரியம் அவர்களுக்கு உள்ள பொருளாதார சிரமத்தின் காரணமாக சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பாராமல் அனைவரும் தொகை கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். கடந்த 3 நாட்களாக என்னுடைய தொகுதியில் நான் சுற்றுப்பயணம் செய்தபோது, இதைத்தான் விவசாயிகள் தெரிவித்தார்கள். இந்த மாதம் 31-ஆம் தேதிக்குள் கண்டிப்பாக அந்தத் தொகையைச் செலுத்த வேண்டும். ஒரு குதிரைத் திறன் கொண்ட நீரேற்றுப் பொறிக்கு ரூ. 75 கட்ட வேண்டும்; சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பாராமல் அனைவரிடமும் வசூலிக்கிறார்கள்; சான்றிதழ் பெற்றால்தான் சலுகை என்று கட்டாயப்படுத்தி வசூலிக்கிறார்கள்; மார்ச் 31-ஆம் தேதிக்குள் கட்டவில்லையென்றால். அவர்களுடைய மின் இணைப்புத் துண்டிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, சிறு விவசாயிகள் தாசில்தாரிடம் சான்றிதழ் பெறுவதிலே சங்கடம் இருப்பதாலே, அதைப் பெற வேண்டுமென்ற கட்டாயத்தைத் தவிர்த்து, யார், யாரிடம் புரட்சித் தலைவர் அரசு யூனிட் ஒன்றுக்கு 12 பைசா என்று மின் கட்டணம் வசூலித்து வந்ததோ, அத்தனை சிறு விவசாயிகளுக்கும் இந்தச் சலுகையை வழங்கிவிட்டால், சிறு விவசாயிகளுக்கு நிச்சயமாக இந்த உத்தரவின் மூலம் தொந்தரவு இருக்காது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ரூ. 75 கண்டிப்பாகக் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதன் காரணமாக, அப்படியே கட்டி, பின்னால், 3, 4 மாதங்கள் கழித்து சான்றிதழ் பெறும்போது, அந்தப் பணத்தை ரீபண்ட் வாங்குவது என்பது மிகச் சிரமமான காரியமாக இருக்கும்.

எனவே, அவர்களுக்கு இந்தச் சங்கடத்தை ஏற்படுத்தக்கூடாது என்ற நல்ல எண்ணத்தோடு மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள், உடனடியாக, 31-ஆம் தேதிக்குள் கட்டாவிட்டால் மின்இணைப்பு துண்டிக்கப்படும் என்ற உத்தரவை ரத்து செய்து இந்த அவையிலேயே அறிவித்துவிட்டால், புரட்சித் தலைவர் அரசில் பல நன்மைகளைப் பெறுகின்ற சிறு விவசாயிகள், இதன் மூலம் மேலும் நன்மைகளைப் பெறுகின்ற சிறு விவசாயிகள்,



1985 மார்ச் 25] [திரு. செ. செம்மலை]

மூலம் மேலும் நன்மை பெறுவார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். சிறு விவசாயிகள் 2½ இலட்சம்பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் யூனிட்டிக்கு 12 பைசா என்று நிர்ணயிக்கப்பட்டு, வசூலித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, கணக்கில் உள்ள அந்தச் சிறு விவசாயிகளுக்கு இந்தச் சலுகையை அளிக்க வேண்டும். எனக்குக் கிடைத்த தகவலின்படி 20,000 சிறு விவசாயிகள்தான் இந்தச் சான்றிதழைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, கிட்டத்தட்ட 2 இலட்சத்திற்கு மேற்பட்ட சிறு விவசாயிகள் தொந்தரவுக்கு ஆளாகியிருக்கிறார்கள். தொந்தரவு வருகிற நேரத்தில் உதவுகிற தாயுள்ளம் படைத்த புரட்சித் தலைவர் அரசாங்கம் இதைப் போக்க வேண்டும். மின்சார வாரியம் அவர்களுக்கு இருக்கிற பண நெருக்கடியின் காரணமாக, அத்தகைய உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. எனவே, அதைத் தளர்த்தி மாற்று ஏற்பாட்டைக் கவனிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு நாவலர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.50)

அதைப்போன்று கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்திற்கு 2.25 கோடி ரூபாய் முன்பணமாக வழங்க அனுமதித்திருக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு. இந்த கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் வரவேற்கக் கூடிய ஒரு சிறந்த திட்டம். இந்தத் திட்டத்திற்கு கிராமப்புறங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆனால் இதற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கருத்திற்கொண்டு, இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கினால் கிராம மக்கள் இந்த உதவியைப்பெற்று வீடு கட்டிக்கொள்ள நல்ல வசதியாக இருக்கும். மேலும் இந்தத் திட்டத்திலே நிதி உதவி பெறுகிறவர்கள் சில சங்கடங்களையும் சொல்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர விரும்புகிறேன். அதையும் பரிசீலித்து, அதிக நிதி ஒதுக்கி கிராம மக்களுக்கு நல்ல முறையில் உதவி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 25

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இது அனைவருக்கும் ஏற்றது என்றாலும் அங்கே இருக்கிற அரசாங்க அதிகாரிகள் ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் தான் இந்த நிதியைச் செலவிடுவதாக தகவல் சொல்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் அரசாங்கம் வீடு கட்ட நிதி ஒதுக்கியிருந்தாலும் அது தற்போது நடைமுறையில் இல்லை. ஆதிதிராவிட மக்களுக்கு நிர்ணயித்திருக்கிற டார்கெட்டை அச்சீவ் செய்வதற்காக அவர்களுக்கு மட்டுமே கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். கூடுதல் நிதி ஒதுக்கி, பிற்பட்ட மக்களுக்கும் நிதி உதவி வழங்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்தத் திட்டத்தின்கீழ் நிதி உதவி கேட்கும்போது நிதி இல்லை, அதனால் கடன் வழங்க முடியவில்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே கூடுதலாக நிதி ஒதுக்கி; ஆதிதிராவிட மக்களுக்கு, அவர்கள் கேட்கும்போது நிதி வழங்குவதைப்போல பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, வீடு கட்டும் பிரச்சினையில் ஒரு சிறிய சிக்கல் இருக்கிறது. அரசாங்கப் புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து கொடுத்திருந்தால், அந்த நிலத்தில் வீடு கட்டுவதற்குத் தான் கடன் உதவி வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். சொந்தமாக அரை ஏக்கர், கால் ஏக்கர், 10 சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள் அந்த இடத்தில் வீடு கட்டுவதற்கு கடன் உதவி கேட்டால் கடன் கொடுக்க மறுக்கிறார்கள்; கடன் கொடுக்க முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அரசாங்கம் பட்டா வழங்கிய நிலமாக இருந்தாலும், ஏழை எளிய மக்கள் சொந்த நிலமாக இருந்தாலும் அந்த இடங்களில் வீடு கட்ட கடன் வேண்டுமென்று கேட்டால் இதிலே வித்தியாசம் பாராமல், குறைந்த நிலம் உடையவர்கள் ஏழை எளிய மக்கள்தான் என்ற அடிப்படையில், வீடுகட்ட நிதி ஒதுக்கி, கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று டாக்டர் நாவலர் அவர்களை மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 25] [திரு. செ. செம்மலை]

அடுத்து, தொழில் வளர்ச்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசாங்கம் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணமாக தமிழ்நாடு பத்திரிகைத் தாள்—காகித நிறுவனத்திற்கு 13.5 கோடி ரூபாய் முன்பணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே இதை நான் மனமாரப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டு காலமாகியும் இவ்வளவு பெரிய முதலீட்டில் அரசுத் துறையில் அரசாங்கமே பணம் போட்டு, ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எத்தனையோ அரசாங்கம் இருந்தபோதிலும் இந்த அளவுக்கு எந்த அரசாங்கமும் செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேகூட அரசாங்க முதலீட்டில் இப்படிப்பட்ட ஒரு பெரிய தொழிற்சாலையை அமைத்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இன்றைக்கு ஏதோ சொல்லிக்கொண்டிருக்கலாம்.

தொழில் துறையிலே தமிழ்நாடு இன்றைக்கு பின்தங்கியிருக்கிறது; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் இதற்குக் காரணம் என்று அவர்கள் சொல்லலாமே தவிர எனக்குத் தெரிந்த வரையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 5 கோடி ரூபாய் குறைந்தபட்ச முதலீட்டில்கூட அரசாங்கத்தினுடைய பணத்தைக்கொண்டு ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பித்ததாக நிச்சயமாக யாரும் சொல்ல முடியாது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசாங்கம் சுமார் 200 கோடி ரூபாய் முதலீட்டில் அரசுத் துறையில் தமிழ்நாடு பத்திரிகைத் தாள்—காகித நிறுவனம் அமைத்திருக்கிறது. அதற்கு முன்பணமாக 13.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் இந்த அரசுக்குத் தொழில் வளர்ச்சியிலே எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்பணம் ஒதுக்கியிருக்கிற டாக்டர் நாவலர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டுகிறேன்.

இந்த வகையில் இந்த 5 காரியங்களுக்கும் இந்தத் துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கது. செய்ய வேண்டிய நல்ல காரியங்களுக்கு, செய்ய வேண்டிய நேரத்தில் இந்தக் காரியத்தைச்

[திரு. செ. செம்மலை] [1985 மார்ச் 25

செய்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களையும் பாராட்டி, இந்த இறுதித் துணை மதிப்பீட்டை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள புளியங்குடியில் உள்ள அரசு மருத்துவமனையில் இட நெருக்கடி ஏற்பட்டு இருக்கிற காரணத்தால், அந்த ஊரில் உள்ள அனைத்து சமூகத்தைச் சேர்ந்தவர்களும் 3 ஏக்கர் நிலத்தை வழங்கி, அங்கே அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த இருக்கிறார்கள். எனவே அந்த இடத்தில் உடனடியாக ஆஸ்பத்திரியைக் கட்டுவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வாசுதேவநல்லூரில் இருக்கின்ற மருத்துவமனை ரொம்பவும் பாழடைந்து இப்போது தனியார் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது. எனவே அதற்கும் துரிதமாக நடவடிக்கை எடுத்து, வேறு ஒரு புதிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகிரியில் தொழுநோய் சம்பந்தமாக இயங்கிக்கொண்டு இருந்த இலாக்காவை இப்போது சங்கரன்கோவிலுக்கு மாற்றி விட்டார்கள். சிவகிரி முன்பு துணைத் தாலூக்காவாக இருந்தது. இப்போது ஒரு தாலூக்காவாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. அங்கே 50 படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய ஆஸ்பத்திரியை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் மிக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வாசுதேவநல்லூர் தொகுதியில் ரோடுகள் ரொம்பவும் மோசமாக இருக்கின்றன. அதுவும் என்னுடைய தொகுதியில் உள்ள ஒத்தக்கடை — சிவகிரி வழித்தடத்தில் 6-ம் நம்பர் பஸ் செல்கிறது. அந்த ரோடில் பேருந்துகளே செல்லமுடியாத நிலை இருக்கிறது. ரோடுகள் எல்லாம் குண்டும் குழியுமாக இருக்கின்றது. அந்த வழியாகச் செல்லும் கட்டபொம்மன் போக்கு



1985 மார்ச் 25] [திரு. ஆர். ஈஸ்வரன்]

வரத்தைச் சேர்ந்த டிரைவர்கள் அந்த ரோடில் செல்லுவதற்கு வண்டியை எடுக்கத் தயங்குகிறார்கள். இந்த மாதிரியான நிலை இருக்கிறது. அதுமாதிரியாக, வெள்ளானைகோட்டை — கானுகாபுரம் வழி, தலைவன்கோட்டை வழி ஆகிய ரோடுகள் எல்லாம் பழுதடைந்து ரொம்பவும் மோசமான நிலையில் இருக்கின்றன. எனவே அந்த ரோடுகளை செப்பனிட வேண்டும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் துரிதமான நடவடிக்கை எடுத்து ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வாசுதேவநல்லூர் தொகுதியில் பஸ் ரூட் விஷயமாக சங்கரன்கோவில் — சிவகிரி — தென்மலை வழியாக தற்போது 3 நேரங்கள்தான் பஸ் சென்று கொண்டிருக்கிறது. எனவே இதை மாற்றி 6 நேரங்கள் செல்லத்தக்க வகையில் அதை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக, சங்கரன்கோவில்—வாசுதேவநல்லூர் (வழி) தலைவன்கோட்டை தாலூகாபுரம் தற்போது 3 நேரம்தான் பஸ் செல்கிறது. அதையும் 6 நேரம் செல்லுகின்ற அளவிற்கு மாற்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புளியங்குடி — தேத்தூர், தேவானம் செல்லும் பஸ்ஸை ஒத்தகடை, ராமநாதபுரம் நாயகிரி, உள்ளார் வழியாகச் செல்லும்படி மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வாசுதேவநல்லூர் தொகுதியில் நீண்டகாலமாக ஒரு அணைத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது. கோம்பையார் அணைத் திட்டம், அடுத்து செண்பகவல்லி அணைத் திட்டம். இன்று அதற்கு 12 லட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்து, அந்த வேலையை கேரள அரசு செய்ய வேண்டும் என்று அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டு இருந்தது. ஆனால் தற்போது கேரள அரசு துரிதமாக வேலையைச் செய்யாத காரணத்தால் காலம் கடந்து கொண்டு இருக்கிறது. எனவே அந்த செண்பகவல்லி அணைத் திட்டத்தைத்

துரிதாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், அதற்குக் கீழே உள்ளார் அணை ஒன்று இருக்கிறது. அந்தத் திட்டமானது உடைப்பு ஏற்பட்டு, வாசுதேவநல்லூருக்கு வரவேண்டிய தண்ணீர் மேல் பகுதி வழியாக கேரளாவிற்குச் செல்கிறது. அந்த 12 லட்சம் ரூபாய் திட்டத்தை நிறைவேற்றி, அங்கே அதைத் தடுத்து அங்கே அணை கட்டினால், கேரளாவிற்கு வீணாகப் போகக் கூடிய தண்ணீர் எங்கள் தொகுதிக்கு நேராக வரும். 20 ஆண்டு களுக்கு முன்னால் உடைப்பு ஏற்பட்டு, அதைக் கட்டாத காரணத்தால், தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்திருந்தும், காலத்தை கடத்திக்கொண்டே போகிறது கேரள அரசு என்பதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனித்து, துரிதமாக நடவடிக்கை எடுத்து, கூடியவிரைவில், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக, கிரியார் அணைத் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. அந்த கிரியாறு அணைத் திட்டத்திற்கு மேற்கு மலைத் தொடர்ச்சியில் இருந்து தண்ணீர் உருவாகி அந்தத் தண்ணீரை உபயோகித்து, கேரள அரசு மின்சாரம் எடுத்தபின் அது வீணாகக் கடலில் சென்று விழுகிறது. எனவே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கடலில் வீணாகச் சென்று விழுகிற அந்தத் தண்ணீரை கிழப் பகுதிக்கு கொண்டு வந்தால், வாசுதேவநல்லூர், சங்கரன் கோவில். போன்ற 2, 3 தாலுக்காக்களில் உள்ள விவசாயிகளுக்கு அது நீர்ப்பாசன வசதியைக் கொடுத்ததாக இருக்கும். அதற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

(முற்பகல் 10-00)

நெல்லை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு கூட்டுறவு சர்க்கரை ஆலை தற்சமயம் இல்லை. வாசுதேவநல்லூர் தொகுதியில், சிவகிரி தாலுக்காவில் இட்டத் தட்ட 8 ஆயிரம் ஏக்கரிலிருந்து 10 ஆயிரம் ஏக்கர் வரைக்கும் கரும்பு சாகுபடி விவசாயிகள் செய்கிறார்கள். அந்த விவசாயி





களுக்கு நிரந்தரமான வேலை கிடைப்பதற்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை மிக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நிரந்தரமான ஒரு சர்க்கரை ஆலை இல்லாத காரணத்தினால், விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 2,000, 3,000 அளவுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. விவசாயிகள் 5 ஏக்கருக்கு கரும்பு சாகுபடி செய்யும்போது அவர்களுக்கு விலை இல்லை என்றால், கடனுக்குள்ளாகி கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்த விவசாயி களுடைய நிலையை ஏற்று, வாசுதேவநல்லூரில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி தேர்தல் நடக்காத காரணத்தினால், பல கிராமங் களில் பல தவறுகள் ஏற்படுகின்றன. அதற்கு காரணம் அங்கு ஊராட்சிமன்றத் தலைவர்கள் இல்லாத காரணத்தினால், கிராமப் பஞ்சாயத்துக்களில், நிதிகள் தவறான முறையில் செலவிடப் படுகிறது. என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில் ஊராட்சி ஒன்றியத்தில் மெர்க்குரி லைட் போடுவதாக பல கிராமங்களில் ஒரு பொய்யான சான்றிதழை தயார் பண்ணி, ஒரு லைட்டிற்கு ரூ. 1,000-லிருந்து, ரூ. 1,500 வரைக்கும் ஒப்பந்தக் காரர்களிடம் கொடுத்ததாக இரண்டு ஆண்டுக்கு முன்னால் ஒரு கமிஷனர் மீது புகார் கூறப்பட்டு அவர் சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார். என்னுடைய திருமுலாபுரம் கிராமத்தில் மெர்க்குரி லைட் போட்டதாக—ஊர் சமூகத்திலிருந்து ஒரு மெர்க்குரி லைட் போட்டிருந்தார்கள்—ஒப்பந்தக்காரர்களைத் தயார் பண்ணி, அதற்கு ஒரு ஆயிரம் ரூபாய் போட்டதாக பொய் வவுச்சர் தயார் பண்ணி, கமிஷனரின் உடந்தையுடன் அந்த பணத்தை எடுத்துவிட்டார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதுபற்றி தெரிவித்து, அந்த வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு 6, 7 கிராமங்களில் மெர்க்குரி லைட் போடுவதாக தயார் பண்ணின தவறான வவுச்சர்களை எடுத்ததன் காரணத்தினால், சம்பந்தப்பட்ட கமிஷனர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்.

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1985 மார்ச் 25

இதுமாதிரி பஞ்சாயத்தில் வரிவசூல் செய்த பணம் எவ்வளவு இருக்கிறது என்று தெரியவில்லை. ஒன்று பணம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கிராமப் பஞ்சாயத்தில் வேலை நடக்க வேண்டும். வேலையும் நடக்கவில்லை. பணமும் காலியாகிக் கொண்டிருக்கிறது. தேர்தல் இல்லாத காரணத்தினால், அந்தப் பணங்கள் தவறான வழியில் செலவிடப்படுகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புளியங்குடியில், போலீஸ்காரர்களுக்கு குடியிருப்பு இல்லம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே போலீஸ்காரர்களுக்கு குடியிருப்பு இல்லம் கட்டிக்கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வாசுதேவநல்லூரில், போலீஸ் நிலையம் கட்டப்பட்டு அது ஒரு புறக் காவல் நிலையமாக இருந்துகொண்டிருக்கிறது. அங்கே ஒரு ஸ்டேஷன் உதவி ஆய்வாளர் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவகிரியில் உள்ள காவலர்களுக்கு, அந்தப் பகுதியில் ஜனத் தொகை அதிகமாக இருப்பதால், வீடு கிடைப்பதில்லை. ஆகவே அங்குள்ள காவலர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். புளியங்குடி, வாசுதேவநல்லூர், சிவகிரி ஆகிய ஊர்களில் உள்ள போலீஸ் காவலர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டிக் கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். புளியங்குடியில் ஏற்கெனவே ஹையர் செகண்டரி ஸ்கூல் ஒன்று, ஆண்களுக்கும் பெண்களுக்குமாகச் சேர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அங்கே பெண்களுக்கென்று தனியாக ஒரு ஹையர் செகண்டரி ஸ்கூலை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு கண்டிப்பாய் பகலில் எட்டு மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டும். ஒரு விவசாயி மின்சாரத்திற்காக அப்ளிகேஷன் போட்டு ஏழெட்டு ஆண்டுகள் ஆகின்றது. ஒரு ஆண்டிற்குள்ளாக மின்சாரம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.



1985 மார்ச் 25] [திரு. ஆர். ஈஸ்வரன்]

வாசுதேவநல்லூர் தொகுதியில் சுமார் 10,000 ஏக்கர் கரும்பு சாகுபடி இருக்கிறது. அந்தக் கரும்பு சாகுபடியைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக மின்சாரம் வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பல மாவட்டங்களில் விளைவுக்கு வராத பகுதிகளில்கூட அரசாங்க நிவாரணம் கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் என் தொகுதியில் பல இடங்களில் வரி, கடன் பாக்கி வசூல் போன்றவைகளில் அதிக அளவு கெடுபிடி செலுத்தி நடவடிக்கைகளில் இறங்கி விவசாயிகளுக்கு இம்சை கொடுக்கிறதாக தகவல் எங்களுக்கு வந்துள்ளது. ஆகவே, அப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் விரைவில் கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தலை நடத்த வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை மிக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். வாசுதேவநல்லூர் தொகுதியில் எந்தப் பகுதியை எடுத்தாலும் அங்கே எந்தவிதமான நிரந்தரமான தொழிலும் இல்லாத நிலை இருப்பதன் காரணத்தால் அங்கே ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை மிக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

புளியங்குடியில் தீயணைப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிக அன்புடன் கேட்டுக் கெள்கிறேன். தீயணைப்பு நிலையம் கடையநல்லூரில் ஒன்றும், அடுத்து ராஜபாளையத்திலும் தான் இருக்கின்றன. எந்தப் பகுதியில் இருந்து சென்றாலும் அவை 30 கிலோ மீட்டருக்கு அப்பால் தான் இவை இருக்கின்றன. ஆகவே, புளியங்குடியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

* **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1984-85 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்காக 412 கோடி ரூபாய் அளவில் துணை மானியம் கோரியுள்ளதை ஆதரித்து என்னுடைய

[திருமதி. பா. வளர்மதி] [1985 மார்ச் 25

கருத்துக்களை எடுத்துவைக்க நான் விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்டத்திற்கு மேல் கூடுதல் செலவு கோருவது என்பதுதான் உண்மையாக மக்களுக்கு சேவை செய்யும் அரசுக்கு இலக்கணமாகும் என்பதை பேராசிரியர் லஸ்கி போன்ற அரசியல் விற்பன்னர்கள் சொல்லியதை ஒட்டி புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களை ஏற்படுத்துவதற்காக கூடுதல் செலவு கோரியுள்ளதை வரவேற்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஆனால் அப்படி கோரியுள்ள அத்தனை தொகையும் தமிழகத்திலே இருக்கிற, அதுவும் சமுதாயத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேருகிறதா என்பதை கண்காணித்துச் செயலாற்றும் ஆட்சியும் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிதான் என்பதை பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மோட்டார் போக்குவரத்துத் துறைக்கு என்று கூடுதல் செலவிற்காக 31 லட்சம் கேட்கப்பட்டிருக்கிறது. சென்னையில் மூன்றாக இருந்த ஆர்.டி.ஓ. ஆபிஸ்கள் இப்போது நான்காகச் செயல்பட ஆரம்பித்திருக்கின்றன. அதற்காக அரசுக்கு கூடுதல் செலவாகி இன்றைக்கு அதற்கு அவையின் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. அதற்காக நான் அரசுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தும் வாகன வரி செலுத்துவதற்கு ஏற்ற சரியான முறைகளில் அந்த அலுவலகங்களுக்கு வசதிகள் செய்து தருவதற்கு போதிய வழி வகைகள் இல்லை. இதனால் வாகன வரி மற்றும் இதர வரிகளைச் செலுத்துவதற்காக மக்கள் அங்கே மணிக்கணக்காக, ஏன் நாள் கணக்காகக் கூட காத்துக் கிடக்க வேண்டிய நிலை இருக்கிறது. வங்கிகளின் மூலமாகக் கூட வாகன வரிகளைச் செலுத்துவதற்கு விதிகளில் வழி இருந்தாலும் என்ன காரணத்தினாலோ, மோட்டார் போக்குவரத்து அலுவலகங்களில் கூட்டம் கட்டுக்கடங்காமல் இருக்கிறது. அங்கே அத்தகைய கூட்டத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய மயிலாப்பூர் தொகுதியில் சாலைகள் சரியான முறையில் பராமரிக்



1985 மார்ச் 25] [திருமதி பா. வளர்மதி]

கப்படாத சூழ்நிலை இருக்கிறது. காரணம், மாநகராட்சிக்கு நிதிப்பற்றாக்குறை இருக்கிறது என்பதுதான். இதனால்தான் சாலைகள் சரியான முறையில் பராமரிக்கப்படாத சூழ்நிலை சென்னையில் இருக்கிறது.

(முற்பகல் 10-10)

நான் ஒரு கருத்தை அரசின் பரிசீலனைக்கு இந்த நேரத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன். மோட்டார் வாகன வரியிலிருந்து, ஒரு குறிப்பிட்ட பங்குத் தொகையை மாநகராட்சி ஒதுக்கீடு செய்தால்தான் மேலும் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு சாலைகளை பராமரிப்பதற்கு இயலும்.

இந்த நேரத்தில் நான் அரசின் கவனத்திற்கு இன்னொரு பிரச்சினையைக் கொண்டுவர விரும்புகிறேன். கோர்ட் ஃபீஸ் ஸ்டாம்புகள் ஒன்று, இரண்டு போன்ற டினாமினேஷன்களில் கிடைப்பது தட்டுப்பாடாக உள்ளது. இதனால், பாதிக்கப்படுகிறவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற ஏழை எளியவர்கள்தான். வட்ட ஆட்சியாளர்கள், மாவட்ட ஆட்சியர் போன்ற அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்ய இந்த ஸ்டாம்புகள் கிடைக்காததால், மிகவும் கஷ்டமான சூழ்நிலை இந்த ஏழை எளியவர்களுக்குத்தான் ஏற்படுகிறது. எனவே, மைய முத்திரைத்தாள் கிட்டங்கியிலிருந்து போதுமான முத்திரைத் தாள்களை வாங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில சட்டமன்ற நிர்வாகத்திற்கு ரூபாய் 6.86 லட்சம் கூடுதல் செலவாக அனுமதி கோரப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பயன்படுத்துகின்ற தொலைபேசிக்குரிய செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ராமநாதபுரம் மாவட்டம் மக்கள் நலன் கருதி காமராஜர் மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம், முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களுக்கு புதிய நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதற்காக கூடுதல் செலவினம் ஏற்பட்டிருக்கிறது. நடைமுறையில் பார்த்தால் சப் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டில் இருந்து உயர் நீதி மன்றம் வரை ஏராளமான வழக்குகள் இன்றைக்கு தேங்கிக் கிடக்கின்றன. இதனால் சமுதாயத்தில் பல சட்டச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே தேங்கிக் கிடக்கும் வழக்குகளை வெகு விரைவில் முடிக்க நீதிமன்றங்களை நிறுவ ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நான் பிறந்த மதுரை மாநகரத்தில் ஹைகோர்ட்டின் ஒரு கிளையினை உருவாக்கிட வேண்டும் என்று இந்த அரசை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் திறமையான நிர்வாகத்தினால் சென்னை நகரில் பால் விநியோகம் நல்ல முறையில் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தானியங்கிப் பால் நிலையங்களில் என்னைப் போன்ற தாய்மார்கள் மணிக்கணக்கிலே காத்துக் கிடக்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு சென்னை நகரத்தில் உள்ளது. பால் வந்ததற்குப் பிறகுதான் தாய்மார்களின் அன்றாடப் பிரச்சினைகள் காலை நேரம் ஆரம்பிக்கத் தொடங்குகிறது. எனவே, தானியங்கிப் பால்நிலையங்களில் காலை 8-30 மணி வரை காத்துக் கிடக்கக்கூடிய சூழ்நிலைகளை மாற்றி தானியங்கிப் பால் நிலையங்களில் காலை 6.30 மணிக்கு பால் வழங்கச் செய்ய அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். பால் வழங்கும் நிலையங்களில் கூடுதல் பால் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல பள்ளிகளுக்கு சரியான கட்டிடங்கள் இல்லாததுடன், அந்தக் கட்டிடங்கள் எல்லாம் சரியான பராமரிப்புக்குட்படாத நிலையிலும், பொதுவாக ஆசிரியர்கள் இல்லாத நிலையிலும் உள்ளன. எனவே அரசு பள்ளிகளிலும், மாநகராட்சிப் பள்ளிகளிலும் கட்டிடங்களும், போதுமான ஆசிரியர்களும், ஆசிரியைகளும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.





மாணவர்களுக்குக் குறைந்த விலையில் நோட்டுப் புத்தகங்கள் ஆண்டு முழுவதும், பள்ளிகள் முழுவதும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரியில் ஆங்கிலத்தில் இருந்து போதனா மொழியை தமிழில் மாற்றுவதற்கு கூடுதல் செலவு துணை மானியக் கோரிக்கையில் கோரப்பட்டுள்ளது. உண்மையில் இது வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும்.

சென்னை பொது மருத்துவ மனையில் இன்னும் பல நவீன வசதிகளைச் செய்ய அரசு முன்வரவேண்டும். குறிப்பாக சென்னையில் உள்ள அரசு மருத்துவ மனைகளானாலும் சரி, மாநகராட்சி பொது மருத்துவ மனைகளானாலும் சரி நல்ல முறையில் பராமரிக்கப் படவில்லை என்று மாற்றுக் கட்சிக்காரர்களால் சொல்லப்படக்கூடிய குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லாத அளவிற்கு பொதுமக்கள் இன்றைக்குப் பாராட்டக் கூடிய சூழ்நிலையில் மருத்துவ நிலையங்களில் தாய்மார்கள் எந்த நேரத்திலும் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை இன்றைக்கு புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிறது.

நோயுற்றவர்களை நல்ல முறையில் பேணிப் பாதுகாப்பது என்பது சமுதாயத்தினுடைய முக்கிய அம்சம் என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு விளங்கிக்கொண்டு இருக்கிறது.

பொதுச் சுகாதாரத்தை நல்லமுறையில் நடத்துவதற்காக, கொசுத் தொல்லைகளைப் போக்குவதற்காக பேராசிரியர் இந்திரேசன் அவர்கள் அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி மயிலைப் பகுதியில் உள்ள கூவம் கால்வாயைச் சுத்தப்படுத்துகிற திட்டங்களும் இருக்கின்றன. அவற்றைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி பா. வளர்மதி] [1985 மார்ச் 25

சென்னை நகருக்குத் தங்குதடையின்றி தண்ணீர் வழங்குவதற்கு அரசு சில பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே இன்றைக்கு தமிழகத்திலே தண்ணீர் பெறாத கிராமங்களே இல்லை என்று சொல்லக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே சிறப்பாக குடிநீர் வழங்குகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரத்திலே காலை வேளையிலே தாய்மார்கள் தண்ணீர் பிடிக்கவேண்டியிருக்கிறது. காலை 4 மணிக்கு தண்ணீர் எடுக்க வேண்டிய கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது என்று நான் ஒரு பெண் என்பதால் தாய்மார்கள் என்னிடம் தெரிவிக்கிறார்கள். ஆகவே நம்முடைய அரசு அந்தக் குறையைப் போக்குவதற்கு முன்வரவேண்டும். சென்னைக்கு அப்பாற்பட்ட கிராமங்களிலே எல்லாம் 24 மணிநேரமும் தண்ணீர் வருகிற சூழ்நிலை இருக்கிறது. அதே சூழ்நிலையை சென்னை மாநகராட்சியிலும் ஏற்படுத்தித்தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் கூடுதல் நிதி கேட்கப்படுகிறது. அந்த நிதி இருந்தால் தான் இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், செலவினங்களைச் சரிக்கட்டுவதற்கும் முடியும் என்பதால் நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற துணை மானியக் கோரிக்கைகளை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறித் துணிகள் பல கோடி ரூபாய் அளவுக்குத் தேங்கிக் கிடக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி மூலமாக விற்பனையை அதிகமாகச் செய்திருக்கிறோம். அப்படிச் செய்தும் கூட மேலும் தேக்கநிலைமை இருக்கிறது. விற்பனையை ஊக்கப்படுத்துவதற்காக கட்டுப்பாட்டு விலையில் வேட்டி சேலை உற்பத்தி செய்கிறவர்களுக்கு உதவித் தொகைகளை வழங்குகிறது. இப்படி கைத்தறி நெசவாளர்கள் நிவாரணம் பெறுவதற்காக பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. நெசவாளர்கள் தொழிற் சங்கங்களுக்கு மானியம் வழங்கி நெசவாளர்களை ஊக்கப்படுத்துகிற முறையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்



1985 மார்ச் 25] [திருமதி பா. வளர்மதி]

களுடைய அரசு செயல்பட்டு வருகிறது. கைத்தறித் துணிகளை ஊக்கப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. கைத்தறித் துறையில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி கைத்தறி துணி விற்பனையில் முன்னேற்றம் ஏற்பட, தெளிவான முறையில் தீவிரமாக செயல்பட்டு வருகிற இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கென்று ஒரு தனி இலாகாவை அரசு உருவாக்கியிருக்கிறது. கைத்தறித் துணிகளை அதிகமாக விற்பனை செய்யக்கூடிய முறையிலே ஆலோசனை கூற ஒரு உயர்மட்டக் குழுவை அமைப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கும் இந்த நிலையில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருவாய் உள்ளவர்களுக்கும் உணவுப் பங்கீட்டுக் கடைகளிலே அரிசி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆயிரம் ரூபாய் என்பது இந்தக் காலத்திலே போதுமான வருமானமல்ல. அந்த வருவாய் பெறுகிற அரசு அலுவலர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் உணவுப் பங்கீட்டுக் கடைகளிலே எல்லா உணவுப் பொருட்களையும் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல கடைகளிலே எடை சரியாக இல்லை என்றும் தரமான பொருட்கள் தரப்படவில்லை என்றும் மாற்றுக் கட்சியினர் புகார் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறைகளைப் போக்குவதற்கு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாற்றுக் கட்சியினர் எவ்வளவோ நிறைகள் இருந்தாலும் குறைகளை சொல்வதே பொழுதுபோக்காக போய்விட்டது. அந்தக் குறைகளையெல்லாம் போக்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கலப்படம் இருப்பதாக இந்த ஆட்சியின்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். இன்றைக்குத் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, கலப்படம் இல்லாத சூழ்நிலைமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏற்படுத்தியிருக்கிறது. கடைகளிலே திடீர் சோதனை. எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், நேரடியாகவே சென்னை மாநகரத்திலே உள்ள ரேஷன் கடைக்குச் சென்று சோதனை செய்து தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை உடனடியாக வேலை நீக்கம் செய்து புரட்சித் தலைவர் அவர்களே நேரடியாக் நடவடிக்கையில் ஈடுபட்டது பாராட்டத்தக்கதாகும்.

[திருமதி பா. வளர்மதி] [1985 மார்ச் 25

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் கிராமப்புறங்களில் மூன்று ஆயிரம் மகளிருக்கு 25 சதவிகிதம் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. அவ்வாறு கொடுப்பது என்பது சமூக நலத் துறையை வரவேற்கத்தக்க அளவில் அமைந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செய்துவரும் பல்வேறு திட்டங்களிலே இது ஒரு நல்ல திட்டமாகும். காரணம் பெண்கள் பயன் அடையக்கூடிய முறையில் வழிவகுக்கும் துறையாக இருக்கிறது இந்த சமூக நலத்துறை. சமூக நலத் துறை மூலமாக மகளிருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைத் தரக் கூடிய நிலையில், நானும் பெண்ணாக இருக்கிற காரணத்தினால் இதை வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

மயிலையை அடுத்த சாந்தோம் கடற்கரை ஓரமாக உள்ள பகுதிகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. நல்லவர்கள் மாலை நேரத்தில் அந்தப் பகுதிகளில் நடமாடமுடியாமல் வழிப்பறியும் சமூகவிரோதிகள் நடமாட்டமும் இருக்கிறது. இந்தப் பகுதிகளில் தாய்மார்கள் மாலை நேரங்களில் கடற்கரை ஓரமாக செல்ல முடியவில்லை. குடும்பத்தினர் சனி, ஞாயிறு நாட்களில் செல்ல முடியாத நிலை இருக்கிறது. எனவே அந்தப் பகுதிகளில் சனி, ஞாயிறு விடு நாட்களில் கடற்கரைக்கு செல்லக் கூடிய பொது மக்களுக்கு முறையான காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

பெண்களுக்காக மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் துவக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை ஏற்கனவே இன்றைக்கு உள்ளது. ஆனால் அந்த கோரிக்கையை ஒட்டி நானும் இந்த நேரத்தில் அந்த மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர் பணிகள் அனைத்தையும் மகளிருக்காக ஒதுக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை நான் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கனவே பெண்கள் படித்துவிட்டு வேலை இல்லாத சூழ்நிலையில்—ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு வேலை இல்லாத சூழ்நிலை



1985 மார்ச் 25] [திருமதி பா. வளர்மதி]

இன்றைக்கு இருக்கிறது. அந்த வேலை இல்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்கு உரிய நடவடிக்கைகளில் அரசு ஈடுபட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவரின் அரசு குறிப்பாக துணை மானிய கோரிக்கையின் மூலமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கான சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. அந்த சூழ்நிலையில் நல்ல திட்டங்களை மக்களின் சமுதாய வளர்ச்சிக்காக, வறுமைகோட்டுக்கு கீழே இருக்கிற ஏழை எளிய மக்களின் வளர்ச்சிக்காக, பாட்டாளி மக்களின் வளர்ச்சிக்காக உழைக்கும் மக்களின் வளர்ச்சிக்காக, நெசவாள பெருங்குடி மக்களின் வளர்ச்சிக்காக, தாய்மார்களின் வளர்ச்சிக்காக அரசின் மூலமாக இன்று கொண்டுவரப்பட்டு இருக்கிற இந்தத் துணை மானிய கோரிக்கையை நான் வரவேற்று, ஆதரித்து, வாழ்த்தி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கை இங்கே விவாதிப்பதற்கு வைக்கப்பட்டு இருக்கிறது. எல்லா அரசுகளிலும் துணை மானியக் கோரிக்கை விவாதிப்பதற்கு வைக்கப் படுவது வழக்கம் தான். எதிர்பாராத செலவுகள், புதிய பணிகள் அரசாங்கத்தால் ஏற்படுத்தக்கூடிய வகையில் வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு முழு தொகையும் முழுமையாக ஒதுக்கப் பட்டாலும் கூட எதிர்காலத்தில் இதுபோன்ற துணை மானியக் கோரிக்கைகள் வைக்கப்படுவது வழக்கம் தான்.

ஆனால் 1984-85 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையின் மீது இப்போது மொத்தத் தொகை ஏறத்தாழ 976 கோடி கேட்கப் பட்டு இருக்கிறது. ஏறத்தாழ ஒரு பெரிய ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற தொகையைப் போல் பெரும்பகுதி தொகை இருக்கிறது. குறிப்பாக எதிர்பாராத செலவுகள் அல்லது புதிய பணிகள் என்று சொல்லுகின்றபோது பட்ஜெட் தயாரிக்கின்றபோது முழுமையாக நாம் எதிர்பார்த்து பெரும் தொகையை அந்தச் செலவுகளை [illegible], [illegible], எதிர் பார்த்து தொகையை ஒதுக்கலாம். ஆனால் துணை மானியக்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 25

கோரிக்கையில் தொகை அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மூலம் ரூபாய் 976 கோடி கேட்கப் பட்டு இருக்கிறது. என்று சொன்னால் Some error in deciding or making Budget என்று சொல்லுகின்ற வகையில் ஒரு ஸ்தூலமான பட்ஜெட் உருவாக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற அந்தப் பணம் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும். அதற்காகத் தான் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நிலைமை என்ன என்று கேட்டால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கக்கூடிய இந்தத் துணை மானியக் கோரிக்கையில் படித்துப் பார்க்கும்போது பல செய்திகள் நம்முடைய கவனத்திற்கு வருகின்றன. உலக தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற்றது. அப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உலக தமிழ்ச் சங்கம் நிறுவப்படும் என்ற உறுதி மொழியை அளித்தார்கள். அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. நெடுமாறன் அவர்கள் இது குறித்து கேட்டார்கள். மீண்டும் நிச்சயமாக அதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கக்கூடிய அறிக்கையில் உலக தமிழ்ச் சங்கம் நிறுவு வதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 105 லட்சம் செலவழிக்கப் படாமல் சரண்டர் செய்யப்பட்டு இருக்கிறது. இன்னும் சொல் லப்போனால், அங்கே அரசிடம் நிலம் மட்டும் தான் ஒதுக்கம் செய்யப்பட்டு இருக்கிறதே தவிர, பல ஆண்டுக் காலமாகியும் அங்கே ஒரு கமிட்டி உருவாக்கப்படவில்லை; அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை: விதிகள் ஏற்பாடு செய்யப்பட வில்லை. அந்தத் தொகை அப்படி இருக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன், ஒதுக்கப்பட்ட தொகை தமிழர்களுக்காக, தமிழர் சமுதாயத்திற்காக, தமிழுக்காகப் பாடுபடுவதாகச் சொல்லக் கூடிய ஒரு அரசாங்கம் இதிலே இப்படிப்பட்ட நிலையை மேற் கொண்டிருப்பது சரியா, என்று நான் அறிய விரும்புகிறேன். ஒதுக்கப்பட்ட தொகை அப்படியே சரண்டர் செய்யப்பட்டிருப் பதாக துணை மானியத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி



1985 மார்ச் 25] [திரு. அ. ரகுமான்கான்]

யானால் ஒதுக்கீடு செய்யும்பொழுது இதிலே எந்த நோக்கத்திற் காக ஒதுக்கீடு செய்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, அனாதைக் குழந்தைகளுக்குத் தனியார் ஸ்தாபனங்கள் உதவுவதற்காகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, ரூ. 37,96,000. ஆனால் இந்தத் தொகை செலவழிக்கப் பட்டிருக்கிறதா என்று கேட்டால், 17,72,000 ரூபாய் செலவழிக்கப் படாமல், 'எக்சஸ்' ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப் படுகிறது. நான் கேட்கிறேன், எந்த நோக்கத்திற்காக இது செலவழிக்கப்பட வேண்டுமோ அந்த நோக்கத்திற்காகச் செலவழிக்கப்படாமல், அந்தத் தொகை 'எக்சஸ்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது எந்தவிதத்தில் நியாயம் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

குடகனாறு அணை 1977-லே உடைந்து, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. மீண்டும் அந்த அணையைப் புதுப்பிக்க வேண்டுமென்பதிலே அரசியல் கிடையாது. அதற்காக நிதி ஒதுக்கீடுகூட துணை மானியத்திலே செய்யப்பட்டுள்ளது. ஆனால் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். 15 இலட்சம் ரூபாய் கெனால்ஸ்-க்காகவும், 17 இலட்சம் ரூபாய் ரிசர்வாயருக் காகவும் ஒதுக்கப்பட்டது. ஆனால் வருத்தத்தோடு தெரிவித் துக்கொள்கிறேன், இந்தத் தொகை சரண்டர் செய்யப்பட்டிருக் கிறது. அரசாங்கம் எந்தவிதமான உத்தரவும் போடவில்லை.

அதைப்போலவே, இன்னொன்றையும் தெரிவிக்க விரும்பு கிறேன். நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். நம்முடைய ஜெனரல் ஹாஸ்பிடலிலே பல மாடிக் கட்டிடம் கட்டுகின்ற ஒரு திட்டம்—ஆறு மாடிக் கட்டிடம் கட்டுகின்ற திட்டம். அந்த ஆறு மாடிக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கக்கூடிய பணிகள் முடிவடைந்துவிட்டன. இன்றைக்கு ஏறத்தாழ 56 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. சர்ஜரி அன்ட் மெடிகல் பிராஞ்சஸ் உருவாக்குவதாக ஏற்பாடு. ஏ. ஸி. பிளாண்ட் ஒன்றுக்கு அங்கே ஏற்பாடு செய்தார்கள், ஒன்பது இலட்சம் ரூபாயிலே, ஆறாவது மாடியில். அது எதற்காக என்று கேட்டால், சர்ஜிகல் எக்யூப்மெண்ட்ஸ் வைக்க

வேண்டும்; அதைப்போல, ஆப்பரேஷன் தியேட்டர் துவக்கப்பட வேண்டுமென்பதற்காக. அதற்காக, ஏ. சி. பிளான்ட், ஒன்பது இலட்சம் ரூபாயிலே, பி.டபிள்யூ. டி. டிபார்ட்மென்ட் மூலம் ஒரு காண்ட்ராக்டருக்குக் கொடுக்கப்பட்டது. வேலை முடிந்ததாகக் காண்ட்ராக்டர் சொல்லி, செக்யூரிட்டி டெபாசிட்டையும் வாங்கிக் கொண்டு போய்விட்டார்: காண்ட்ராக்ட் வேலையும் முடிந்து விட்டது. ஆனால் நிலைமை என்னவென்று கேட்டால், இன்றைக்கு அந்த ஏ.சி. பிளாண்ட் வேலை செய்யவில்லை; ஒன்பது இலட்சம் ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. சர்ஜிகல் எக்யூப்மெண்ட்ஸ்க்காக ஒதுக்கப்பட்ட ஆறு இலட்சம் ரூபாய் அதற்காக விலை போட்டு வாங்கப்பட்டிருக்கிறது. அது இயங்கப்படுகிறதா என்றால் இல்லை. நான் கேட்க விரும்புகிறேன், ஒரு டிபெக்டாக, குறைபாடுகளுடன் ஒரு காண்ட்ராக்டர் அந்தக் காரியத்தைச் செய்திருக்கின்றபொழுது அது சரியாகச் செய்யப்பட வேண்டும் அல்லது செக்யூரிட்டி டெபாசிட் தரப்படாது என்று சொல்லி, காண்ட்ராக்ட் முடியவில்லை என்று சொல்லி, அதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஆனால் காரணம் என்னவென்று தெரியவில்லை. நான் சொன்னால் வருந்தப்படுவீர்கள், ஆனால் ஆடிட்டர் ரிப்போர்ட்டிலே—1982-83 ஆம் வருஷத்துரிப்போர்ட்டிலே பக்கம் 57-லே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிதி ஒதுக்கீடு எந்தக் காரணத்திற்காகச் செய்யப்படுகிறதோ அந்தக் காரணம் நிறைவேற்றப்படவில்லை.

காகித உற்பத்தி தொழிற்சாலையில் இந்த அரசாங்கம் மிகுந்த அக்கறை காட்டுவதாகச் சொல்லுகின்றீர்கள். திரும்பத் திரும்ப ஒரேயொரு காகித உற்பத்தித் தொழிற்சாலையைப்பற்றி மிகப் பெரிய சாதனையாகப் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் இந்த அரசாங்கத்திற்குத் திட்டமிடுவதிலே எந்தவிதமான முன் யோசனையும் இல்லை என்பதைத் தெரிவிப்பதற்காக ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், மதுராந்தகத்திலே ஒரு மினி பேப்பர் பிளான்ட்டிற்கு ஏற்பாடு ஆயிற்று. சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கின்ற கழிவுப் பொருட்களிலேயிருந்து தயாரிக்கின்ற அளவிற்கு அந்த மினி பேப்பர் பிளான்ட்டிற்கு ஏற்பாடு ஆயிற்று. ஏறத்தாழ 4,500 டன் வருஷத்திற்கு உற்பத்தி





செய்வது அதன் குறிக்கோள் என்று சொல்லப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், ஏறத்தாழ அந்த ஏற்பாடுகள் நடந்து, 30 இலட்சம் மூப்பது இலட்சம் ரூபாய்கூட ஒதுக்கிவிட்டார்கள். 30 இலட்சம் ரூபாய் திட்டத்திலே அந்த மினி பேப்பர் பிளான்ட் துவங்குவ தாக ஏற்பாடு. அதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று விட்டன. ஒரு குறிப்பிட்ட பர்சென்டேஜை அரசாங்கம் கொடுப்பது, இன்னொரு குறிப்பிட்ட பர்செண்டேஜை அந்தச் சர்க்கரை ஆலை கொடுப்பது, இன்னொரு குறிப்பிட்ட பர்சென் டேஜ் ஃபைனான்சிங் இன்ஸ்டிடியூஷன்ஸ் கொடுப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. டாட்கோ ப்ராஜக்ட் ரிப்போர்ட் எல்லாம் வந்தாகிவிட்டது; மூன்று வருஷம் ஆகிவிட்டது; ஆனால் முடிவு என்னவென்று கேட்டால், அரசாங்கம் தன் பங்கிற்குச் செலுத்தியிருக்கிறது: ஆனால், அந்த ஷுகர் மில் எந்தத் தொகையையும் தரவில்லை. பைனான்சிங் இன்ஸ்டிடியூஷ னிலேயிருந்து பணம் பெறுவதற்கு எந்த ஏற்படும் செய்யப்பட வில்லை. டாட்கோ தயாரித்துக் கொடுத்த ப்ராஜக்ட் ரிப்போர்ட் சரியில்லை என்று சொல்லிவிட்டு, இப்பொழுது என்ன சொல் கிறார்கள் என்று சொன்னால், நாங்கள் சாதாரண பேப்பர் தயாரிப்பதற்கு முன்பு சிந்தித்தோம்; ஆனால் இப்பொழுது டிஷ்யூ பேப்பர் தயாரிக்கலாம் என்று இருக்கிறோம் என்று சொல் கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டம் கைவிடப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, 30 இலட்சம் ரூபாய் செலவு செய்து அன்எம்பிளாய்மெண்ட் தீர்ப்பது போன்ற நிலைமைகளெல்லாம் இன்றைக்கு இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. அந்தத் திட்டம் கைவிடப்படக்கூடிய ஒரு சூழ்நிலையைத்தான் இன்றைக்கு நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10-30)

ஆகவே நான் இதைக் கோடிட்டுக் காட்டுகிறேன் என்றால் அதற்குக் காரணம் இந்த நிதிநிலை மானியக் கோரிக்கையில் நீங்கள் எந்தத் தொகையை ஒதுக்குகிறீர்களோ, அது முறையாகச் செயல்படுத்தப்படாமல், முறையாகப் பயன்படுத்தப்படாமல் எக்சஸ் ஆகிவிடுகின்றது என்பதற்காகத்தான். ஆகவே அதன் உண்மையான அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பதை

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 25

நான் சொல்லி கடுமையாகக் குற்றம் சுமத்துகிறேன். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் இதுபோன்ற பிரச்சினைகளில் அக்கறை செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான சம்பவத்தை நான் சொல்ல விரும்பு கிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்களுடைய மருத்துவச் செலவு பற்றி அவர்கள் குறிப்பிட்டி-ருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சருடைய மருத்துவச் செலவை மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுதான் எங்களுடைய மனப்பூர்வமான விருப்பம். ஆகவே அதை நான் அரசியலாக்க விரும்பவில்லை. ஆனால் அதேநேரத்தில் நம்முடைய இதே சட்டமன்றத்தில் எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் விவரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இந்த மருத்துவச் செலவைப் பற்றி ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார்கள். அந்தக் கேள்வி எடுத்துக் கொள்ளப்பட்டு பதில் சொல்லப்படவில்லை.

அது மட்டுமல்ல. அரசாங்கம் ஒரு அறிக்கை வாயிலாகக் கூட அந்தச் செலவு விவரத்தைச் சபையிலே வைக்கவில்லை. அப்படி நம்முடைய சபைக்கு அதுபற்றித் தெரிவிக்காத சூழ்நிலையில் நம்முடைய மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடத்திலே பேசுகின்றபோது சுமார் 90 இலட்ச ரூபாய் செலவாகியிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே விமானச் செலவு மற்றச் செலவுகள் எல்லாம் உள்ளடங்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய குறிப்பிலே முதலமைச்சரின் இதுவரையிலான மருத்துவ சிகிச்சைக்காக ரூபாய் 24 இலட்சத்து 19 ஆயிரம் செலவுக்கு அரசு அனுமதி வழங்க வேண்டும் என்றும் இதிலே விமானச் செலவு, வெளிநாட்டுப் பயணச் செலவு மற்றும் எதிர்பாராச் சில்லரைச் செலவுகள் எல்லாம் அடங்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். வெளியே 90 இலட்சம் ரூபாய் என்று பத்திரிகை நிருபர்களிடத்திலே சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துணை மானியக் கோரிக்கையில் 74 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் என்று சொல்லி



1985 மார்ச் 25] [திரு. அ. ரகுமான்கான்]

யிருக்கிறார்கள். சபை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன். 90 இலட்சம் ரூபாய் என்பது சரியா, அல்லது 74 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் என்பது சரியா? எனவே இது குறித்து நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குக் கட்சியே அந்தப் பணத்தைக் கொடுப்பது என்பது குறித்து நான் அபிப்பிராயம் சொல்ல விரும்பவில்லை. ஆனால் பெரும் பண முதலைகள் அதற்கு உதவி செய்கிறோம் என்று சொல்கிற நேரத்தில் அரசாங்கத்திட மிருந்து சில சலுகைகளை எதிர்பார்த்து அதன்காரணத்தால் அதிகார துஷ்பிரயோகம் நடக்கின்ற சூழ்நிலைக்கு இடம் கொடுத்துவிடக்கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அமைச்சர்களுடைய அறைகளை மாற்றியமைப்பதற் காகவும், அமைச்சர்களின் அறைகளிலே தரையிலே விரிப்பு போடுவதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு பக்கம் 18-லே சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படி அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டிருக்கின்ற நிலைமையில், அமைச்சர்களின் அறைகளை மாற்றியமைப்பது போன்ற காரியங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது சரி தான். ஆனால் அதே நேரத்தில் நான் ஒன்றைக் கேட்க விரும்பு கிறேன், என்.ஜி.ஓ. க்கள் அதாவது அரசாங்க ஊழியர்கள் போனஸ் கேட்கிறார்கள். அவர்கள் சாதாரண மத்தியதர குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான். இன்னும் சொல்லப்போனால் ஆந்திராவிலே போனஸ் கொடுக்கிறார்கள்; மேற்கு வங்காளத்திலே போனஸ் கொடுக்கிறார்கள். எனவே நான் கேட்க விரும்புகிறேன், அமைச்சர்களின் அறைகளிலே தரை விரிப்புக்காக நிதி ஒதுக்கம் செய்கிறபோது, அமைச்சர்களின் அறைகளை மாற்றியமைப்பதற் காக நிதி ஒதுக்கம் செய்கின்றபோது மற்ற அரசுகளைக் காட்டிலும் புரட்சிகரமான அரசு இது என்று சொல்கின்ற நிலையில்—மேலிடத்திலே குற்றம், குறைகளைக் கூற நான் விரும்பவில்லை, ஆனால்—நான் கேட்க விரும்புகிறேன், இந்த

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 25

போனஸுக்காக, என்.ஜி.ஓ.க்களுக்காக நிதி ஒதுக்கீட்டை அர
இதிலே செய்திருக்கக்கூடாது என்று நான் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன். அல்லது அப்படி பட்ஜெட்டிலே அறிவிப்பு
இருக்குமானால் நிச்சயமாக நான் மகிழ்ச்சி அடைவேன்.

அதுபோல் இருவழிப் பயணச் செலவு. இதுபற்றி இன்
றைக்குக் கூட இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதியிருக்
கிறார்கள். ஒருவர் செருப்பு அணியவேண்டும் என்றால் இரண்டு
செருப்புகளை அணிந்தால்தான் செருப்பு அணிவதாகப் பொருள்.
ஒரு செருப்பு மட்டும் போட முடியாது என்பதுபோல் என்.ஜி.ஓ.க்
களுக்கு ஒரு வழிப் பயணச் செலவு போதாது. அவர்கள்
போகின்றபோது மட்டும் உரிய செலவு வழங்கப்படும் என்றும்,
அவர்கள் திரும்பி வருகின்றபோது அதற்கான செலவு கொடுக்கப்
படமாட்டாது என்றும் சொல்லும் நிலை இருக்குமானால், அது
சரியில்லை. இதனையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன்.

அடுத்து தொழிலாளர்கள் சம்பள உயர்வு கேட்டு போராடு
கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தில் கழிவுப் பாதையைச்
சுத்தம் செய்கின்றபோது அந்தத் தொழிலாளி சாக்கடையில்
மூழ்கி எழுகிறான். அவன் போனஸ் கேட்கவில்லை. கொஞ்சம்
ஊதியம் கூடுதலாகக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோ.
அதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை. இன்னும் சொல்லப்போனால்
பம்பிங் ஸ்டேஷனிலே கழிவை அகற்றுவதற்குரிய பணியை
மழையிலே நனைந்துகொண்டு செய்கிறபோது மிகுந்த கஷ்டப்
படுகிறார்கள். எனவே மழை கோட்டு கொடுங்கள் என்று கேட்
கிறார்கள். அதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை, பரிசீலிக்கிறோம்
என்று சொல்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் இதுபோன்ற
காரியங்களுக்குச் செய்திருப்பது சரிதானா என்று நான் கேட்க
விரும்புகிறேன்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை விஸ்தரித்துக்கொண்டு
போவது என்பது உங்களுடைய விருப்பம். ஆனால், மக்களுடைய
வரிப்பணம் என்பதன் காரணத்தால், 86 இலட்சம் மக்களும்
வரிப்பணம் கொடுக்கிறோம் என்ற காரணத்தால், பொறுப்பு
வாய்ந்த எதிர்க்கட்சி என்ற முறையில் அந்தக் கேள்வியை
எழுப்புவதற்கு எங்களுக்கு உரிமை இருக்கின்றது.



1985 மார்ச் 25] [திரு. அ. ரகுமான்கான்]

எண்ணிக்கையைக் கூட்டுவது குறித்து நான் வருத்தப்படவில்லை.
இன்னும் சொல்லப் போனால் உட்கட்சிப் பூசலைப் போக்க,
இருக்கக்கூடிய நபர்களைத் திருப்திபடுத்துவதற்காக அதைச்
செய்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. இன்னும் சொல்லப்
போனால், சிலருக்குப் பதவி கொடுத்து திருப்திப்படுத்த
வேண்டுமென்பதற்காக நீங்கள் செய்கிறீர்கள் என்று நான்
சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்திலே இந்த ஒரு நெருக்கடி,
மந்திரி சபையை விஸ்தரித்துக் கொண்டு போவதற்கு என்ன
காரணம்? அதிகாரப் பொறுப்பு அதிகமாக இருக்கிறது.
போர்ட்போலியோஸ் குவிக்கப்படுகிறது: ஆகையினாலே
நிர்வாகம் சிறப்பாகச் செய்யப்பட வேண்டும். அதற்குத்தான் இது
என்று சொன்னால் உங்கள் நிர்வாகத்திற்கு ஒரு சின்ன
உதாரணம். உங்களுக்கு எல்லாம் தெரியும், புதுமைப் பெண்
என்ற ஒரு படத்தைச் சகோதரர் பாரதிராஜா அவர்கள்,
எங்கள் ஊர்க்காரர், எங்கள் பகுதிக்காரர், எடுத்தார். அந்தப்
படத்திற்கு வரிவிலக்குத் தருகிறார்கள். அதே நேரத்திலே
மைடியர் குட்டிச்சாத்தான் என்ற ஒரு படத்தை ஒருவர்
எடுக்கிறார், அந்தப் படத்திற்கும் வரி விலக்கு கொடுக்கிறார்கள்.
ஆனால், பாரதிராஜாவின் அந்தப் படத்திற்குப் போட்ட
உத்தரவு அப்படியே இருக்கிறது; மைடியர் குட்டிச்சாத்தா
னுக்குப் போட்ட உத்தரவு, அரசாங்கத்திற்கு வருமானம் இழப்பு
ஏற்படுகிறது. எனவே வரி விலக்கு உத்தரவை ரத்து செய்கிறோம்
என்று சொல்கிறீர்கள். நீதிமன்றத்திலே என்ன சொன்னார்கள்?
அப்பொழுதே அந்தச் சிந்தனை வந்திருக்க வேண்டும், பிறகு
அந்தச் சிந்தனை வருவதிலே உள்நோக்கம் இருக்கிறது என்று
நீதிமன்றமே சொல்லியிருக்கிறது. இது ஒன்று போதாதா,
நிர்வாகம் இங்கே எப்படி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட.
பாரதிராஜா படத்திற்கு வரி விலக்கு அளிக்க முன்வந்தபோது,
அரசாங்கத்திற்கு வருமான இழப்பு உங்களுடைய கவனத்திற்கு
வரவில்லையா? இதிலேயிருந்து தெரிகிறது, இந்த அரசினுடைய
நிர்வாகம் எப்படி இருந்து கொண்டிருக்கிறது என்பது. இப்படி
பலவற்றைச் சொல்லலாம்.

முனுசாமி ரெட்டி கனிமம் வெட்டுவதற்காக மத்திய அரசு அனுமதி வழங்கியது, எக்ஸ்டென்ஷன் கொடுக்கலாம் என்று சொல்லியது. அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் இங்கே இருந்தார்கள், எக்ஸ்டென்ஷன் தர மறுத்தார்கள், ஆவேசமாகப் பேசினார்கள். முனுசாமி ரெட்டியார் நீதிமன்றத்திற்குப் போனார்; கோர்ட்டை அவமதித்தார் அமைச்சர். இறுதியாக இந்த அரசாங்கமே கோர்ட்டில் அபராதம் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒரு அரசாங்கம் கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்காக அபராதம் கட்டிய கொடுமை நிர்வாகத்திற்குப் பெயர் போன இந்தச் சர்க்காரிலே நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், இந்த நிர்வாகத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு இவ்வளவு எண்ணிக்கை தேவைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப் போனால், ஈரோட்டில் ஹவுசிங் போர்டிலே வீடு ஒதுக்கீடு செய்வதிலே, ஒழுங்கீனமும், ஊழலும், பேவரட்டிசமும் நடைபெற்றிருக்கின்றன என்று நீதிபதி தீர்ப்பு வழங்கினார். உங்கள் நிர்வாகத்திற்கு ஓர் அத்தாட்சி.

அது மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ நான் சொல்லிக் கொண்டே போக முடியும். மருத்துவக் கல்லூரியிலே 86 பேர்களுக்கு இடம் கொடுக்கப்படவேண்டிய அளவுக்கு அவர்களுக்கு எல்லா தகுதிகள் இருந்தும் தரப்படாமல் இருந்தது; அது தவறு என்று நீதிமன்றம் உங்கள் நிர்வாகத்தைப் பாராட்டியிருக்கிறது, வேறு வார்த்தைகளில். ஆக, மக்களுடைய வரிப் பணத்திலே, தனிப்பட்ட உங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு மந்திரி சபையை விஸ்தரித்துக்கொண்டு போனால் சரியாக இருக்காது என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏழை, எளிய மக்களுடைய வரிப் பணத்தோடு விளையாட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மதிப்பிற்குரிய ப.உ.ச. அவர்கள் அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அவர்கள்மீது எனக்கு மரியாதை உண்டு பல பேர்கள் மந்திரியாக வந்திருக்கும்போது அவர்கள் இங்கே அமைச்சராக





வந்திருப்பது குறித்து எனக்கு ரொம்பவும் சந்தோஷம். ஆகவே, தனிப்பட்ட முறையில் நான் சொல்கின்ற கருத்தை அவர்கள் கொள்ளக்கூடாது என்று நான் பணிவன்போடு அவரைக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், அமைச்சரவையில் இருக்கிற நம்முடைய அமைச்சர் ப. உ. ச. மீதும், என் மீதும், என்னைச் சேர்ந்த பல பேர்கள் மீதும், எங்களுடைய கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீதும் இந்திரா அம்மாவைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்று ஒரு வழக்கு—, அட்டம்ட்டு மர்டர், என்று செக்ஷன் 307 போடப் பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. நான் உள்ளே போக விரும்பவில்லை; அது பார்ட்லி ஹேர்ட் மேட்டர், எவிடென்ஸ் எல்லாம் கொடுக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. நம்முடைய அமைச்சர் திரு. கே. ஏ. கே. இருக்கிறார், வழக்கறிஞர்களுக்குத் தெரியும்: நான் சட்டச் சிக்கலுக்குக்கூட போக விரும்பவில்லை. நான் கேட்க விரும்புகிறேன், கோர்ட்டிலே பப்ளிக் பிராசிக்யூட்டர் யார்? அரசாங்கத்தின் சார்பாக வாதாடுகிற வக்கில் அவர். போலீஸ் அமைச்சர் யார்? முதலமைச்சர். அரசாங்கத்தில் இருக்கக்கூடிய மந்திரிகள் யார்? கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி. இந்த அரசாங்கத்தினுடைய ஓர் அங்கம் நம்முடைய அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள். என்னை விசாரிக்கும்போது அரசாங்க வக்கீல் தன்னுடைய குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்காக ஆதாரங்களை நீதிமன்றத்திலே கொடுக்கும்பொழுது, அமைச்சராக இருக்கிற திரு. ப. உ. ச. அவர்களுக்கு எதிராக அந்த பப்ளிக் பிராசிக்யூட்டர் செயல்படுவாரா], செயல்படுவதற்கு போலீஸ் மந்திரி உத்தரவிடுவாரா? அரசாங்கமே அவர்களுடைய அரசாங்கமாயிற்றே: அவரே அரசாங்கத்தில் ஒரு அங்கமாயிற்றே; அப்படி இருக்கும்போது ஒரு கிரிமினல் வழக்கிலே சம்பந்தப்பட்டிருக்கிற ஒருவர் அமைச்சரவையில் இருப்பது தார்மீகமாக—நான் சட்டப் பிரச்னைக்குள்ளே கூட போக விரும்பவில்லை; அது வேறு விவகாரம்—நியாயம் தானா *

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 25

கோவாவிலே ஒரு கல்வி அமைச்சர் இருந்தார். அவருடைய மருமகன் தேர்விலே கொஞ்சம் கூடுதலாக மார்க் போடச் சொல்லி சிபாரிசு செய்து விட்டார் என்ற குற்றச்சாட்டு சட்டசபையில் வந்தவுடனே தார்மீகம் கருதி பதவியை ராஜினாமா செய்தார்.

நாகாலாந்திலே சினிமாவுக்குப் போய்விட்டு வந்த ஒரு பெண்ணை, கற்பழிக்க முயற்சி செய்ய, அந்தப் பெண் சம்மதிக்காத காரணத்தாலே துப்பாக்கியாலே சுட்டுவிட்டார் என்ற குற்றச்சாட்டு வந்தபொழுது, நாகாலாந்து முதலமைச்சர் சொன்னார், என் அமைச்சரவையிலே இருந்த அந்த மந்திரி கோர்ட்டிலே நிரபராதி என்ற தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பிறகு தான் இங்கே வந்து அமருவார் என்று. எதிக்ஸ், பொலிட்டிக்கல் மொராலிட்டி. இன்றைக்கு ஜனநாயகத்திலே கேலிக்கூத்தாக்கப் படுகிறது என்பதற்காக வருத்தப்படுகிறேன். தனிப்பட்ட முறையில் நம்முடைய பு. உ. ச. அவர்கள் மீது எனக்கு எந்த விதமான கோபமும் இல்லை, வருத்தமும் இல்லை.

(முற்பகல் (10-40)

ஆகவே நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்த அமைச்சரவையில் இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. நான் இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு தலைசிறந்த வழக்கறிஞர். நீங்களும் நம்முடைய பகுதிக்காரர்தான். இது ஒரு முக்கியமான பிரச்னை. சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதேபோல பொது மக்கள், இவர்களில் யாராவது தவறு செய்திருந்தால், ஊழல் செய்திருந்தால் அவர்களை விசாரிப்பதற்காக ஒரு கமிட்டி போடப்பட்டிருப்பதாகவும், அந்தக் கமிட்டியில் நம்முடைய கே. ஏ. கே. அவர்கள், நாவலர் அவர்கள், காளிமுத்து அவர்கள், பண்ருட்டி அவர்கள் இருப்பதாகவும், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அந்தக் குழு இருப்பதாகவும், புகார் கொடுக்க விரும்புகிறவர்கள்



1985 மார்ச் 25] [திரு. அ. ரகுமான்கான்]

இந்த முகவரிக்கு அனுப்பலாம் என்று அரசாங்கத் துறையிலேயிருந்து பத்திரிகையிலே விளம்பரம் வந்திருக்கிறது. கேபினெட் சப் கமிட்டி என்று சொல்லக்கூடிய இந்தக் கமிட்டிக்கு புகார் அனுப்பினால், ஏற்கனவே இந்த அரசாங்கம் தொடர்ந்து நடைபெற்று வருகிறதே, அப்படி நடைபெற்று வருகிற அந்தக் காலக்கட்டத்தில் ஊழல்கள் நடைபெற்றதாக நாங்கள் கருதினால், குற்றம் சொல்லியிருந்தாலும், அவைகள் குறித்தெல்லாம் இந்தக் கமிட்டி விசாரிக்குமா? இல்லை, புதியதாக சொல்வதைத்தான் விசாரிக்குமா? அப்படியென்றால் நாடாளுமன்ற உறுப்பினர்களை விசாரிப்பதற்கு இந்தக் கமிட்டிக்கு சட்டரீதியான அங்கீகாரம் உண்டா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அது உரிமை மீறிய பிரச்னை கூட ஆகும். சட்டமன்ற உறுப்பினர்கள் நாங்கள், மேலவை உறுப்பினர்கள் நாங்கள், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் நாங்கள். ஏற்கனவே இந்தியன் பீனல் கோட் இருக்கிறது, லஞ்ச ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் எங்களை கட்டுப்படுத்துமே தவிர, அதிகாரத்தில் இருக்கக்கூடிய நீங்கள் ஒரு கமிட்டியை போட்டுக்கொண்டு உங்களை நாங்கள் விசாரிக்கிறோம் என்று கட்டுப்படுத்துவதற்கு உங்களுக்கு இந்தச் சட்டசபை அதிகாரத்தை தர முடியுமே தவிர, உங்களுடைய தலைமை நிலையம் தர முடியாது.

ஆனால் அப்படிப்பட்ட கமிட்டி போடப்பட்டிருப்பது பத்திரிகையிலே செய்தியாக, அதிகாரப்பூர்வமாக வந்திருக்கிறது. அதனுடைய நிலைமை என்னவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதிலே இன்னொரு விசேஷம் என்னவென்றால் இந்தக் கமிட்டியிலே இருக்கிற உறுப்பினர்கள் மீது நாங்கள் பல குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு இந்தக் கமிட்டி தயாராக இருக்கிறதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால் ஏற்கனவே பப்ளிக் மென் கிரிமினல் மிஸ்காண்டக்ட் என்ற ஒரு சட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது. அதன்படி சட்டமன்ற உறுப்பினர்களை விசாரிக்கலாம். சட்டசபையிலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது அந்தச் சட்டம். மந்திரிகள்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 25

தவறு செய்தால் முதலமைச்சர் விசாரிக்கலாம்; அநியாயமாகப் புகார் சொன்னால் விசாரிக்கலாம் என்பது அந்தச் சட்டம். ஆனால் நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனே அந்தச் சட்டத்தை திருத்திவிட்டீர்கள். அப்போது திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள் சட்ட அமைச்சராக இருந்தார். நாங்கள் காம்ப்ரஹென்சிவ் லா கொண்டு வரப் போகிறோம் என்று சட்டசபையிலே சொன்னார்கள். நீங்கள் கமிட்டியில் நான்கு, ஐந்து பேர்களை மட்டும் வைத்துக்கொண்டு, இந்தக் கமிட்டியிலே இருக்கிறவர்கள் மட்டும் தவறு செய்யாதவர்கள், ஆனால் மற்றவர்கள் எல்லாம் தவறு செய்யக்கூடியவர்கள் என்ற அர்த்தத்திலே இப்படி ஒரு கமிட்டி நியமிப்பது எந்தவிதத்திலே நியாயம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு விஷயம். இன்றைக்கு சப்-இன்ஸ்பெக்டர்கள் செலக்ஷன். இது ஒரு முக்கியமான பிரச்னை. எவ்வளவு கேலிக்கூத்து நடக்கிறது பாருங்கள். எத்தனை இடங்கள் காலி என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதா, இல்லை. இதுவரைக்கும் சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் இது நடைபெற்றது. இப்போது போலீஸ் அதிகாரிகள் மூலம் இது நடைபெறுகிறது. 1979 ஆம் ஆண்டு ஏற்கனவே சப்-இன்ஸ்பெக்டர் செலக்ஷன் நடைபெற்றது. ஆனால் ரிசல்ட் அறிவிக்கப்பட்டதா, இல்லை. என்ன காரணம்? முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போலீஸ் அதிகாரிகள் இந்த சப்-இன்ஸ்பெக்டர்களைத் தேர்ந்தெடுப்பதிலே ஊழல் செய்துவிட்டார்கள். எனவே ஒரு இராணுவ அதிகாரியைக் கொண்டு நான் விசாரிப்பேன் என்று சொன்னார்கள். ஆனால் பழையபடி ஒரு அறிவிப்பு வந்து சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்விற்கான உடை, எடை, உயரம் ஆகிய இவைகள் எல்லாம் தேர்வு செய்து ஒரு பட்டியல் அளிக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன். இராணுவ அதிகாரி அல்ல. போலீஸ் அதிகாரிகள்தான். அந்தக் கொள்கையிலே ஒரு மாற்றம். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களே, இவர்களுக்குத் தேர்வு உண்டா] நவம்பர் மாதம் 11 ஆம் தேதி சொன்னார்கள். அப்படியானால் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ன ஆனார்கள்? அவர்கள் செலுத்திய கட்டணம் என்னவாயிற்று? அவர்களுக்கு இப்போது வயதாகி இருந்தால் அதற்கு யார் பொறுப்பாளி? இவைகளை எல்லாம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1985 மார்ச் 25] [திரு. அ. ரகுமான்கான்]

இதற்கிடையில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மீண்டும் 10 ஆயிரம் போலீஸ்காரர்களை வேலையில் நியமிக்கிற திட்டத்தின்கீழ் வருகிற 30-3-1985 அன்று போலீசிற்கு ஆள் எடுக்கப் போகிறார்கள். இது எப்போது நடக்கிறது? 1978-லிருந்து இந்த போலீசுக்கு ஆள் எடுக்கும் வேலை நடக்கிறது. 1978-ல் தேர்வு நடந்தது. அது என்னவாயிற்று? அதற்குப் பின்னால் 1980-ல் தேர்வு நடந்தது. அதனுடைய ரிசல்ட் என்னவாயிற்று? ஒன்றும் தெரியவில்லை. மறுபடியும் இப்போது தேர்வு நடந்திருக்கிறது. ஏற்கெனவே தேர்வு நடத்தி செலக்ட் ஆனவர்களுடைய கதி என்ன[ அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு இருக்கிறதா? அவர்களுடைய நிலையைப்பற்றி உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தேர்வு நடக்கும்போது ஒருவருடைய வயது 20. எப்போது? 1980-ல் அவருக்கு வயது 20. இப்போது அவருக்கு வயது 24 ஆகிவிட்டது. 24 வயது ஆகிவிட்டால் தகுதியில்லை என்று சொல்லப்படுகிறது. அவருக்குத் தகுதி இல்லை என்று அவரது வாய்ப்பை மறுத்துவிட்டார்கள். இதனால் யாருக்குப் பாதகம்? எண்ணிப் பார்க்க வேண்டாமா? நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் செலக்ட் செய்து, சர்டிபிக்கேட் எல்லாம் வாங்கி வைத்துவிட்டு, இப்போது 4 ஆண்டுகள் கழித்து, தகுதியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது புதிய தேர்வு வைத்திருக்கிறார்கள் போலீசுக்கு ஆள் எடுக்க. அப்படியானால் பழையவர்கள் கோர்ட்டுக்குப் போகமாட்டார்களா? போயிருக்கிறார்கள். கோர்ட்டுக்குப் போய், நீதிபதி ஸ்டே கொடுத்திருக்கிறார். அந்த ஸ்டே இருக்கும்போது புதிய தேர்வு நடத்த எப்படி உத்தரவு போட்டீர்கள்? இதற்கு யார் பொறுப்பு? தயவுசெய்து அரசாங்கம் சிந்திக்க வேண்டும். காவல் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது இப்படிப்பட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டாமல் இருப்பது முறையாகாது என்பதால் அது பற்றி இங்கே குறிப்பிடுகிறேன்.

அதைப்போன்று சர்வீஸ் கமிஷன் தேர்வு. அரசு ஊழியர்களைத் தேர்வு செய்வதற்காக இருக்கின்ற சர்வீஸ் கமிஷன் ஒரு அட்டானமஸ் பாடி. அங்கே என்ன நடந்தது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு நீண்டகாலமாக 'ஃபோர்த் குரூப்' தேர்வு நடைபெறவில்லை. திடீரென்று ஒருநாள் தேர்வு நடத்த உத்தரவு போட்டீர்கள்.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 25

தேர்வு நடைபெறுவதற்கு முன்னால் வினாத்தாள் மார்க்கெட்டில் 'கீரையோ கீரை' என்று விற்பதைப்போல தெருவிலே விற்கப் பட்டது. அதற்கு எந்த அதிகாரி காரணம்? தப்பு செய்த அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டாமா? அதற்குப் பின்னணி யார்? அதைப்பற்றிய விவரம் எல்லாம் நமக்குத் தெரியாது. அதற்குப் பின்னால் மீண்டும் ஃபோர்த் குரூப்புக்கு தேர்வு நடை பெற்றது. அப்படி தேர்வு நடைபெற்றிருக்கும்போது, முதல மைச்சர் ஒரு மாநாட்டில் அறிவிக்கிறார். ஏற்கெனவே பணியி லிருக்கிற 6,000 தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று சொல்கிறார். நான் கேட்கிறேன். ஏற்கெனவே இரண்டு முறை ஃபோர்த் குரூப் தேர்வு எழுதியிருக்கிறார்கள். 80,000 இடம் காலி இருப்பதாகக் கேள்வி. ஆனால் சர்வீஸ் கமிஷன் தெரிவித்திருப்பது கொஞ்சம்தான். அது ஒருபுறம் இருக்கட்டும். ஆயிரக்கணக்கானவர்கள் ஃபோர்த் குரூப் தேர்வு எழுதி, வேலைக்கு காத்திருக்கிறார்கள். அவர்கள் கதி என்ன? வேலை உண்டா? ஏற்கெனவே தற்காலிகமாக பணியில் இருந்தவர் களை நிரந்தரமாக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அவர் களே நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் இருந்தால், பிறகு பரீட்சை எதற்கு நடத்த வேண்டும்? இதில் இருக்கிற நடைமுறைகளை அரசாங்கம் சிந்திக்க வேண்டாமா? மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதுபற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் போஸ்ட் 108 காலி இருப்பதாகச் சொல்லி தேர்வு நடத்தினார்கள். மதுரை மாவட்டத்தில் மட்டும் ஏறத் தாழ 9 இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களை நிரப்ப, தேர்வு நடைபெற்றது. அதிலே இருக்கிற வேடிக்கை என்னவென்றால் ஏ.பி.பி. கிரேடு 2-க்கு தேர்வு நடந்தது 1982-ல். 'பானல்' செலக்ட் பண்ணி, முடித்து விட்டார்கள். அந்தந்த டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்தான் தேர்வு செய்ய வேண்டும். இந்த இடங்களுக்கு டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்தான் தேர்வு செய்து, ஃபில் அப்' செய்ய வேண்டும். அந்த முறையில் மதுரையில் 9 இடங் களுக்கு தேர்வு நடைபெற்றது. 30 பேர்கள் தேர்வுக்கு வந் தார்கள். ஆனால் தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் அவர்கள் இடம் பெறவில்லை; தேர்வுக்கு வாராதவர்கள், அப்ளிகேஷன்



1985 மார்ச் 25] [திரு. அ. ரகுமான்கான்]

போடாதவர்கள் பெயர்கள் எல்லாம் அந்தப் பட்டியலிலே இடம் பெற்றிருக்கின்றன. இங்கே இருந்து இன்னாரைப் போடுங்கள், இன்னாரைப் போடுங்கள் என்று சிபாரிசு போகிறது. கலெக்டர் பார்த்தார், நமக்கு எதுக்கு வம்பு. அவர்கள் சொல்வதைப் போட்டு விடுவோம் என்று தேர்வுக்கு வாராதவர்களுக்கு, அப்ளி கேஷன் போடாதவர்களுக்கு உத்தரவு போட்டார். இதிலே அரசாங்கம் தலையிடக்கூடாது, கலெக்டர்தான் நியமிக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இருந்தபோதிலும் இப்படிப் பட்ட தவறு நடந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆதாரம் காட்ட வேண்டுமென்று சொன்னால், பெயரைச் சொல்ல வேண்டுமென்று கேட்டால், நான் சொல்லத் தயாராக இருக் கிறேன். என்னிடம் அதற்கான ஆதாரம் இருக்கிறது. இப்படிப் பட்ட நிர்வாகச் சீர்கேடு தொடர்ந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்து, இங்கே பல கமிஷன்களுக்கு தொகை ஒதுக்கப்பட்டி ருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், விசாரணைக் கமிஷன் என்று சொல்லும்போது, இராம பிரசாத் ராவ் கமிஷன் ரிப்போர்ட் இந்த அவையில் வைக்கப்பட்டு, விவாதிக்கப்படும் என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புகிறேன். இப்போது அதை மீண்டும் வைப்பதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தச் சபையிலே கொடுத்த வாக்குறுதி அப்படியே இருக்கிறது. நம்முடைய அமைச்சர் ப. உ. ச. அவர்கள் மீது இங்கே அரிசி பேர ஊழல் குற்றச்சாட்டு சொல்லிய நேரத்திலே, அந்தக் கமிஷன் ரிப்போர்ட்டிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது குற்றம் சுமத்தினார்கள். அப்படி குற்றம் சுமத்திய நேரத்திலே அவர்கள் நேரடியாகக் கோர்ட்டுக்கு வந்தார்கள். குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதித்தார்கள். அவர்கள்தான் நிரபராதி என்று தீர்ப்பு வழங்கினார். ஆனால் இந்தத் தீர்ப்பிலே, விசாரணைக்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 25

கமிஷனிலே குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட, முதலமைச்சராக இருந்தாலும், அல்லது அவருடைய சகோதரராக இருந்தாலும், அல்லது மற்ற அமைச்சர்களாக இருந்தாலும், அவர்கள் விசாரிக்கப்படவில்லை, கமிஷனுக்கு வரவில்லை, குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

இதுபோன்ற நிலைமையிலே இந்தக் கமிஷனிலே பல தவறுகள் நடந்து இருக்கின்றன. முதலிலே ராமமூர்த்தி அவர்களை நீதிபதியாக நியமித்தார்கள். திடீரென்று அவரே விலகிக் கொண்டார் என்ற காரணத்தைச் சொன்னீர்கள். பிறகு ராமபிரசாத் ராவ் அவர்கள் வந்தார்கள். அவர்கள் வந்ததற்குப் பிறகு நீங்கள் நியமித்த நீதிபதி அந்தத் தீர்ப்பை வழங்கி யிருக்கிறார்கள். இதில் உண்மையான நிலை என்ன என்பதை விசாரிப்பதற்கு ஒரு விசாரணைக் கமிஷன் வேண்டும். நாம்தான் ஜெயித்து விட்டோமே, மக்கள்தான் ஓட்டு போட்டுவிட்டார்களே, நாங்கள் எல்லாம் நிரபராதிகள், தப்புச் செய்யாதவர்கள் என்பதற்கு அடையாளம் இது என்று நீங்கள் சொல்வீர்களே யானால், திரும்பவும் நான் சொல்கிறேன், நீதிமன்றத்திலே சில நேரங்களிலே தவறு செய்பவர்கள் கூட தப்பித்து விடலாம், அதனாலே, அவர்கள் நிரபராதிகள் என்று பொருள் அல்ல. அப்படி யானால் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஜப்பான் நாட்டிலே பிரதமராக இருந்த டனாகா அவர்கள் ஊழல் பேர்வழி என்று கோர்ட்டிலே குற்றம் சாட்டப் பட்டார். தேர்தலிலே வெற்றி பெற்றார். அந்நாலேயைப் பற்றி இங்கே சொல்லக்கூடாது. அவர்கள் மீது பல குற்றச்சாட்டுகள் சொன்னார்கள். இப்போதுகூட அவர்கள் வெற்றி பெற்றிருக் கிறார்கள். ஆகவே நான் சொல்ல விரும்புகிறேன். குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள், இன்னும் சொல்லப்போனால், தவறு செய்தவர்கள் என்று மக்களுக்குத் தெரிந்தேகூட தேர்தல் தோல்விகள் இப்படி அப்படி மாறலாம். அண்ணா அவர்களே தோற்றுப்போய் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், உங்களுக்கு நன்றாகத் தெரியும். தர்மபுரி தேர்தலிலே இந்தி ஆதிக்கப் பிரச்சனையை மையமாக வைத்தபோது, அந்தக் கொள்கை அடிப்படையிலே கூட தோல்வியைச் சந்தித்து இருக்கி றோம். ஆகவே தேர்தல் வெற்றி தோல்விகளை கணக்கில் வைத்துக்கொண்டு, இந்த நடைமுறைகளை எல்லாம் திசை திருப்பிவிடக் கூடாது. நான் இந்த நிதி ஒதுக்கீட்டைப் பற்றிச்



1985 மார்ச் 25] [திரு. அ. ரகுமான்கான்]

சொல்ல விரும்புகிறேன். இலவச மின்சாரம் என்று சொல்கி றீர்கள். பயன் அடைபவர்கள் எண்ணிக்கை குறைவு. அதற்கும் ஏகப்பட்ட கண்டிஷன் போட்டு இருக்கிறீர்கள். விவசாயத்தைத் தவிர வேறு தொழிலைச் செய்யக்கூடாது என்று சொன்னால், எவ்வளவு பேர்களுக்கு நீங்கள் இலவச மின்சாரம் வழங்குவீர்கள்? பட்டியலைக் கொடுங்கள். அதை நான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, எஸ்.எல்.சி. பி.யு.சி., பிளஸ் டூ படித்தவர்களுக்கு உதவித் தொகை கொடுப்போம் என்று சொன்னீர்கள். மூன்று வருஷம்தான் என்று அறிவிப்பு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அவர்கள் வீட்டில் யாருக்கும் எந்தவிதமான வருமானமும் வரக்கூடாது என்று இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், 50 ரூபாய் வருமானம் அந்த மனுதாரருக்கு இருந்தால், அது இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையிலே எத்தனை பேர்கள் பயனடைவார்கள்? அதிகாரி களுக்கு மட்டும்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறதே தவிர, இதற்கான நிதி ஒதுக்கம் செய்யவில்லை. அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க ஊழியர்கள் இறந்துபோனால், அவருடைய குடும்ப வாரிசுதாரருக்கு ரூபாய் 10 ஆயிரம் என்று எங்களுடைய ஆட்சி யிலே கொண்டு வந்தோம். தேர்தல் நேரத்திலே விலைவாசியைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதை 15 ஆயிரம் ஆக்குவோம் என்று அறிவித்தோம். ஏலக்கடையில் ஏலம் எடுப்பதைப்போல 15 ஆயிரம் அல்ல, 20 ஆயிரம் தருகிறோம் என்று நீங்கள் சொன்னீர்கள். இன்று ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். அந்த 20 ஆயிரம் ரூபாயை எந்த அடிப்படையிலே கொடுக்கப் போகிறீர்கள்? அவர்களிடத்திலே இருந்து வசூலித்து, அந்தப் பணத்தின் வட்டியை வைத்து அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தால், நம்முடைய நாவலர் அவர்கள் பாணியிலே சொல்ல வேண்டுமானால், சத்திரத்து சாப்பாட்டுக்கு 3-வது நபர் தேவையில்லை. ஆகையினாலே, இந்த 20 ஆயிரம் ரூபாய் திட்டம் உண்மையான திட்டமாக இருக்கும் வகையிலே அறிவிப்பு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை ஒரு கருத்து
தெரிவித்திருக்கிறது. மிக முக்கியமான பிரச்சனை என்று நான்
கருதுகிறேன். குறிப்பாக இந்த அரசாங்கம் மதுவிலக்கை ரத்து
செய்து, அதன் மூலமாக இன்றைக்கு பல கோடி ரூபாய் மாநிலத்
திற்கு வருமானம் வரவேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டது.
அரசாங்கத்திற்கு அந்த வருமானம் தற்போது மிகக் குறைவாக
வருகிறது என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை எழுதியிருக்
கிறது. அண்மையிலே சாராயக் கடைகள் ஏலம் விடப்பட்டன;
சென்னையிலே 140 கடைகளுக்கு மேலாக இருக்கின்றன. அவை
களுக்கு எல்லாம் அரசாங்கம் சாராயத்தை சரியாக சப்ளை செய்ய
வில்லை என்ற காரணத்தால், பல சாராய மன்னர்கள், சாராய
சாம்ராஜ்ய மன்னர்கள், செல்வத்திற்கு உடையவர்கள்,
செல்வத்தின் உடையார்கள், கட்ட வேண்டிய கிஸ்தியை
முறையாக லட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் கட்டாமல்
இருப்பதாகக் கேள்வி. எனவே, சென்னையிலே இருக்கக்கூடிய
சாராயக் கடைகள் எல்லாம் முறைப்படி அந்தக் கிஸ்தியைக்
கட்டியிருக்கின்றதா? வருமானம் குறைவாக இருக்கிறதா?
அப்படியானால் என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்
என்று சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுக்கான இறுதி
துணை நிதி மதிப்பீடுகளை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர்
நாவலர் அவர்கள் இந்த அவையிலே வைத்திருக்கிறார்கள். அதை
வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விழை
கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை துணை மதிப்பீடாக
இல்லாமல், மதிப்பீடாகவே, ஒரிஜினல் பட்ஜெட்போல பெரிதாக
உள்ளது என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலே பெரியதாகத்
தான் உள்ளது. காரணம் மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகள்
அவ்வப்போது மக்களுக்குத் தெரிவிக்கப்படும்போது, இயற்கையின்
சீற்றங்களினாலோ, அல்லது மக்களிடையில் எழுப்பப்படுகிற
பிரச்சினைகளிலோ அவைகளுக்குத் தீர்வு காணவேண்டும்
என்பதுதான் ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்
அரசினுடைய கடமை என்ற உணர்ச்சியோடு, அந்தக் கடமையை
ஆற்றுவதிலே தனக்கு நிகர் நான்தான் என்ற உணர்வோடு
செயலாற்றி வருகிற புரட்சித் தலைவருடைய அரசு, துணை





மானியக் கோரிக்கையைக்கூட சற்றுப் பெரியதாகத்தான்
வைக்கும். காரணம், மக்களுக்கு தொண்டாற்றுவது மட்டும்தான்
தன் பணி என்ற எண்ணத்திலேயே பணியாற்றுவதிலேயே நடந்து
வந்த அரசு, நடந்து கொண்டிருக்கிற அரசு, இந்த அரசு. ஆகவே
அது சற்று பெரியதாகத்தான் இருக்கும் என்று அவர்களுக்கு
உணர்த்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே
இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையை
வரவேற்று அல்லது மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்லி,
அருமை நண்பர் அவர்கள் பேசுவார் என்று எதிர்பார்த்தால்,
அவர் அமைச்சரவை விஸ்தரிப்பு பற்றியும், அதிகமாக அமைச்சர்
களைப் போட்டிருக்கிறார்கள் என்றும் பேசியிருக்கிறார்களே
தவிர, வேறு எதுவும் இல்லை.

பல்வேறு துறைகளுக்குக் கூட புதியதாக செயலாளர்கள் நிய
மிக்கப்பட்டு வருகிறார்கள். காரணம் பெருகிவரும் மக்கள்
தொகைக்கு ஏற்ப, சமுதாயத்தில் ஏற்பட்டு வருகின்ற பிரச்னை
களுக்கு ஏற்ப, மக்களுக்கு பணியாற்றுவதில் மக்களோடு
தொடர்பு கொள்கிற அமைச்சர்களை அதிகமாகப் போடும்
போதுதான் மக்களுக்கும் ஜனநாயக அரசுக்கும் நேரிடையான
தொடர்பு ஏற்பட்டு, அவர்களுக்குள் இடைவெளி குறையும்
என்ற உணர்வோடு தான் மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் இவ்வளவு பெரிய அமைச்சரவையை போட்
டிருக்கிறார்களே தவிர, அவர் சொல்வது போல் வேறு
எந்தவிதமான நோக்கத்திலும்—இங்கேயிருக்கிற பிரச்னைகளை
சமாளிப்பதற்கு என்றெல்லாம் இட்டுக்கட்டி பேசியிருப்பது
போல்—அல்ல. 'கூந்தல் அதிகம் உள்ள சீமாட்டி அள்ளி
முடிக்கிறாள், இல்லாதவள் ஆதங்கப்படுகிறாள்' என்பதைத் தவிர,
அவருக்கு வேறு என்னதான் நான் சொல்ல முடியும். (குறுக்கீடு)
அதேபோல இன்றைக்கு வழக்குமன்றத்திலே உள்ள சில
(குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். அதற்குப் பிறகு
நீங்கள் பதில் சொல்லலாம். இன்னொன்றையும் சொல்லப்
போகிறேன். அதற்கும் வேண்டுமானாலும் சேர்த்து நீங்கள் பதில்
சொல்லுங்கள். . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் ஈல்டு
ஆகவில்லை என்கிறார். . . . . . .

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** அவர் எழுந்திருந்து பதில் சொல்ல வேண்டிய நேரமும் இருக்கிறது. அப்பொழுது சொல்லட்டும்.

அதைப்போலவே அமைச்சராக நியமிக்கப்பட்ட எங்களுடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருந்தவரைப் பற்றி, வழக்கு மன்றத்தில் வழக்கு இருக்கும்போது அவர் எப்படி அமைச்சராக நியமிக்கப்படலாம் என்பதைப் போலவும், அதனால் வழக்கு விசாரணைகள் தடங்கல் படப்போவதாகவும், அதனாலே வரப்போகிற பிரச்னைகளை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள், என்றெல்லாம் சொல்லி ஒரு வழக்கறிஞருக்கே உரிய பாணியிலே அவர்கள் பேசினார்கள். அவர் பேசியதில் வாதத்திறமை வேண்டுமானால் இருந்திருக்கலாமே தவிர, அவர் இந்த சட்ட மன்றத்திற்கு உட்பட்ட கருத்துக்களையொட்டி பேசியிருக்கிறார்களா என்றால் இல்லை என்று தான் நான் சொல்லியாக வேண்டும்.

காரணம் 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்தபோது அவர்கள் ஒரு கட்சியோடு தேர்தல் கூட்டுறவு வைத்திருந்தார்கள். ஜனதா பேரியக்கத்தோடு அவர்கள் அணி சேர்த்திருந்தார்கள். இந்திய துணைக் கண்டத்திலே தேர்தல போட்டியிட்டார்கள். அப்போது ஒருவர் மீது வெடிகுண்டு வழக்கே இருந்தது. ரயிலையே கவிழ்த்தார் என்று ஒருவர் மீது வெடிகுண்டு வழக்கும், அந்த பாம்களையெல்லாம் வைத்திருந்தார் என்று இன்னொருவர் மீது வழக்கும் இருந்தது. (கூரவொலி) (குறுக்கீடு) சொல்லி முடித்து விடுகிறேன். அதன் பிறகு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

அதைப்போலவே (குறுக்கீடு) வழக்கைப் பற்றி நீங்கள் சொன்னீர்கள். இப்போது நானும் அவைகளைப் பற்றிச் சொல்கிறேன். நான் பேசி முடித்ததற்குப் பின்னால் வேண்டுமானால் விளக்கம் சொல்லுங்கள். நான் பதில் சொல்கிறேன்.

ஆனால் அந்த தேர்தலுக்குப் பின்னால், ரயிலைக் கவிழ்க்க சதி செய்தவர் ரயில்வே அமைச்சராகிறார். இன்னொருவர் கவர்னராகிறார். அவர்களுக்கு மாலை போட்டு வரவேற்பு தருகிறோம். அவர்களை ஆரத் தழுவுகிறோம், அப்போது அவர்களோடு இயக்க பூர்வமாக அடிபணிந்து போவதையும் தான்



கொண்டிருந்தவர்கள் ; இன்றைக்கு அப்போது வழக்காகக் ... இப்படிப் பேசுகிறார். என்ன காரணத்திற்காக என்றால் . . . (குறுக்கீடு) நான் யார் என்ற பெயரையே சொல்லிவிடுகிறேன். நீங்கள் பெயரைச் சொன்னது போல் நானும் சொல்லிவிடுகிறேன். திரு. பெர்னாண்டஸ் அவர்கள் வெடிகுண்டு வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தார்கள். அந்த வழக்கு, வழக்கு மன்றத்திலே தீர்ப்புச் சொல்லப்படுவதற்கு முன்னாலே அவர் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் மத்திய அரசாங்கத்திலுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றார். அவர்களை அப்போது வரவேற்று கல்லாரா செய்யவிட்டு இப்போது இப்படிப் பேசுகிறார் என்றால் அதற்குக் காரணம் அவருடைய தலைவர் ஏதோ வேதனையிலே புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வேதனையைப் புறக்கு வைத்தியம் செய்வதற்காக மருந்து தடவுகிறார் என்று மட்டும் நினைக்கிறேன் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரகுமான் கான் உட்கார வேண்டும். பேசுகின்ற உறுப்பினர் தவறான கருத்து ஒன்றையும் சொல்லவில்லை. அவர் பேசி முடித்தபிறகு வேண்டுமானால் நீங்கள் கேட்கலாம். (குறுக்கீடு) இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

(முற்பகல் 11-00)

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டருக்கு வருகிறதென்றால், சபையிலே உண்மைக்குப் புறம்பான தகவல்களை— பொட்டு ரியல் ஃபேக்ட்ஸ்களை சப்ரஸ் பண்ணி—சொல்கிறார்கள். திரு. ஃபெர்னாண்டஸ் வழக்கு வாபஸ் வாங்கப்பட்ட பிறகு தான் மந்திரியாக்கப்பட்டார் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாட்சி சொல்ல வரவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மீது போடப்பட்ட கிரிமினல் வழக்குகள் வாபஸ் வாங்குவதற்கு முயற்சி செய்யப்பட்டு, வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது. விசாரணைக்கும் வருவதில்லை. சாட்சிக்கும் வருவதில்லை. சம்மன் கொடுத்

தாலும் வருவதில்லை. கோர்ட்டை மதிப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வழக்கு மன்றத்தை மதிப்பதில்லை என்று ஒரு கட்சி முடிவு எடுத்த பிறகு என் விவாதம் இங்கே நடத்த வேண்டும்?

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் சம்பந்தமாக மாண்புமிகு திரு. ப.உ.ச. அவர்களும், நாவலர் அவர்களும் தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் இதில் சம்பந்தப்பட்டவர்கள், குற்றச்சாட்டுக்கு உட்பட்டவர்கள் அவர்கள் தான். நான் சொல்ல விரும்புவது திரு. பட்வாரி அவர்கள் கவர்னர் ஆக்கப்பட்டார்கள். . . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வழக்கு மன்றத்தையும், நீதி விசாரணையையும், சட்டங்களையும், திராவிட முன்னேற்றக் கழகம் மதிக்கின்றதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கி. மனோகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய நமது கல்வி அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம், நீதி மன்றத்தை மதிக்கின்றதா என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார். நான் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது கட்சி, நீதி மன்றத்தை மதிக்கின்ற கட்சி. தருகின்ற தீர்ப்புகளை ஏற்றுக் கொள்கின்ற கட்சி என்பதை அருள் கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ முறை அழைப்பு அனுப்பிய பிறகும், நீதி மன்றத்திற்குச் செல்லாத முதலமைச்சர் அவர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட கருத்துக்களைப் பேசக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அவர் மீது பல வழக்குகள் போடப் பட்டன. பல வழக்குகளை அவர்கள் சந்தித்து இருக்கிறார்கள். தீர்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். இப்போது நான் கேட்கின்ற கேள்வி, சமீபத்தில், பால் கமிஷன் சம்பந்தமான வழக்கில்





திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருக்கு சம்மன் தரப் பட்டது. அதை வாங்க அவர் மறுத்ததும், வர மறுத்ததும் ஒரு கோர்ட்டை அவமதிக்கின்ற வகையில் இருக்கிறதே என்று தான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. கி. மனோகரன்:** துணைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக, கலைஞர் அவர்கள் கட்டுரைகள் மூலமாகவும், பொதுக் கூட்டங்களின் மூலமாகவும், மேலவையிலும் தமது கருத் துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். (கூச்சல்—குழப்பம்) அங்கு இருக்கின்ற நீங்கள் எல்லாம் ஒரு காலத்தில் என்னோடு இருந்தவர்கள். தயவு செய்து பொறுமையாகக் கேளுங்கள் (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற நம்முடைய நாவுக்கரசர் நாஞ்சிலார் எங்களோடு இருந்தவரே தவிர அவரோடு நாங்கள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கி. மனோகரன்:** துணைத் தலைவர் அவர்களே, இடம் மாறிவிட்டோம் என்ற காரணத்திற்காக . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, 'இடம் மாறிவிட்டேன்' என்று சொன்னால் சரியாக இருக்கும். திருத்திக்கொள்ள வேண்டும்.

**திரு. கி. மனோகரன்:** துணைத் தலைவர் அவர்களே, சொல் வதற்கு முன்னாலே தம்பி குதிக்கிறார். சொல்வதை கேட்டுவிட்டு கருத்தைச் சொல்லக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனை முறைகள் சம்மன்கள் அனுப்பப்பட்டன. நீதி மன்றத்திற்கு வாருங்கள் என்று கலைஞர் அழைக்கப்பட்டார். அவர் மீது வழக்குகள் பல பதிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு தடவையும் சென்றார். பால் கமிஷனை பொறுத்தவரையில் பழி வாங்குகின்ற உணர்ச்சி யோடும், காழ்ப்புணர்ச்சியோடும், நீண்ட காலத்திற்கு பிறகு மீண்டும் கலைஞரை அதிலே இழுத்துவிட்ட காரணத்தினால்,

* * *

என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காகவும், அதற்கு உடந்தையாக ஒரு அரசு இங்கே இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதை ஊருக்குத் தெரிவிப்பதற்காகவும், அடையாளமாக

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சம்பளம் வாங்கவில்லையே தவிர வாங்கி பழக்கப்பட்டவர். எதையும் தாங்கி பழக்கப்பட்டவர். எல்லாம் இதையெல்லாம் உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. புதிதாக வந்திருக்கின்ற எனது அருமைமிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் கட்சி வரலாறுகளைக் கொஞ்சம் தெரிந்துகொள்ள நல்ல நண்பர்களைப் பற்றிப் புரிந்துகொள்ள நல்லது என்று நான் அவர்களுக்கு அறிவுரையாக சொல்ல விரும்பவில்லை, ஆனால் உரையாக அவர்களுக்கு இதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தயவுசெய்து நண்பர்கள், பொறுப்புமிக்க போட்டி கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு, ஒரு வகையில் உரிமை உள்ளவன் என்ற வகையில் நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே,

* * *

என்பதோ, அல்லது அரசியல் காழ்ப்புணர்ச்சியால் போடப்பட்டது என்பதோ, நீதிபதி அவர்கள் தான் சொல்ல வேண்டுமே தவிர திமுக. தலைவர் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. அதைப் பற்றி விவாதிப்பது அந்த வழக்கிற்கு நல்லதல்ல. - (குறுக்கீடுகள்).

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி நீதிமன்றத்திற்கு வரவில்லை என்று சொன்னது தவறு. ஒரு முறை நீதிமன்றத்திற்குப் போய்விட்டு வந்து, பின்னர்தான் வரவில்லை என்று சொல்லும் நிலைமை ஏற்பட்டது. அப்படி வரவில்லை என்று சொல்லுகிறபோது, நீதி மன்றத் தீர்ப்பிற்கு அவர் கட்டுப்பட்டவர் என்பதை அவர் மறுக்கவில்லை. அதிலே எதிர்த்து வழக்காட வழக்கறிஞர் ஒருவரை வைத்து, வாதாட விரும்பவில்லை என்ற முறையிலே கலந்து கொள்ளவில்லையென்பதை கலைஞர் தெரிவித்து இருக்கிறார். தனக்காக வாதாட அரசாங்கமோ நீதிபதியோ இன்னொரு வழக்கறிஞர் நியமிப்பதையும் அவர் ஏற்றுக்கொள்ள

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





வில்லை. இதிலே வழக்காட அவசியம் இல்லை என்பது உலகம் தெரிந்த உண்மை. அதை எடுத்துக்காட்டவே அவர் நீதி மன்றத் திற்கு வர மறுத்திருக்கிறார். அது நாடெல்லாம் அறிந்த உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வழக்கைப் பற்றிப் பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 1984—85 துணை மானியக் கோரிக்கையின் பக்கத்திற்கு அவையைக் கொண்டு வந்து சேர்ப்பீர்களேயானால், எனக்குப் பயன் உள்ளதாக இருக்கும். அந்தப் பிரச்சினையை அந்த அளவோடு விட்டு விட்டு, இந்த அவையிலே பொதுத் துறைகளுக்காக, செலவழிக்கப்பட்ட நிதியை நாம் கேட்கிறோம். அதற்கு உங்களுடைய அனுமதியைத் தாருங்கள் என்று அதற்காக கோரிக்கை வந்திருக்கிறது. கட்சி [illegible] கேட்கிறோம். அதற்காக [illegible] மாற்றங்கள் இருப்பதனால் தான், நாங்கள் இந்தப் பக்கமும், நீங்கள் அந்தப் பக்கமும் இருக்கிறீர்கள். ஒருவருக்கொருவர் கண்ணியம் பண்பையும், இந்த அவையின் தரம் பெற முடியாத காரியம், அதைப் பற்றி ஒருவருக்கொருவர் வாதப் பிரதிவாதங்கள் செய்வது இந்த அவையில் நன்மையாக இருக்காது. அதுவும் புதியதாக நியமிக்கத் தக்கது நன்மையில்லை. ஆகவே இந்தப் பிரச்சினைகளை விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்களையும் சேர்த்து நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை பற்றிய விவாதத்திற்குப் போவது நல்லது.

**திரு. கு. சுப்பராயன்:** ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது கிளாரிபிகேஷன் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் மீதான வழக்கை வாபஸ் பெற்ற பிறகுதான் அமைச்சரானார் என்ற அளவிற்கே திருத்திக் கொள்ளவேண்டும்.

**திரு. கி. மனோகரன்:** சபாநாயகர் அவர்களே, நான் பேசிய சில கருத்துக்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று தெரிவித்தீர்கள். அப்படி அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கருத்து பூராவையும் நீக்க வில்லை. பேசிய, * * சம்பந்தமான வார்த்தைகளை மட்டும் நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : மதிப்பிற்குரிய திரு. ரகுமான்கான் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் கேஸைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர் அமைச்சராவதற்கு முன்பே வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டு, பிறகுதான் அவர் அமைச்சரானார் என்று சொன்னார்.

(முற்பகல் 11-10)

**திரு. அ. ரகுமான்கான்** : தலைவர் அவர்களே, நான் சொல்லியதற்குப் பிறகு அவர்கள் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். திரு. பெர்னாண்டஸ் அவர்கள் அமைச்சராக்கப்பட்ட நேரத்திலே அவர்மீது வழக்கு இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, நான் அதைத் தான் சொன்னேன். திரு. பெர்னான்டஸ் அமைச்சராவதற்கு முன்பே வழக்கை வாபஸ் வாங்கித்தான் அமைச்சராகினார்கள் என்று சொன்னார்கள். அதிலே எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு உண்டு. எனக்கு நினைவு அமைச்சரான பிறகுதான் வாபஸ் வாங்கப்பட்டது என்று. என்னுடைய கருத்தைச் சொன்னேன். அதற்கு ஆதாரம் இருக்கிறது என்று சொன்னால் நான் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் தெளிவாகச் சொல்கிறேன். அமைச்சரான பிறகு கூட வழக்கை வாபஸ் வாங்குவதாக இல்லை. நீதிமன்றம் அளிக்கின்ற தீர்ப்பை ஏற்றுக்கொண்டு குற்றவாளி என்று சொன்னால் அமைச்சர் பதவியை நான் ராஜிநாமாச் செய்யத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சொன்னது போல் நானும் துணை மானியக் கோரிக்கைகளை ஒட்டித்தான்

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



பேசலாமென்றிருந்தேன். ஆனால் எனக்கு முன்னாலே பேசியவர்கள் அதைப் பேசியதாலேதான் நாவுக்கரசர் சொன்னதைப் போல் வாங்கியே பழக்கப்பட்டவர்கள் சம்மன் வாங்கியவர்கள் ஏன் இப்போது வாங்கவில்லை என்பதை எண்ணும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்தப் பிரச்சினை முடிந்தாகிவிட்டது. ஆகவே திருப்பி அதைப்பற்றிப் பேசவேண்டாம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்** : இந்த துணை மானியக் கோரிக்கைகளில் தமிழகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது மத்திய அரசு 18 கோடியே 76 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது, அதற்காகவும் இதிலே தொகை சேர்க்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு முறையும் வறட்சியாலும் வெள்ளத்காலும் நம்முடைய மாநிலம் பாதிக்கப்படுகிறபோதெல்லாம் நாம் மத்திய அரசிடம் நிதி கேட்பதும் 60 கோடி 70 கோடி ரூபாய் வேண்டுமென்று மாநிலம் கேட்பதும், அவர்கள் 10 கோடி 20 கோடி என்று கொடுப்பதும் வழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. இது போன்று வறட்சியால் பாதிக்கப்படுகிற போதெல்லாம் மத்திய அரசு தனியாக இதற்காக நிதி ஒதுக்கி மாநிலங்கள் இப்படி இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுகிறபோது உதவி செய்கிற அளவுக்கு பட்ஜெட்டிலேயே பிளானிங்கிலேயே 1 சதவிகிதம் அல்லது 2 சதவிகிதம் ஒதுக்கி வைக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே துயர்துடைப்புப் பணிகளிலே ஈடுபடும் போது, ஏழைகளுக்கு சேலை, வேட்டிகளை வழங்குகிற நிகழ்ச்சி இருக்கிறது. கோ ஆப்டெக்ஸ் மூலமாக 20 சதவிகிதம் அல்லது 30 சதவீதம் நாம் தள்ளுபடி செய்து விற்கிற முறையைக் கொண்டு வருகிறபோது அந்தத் தள்ளுபடியை, பயனை அதிகமாகப் பெறுகிறவர்கள் ஜவுளி வியாபாரிகள் தான். 2 ஆயிரம், 4 ஆயிரம் ரூபாய்க்கு பட்டு சேலைகளை வாங்குகிறவர்கள் 200 ரூபாய், 400 ரூபாய் தள்ளுபடி பலனைப் பெறுகிறார்கள், ஆனால் ஏழைகள் 100 ரூபாய், 200 ரூபாய்க்குத்தான் வாங்குகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறபோது அவர்களுக்கு 10, 20 ரூபாய்தான் சலுகை கிடைக்கிறது. ஆகவே புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்ததைப்போல் ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக

வேட்டி, சேலை வழங்குவதும் — ஆண்டிற்கு ஒரு முறை வழங்கி வரும் கைத்தறித் துறையின் மூலம் நெசவாளர்களுக்கும் வாழ்வு கிடைக்கும். அந்த நோக்கிலே நெய்கின்ற துணிகளை விற்பனை செய்வதும் ஏழையும், உழைக்கின்ற ஏழை விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்—அதை அமுல்படுத்தச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையில் அந்தத் தொகையையும் இந்த துணை மானியக் கோரிக்கையிலே சேர்த்திருக்கிறார்கள்.

இப்போது இதுபோன்றவர்களுக்காக அதிகமாகச் செலவு செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 15 ரூபாய் ஊக்கத் தொகையை வழங்குகிறோம். அதற்காகக் கொடுக்கப்படுகிற தொகைக்காகவும் இந்த துணை மானியக் கோரிக்கையிலே தொகை கோரப்பட்டிருக்கிறது. ஊக்கத் தொகை ரூபாய் 15 என்பது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது. இத்தனை ஆண்டுகளாய் விவசாயிகளைப்பற்றிப் பேசியவர்கள் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை இதுபோன்று கொடுக்கின்ற தாராளமனப்பான்மை இல்லாமல் இருந்தார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தாராள மனப்பான்மையோடு செய்திருக்கிறது.

நம்முடைய மாநிலத்தில் நெல்லை அதிகமாக பயிரிடுகிறார்கள். ஆக நெல்லுக்கு போடுகிற உரங்கள் யூரியா போன்ற இடுபொருட்களுக்கு தனிப்பட்ட முறையில் சலுகை அளிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் மாநில அரசு கேட்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே சிறுவிவசாயிகளுக்கு இலவச மின்சாரத்திட்டத்தின் அடிப்படையில் செலவிடப்படுகிற செலவுகளையும் இதில் சேர்த்து இருக்கிறார்கள். விவசாயிகள் தனியாக சங்கங்கள் வைத்து இருக்கிறார்கள். பல்வேறு அரசியல் கட்சிகள் தேர்தல் சமயத்தில் அவர்களை தன்னகத்தே இணைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். இன்னும் பல கட்சிகள் அந்த அந்த சமயத்தில் ஆளும்கட்சிக்கு எதிராக தூண்டுகோல் தூபம் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும் என்பதற்காகத்





தான் விவசாயிகள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு உயர் மட்டக் குழு விவசாய உயர்மட்டக்குழு என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அமைத்து இருக்கிறார்கள். அந்தக் குழு ஒரு யூனிட்டுக்கு பெரிய விவசாயிகளுக்கு 16 பைசா என்றும் சிறிய விவசாயிகளுக்கு 14 பைசா என்றும் விலையில் வழங்கலாம் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய தமிழகத்து முதலமைச்சர் நம்மைக் காக்கும் தெய்வமாகிய புரட்சித் தலைவர் அவர்கள் விவசாய நண்பர்களுக்கு என்ன செய்தார்கள் என்றால் 16 பைசா, 14 பைசா என்று போடவில்லை, 14 பைசா, 12 பைசா என்ற சலுகையை அறிவித்தார்கள். அதற்கு பின்னால் கூட நான் இந்த மன்றத்தில் சொன்னேன், எந்த கட்சியும் கேட்காதபோது, எந்த அரசியல் கட்சியும் சரி, விவசாயிகளும் சரி, சிறு விவசாயிகளும் சரி இலவச மின்சாரம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வைக்காதபோதே நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதை நடைமுறைக்கு கொண்டு வந்தார்கள். கோரிக்கை வைக்காமலேயே மக்களின் கோரிக்கைகளை தீர்ப்பது தான் இந்த தமிழகத்தின் வள்ளல் ஆக இருக்கக் கூடிய புரட்சித் தலைவர் அவர்களுடைய கொள்கை என்ற அளவில் இந்த நாட்டு மக்களுக்காக பணியாற்றுகின்ற அளவில் திடமாக இருக்கிறார்கள் அவர்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசும் போது, இங்கே அந்த சிறுவிவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ்களுக்கு சற்று கால தாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். கால தாமதம் மட்டும் அல்ல, சான்றிதழ் கேட்டு ஏழை சிறு விவசாயிகள் வருவாய்த் துறையை போய் கேட்கும் போது பல்வேறு இடர்பாடுகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், பல்வேறு குற்றச்சாட்டுகள் வந்த வண்ணம் இருக்கின்றன. தவறுகள் செய்கிறார்கள் என்று எனக்கு மனுக்கள் வந்து இருக்கின்றன. ஆக அதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காணும் வகையில் 12 பைசா, 14 பைசா என்று ஏற்கனவே ஏற்பட்டு இருக்கின்றபோது பெரிய விவசாயி

களுக்கு 11 மணி என்றும், சிறு விவசாயிகளுக்கு 12 மணி என்றும் கூறியிருக்கிறார்கள். அந்த 12 மணி என்று கூறிய அத்தனை பேர்களுக்கும் இன்று சிறு விவசாயிகள் என்று இதனை வழங்கவேண்டும். அவர்கள் அத்தனை பேரும் இலவச மின்சாரத்திற்கு உரிமையாளர்கள் என்று மாண்புமிகு நாவலர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவேதான் வீட்டு வசதித் திட்டத்திற்காக இங்கே 21½ கோடி ரூபாய் இந்த ஆண்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆதி திராவிடர்களும், ஏழை மக்களும் இங்கே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பயன் பெறும்போது அங்கேயும் இந்த வகைகளைப் பொறுத்தில் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்திக்கிறார்கள். அவைகள் முறைப்படுத்தப்பட்டு, இன்னும் அதிகமான தொகையை வழங்கி கிராமத்தில் இருக்கின்ற ஏழைகளுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி விரைவாக இதை செயல்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பத்திரிகைத் தாள் நிறுவனம் கரும்பு சக்கையிலிருந்து காகிதம் தயாரிப்பதற்காக புகளூரில் ஒரு ஆலை இருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தில் சிறந்தான வளர்ச்சிக்கு இது ஒரு எடுத்துக்காட்டாக. இதில் தமிழக அரசு இருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கு அது ஒரு அணிகலனான எடுத்துக்காட்டு என்பதை அவர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படி நிறுவப்பட்டு இருக்கிற அந்த காகிதத் தொழிற்சாலையில் பெரும்பாலான ஊழியர்கள் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மாற்றப்பட்டு தமிழகத்தைச் சேர்ந்த, தமிழ் நாட்டில் வசிக்கின்ற மக்களை ஊழியர்களாக அங்கே வேலையில் அமர்த்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போலவே வறட்சியால் இன்றைக்கு பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக சேலம் மாவட்டத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிறது. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு சேலம் மாவட்டத்திற்கு





மட்டும் ஒரு 1,500, 2,000 ஆழ் துளைக் கிணறுகளை வேகமாக அமைத்து கிராமங்களில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-20)

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவரவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதம் வெறும் காரசாரமான விவாதமாக மட்டும் மாறினால், இந்த மானியக் கோரிக்கைகளுக்குள்ளே அடங்கியிருக்கும்படியான விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட்டு, கோடிட்டுக் காட்டுகிற குறைபாடுகளைப்பற்றி எடுத்துச் சொல்லும்படியான வாதங்களுக்கு வழி வகுக்கும்படியான முறையில் பயன்தராது என்பது என்னுடைய கருத்து. ஆளுங்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசுகின்றபொழுது குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே அந்தக் கருத்தை வளர்த்துக்கொண்டு போனால் அது எங்கு போய்ச் சேரும் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பதற்காகவே பேசுகின்றார்கள்; பொழுதுபோக்கிற்காகப் பேசுகின்றார்கள் என்று அவர்களால் சொல்லப்பட்டது. உண்மையிலேயே இந்த வாதத்தை வளர்த்துக்கொண்டு போனால், எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த ஜனங்கள் எங்களைப் பொழுதுபோக்கிற்காகத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள் என்று சொல்லுகின்ற இடத்திற்குப் போகும், அது எவ்வளவு கேவலமானது என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த அவையிலே நாங்கள் பங்கெடுத்துக் கொண்டு பேசுகின்ற விஷயங்கள் ஆளுங்கட்சிக்குச் சம்மதம் இல்லாமல் இருக்கலாம் அல்லது பலத்த எதிர்ப்பு இருக்கலாம். விமர்சனமாக இருக்கலாம். ஆனால் பொழுது போக்குவதற்கான இடம் இல்லை இது என்பதை நான் திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட மனோநிலையை வைத்துக் கொள்ளக்கூடாது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஒரு சின்ன திருத்தத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு இராமலிங்கம் அவர்கள் இப்பொழுது இங்கு இல்லை.

[திரு. மா. சின்னராசு] [1985 மார்ச் 25

அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொழுதுபோக்குக்காகப் பேசுகிறார்கள் என்று சொல்லவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொல்வதையே தங்கள் பொழுது போக்காக வைத்துக் கொண்டு சொல்கிறார்கள் என்று, திரு. ரகுமான்கான் அவர்கள் ஐந்தாண்டுக் காலமாகச் செய்வதை சம்மரைஸ் செய்வதைப் போல, அவர்கள் தேவையில்லாமல் பேசியவற்றைத் தான் சுட்டிக்காட்டினார்களே தவிர, மற்றபடி எல்லா உறுப்பினர்களுமே அப்படிப் பேசுவதாகச் சுட்டிக் காட்டுவதாக அவர்கள் பேச்சு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களை நிதி இறுதித் துணை மதிப்பீடுகளின் மீது பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நீங்கள் என்னைக் குற்றவாளியாக்கப் பார்க்கிறீர்கள். அவர் உங்கள் அனுமதியின்பேரிலே பேசி முடித்துவிட்டார். ஆனால் நான் ஈல்டு செய்யவில்லை. இப்படிப்பட்ட நடைமுறைகள் சரியில்லை என்றுதான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் சொல்வது, ஒருவர் செய்த குற்றச்சாட்டு என்பதாக அல்ல, நான் சொன்னது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே பேசுவது பொழுதுபோக்கிற்காகப் பேசுகிறார்கள் என்று சொன்னால் அது இந்த அவையை இழிவுபடுத்திச் சொல்லுகின்ற கருத்தாக இல்லையா என்றுதான் கேட்க விரும்புகிறேன். அவ்வளவுதான் இந்த விஷயத்தைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்பதைப் புதியவர்களாக இருந்தாலும் அவர்கள் அதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். பொழுதுபோக்கிற்காக இந்த அவைக்கு வரவில்லை.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, . . .

**திரு. கு. ரமணி:** நான் ஈல்ட் செய்யவில்லை.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** அவர்கள் என்னைச் சொல்லி விட்டார்கள். ஆகவே . . . .



1985 மார்ச் 25]

**திரு. கு. ரமணி:** டாக்டர் இராமலிங்கம் சொன்னார் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, பொதுவாகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்):** ஏதோ விளக்கம் சொல்ல விரும்புகிறார், என்னவென்று கேட்கலாம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசியதைக் குறித்து ஒரு நாள்கூட நான் அப்படிக் குறிப்பிட்டது கிடையாது. அவர்கள் ஏதோ கட்சிக் கூட்டு வைத்திருப்பதால் எல்லோருக்கும் சேர்த்து இட்டுக் கட்டிக்கொண்டு ஆதரவாகப் பேசுவது நல்லது அல்ல. நான் சொன்னது, எனக்கு முன்னால் பேசிய வாதங்கள் வீணான வாதங்கள், தேவையற்ற வாதங்கள், துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதை விட்டுவிட்டு எங்கெங்கோ சென்று பேசினார் என்பதால் நானும் பேச வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன் என்றுதான் குறிப்பிட்டேன்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அவர்கள் இப்பொழுதும் என்ன செய்கிறார்கள்,

He is adding fuel to fire.

அதைத்தான் செய்கிறார்கள். நான் எந்தவொரு உறுப்பினரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இந்த அவையிலே நடக்கக்கூடிய நடவடிக்கைகளில் பயன்படுத்துகின்ற வார்த்தைகள் பொழுது போக்கா? இந்த அவையிலே அவர்கள் பேசுகிறார்கள் என்றால் நீங்கள் உட்பட இந்த அவை உறுப்பினர்கள் அத்தனை பேர் களுக்கும் அது பாதிப்பைச் செய்யாதா? அவை உறுப்பினர் களுக்கு அது பாதிப்பு செய்யும் என்பதுதான் என்னுடைய கருத்து. எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்களும், மற்றவர்களும் பதிலைச் சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பயன்? இப்படி எல்லாம் பேசலாம் என்று நீங்கள் முடிவுக்கு வந்தால் அப்படி சொல்லிவிட்டுப் போங்கள். அவ்வளவுதான் நான் அதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 25

மாண்புமிகு தமிழ்நாடு அவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் இயற்கைச் சீற்றங்கள் என்ற தலைப்பின் கீழ் பணத்தை ஒதுக்கி இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இயற்கைச் சீற்றங்களால் விவசாய மக்களும், சாதாரண மக்களும் ஏராளமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத சங்கடத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி எத்தனையோ பத்திரிகைகளில் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. குறிப்பாக கூட்டுறவுக் கடன்களைக் கட்ட வேண்டிய சாதாரண ஏழை, எளிய விவசாய மக்களால் அதைக் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அதனால் வட்டியும், அபராத வட்டியும் கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் அவர்களால் அதைக் கட்ட முடியாத அவல நிலையில் இன்றைக்கு அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றியமைத்து அவர்கள் அசலை மட்டும் கட்டினால் போதும், அவர்களுடைய கடனை அவர்கள் செலுத்தியதாகக் கருதப்படும் என்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏழை எளிய விவசாயிகளுக்கு இந்த விஷயத்தில் இப்படி ஒரு சலுகையை அரசு செய்வது மிகவும் நியாயமாக இருக்கும். இதுதான் அவர்களுடைய கோரிக்கை. அதை நிறைவேற்றவேண்டும்.

இதேபோன்று விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற வகையில் ஒரு குவிண்டால் நெல் கொடுத்தால் அதற்கு 15 ரூபாய் அதிகப்படியாகக் கொடுக்கப்படும் என்றும், அந்த விலை கொடுத்து அரசு அதை வாங்கும் என்றும் அந்த வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்றும் சொல்லப்பட்டுள்ளது. உண்மையிலேயே விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய ஒட்டுமொத்த செலவு போக அவர்களுடைய உழைப்பிற்கும் சேர்த்து கிடைக்கக் கூடிய வகையில் அவர்களின் வருமானம் இருக்கிறதா என்றால் அது மிக மிகக் குறைவான ஒன்றாகத்தான் இருக்கின்றது என்பது நாடறிந்த உண்மையாகும். அவர்கள் ஒரு குவிண்டால் ஒன்றுக்கு 200 ரூபாய் வேண்டும் என்று கேட்கிறார்கள். அகரி கல்சுரல் ப்ரைசஸ் கமிஷன் அப்படிப்பட்ட விலையைக் கொடுக்கத் தயாராக இல்லை. மாநில அரசு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற முறையில் 15 ரூபாயைக் கொடுப்பது என்பது



1985 மார்ச் 25] [திரு. கு. ரமணி]

போதாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தொகையை உயர்த்த வேண்டும். மேலும் இந்த உதவியைச் செய்கின்றபோது அது அவர்களுக்குப் பணமாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அப்படிப் பணமாகக் கொடுக்காமல் இன்றைக்கு விவசாயிகள் உரம் வாங்குகின்றபோது அதன் விலையிலே குறைத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் காரணத்தால் அவர்கள் முன்கூட்டியே தேவைப்படாத காலத்திலேயே உரத்தை வாங்கி வைத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே அந்த நிலைமையை மாற்றி அதைப் பணமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் செய்திருக்கும்படியான பல நல்ல காரியங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்பது தவணை கிராக்கிப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கிராக்கிப் படி எல்லாம் உடனடியாகக் கணக்கிட்டு அவர்களுக்குக் கொடுப்பது என்பது நியாயமானது. காரணம் வாங்குகின்ற சம்பளத்தை விட பொருட்களின் விலை அதிகரித்து அதன் காரணத்தால் அந்த விலையானது சம்பளத்தை அரித்துத் தின்னக் கூடிய ஒரு ஏரோஷன் என்ற நிலைமை ஏற்பட்டு விடுகின்றபோது அவர்களால் அந்தப் பொருட்களை வாங்க முடியாத நிலைமை ஏற்படுகின்றபோது அதனை ஈடு கட்டக்கூடிய வகையிலே கொடுக்கப்படுகின்ற தொகைதான் இந்த டி.ஏ. என்பது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆனால் இந்த டி.ஏ. கொடுக்கப்படுகின்றபோது இன்னொரு விஷயத்தையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பென்ஷன் வாங்கக் கூடிய ஊழியர்கள் மிகவும் வேதனைக்குள்ளாகி இருக்கிறார்கள். அவர்கள் ஏதோ கைவிடப்பட்ட பகுதி மக்கள் போலவே கருதப்படுகிறார்கள். அவர்களும் அரசாங்கத்திற்குச் சேவை செய்தவர்கள்தான். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பென்ஷன் தொகை என்பது மிகச் சிறிய தொகை. இப்படி விலையேற்றம் மிகவும் ஏறியிருக்கின்ற நிலையில் டி.ஏ. மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றபோது இவர்களுக்கும் அதிகப்படியான தொகையைக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 25

அடுத்து அரசாங்க ஊழியர்களுக்காக இன்றைக்கு சம்பளக் கமிஷன் நியமிக்கப்பட்டு அதனுடைய முடிவு வர இருக்கின்றது. அப்படி வருவதற்கு முன்பாகவே இடைக்கால நிவாரணம் என்ற வகையில் மாதம் 200 ரூபாய் பணம் கொடுத்திருக்கின்றது. இந்தப் பணத்தின் ஒரு பகுதி ஊதியக் குழுவின் முடிவு வந்ததற்குப் பிறகு அதன்படி அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய அதிகப்படியான தொகையில் இருந்து கழித்துக் கொள்ளப்படும் என்று அரசாங்கத்தின் சார்பிலே கூறப்பட்டுள்ளது.

(முற்பகல் 11.30)

உண்மையிலேயே இந்த இடைக்கால நிவாரணம் என்று கேட்பது, இன்றைக்கு இருக்கும்படியான ஊதிய விகிதப்படி கிடைக்கக் கூடிய வருமானத்தைக் கொண்டு அவர்கள் வாழ முடியாது என்பதற்காகத்தான் அதிக ஊதியத்தைக் கேட்கிறார்கள். அந்த அதிக ஊதியம் கேட்கின்ற நிலைமை வரும்போது அதிலே கழித்துக் கொள்வதற்கு என்று இல்லாமல், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிவாரணம் ஒரு இடைக்கால நிவாரணமாக இருக்க வேண்டும். ஒட்டுமொத்தத் தொகை ஒரு பெருந் தொகையாக இருக்குமானால், அப்பொழுது கழிப்பதா, என்ன என்பதைப்பற்றி ஆலோசித்துக்கொள்வது நலமாக இருக்குமே தவிர, ஒரு சிறு தொகை அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாகக் கொடுக்கப்பட்டு, அதில் ஒரு பாதி கழித்துக் கொள்ளப்படும் என்பது அவ்வளவு சிறந்ததாக இருக்காது என்ற ஒரு கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதை வைத்துத்தான் அரசாங்கம் ஒரு சரியான முடிவுக்கு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, இலவச மின்சாரம் சிறு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டதில் ஒரு பெரிய சலுகை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு ஏராளமான பணச் செலவு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. இலவச மின்சாரம் ஒரு சலுகையா என்று கேட்டால், சலுகைதான். 2½ ஏக்கர் நஞ்சையும் 5 ஏக்கர் புஞ்சையும் வைத்திருக்கும்படியான விவசாயிகளை சின்ன விவசாயிகள் என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. ஆனால், இன்றைக்கு இலவச மின்சாரம் என்பது



1985 மார்ச் 25] [திரு. கு. ரமணி]

எத்தனை ஆயிரம் பேர்களுக்குக் கிடைக்கிறது என்பதைப் பார்த்தால் மிகச் சிறிய எண்ணிக்கை உள்ள விவசாயிகளுக்குத்தான் அது கிடைக்கிறது. எல்லா விவசாயிகளுக்கும் அது கிடைக்க முடியாத நிலைமையிருக்கிறது. அதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. அவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில், வேறு சிறு வருமானம் இருந்தால்கூட சலுகை கிடைக்காத நிலைமையிருக்கிறது. அப்படிப்பட்ட கட்டுதிட்டங்கள் எல்லாம் அதற்குப் போட்டு, அந்தச் சலுகையை அவர்களுக்கு மறுப்பது சரியல்ல. 2½ ஏக்கர் நஞ்சையும், 5 ஏக்கர் புஞ்சையும் இருப்பவர்களுக்கு அந்த இலவச மின்சாரம் கிடைக்கவேண்டும்.

இன்னொரு கருத்து, இங்கே பேசும்போது ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். இது வேறு யாரும் கேட்காமலேயே கொடுக்கப்பட்ட ஒரு சலுகை என்று. அது உண்மைக்கு மாறான ஒரு கருத்து. திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுடைய விவசாயிகள் சங்கம்—இயக்கம்— அவர் இப்பொழுது உயிரோடு இல்லை;—ஆரம்பித்தது இந்தப் பிரச்சினையை முதன் முதலில் வைத்துதான். கட்டணம் இல்லாமல் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கொள்கையைப் பூராவுமே நாம் ஏற்றுக்கொள்கிறோமா என்பது அல்ல இப்பொழுது விவாதத்திற்குக் கொண்டு வருகிற விஷயம். அவர் அந்த விஷயத்தை அந்தக் காலத்தில் கிளப்பி, அதன் மீது இயக்கமே நடந்திருக்கிறது தமிழ் நாட்டிலே. ஆகவே, நடந்த இயக்கத்தினுடைய சரித்திரத்தை நாம் மறந்துவிட வேண்டாம். ஆனால், அந்த இயக்கத்தினுடைய பலனாகும் இந்த அரசு ஏழை எளிய விவசாயிகளுக்கு ஏற்கனவே மின்சார யூனிட்டுக்குக் கட்டணத்தைக் குறைத்துக் கொடுத்திருப்பது. அதற்கு, மேல்மட்டக் குழுவை உருவாக்கி, அந்தக் குழுவிலே எல்லாம் விவாதம் செய்து, இந்தச் சலுகையைக் கொடுப்பது என்ற முறையில் உருவாக்கப்பட்டது. இந்தக் கோரிக்கை கிளப்பப்பட்ட பிறகுதான் இந்தப் பிரச்னையும் வருகிறது. அது இல்லை என்று சொல்வது சரியல்ல; மின்சாரக் கட்டணமே இல்லாமல், விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து ஆரம்பம் முதலே சொல்லப்பட்டது; நானே என்னுடைய அனுபவத்தில் அதைப் பார்த்தேன். அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சலுகை தருவது சரியா என்றால் சரி

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது நினைவு சரியாக இருக்குமானால், மறைந்த திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் நடத்திய, நடத்துகின்ற அந்த விவசாயிகளின் சங்கத்தின் சார்பில், இலவச மின்சாரம் வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்ததாக எனக்கு நினைவில்லை. ஒரு 'ஃப்ளாட் ரேட்', ஒரு ஹார்ஸ் பவருக்கு இவ்வளவு வேண்டுமென்ற வகையிலே அது மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றுதான் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருவேளை, மாண்புமிகு ரமணி அவர்களிடத்திலே அதற்கு ஏதேனும் ஆதாரம் இருக்குமானால் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அவருடைய நினைவுபற்றி அவர்கள் பரிசீலனை செய்து பார்க்கட்டும். அப்பொழுது சங்கமே நிறைவேற்றியிருக்கிற தீர்மானங்கள், அவர்களே தமிழ்நாட்டு மக்கள் முன்னாலே வைத்த கோரிக்கைகளை உங்களுக்கு அனுப்பச் சொல்கிறேன், அப்பொழுது நீங்கள் பாருங்கள், என்ன என்று.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அவரைக் கோபத்திற்கு ஆளாக்க வேண்டுமென்பதற்காக நான் எழுப்பவில்லை. நான் ஏன் அதைச் சொன்னேன் என்றால், எனக்குத் தெரிந்தவரையில் அப்படி இல்லை. அவர் அப்படிப் பேசுகின்ற காரணத்தால், அவரிடத்தில் இருக்குமோ என்ற காரணத்தினால்தான் கேட்டேன். அவரிடத்திலு இல்லையென்றால் சரி.

**திரு. கு. ரமணி:** நம்முடைய மின்சாரத் துறை அமைச்ச அவர்கள் அதை பெரிய விஷயமாக ஆக்கிவிட வேண்டாம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அது என்னுடைய ஞாபகம் உங்களுக்கு ஆதாரம்தானே தேவை, அதை அவர்களை கொண்டே நான் தரச் சொல்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன்:** நம்முடைய மின்சாரத் துறை அமைச்ச அவர்கள் ஆதாரம் இருந்தால் கொடுங்கள் என்று சொன்னார்கள் நாயுடு அவர்களுடைய சங்கத்தின் சார்பில் போட்ட தீர்மானங்கள், கோரிய கோரிக்கைகள், அதேபோல் இந்திய கம்யூனிஸ்





கட்சியின் சார்பிலே மாநில மாநாட்டிலே போடப்பட்ட தீர்மானம் அவ்வளவும் ஆதாரத்தோடு இருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு தருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** ஆகவே அந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு தங்குதடையின்றி மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் புஞ்சை அல்லது 2½ ஏக்கர் நஞ்சை நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு மட்டும் இலவச மின்சாரம் என்பதை நாம் தீர்மானித்தது ஒரே ஒரு காரணத்தின் அடிப்படையிலேதான். நகரத்திலே நல்ல வியாபாரம் கூட செய்வார்கள். வணிக ரீதியிலே ஏராளமான பணத்தைச் சம்பாதிக்கக்கூடியவர்கள் கூட எங்கேயாவது ஊரிலே இரண்டு ஏக்கர் புஞ்சை நிலம் அல்லது 3 ஏக்கர் புஞ்சை நிலம் என்று வைத்திருப்பார்களேயானால் அவர்களும் கூட இந்தச் சலுகையை, இலவச மின்சாரம் என்ற சலுகையைப் பெற்று விடுவார்கள். ஆகவேதான் அதை ஒரு வரையறைக்கு உட்படுத்த வேண்டும் என்ற வகையிலேதான் 5 ஏக்கர் புஞ்சை அல்லது 2½ ஏக்கர் நஞ்சை என்று போட்டோம். சிறு சிறு தொழில்கள் அவர்கள் செய்து அதன் மூலம் வருமானம் வருகிறது, மிக சொற்ப வருமானம் வருகிறதென்றால் அவர்கள் நிச்சயமாகப் பாதிக்கப்பட மாட்டார்கள்.

**திரு. கு. ரமணி:** அமைச்சர் தெரிவித்த விளக்கத்தின் ஒரு பகுதிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மாட்டு வண்டி வைத்திருப்பவர்களுக்கு கூட இதைக் கொடுக்கக் கூடாது என்ற நிலை வரக்கூடாது. அவர்கள் கொடுத்த விளக்கத்திலிருந்து அப்படிப்பட்ட நிலை வராது என்று நினைக்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட கண்டிஷன், நிபந்தனை இதிலே இருக்கிறது. அதைச் சீர்திருத்தி அப்படிப்பட்ட நிபந்தனைகளை போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆயிரக்கணக்கில் சம்பாதிக்க கூடிய ஆப்செண்டி லேண்ட்லார்டாக இருக்கிற ஒருவருக்கு இப்படிப்பட்ட சலுகை போய்ச் சேரக் கூடாது என்பதிலே எங்களுக்கும் விருப்பம் இல்லை.

அடுத்து ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறீர்கள். இன்றைக்கு மத்யதரமாக இருக்கக்கூடிய விவசாயிகள், அவர்களில் ஒரு பகுதியினர் இன்றைக்கு இதிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை ஏற்கனவே ஆளுநர் உரையில் விவாதம் நடக்கிறபோது ஆளுங்கட்சியைச் சார்ந்த பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினார்கள். எதிர்க் கட்சியிலே நாங்களும் எடுத்துக் காட்டி இருக்கிறோம். அது என்னவென்றால் புஞ்சை பிரதேசத்தில் இருக்கக்கூடிய கிணறுகளில் இரண்டு, மூன்று மாதங்களுக்கு மேல் தண்ணீர் இருக்காது. ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று நிர்ணயித்துவிட்டால் அவர்கள் வருஷம் பூராவும் பணம் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். குறைந்தபட்ச கட்டணம், மினிமம் சார்ஜ் கட்டிவிட்டு உபயோகிக்கிற மின்சாரத்திற்கு கட்டணம் கட்டும் நிலை முன்பிருந்தது. ஆகவே இப்படி ஒரு சிக்கல் இதற்குள் உருவாகி இருக்கிறது. இதை ஒழுங்குபடுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். சாதாரண ஏழை விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்பவர்களுக்கு மேலே இருக்கக்கூடியவர்கள் இந்த ஹார்ஸ் பவருக்கு கட்டக்கூடியதில் அவர்களுக்கு சிக்கல் வராமல் ஒழுங்குபடுத்த வேண்டுமென்பதுதான் அவர்களுடைய கோரிக்கை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து சுகாதாரம், ஆஸ்பத்திரி சம்பந்தமான விஷயங்களில் அதிகமான பணம் போடப்பட்டிருக்கிறது. இது இந்த அவைக்கும் நன்றாகத் தெரியும். ஒரு முக்கியமான விஷயம். கோவையில் இருக்கிற மருத்துவக் கல்லூரியில் அதனுடைய மருத்துவமனை அங்கீகாரம் ரத்தாகி விடுமென்ற பிரச்னை கிளம்பியது. ஆனால் அன்றைக்கு அப்படி ரத்தாகாது என்று நமக்கு உத்தரவாதங்கள் மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டது. உண்மை என்னவென்றால், இந்தியன் மெடிக்கல் கவுன்சிலின் ஆய்வுக்குழுவின் முடிவின்படி இந்த அரசாங்கம் உடனடியாக குறிப்பிட்ட நிதியை ஒதுக்கி அந்த ஆஸ்பத்திரியின் ஸ்டாண்டர்டை, தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அந்த மருத்துவமனையின் தரத்தை சரிவர வைக்காததன் காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. அதனால் பல நூற்றுக்கணக்கான பட்டம் பெறவேண்டிய மாணவர்களுக்கு இது பெரிய தலை



இடியாக அமைந்தது. ஆகவேதான் கிளர்ச்சி ஏற்பட்டது. மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்கிற அளவிற்கு நிலைமை போயிற்று. இதனுடைய தெளிவான பொசிஷன் என்னவென்பதைத் தெளிவுபடுத்தினால் நல்லது. அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் அங்கீகாரம் ரத்தாகாது ; அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. அதற்குச் செலவழிக்க வேண்டுமென ஆய்வுக்குழு சொல்லியிருப்பதைவிட அதிகமாக நாம் செலவழித்து இருக்கிறோம் என்ற வகையில் தெரிவித்தால் அது வரவேற்கத்தக்கதாகும்.

(மும்பகல் 11-40)

இப்படிப்பட்ட உத்தரவாதத்தை சர்க்கார் தரவேண்டும். என்ன உத்தரவாதம் என்று சர்க்கார் தரப்பிலே இங்கே தெரிவித்தால் மட்டும் போதாது: அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் உத்தரவாதம் தந்து, அவர்களுடைய பயத்தைப் போக்க வேண்டும்.

அதேமாதிரி, இன்றைக்கு சில ஆஸ்பத்திரிகளில் பல கொடுமையான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தபோது நான் அரசின் சார்பிலே இந்த உத்தரவாதத்தைத் தந்திருக்கிறேன். அது மட்டுமல்ல. மாணவர்களும் என்னை இது சம்பந்தமாக வந்து சந்தித்தார்கள். அவர்களிடமும் உத்தரவாதம் தந்திருக்கிறேன். படிப்படியாக அந்த மருத்துவக் கல்லூரிக்கு எவ்வளவு செலவழிக்க வேண்டுமோ அவ்வளவு செலவு செய்துவருகிறோம். மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னமாதிரி இன்னும் கூடுதல் செலவழிக்க வேண்டுமென்றால் அதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் கருத்துவேறுபாடு வந்தது. அதையும் சீர்செய்ய தயாராக இருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, பயிற்சி பெற்ற நிர்வாகத்தில் அனுபவம் பெற்ற ஒரு போஸ்ட் கிராஜுவேட் இருக்க வேண்டுமா? ஒட்டுமொத்தமாக நாம் மெடிக்கல் கவுன்சிலுக்கு யோசனை சொல்வதாக இருந்தால் அட்மினிஸ்ட்ரேஷன் அனுபவம் இருக்கக்கூடியவர் தேவை.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1985 மார்ச் 25

ஏனென்றால் முன்பு இருந்த நிலை, இப்போது டீன் இருக்கிறார் என்றால் பிரின்ஸிப்பால் பிளஸ் ஆஸ்பிட்டல் சூப்பரின்டென்டென்ட் இந்த இரண்டு பொறுப்பையும் சேர்ந்தவர். ஆகவே, அதில் எந்த தகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று பிரச்சனை வருகிற நேரத்தில், என்னிடம் மருத்துவத்துறை இருக்கிற காரணத்தினால் சொல்கிறேன், அதிலே நல்ல விரிவான நிர்வாக அனுபவம் இருக்கிறவர் இருந்தால்தான் நன்றாக இருக்கும் என்று அதிலே எம்.சி.ஐ. வந்து இல்லை, இல்லை; கல்லூரி அனுபவம் இருக்கக்கூடியவர்தான் தேவை என்று நமக்குச் சொல்கிறார்கள் என்றால் அதையும் நாம் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். ஆகையால் மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறமாதிரி 'டீ ரெகக்னிஷன்' என்ற பிரச்சனை நிச்சயமாக எழவில்லை. அந்த நிலை வராது என்ற உத்தரவாதத்தை அளிக்க விரும்புகிறேன். எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகையினால் மாணவர்களுக்கும் எந்தவிதமான கவலையும் இருக்க வேண்டிய தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. நான் சொல்வதற்கு முன்னால் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அந்த மருத்துவமனையில் டீனாக இருக்கிறவர் 'ஃபுல் டீச்சிங் குவாலிஃபிகேஷன்' இல்லாதவர் என்று சொல்கிறார்கள். மாற்ற வேண்டும் என்றால் மாற்றத் தயார் என்று சொன்னார்கள். அது நல்லது, வரவேற்கிறேன். இராஜாஜி மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனை போன்ற மருத்துவக் கல்லூரியோடு இணைந்திருக்கிற மருத்துவமனைகளில் அண்டர் செக்ரட்டரி கேடரில் அட்மினிஸ்ட்ரேட்டிங் ஆபீசர் நியமிக்கப்பட்டு, அவர் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார். அதேமாதிரி அங்கேயும் செய்தால் நல்லது. அப்படி நியமிக்கப்பட்டு, எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம், அதற்கு உரிய நடவடிக்கை தேவை. நானும் ஏற்கெனவே இது பற்றி கடிதம் எழுதியிருக்கிறேன். அமைச்சர் தெரிவித்த விளக்கத்தை வரவேற்கிறேன்.



1985 மார்ச் 25] [திரு. கு. ரமணி]

சில ஆஸ்பத்திரிகளில் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. உதாரணமாக உடுமலைப்பேட்டை ஆஸ்பத்திரியில் பல தவறான நடவடிக்கை இருக்கிறது. ஜனங்கள் மத்தியில் அதற்கு கவலையும் பெருத்த எதிர்ப்பும் உருவாகியிருக்கிறது. அதிலே அரசாங்கம் தலையிட்டு, குறைகளைக் களைய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற தவறான நடைமுறைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு விசாரணை நடத்தி, மக்களிடமிருந்து கிடைக்கின்ற சாட்சியங்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, தவறான நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஒன்றிரண்டு இடங்களில் இப்படிப்பட்ட தவறுகளை நிறுத்திக்காட்டினால் நிச்சயமாக மற்ற இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் தடுக்க முடியும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக போலீஸ் துறைக்குப் புதிய கருவிகள் வாங்குவதற்காக ஏராளமான பணத்தை துணை மானியக் கோரிக்கையில் கேட்டிருக்கிறார்கள். போலீஸ் துறைக்கு நிறைய நவீன கருவிகள் தேவைப்படுகின்றன. ஆனால் இருக்கிற பிரச்சனை என்னவென்றால், ஜனங்கள் மத்தியில் போலீசாரின் நடவடிக்கை, பெருத்த அதிருப்தியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. ஜனங்கள் உரிமையில் தலையிடுவது, தொழிலாளர்களுடைய போராட்டங்களில் தலையிடுவது, வேலை நிறுத்தப் போராட்டம் போன்றவற்றை உடைப்பதற்கு நிர்வாகத்திற்குத் துணையாக இருப்பது போன்ற நடவடிக்கைகளில் இன்றைக்கு போலீசார் ஈடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை மேலும் மேலும் வளர்ந்துகொண்டிருக்கிறது.

இன்னொரு பிரச்சனை என்னவென்றால் இன்றைக்கு திருட்டும் கொள்ளையும் அதிகமாக நடைபெறுகின்றன. கோவை நகரில் எப்போதும் இல்லாத அளவுக்கு பல திருட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. இங்கே இதற்கு முன்னாலே கூட ஒரு திருட்டைப்பற்றிச் சொன்னேன். ஒரு சத்துணவு சென்டரில் பத்து பேர் சேர்ந்து தூக்க வேண்டிய அளவுக்கு உள்ள ஒரு

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 25

சமையல் பாத்திரம் இருந்தது. அந்த சமையல் பாத்திரத்தை எப்படியோ திருடிக்கொண்டு போயிருக்கிறார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட பெரிய சாதனங்கள் எல்லாம் கூட திருட்டுப் போனாலும் அது கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிறது.

அதேமாதிரியாக ஜனங்களுடைய கோரிக்கையைப் பெற்று இருக்கிறோம், அவர்களுடைய விண்ணப்பங்களைப் பெற்று இருக்கிறோம். அதுவும் போ ஸ் தலையிடு வேண்டும் என்ற கேட்கக்கூடிய வேண்டுகோள்களைப் பெற்றிருக்கிறோம் என்று பொதுமக்களுக்கு இதற்கு முன்பு எல்லாம் அத்தாட்சி உத்தரவாதம் கொடுப்பார்கள். அவைகள் எல்லாம் இப்போது மறைய அரம்பித்து இருக்கின்றன. அதற்கு மாறாக கடுமையாகத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. சாதாரணமாக சிறு வியாபாரம் செய்யக்கூடிய வியாபாரிகள் இதனால் ரொம்பவும் பாதிக்கப்பட்டபோது, கோவை நகரத்தில் கலெக்டர் ஆபிசிற்கு முன்னாலே கூட உண்ணாவிரதம் இருந்து வியாபாரிகள் போராடினார்கள். அத்தகைய நிலைமை ஏற்பட்டது.

அண்மையிலே ஒரு வார காலத்திற்குள்ளே, ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ் கம்பெனியில் போன வருடம் கொடுக்க வேண்டிய போனஸ் இன்றைக்கு வரையிலும் கொடுக்கவில்லை. பிடிவாதமாக இழுத்தடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தும்போது கம்பெனியிலே இருக்கக் கூடிய சரக்குகளை லாரிகளிலே ஏற்றி, வெளியிலே கொண்டு போகிறார்கள். இது உண்மையிலே இந்தப் போராட்டத்தை உடைக்கிற ஏற்பாடு அல்லவா ? இது தொழிலாளர்களுடைய உரிமைகளுக்கு ஒத்ததா? நீதிமன்றங்களுக்குப் போனாலும், அவர்களிடம் தடை உத்தரவு வாங்குகிறார்கள், தொழிலாளர்கள் தலையிடு கூடாது என்று, தொழிற்சங்கத்தினர் சார்பில் தடை உத்தரவு வாங்கி இந்தப் பொருள்களை வெளியேற்றக்கூடாது இந்த வேலைநிறுத்தப் போராட்டம். அதாவது 2 பேர்களுக்கும் மத்தியிலே டிரேட் டிஸ்பியூட் இருக்கின்றபோது ஒரு-தலை பட்சமாகப் பொருள்களை வெளியேற்றிச் செல்லக்கூடாது. அது வேலை நிறுத்தப் போராட்டத்தையும், தொழிற்சங்க இயக்கத்தையும் உடைப்பது, அவர்கள் தங்களுடைய காரியத்தை பாதுகாக்கிற ஏற்பாடு என்று நீதிமன்றங்களே அப்படி கொண்டு போகக்கூடாது என்று தடை உத்தரவு கொடுத்து இருக்



1985 மார்ச் 25] [திரு. கு. ரமணி]

கிறது. அந்த இடத்திலே நடந்த போராட்டத்திலே இப்போது லாரிகளிலே சாதனங்கள் முழுவதும் ஏற்றிக்கொண்டு வெளியிலே கொண்டு போகும்போது, நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கொண்டு போகக் கூடாது என்று சொன்னவர்களை, பக்கத்திலே இருக்கிற போலீஸ் ஸ்டேசனிலே இருக்கிற உத்தியோகஸ்தர்கள், அந்த இன்ஸ்பெக்டர் வந்து, 40, 50 பேர்களைக் கைது செய்து வேனிலே ஏற்றிக்கொண்டு போய்விட்டார்கள். அப்படியானால் அர்த்தம் என்ன? முதலாளிகள் செய்யக்கூடிய இப்படிப்பட்ட ஸ்ட்டைக் உடைப்பக்கு, நேரடியாக உதவி செய்வதா] போலிஸ் தொழிலாளர்கள் முழுவதும் போய்விட்டால், அவர்கள் படுத்து மறியல் செய்வது அவர்களுக்கு உள்ள உரிமை அது அவர்களுக்கு இருக்கும்படியான பாதுகாப்பு.

To protect their own struggle

அந்த உரிமையை மறுக்க முடியாது. உரிமையைக் கூட்ட அவர்கள் கையாளுவதற்கு வழியில்லாமல் அவர்களைக் கொண்டு வந்து கைலாசம் அனுப்புகிற மாதிரி பிடித்து போலீஸ் ஸ்டேசனில் விட்டால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இப்படிப்பட்ட நடவடிக்கை அதிகமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. போலீசினுடைய தலையீடு ஜனங்கள் பக்கத்தில் இருப்பதற்கு பதிலாக, அவர்களுடைய தலையீடு பொது மக்களுடைய நல உரிமைகளுக்கு எதிராக, வெஸ்டட் இன்ட்ரஸ்ட் என்ற முறையிலே முதலாளிகள் போன்றவர்கள், அல்லது வேலை நிறுத்தம் நடக்கக்கூடிய அந்த தொழிற்சாலை நிருவாகங்களுக்கு இப்படிப் பட்டவர்களுக்கு ஆதாரவாகப் போய்க் கொண்டு இருக்கிறது. (குறுக்கீடு) விரிவாக நான் போகவில்லை. எனவே போலீசி னுடைய நடவடிக்கைகளிலே திடமான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரியான நடவடிக்கைகள் நீண்டு கொண்டே போனால் அது ஜனங் களுடைய மத்தியில் கட்டாயமாக அதிர்ப்தியை ஏற்படுத்தும். மேலும் மேலும் வளர்க்கும். என்னதான் பெரிய வெற்றியைப் பெற்று இருந்தாலும், ஜனங்கள் தங்களுடைய சொந்த அனுபவத்தி லிருந்து மறுபடியும் முடிவுக்கு வருவார்கள். அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்த வேண்டாம். எனவே போலீசை ஒரு கட்டுக்குள்ளே கொண்டு வந்து ஜனங்களுடைய தேவைகளுக்கு

பாதுகாப்பாளராக அவர்கள் செயல்பட வேண்டும் என்ற அந்த முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு நான் என்னுடைய விவாதத்தை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. ந. சிவஞானம்:** மாற்றுத் தலைவர் அவர்களே. துணை மானியக் கோரிக்கை மீது சில விளக்கங்களைக் கூற நான் விரும்புகிறேன். குறிப்பாக மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இங்கே பற்றாக்குறை இருந்தாலும், நம்முடைய தேவை 2,800 மெகா வாட்டாக இருந்தாலும், சில பத்திரிகை வாயிலாக நாம் செய்திகளைப் பார்க்கிறபோது, சாதாரணமாக 1,600 மெகாவாட் தான் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். சில தகவல்படி, நமக்கு அனல் மின்சாரம், புனல் மின்சாரம் என்று இருந்தாலும், புனல் மின்சாரத்தினுடைய முழுப் பலனையும் நாம் அடைந்துவிட்ட காரணத்தால், அனல் மின்சாரத்தினுடைய உற்பத்தி மிகக் குறைவாக இருக்கிறது. குறிப்பாக தூத்துக்குடியில் 210 மெகா வாட், நெய்வேலியில் 390 மெகாவாட், எண்ணூரில் 280 மெகாவாட் என்று இப்படி அனல் மின்சாரத்தினுடைய உற்பத்தி குறைவாக இருப்பது மட்டுமல்ல, இந்த உற்பத்தியானது தொழிலை பாதிக்கக் கூடிய உற்பத்தி. அதிலேயும், இந்த நேரத்திலே, நம்முடைய கோடை காலம் என்றாலே, மின்சாரத் தட்டுப்பாடு, இந்தியாவில் எல்லா இடத்திலேயும் இருந்தாலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், அதைக் குறைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வதற்காகத்தான் நம்முடைய இந்த மன்றத்திலே நம்முடைய மின்துறை தேசியமயமாக்கப்பட வேண்டும், நம் முடைய இந்தியாவில் மின்சாரம் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை இந்த மன்றத்திலே வலியுறுத்த வேண்டும். அதற்கான தீர்மானத்தை அரசு கொண்டு வந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் மிக நன்றாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





(முற்பகல் 11-50)

சிறு விவசாயிகளுக்கு மின்சார விநியோகத்திலே பல்வேறு சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு குதிரைத் திறன் அளவுக்கு மின்சார உபயோகத்திற்கு 75 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வசூலிக்கப்படுகிறது. அதை எல்லா இடங்களிலும் சரியாக நடைமுறைப்படுத்த முடியாது. காவேரி டெல்டா பகுதியிலும், திருச்சி, தஞ்சை பகுதிகளிலேயும் ஒரு வருடத்திற்கு 4 மாதத்திற்குத்தான் மின்சாரம் எடுத்துக் கொள்வார்கள்.

ஆனால் இந்த 4 மாதத்திற்கு மட்டும் மின்சாரத்தை எடுத்துக் கொள்வதன் காரணத்தாலே ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் விதம் செலுத்த வேண்டும் என்று அவர்களையும் கட்டுப்படுத்துவது சரியாகாது. ஆகவே, இந்த 2, 3 காவேரி டெல்டா பகுதிகளுக்கு விலக்கு கொடுத்து அவர்களுக்குள்ள அந்தக் குறையை நிவர்த்திச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இயற்கைச் சீற்றங்களால் எவ்வளவோ பெரிய இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட இடர்ப்பாடுகளுக்காக நிவாரணம் அளிக்க இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக தமிழகத்திலும், ஆந்திராவிலும் சமீபத்திலே ஏற்பட்ட இயற்கை சீற்றத்தால் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து துயர் துடைப்புப் பணிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இத்தகைய இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் காண தமிழகத்திற்கும் ஆந்திராவிற்கும் நேரிடையாக வந்ததோடு மட்டுமல்லாமல், அந்தத் துயர் துடைப்பு பணிகளுக்காக மைய அரசிலிருந்து 5 கோடி ரூபாயைக் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள்.

அதைப்போல வேளாண்மை திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே ஒரு குவிண்டாலுக்கு 15 ரூபாய் அளவிற்கு மானியம் அளித்திருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த மானியமானது போதாது. எனக்கு முன்னாலே பேசிய சில உறுப்பினர்கள்

சொன்னார்கள். தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் ஏராளமாக லாபம் பெருகிறார்கள் என்று. ஆனால் விவசாயத்தையே நம்பியிருக்கிற மக்கள் கடனிலே அவதிப்படுகிறார்கள். ஏனென்றால் விவசாயத்திற்காக அவர்கள் செலவழிக்கிற உற்பத்திச் செலவையும், இடு பொருள்களுக்கான செலவுகளையும் கூட்டி, விவசாயம் செய்த பொருள்களை வெளியிலே விற்பனை செய்வதற்கும் உண்டான வித்தியாசத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது விவசாயி கடனாளியாகத்தான் இருக்கிறான். இதைப் பற்றி நன்கு சிந்தித்துத்தான் சமீபத்திலே புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் பாரதப் பிரதமர் அவர்கள், ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள், விலை நிர்ணயக் கமிஷன் திருத்தி அமைக்கப்படும் என்று. அதில் உற்பத்திச் செலவை வைத்துக் கொண்டும், இடு பொருள் செலவை வைத்துக் கொண்டும் விலை நிர்ணயக் கமிஷனை திருத்தி அமைத்து நம் விவசாயிகளுக்கு ஆக்கப் பூர்வமான விலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்ற அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். விரைவாக அது அமலுக்கு வந்து விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும் கூட, சமீப காலத்தில் அவர்கள் மிகவும் கடனாளியாக இருப்பதைக் கருத்தில் கொண்டு இந்த 15 ரூபாய் மானியத்தை வருங்காலத்தில் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கை என்பது அதிக செலவிற்கான கோரிக்கை என்றாலும், இதிலே ஒன்றும் தனியாக சலுகைகளைக் காட்ட முடியாது என்றாலும், 1985-86 ஆம் ஆண்டிலே ஒரு குவிண்டாலுக்கு 25 ரூபாயாவது கொடுப்பதற்கான வழிவகைகளை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கூட்டுறவு நில வள வங்கிகளிலே விவசாயக் கடனுக்காக கட்ட வேண்டிய அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து, அவர்கள் 31—3—1985-க்குள் அசலைக் கட்டியிருந்தால், வட்டியைத் தள்ளுபடி செய்யலாம் என்ற அளவிற்கு ஒரு திட்டத்தை அறிவித்திருப்பதற்காகவும், அது நல்ல முறையிலே வந்திருப்பதற்காகவும் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பெரிய விவசாயியாக இருந்தாலும், சிறிய விவசாயியாக இருந்தாலும் குறிப்பாக தஞ்சை, திருச்சி மாவட்டத்திலேயே விவசாயிகளிடையே கடன் பளு அதிகமாக இருக்கிறது.



சாதாரணமாக 3 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தால் ஏறக்குறைய 15 ரூபாய் அளவிலே அபராத வட்டியோடு சேர்த்து வந்துவிடுகிறது. ஆகவே, இந்த அபராத வட்டி என்ற செயலை தொடர்ந்து நாம் அமலுக்குக் கொண்டு வந்தால், ஏற்கனவே மிக அதிகமான கடனிலே வாழ்கின்ற அந்த விவசாயிக்கு அது பெரும் சுமையாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட கடன் வசூலிலே வருகின்ற காலத்திலே தஞ்சை மாவட்டத்திலே சற்று கெடுபிடியைக் குறைத்து வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். தற்போது தஞ்சை மாவட்டத்திலே கடன் வசூலைத் துரிதப்படுத்தியிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்த்து, விவசாயிகளுக்கு இருக்கிற கடனிலே, போட்டிருக்கிற வட்டியையாவது, அல்லது அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்தால் நிச்சயமாக அது அவர்களுக்கு ஒரு நிவர்த்திப் பணியாக இருக்கும். அதைச் செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இது மிக மிக அவசியம்.

அதிலும் குறிப்பாக விவசாயிகள் நாளுக்கு நாள் கடன்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை தொடர்ந்து நீடிக்காமல், அவர்களுக்கு அபராத வட்டியையாவது அல்லது வட்டியாக இருந்தாலும் அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து தஞ்சை மாவட்டத்திலே கீழ்ப் பகுதியிலே, கீழ் தஞ்சை மாவட்டத்திலே கிட்டத்தட்ட 5 ஆயிரம் எண்ணிக்கையில் பல போரிங் குழாய்கள் போடப்பட்டுள்ளன. அதுபோல மேல் தஞ்சையில் மீடியம் குழாய் போர்கள் போட்டிருக்கிறார்கள். அந்த குழாய்களின் மூலம் விவசாயிக்கு அதிகம் செலவாகும் என்று கணக்கிட்டு நில வள வங்கி மூலமாக எல்லா விவசாயிகளுக்கும் சலுகை கிடைக்கின்ற வாய்ப்பை அளித்து, இந்த மாமன்றத்திலே நமது அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் அது நடைமுறையில் செயல்படவில்லை. கேட்டால் சாதாரணமாக ரிசர்வ் வங்கியிடமிருந்து வர வேண்டிய கடன் வரவில்லை. வந்தால் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இது போன்ற நல்ல திட்டங்களைத் தீட்டி, நிலத்தடியிலிருக்கிற நீரை வெளியே கொண்டு வந்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல்வேறு காரியங்களை அனுகூலமாகச் செய்வதற்கு இந்த அரசு நிச்சயமாகப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ந. சிவஞானம்] [1985 மார்ச் 25

இப்பொழுதெல்லாம் கோடை காலம். கோடைக் காலத்திலே வறண்ட பகுதியிலே குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். நம்முடைய அரசு பல இடங்களில் பாதுகாக்கப் பட்ட குடிநீர்த் தொட்டியை கட்டியிருந்தாலும் அவைகள் பல இடங்களில் செயல்படவில்லை. ஆகவே இதற்கு முன் உரிமை கொடுத்துத் தமிழகத்திலே இருக்கிற வறட்சிப் பகுதி மக்களுக்கு குடிநீர் மிக மிக அவசியம் என்பதை உணர்ந்து மிக முக்கியமான முன் உரிமை கொடுத்து, இதற்கென்று பிரத்தியேகமாக எல்லா அதிகாரிகளுக்கும் அரசு ஆணை பிறப்பித்து குறிப்பாக குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியமாக இருக்கிற குடிநீரை மிகவும் நல்ல முறையில் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும். பழுதுபட்ட ஓவர் டேங்காக இருந்தாலும் கைப் பம்பாக இருந்தாலும் அவைகள் செயல்பட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு குறிப்பாக இன்னொன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆதி திராவிட மக்களுக்கு வசதி வாய்ப்புகள் கொடுக்கப்படுவதை நான் பாராட்டுகிறேன். அதிலே ஒரு திட்டம் ரூ. 6,000 மதிப்பிலே ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். வீட்டை பார்த்தால் 2, 3 ஆண்டுகளுக்குத் தான் அது நிற்கும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். இந்தத் திட்டத்திலே ஒரு சிறு மாற்றம் செய்து, வீட்டின் மேலே போடு கின்ற அந்தக் கூரையை ஆர்.சி.சி. ரூஃபாக மாற்றி சிக்கன முறையில் செய்தால் நன்றாக இருக்கும். எந்தத் திட்டமாக இருந்தாலும், அது மிக நல்ல முறையிலே, ஏழை எளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்பாசனத் திட்டத்தை பொறுத்தவரையில், தஞ்சை மாவட்டத்தில் பல வெள்ளங்கள் ஏற்பட்டன. குறிப்பாக வெண்ணாற்றிலே, கடந்த காலத்தில் இரண்டு அணைகள் கட்டாததினால் வெள்ளங்கள் ஏற்பட்டதால், அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டார்கள். (1) வெள்ளம்வாரி பகுதியிலே முதலை முத்துவாரி திட்டம். (2) பூதலூர் அருகே சோலம்பட்டிவாரித் திட்டம். இந்த இரண்டு அணைகளைக் கட்டிவிட்டால் ஓரளவு



1985 மார்ச் 25] [திரு. ந. சிவஞானம்]

தண்ணீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, வறட்சியான பகுதிகளுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். ஆகவே முதலை முத்துவாரித் திட்டத்தையும், சோலம்பட்டிவாரித் திட்டத்தையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளக் காலத்திலே காவேரியில் தண்ணீர் அதிகப்படியாக வருகிறது. அதனால் ஏற்படும் வெள்ளத்தைத் தவிர்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ளம் வருவதை தடுத்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு அதைச் செய்து கொடுத்தால் மிக நன்றாக இருக்கும். அப்படிப்பட்ட வறண்ட பகுதிகளுக்கு ரூ. 180 கோடியிலே ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப் பட்டது. நடைமுறையிலே பார்க்கின்றபோது அந்தத் திட்டம் நடைபெறுமா, நடைபெறாதா என்ற நிலை இருப்பதால், காவேரியில் வருகின்ற வெள்ளத்தைத் தடுப்பதற்கும், உணவை அதிகமாக உற்பத்தி செய்வதற்கும், வறட்சியால் வாடுகின்ற இரண்டு மாவட்டங்களின் நிலையை உத்தேசித்து, திருச்சி அருகே இருக்கின்ற அந்த ரூ. 180 கோடித் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சாதாரணமாக எந்தத் திட்டமானாலும் தூய்மையாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்போது வட மாநிலத்திலே மத்திய அரசிலே, கங்கையாக இருந்தாலும், வேறு எந்தத் திட்டமானாலும் தூய்மையாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதுபோல காவேரித் தண்ணீரைத் தூய்மைப் படுத்த நம்முடைய அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கடைசியாக ஒன்றினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும். நாங்கள் தேர்தல் காலத்திலே, சென்றபோது, சில இடங்களில், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள் ஒன்றை கோடிட்டு காட்டினார்கள். அதாவது புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு நன்மைகள் செய்கிறார். தம்பி நீ சட்டமன்ற தேர்தலிலே ஜெயித்து, அங்கே சென்று, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச் சொல். இந்த மது விலக்கு அமல் செய்யாததினால் ஏழை எளிய மக்கள்

குடித்துவிட்டு நிதானம் தவறி, இரவிலே வீட்டிலே வந்து பாத்திரத்தை உடைக்கிறார்கள், மனைவிமார்களை அடிக்கிறார்கள், காலையிலே எழுந்த பிறகுதான் அவர்களுக்கு நிலைமை தெரிகிறது. ஆஹா, நாம் தகாத காரியம் செய்துவிட்டோமே என்ற நிலையை அடைகிறார்கள். இதற்குக் காரணமாக இருக்கின்ற அந்த மதுவை ஒழிக்க வேண்டும் என்பதை அந்தத் தாயன்பு கொண்ட அந்த அம்மையார் அவர்கள் சொன்னார்கள். எனவே, நிச்சயமாக இந்த மதுவிலக்கை அமல் செய்ய வேண்டும் என்றும், இதிலே இடைத் தரகர்கள் அதிகமாகக் கொள்ளை அடிக்கிறார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு வரி அரசாங்கத்திற்கு வந்தாலும், இடைத் தரகர்கள் அடைகின்ற அந்த கொள்ளை லாபம் இருக்கின்றதே அது கணக்கில் அடங்காது என்றும், இது அரசிற்கும் தெரியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(நண்பகல் 12-00)

அப்படிப்பட்ட காந்தீயக் கொள்கையை, மதுவிலக்கை அமல் படுத்துவதை, நிச்சயமாக இந்த அரசு ஏற்படுத்தும், மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சி நிச்சயமாக செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியைப் பற்றி சில கோரிக்கைகளை மட்டும் இங்கே வைத்து நான் விடைபெறுகிறேன். குறிப்பாக இன்றைக்கு இருக்கின்ற நெல்லை முத்தாறுத் திட்டம். அது ஒரு நல்ல திட்டம். அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று வெல்லம்புதூர் அருகேயுள்ள ஏரித் திட்டம். புத்தனேரி அருகேயுள்ள ஏரித் திட்டம் நாஞ்சிக் கோட்டை ஏரித் திட்டம். வெள்ளாம்பட்டி ஏரித் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூரில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை விரைவில் அமைக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை விரைவாக அமைத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து திருவோணம் தொகுதியில் தொழிற்சாலைகளே இல்லை என்ற ஒரு பெருங்குறை இருக்கிறது. அங்கே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈச்சங்கோட்டையில் கால்நடைக் கல்லூரி ஒன்றை விரைவாக ஏற்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூரிலே 'தேர்டு ஃபிடர் லைன்' ஆகாய விமானப் போக்குவரத்து வசதியை—மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது. மாநில அரசு அதற்காக அனுமதி கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். விரைவான அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் பல்கலைக் கழகத்தில் பல வேலைகள் செய்யப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. ஆகவே, தஞ்சையிலே இருக்கிற தமிழ் பல்கலைக் கழகத்திற்கு முன் உரிமை கொடுத்து இந்த ஆண்டாவது அரசு மானியத்துடனும், பல்கலைக் கழக மான்யத்துடனும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரத்தநாட்டிலே ஒரு முன்சீப் கோர்ட் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது மாண்பு மிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். விரைவாக அங்கே ஒரு முன்சீப் கோர்ட்டை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

*டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முப்பிறவி எடுத்த இறைவன், முத்தமிழ் காக்கும் தலைவன், மும்முறை வென்ற தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் புகழ்பாடி என் பணியைத் தொடர்கிறேன். நடந்து முடிந்த தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பெரும்பான்மையான வாக்கு களை அளித்து வெற்றிப் பெறச் செய்து சட்டமன்றத்திலே தொடர்ந்து பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளித்த என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இந்தத் தேர்தலில் மீண்டும் ஈடுபட வேண்டும் என்று அனுமதி அளித்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்கும், அதற்காக அரும் பாடுபட்ட தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து என் உரையைத் தொடங்குகிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1985 மார்ச் 25

நடந்து முடிந்த தேர்தலில் அங்கே டில்லியிலே வெற்றி பெறுவதற்கும், தமிழகத்திலே வெற்றி பெறுவதற்கும் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மறைவும், புரட்சித் தலைவர் அவர்கள் உடல்நலக் குறைவும் மட்டுமே காரணம் என்று பலர் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மறைவு மட்டுமே காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்குக் காரணம் அல்ல. காரணம் அவரது "ஆவி" அங்கே ஆட்சி செய்யவில்லை. அவரது மகன் ராஜீவ் காந்தி அவர்கள் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் லட்சியங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றக் கூடிய ஆற்றல், அறிவு, திறமையைப் பெற்றிருக்கிறார்கள் என்ற காரணத்திற்குத்தான் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள மக்கள் வாக்களித்து நிலையான ஆட்சியை இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு கொடுத்ததாக நான் கருதுவேன்.

அது மட்டுமல்ல, தமிழகத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி மூன்றாம் முறையாக அமைக்கப்பட்டதற்குக் காரணம் அனுதாபம் அல்ல. அவர் ஆட்சிப் பீடத்திலே இருக்கிறபோது இந்த நாட்டு மக்களுக்காக செய்த மக்கள் நலத் திட்டங்கள், அதாவது சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், தேசியக் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், இன்ன பிற அத்தியாவசியத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி நாட்டு மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றிருந்த காரணத்தால், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் வாழ்க்கைத்தரத்தை, அடித்தளத்திலே உள்ளவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த சேவை செய்தால் அது வாக்குகளை பெருக்கும், ஆட்சியை நிலைக்க வைக்கும் என்ற சூத்திரத்தை புரட்சித் தலைவர் அவர்கள் அறிந்த காரணத்தினால் நாட்டுமக்கள் அவரை மீண்டும் முதல் அமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1984 ஆம் ஆண்டு நடந்த இத்தேர்தல் பல்வேறு படிப்பினைகளை இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.



1985 மார்ச் 25] [டாக்டர் கே. சமரசம்]

நடைபெற்ற தேர்தலில் சாதிப் பிரச்சினைகள் தகர்த்தப்பட்டன. லட்சியம் இல்லாத புதிய கட்சிகளின் உதயம் இந்த நாட்டு மக்களால் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது. உண்மைக்கு மாறான கருத்துக்களை எடுத்துச் சொல்லி அதன் மூலம் அரசியல் நடத்திக்கொண்டிருக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தவர்களால் இனி அரசியல் நடத்தமுடியாது, பல்வேறு பட்டங்களைப் பெற்ற அவர்கள் உணருகின்ற வகையில் ஒரு அரசியல் ஆத்திச்சூடியாக இந்தத் தேர்தல் இருக்கிறது. ஆட்சிக் கட்சி எதிர்க்கட்சியாக, எதிர்க்கட்சி உதிரிக்கட்சியாகி, அவர்களுடைய முகவிலாசங்களை மக்கள் தேடிக்கொண்டிருக்கிற வகையில் உண்மைக்கு மாறான வகையில் கருத்துக்களைச் சொன்னவர்கள் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

கடுகு சிறுத்தாலும் காரம் போகாது. அந்த அளவிலே சிலருடைய கருத்துக்களும் இங்கே இருந்தன. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது, ஆனால் அந்தக் காரமே மனிதனின் ஆகாரமாகாது; அதுவே அரசியல் வாழ்வுக்கு ஆதாரமும் ஆகாது. பலவீனம் பலத்துடன் சேர்ந்தால் பஸ்பமாகிவிடும், பலவீனம், பலவீனத்துடன் சேர்ந்தால் "புஸ்" எனப் போகும் என்ற புதிய தத்துவத்தை 1984 ஆம் ஆண்டிலே நடந்த தேர்தல் எடுத்துக் காட்டியிருக்கிறது.

இங்கே துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரையில் இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பால்வளம், வீட்டு வசதித் துறை, ரெவின்யூ, கைத்தறி, வேளாண்மை, மருத்துவம் அறநிலையங்கள் பாதுகாப்பு, சமூக நலம் ஆகிய துறைகளில் எந்த எந்தப் பிரச்சினைகளை எடுத்துப் பார்த்தாலும் அதிலே துல்லியமாகக் கணக்கெடுத்து மக்களின் தேவைகளை எந்த எந்த வகையில் பூர்த்தி செய்யமுடியுமோ அந்த வகையில் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் ஆற்றலை, அறிவைச் செலவு செய்ததால் தான் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1985 மார்ச் 25

அது மட்டுமல்ல, பல்வேறு பிரச்சினைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகைகளைப் பார்க்கிறபோது என்னென்ன வகைகளிலே முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று பார்க்கிறபோது உள்ளாட்சித் துறையை எடுத்துக்கொண்டால் 1947ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சித் துறையில் அரசாங்கத்தின் சொத்தாக இருந்தது ஏறத்தாழ 42½ கோடி ரூபாய் தான். 1977 லிருந்து இன்றுவரையிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் உள்ளாட்சித் துறைக்கு மட்டும் சொத்து ஏறத்தாழ நிலையான சொத்து என்ற அளவில் 250 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பல்வேறு பிரச்சினைகளைத் தொட்டுப் பேசுகின்றபோது ஏற்கெனவே இருந்தவர்கள் என்ன என்ன வகைகளில் எப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கினார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இங்கே பேசிய சில அமைச்சர்கள் சில விவகாரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரைக்கும் பொதுமக்களுக்குத் தேவையான நல்லபல திட்டங்களை உருவாக்குகிறபோது—இங்கே மதுவிலக்கைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே பலமுறை அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன்—மது என்பது ஒரு பருவ மங்கை, அதை காங்கிரஸ்காரர்கள் கன்னிமாடத்திலே வைத்தார்கள். இடையிலே ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் அதைக் கொண்டு போய் சிகப்பு விளக்குப் பகுதியிலே விட்டு விட்டார்கள். சில காலம் இருந்து விட்டு அந்த சிகப்பு விளக்குப் பகுதியிலிருந்து மீண்டும் கொண்டு வந்து கன்னிமாடத்தில் வைத்துவிட்டு குலப்பெருமை என்றும் பெண்ணின் பெருமை என்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் பேசலாமா?

(பிற்பகல் 12-10)

இந்த ஆட்சி மது என்ற மங்கையை கன்னி மாடத்திலும் வைக்கவில்லை. சிகப்பு விளக்கு பகுதியிலும் வைக்கவில்லை யார் அவளை விரும்புகிறார்களோ, அவள் யாரை விரும்புகிறாளோ இருவரும் சேர்ந்து வாழ்கின்ற முறையில் லைசென்ஸ் வழங்கியிருக்கிறோம். இது குற்றமா? இது தான் மது விலக்குத் திட்டத்தில் எங்களுக்கு இருக்கிற நிலைமை என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 மார்ச் 25] [டாக்டர் கே. சமரசம்]

அடுத்து, இங்கே பல்வேறு விஷயங்களைப் பற்றி பேசும்போது இன்றைக்கு மருத்துவ பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிறோம். 30 ஆண்டுக் காலமாக இல்லாத மிகப் பெரிய பிரச்சினை சத்துணவுத் திட்டம் என்பது, உலகத்தில் யாரும் கொண்டு வராத ஒரு திட்டம். தன்னிறைவுத் திட்டம் என்று சொல்கிறபோது பாதை இல்லாத ஊரே இருக்கக்கூடாது. அடிப்படையான கட்டிடம் இல்லாத பள்ளிக்கூடம் இருக்கக்கூடாது என்ற ஒரு நிலையை தமிழகத்தில் உருவாக்கி அடிப்படையான கட்டிடம் இல்லாத பள்ளிக்கூடம் எந்த கிராமத்திலும் நிச்சயமாக இல்லை. ஒரு காங்கிரஸ் நண்பர் பேசுகிறபோது சில விஷயங்களைச் சொன்னார்கள். அப்படிப்பட்ட அடிப்படையான கட்டிடங்கள் இல்லாத பள்ளிக்கூடங்கள் எங்கே இருக்கிறது, ஆரம்பப்பள்ளிகள் எங்கே இருக்கிறது? நிச்சயமாக இருக்காது. இந்த அரசு அதற்காக பணங்களை ஒதுக்கவில்லை என்று யாரும் குற்றம் சொல்ல முடியாது. அதேபோல் பாதை இல்லாத கிராமங்கள் இல்லை என்ற சொல்லக்கூடிய அளவுக்குத் தான் தன்னிறைவுத் திட்டத்தை நாம் செயலாற்றிக்கொண்டு இருக்கிறோம்.

அதாவது ஒரு கிராமத்தில் பாதை இல்லை என்று சொன்னால், சிலர் சொன்னார்கள் வாக்கு போட 5 மைல் நடந்து வந்தார்கள் என்று. அப்படி எதாவது எங்கேயாவது இருக்குமானால் அது அரசின் குற்றம் அல்ல. அந்த ஊரிலுள்ள சண்டையின் காரணமாக நிலம் விட மறுப்பது, பாதை போடுவதற்கு சண்டை இப்படி அங்கேயிருக்கின்ற சண்டையின் காரணமாக பாதை இல்லாமல் இருக்குமே தவிர இந்த அரசு பணம் ஒதுக்க வில்லை, ஆகவே பாதை இல்லை, ஆகவே அங்கு ரோடு இல்லை, ஆகவே கிராமத்தையும் நகரத்தையும் இணைக்கமுடியாமல் போய்விடுகிறது என்று எந்தக் கட்சியும் சொல்ல முடியாது. யாரும் சொல்ல முடியாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் போட்டு இருக்கிற திட்டங்கள் அங்கு அ.இ.அ.தி.மு.க. எம்.எல்.ஏ. வாக இருந்தாலும் சரி தி.மு.க. எம்.எல்.ஏ. வாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் எம்.எல்.ஏ. வாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ. வாக இருந்தாலும் சரி இந்தக் காரணம் காட்டி பாகம் பிரித்து இவர்கள் இப்படி இருக்க வேண்டும், அவர்கள் அப்படி இருக்க வேண்டும் என்று போடவில்லை.

[டாக்டர் கே. சமரசம்] [1985 மார்ச் 25

நாங்கள் போட்டு இருக்கின்ற திட்டங்கள் சட்ட மன்றத்தின் உள்ளே, வந்து இருக்கிற எந்தக் கட்சியின் எம்.எல்.ஏ. வாக இருந்தாலும் சரி அவர்கள் விரும்புகிற அவர்கள் கேட்கிற மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய புதுமையான திட்டங்களை மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய திட்டங்களை இங்கே நீங்கள் கேட்காவிட்டாலும் நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் ஏற்கனவே 7 ஆண்டுக் கால சாதனையின் காரணமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி நிலை நிறுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆகவேதான் எங்களது எண்ணம் வசதி அற்றவர்களுக்கு செய்யக்கூடிய உதவிகள் தான் வாக்குகளை பெருக்கும், அரசை நிலைக்க வைக்கும். அந்தத் தத்துவத்தின், அடிப்படையில் எங்களது ஆட்சி தொடர்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே கிழியாத துணி, வயிறார சோறு, ஒழுகாத வீடு, இதைக் கொடுக்கவேண்டும். இது எங்களது அடிப்படை யான திட்டம். இது தான் எங்களது அண்ணாயிச கருத்தும் கூட. அந்த அடிப்படையில் தான் வசதி அற்றவர்களுக்கு, வாய்ப்பு அற்றவர்களுக்கு, அநாதைகள் என்று சொல்லக்கூடியவர் களுக்கு வருடம் ஆனால் 2 வேட்டி ஆணாக இருந்தால், வருடம் ஆனால் 2 புடவைகள் பெண்ணாக இருந்தால் கொடுத்து மதியம் இலவசமாக உணவும் கொடுத்து அவர்களை பாதுகாத்துக் கொள்ளக்கூடிய முறையில் மாதம் 35 ரூபாய் கொடுத்து காக்கக் கூடிய வகையில் இந்த அரசு இருக்கிறது.

அதைப்போலவே குழந்தைகளுடைய கல்வி அறிவு இந்த சாப்பாட்டு விஷயத்தால் பாதிக்கப்படுகிறது, இது தான் காரண மாக இருக்கிறது என்றால் நிச்சயமாக அது இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் சத்துணவுத் திட்டத்தை உலகத்திலேயே மிகச் சிறப்பாக நடத்தக்கூடிய ஒரு அமைப்பாக அ.இ.அ.தி.மு.க. ஒன்றை உருவாக்கியிருக்கிறது. அதன் மூலமாக இன்றையதினம் மிகப் பெரிய அளவில் அது பெருமைப்படத் தக்க வகையில் மனத் திருப்தி அளிக்கும் வகையில் இருக்கிறது. அதில் ஒரு சில குறைகளைச் சொல்லலாம். ஜனநாயக நாட்டில் குறைகள் இருக்கத்தான் செய்யும்.



1985 மார்ச் 25] [டாக்டர் கே. சமரசம்]

ஆனால் குறைகளை நிவர்த்திச் செய்வதற்கு எல்லா முயற்சி களையும் அவ்வப்போது நாம் எடுத்துக் கொண்டு வருவோம் இதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. ஆகவே 7 ஆண்டுக் கால அரசின் சாதனை பார்த்து டெத் பிறப்பு முதல் இறப்பு வரை இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து எந்த எந்த அளவுக்கு எந்த எந்த வகையில் நாம் நாட்டு மக்களுக்கு சேவை செய்ய முடியுமோ அதைச் செய்யக்கூடிய வகையில் இவைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல் லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்தத் தலைவராக சுத்தத் தமிழராக, சிலர் எல்லாம் இருக்கலாம் அவர்கள் சுமாரான தமிழர்கள் என்று அந்தஸ்தைப் பெற்று இருக்கலாம், சுத்தத் தமிழராக இன்றையதினம் உலகத்திலேயே தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய வகையில் உயர்ந்து நிற்கக்கூடியவராக புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிறார் என்று சொன்னால் அதற்கு காரணம் மனித உரிமை எங்கெங்கே பாதிக்கப்படுகிறதோ அது தமிழகத்தில் மட்டும் அல்ல, இலங்கையில் மட்டும் அல்ல, இங்கே இருக்கின்ற இந்திய துணைக் கண்டத்தில் உள்ள மாநில அளவில் மட்டும் அல்ல, இந்திய துணைக்கண்டத்திற்கு அப்பால் எங்கே சிக்கல் இருந்தாலும் கூட அந்தத் தமிழர்கள் வாழ்வில் அக்கறை கொண்டு அதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கிற காரணத்தால் அண்மையில் அமெரிக்காவில் கூட 3 லட்ச ரூபாயை அங்கே தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு புரட்சித் தலைவர் அவர்கள் மருத்துவ மனையிலிருந்து அங்கே ஒரு பாராட்டுக் கூட்டம் நடந்து கொண்டு இருக்கும் நேரத்தில் தன் சொந்தப் பொறுப்பில் கொடுத்து இருக் கிறார்கள்.

அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லு வதற்குக் காரணம், இப்படி எல்லாம் பழக்கப்பட்டவர் மட்டும் அல்ல. 'குடும்பமிழ் புகுமுன் கோவிதழ் கொள்கை போல' என்ற வைவண்ய நவநீத கருத்துக்கேற்ப தன்னை அப்படியே உருவாக் கிக் கொண்டவர். அந்த அடிப்படையில் தான் எங்கே மனித உரிமைகள் பாதிக்கப்படுகிறதோ அங்கே எல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் கரம் நீளும், அவர்களுடைய மனம் அங்கே

[டாக்டர் கே. சமரசம்] [1985 மார்ச் 25

செல்லும். அந்த அடிப்படையில் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு அதிபர் எனக்கு ஒரு கடிதத்தில் சொல்லியிருக்கிறார். உலக அரங்கிலே மனிதாபிமானம் என்பது மிகச் சிறந்தது. அப்படிப்பட்ட மனிதாபிமானத்தின் சின்னமாக சிகரமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தமிழகத்தின் முதலமைச்சராக விளங்குகிறார் என்று பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே தான் அவர் 3-வது முறையாக வெற்றி பெற்று வந்து இந்தச் சட்ட மன்றத்தில் ஆட்சி நடத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது என்று சொன்னால் அவர் எடுத்த நடவடிக்கைகள், அவர் போட்ட சட்ட திட்டங்கள் அவர்கள் மக்களிடத்தில் கொண்டு இருக்கக்கூடிய நல்ல ஒரு பாச உணர்வு காரணமாகும் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஒன்றைச் சொன்னார்கள். புகார் மனுக்களை கொடுக்கிறோம், அமைச்சர்கள் மீது, சட்டமன்ற உறுப்பினர்கள் மீது, மற்றவர் மீது எல்லாம். அப்படி கொடுக்கின்ற புகார் மனுக்களை நீங்கள் என்ன செய்யமுடியும்? அதைச் சட்டமன்றம் அங்கீகரிக்கிறதா, எப்படி ஏற்பார்கள் என்றெல்லாம் கூட நண்பர் ஒருவர் பேசினார். அதுதான் புரட்சித் தலைவரது இதயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு. ஒரு அமைச்சர் மீதோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் மீதோ இன்றையதினம் எவ்வளவோ புகார்களைச் சொல்லலாம், வதந்திகளைப் பரப்பலாம், ஆனால் உண்மை என்ன வென்பதை அறிந்து, தன் மனதிற்கேற்ப நல்ல நிவாரண நடவடிக்கைகளை எடுத்து, மக்களுக்குச் சேவை செய்யும் வகையில் அந்த இயக்கத்தை—அந்த அமைப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டுமென்பதில் தனக்கு நிகர் தான் தான் என்று உலகத்திற்கு நிலைநிறுத்திக் காட்டியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். எனவே, அதற்காகப் போடப்பட்டதுதான் அந்தக் கமிட்டியே தவிர வேறு யாருக்காகவும் போடப்பட்டது அல்ல. குற்றங்களை, குறைகளைக் கூறுகின்றபொழுது அதில் உண்மை இருக்கிறதா என்று புரிந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்க வேண்டும். அதை எந்த அளவிற்குப் புரிந்துகொண்டு சீர் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்தால் நாட்டிலே நேர்மையான ஆட்சியை அமைக்க முடியும் என்கின்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான் அது போடப்பட்டது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1985 மார்ச் 25] [டாக்டர் கே. சமரசம்]

அதுமட்டுமல்ல, மின்சாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஏற் கனவே இந்த நாட்டை ஆண்டவர்கள் இருப்பதையெல்லாம் ஏலம் விட்டு ஏப்பம் விட்டார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆனால் அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது இங்கே ஆண்டு கொண்டிருக்கக்கூடியவர்களைப் பார்த்து, புதிய திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து பல புகார்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது நாம் பல்வேறு வகைகளில் மிகப் பெரிய அளவிற்கு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான காரியங்களுக்கு அனுமதித்துக்கொண்டுதான் இருக்கிறோம். குடிசைகளுக்கு மின் விளக்கு இணைப்பு, பாசனங்களுக்கு வேண்டிய அளவிற்கு மின்னிணைப்பு, சிறுதொழில் பெருக்கத் திற்கு வேண்டிய மின்னிணைப்பு என்று இவைகளுக்கெல்லாம் நாம் மிகப் பெரிய அளவிற்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், புதிய எரிசக்தி ஆதாரங்களைப் பெருக்க வேண்டுமென்ற முறையில், சூரிய வெப்ப சக்திக்கு ஊக்கம் தருகின்ற வகையில் இங்கே பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இப்படி எவ்வளவுதான் நாம் மின்சாரத்திற்கு இணைப்புகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாலும், கட்டுப்பாடு—தட்டுப்பாடு வருகிறது என்றால் அதற்கு என்ன காரணம்? இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற நகர வளர்ச்சியில் ஏழை முதல் பணக்காரர் வரை எல்லோருமே மின்சாரத்தை பயன்படுத்துகின்ற நிலையிலே இருக்கிறார்கள். அப்படியிருந்தும்கூட இன்னும் சில ாதங்களில் முழுமையாக மின் வெட்டை அகற்றக்கூடிய வகையில் டவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற கருத்தையும் சொல்லி ிருக்கிறார்கள். அது ஆறுதல் அளிக்கின்ற வகையில், ாராட்டக் கூடிய வகையில் இருக்கிறது என்பதைச் சொல்லிக் காள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். பல்வேறு திட்டங் ளுக்கு இங்கே ஒதுக்கீடு செய்தார்கள், ஆனால் சில திட்டங் ளுக்கு பணத்தையே செலவழிக்கவில்லை, அந்தப் பணத்தைச் ரண்டர் செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். நாம் ணத்தைச் செலவழிக்கிறோமோ இல்லையா என்பது பிரச்னை அல்ல. ஆனால் ஒரு திட்டத்தைப் போட்டு அதை நிறைவேற்ற

வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்களாக நாம் இருக்கிறோம். ஆனால் திட்டமே போடாமல் வெறும் சிலைகளை மட்டும் வைத்த பெருமை கடந்த கால ஆட்சிக்கு உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, திட்டத்தைப் போட்டு பெட்டிக்குள்ளே வைத்துக் கொண்டால் போதுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி நேருக்கு நேர் உறுப்பினர்கள் பேசிக்கொள்ளக் கூடாது.

**டாக்டர் கே. சமரசம்:** அவர்கள் எப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். 200 வருஷங்களாக இருந்த குதிரைப் பந்தயத்தை ஒழித்து விட்டோம் என்று சொல்லி ஏதோ சிலையை வைத்தார்கள். அப்படிப்பட்ட குதிரை வீரன் சிலைதான் இருக்கிறது. ஆனால் அது என்ன அடையாளச் சின்னமா அல்லது நடந்த ஆட்சியின் அவமானச் சின்னமா என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் காமராஜ் ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு. அவர்கள் காலத்தில் அடிக்கல் நாட்டிவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் இடையிலே வந்த ஆட்சி அந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை. 1983-84 ஆம் ஆண்டிலே புரட்சித் தலைவரவர்களின் ஆட்சிதான் அதைக்கூட நிறைவேற்றியது.

அதைப்போலவே எத்தனையோ திட்டங்கள். வீராணம் திட்டம் வீரியன் பாம்பாகக் கடித்தது; அதைப்போலவே கூவம் நதித் திட்டம் எந்தக் கதிக்கு ஆளானது என்பதையெல்லாம் அறிவோம். இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் போட்டவர்கள் நல்ல திட்டங்களைப் போட்டு நாட்டில் அமல் நடத்துகின்றவர்களைப் பார்த்து விமர்சனம் செய்வது எந்த விதத்தில் நியாயமானது என்பதை மனச்சாட்சி உள்ளவர்களுக்கே விட்டு விடுகிறேன்.





இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளைப் பற்றிப்
பேசுகிறார்கள். முன்பெல்லாம் சொல்வார்கள், நாடகமாடிகளுக்கு
நாடாளத் தெரியுமா என்று. நாடகமாடி, பிறகு சினிமாத்
துறைக்கு வந்து, பிறகு நாடாள்வதற்கு வந்திருக்கின்ற புரட்சித்
தலைவர் அவர்கள், இலங்கைத் தமிழர்களின் பிரச்னைபற்றி
ஐக்கிய நாடுகள் சபையிலே எடுத்து வைக்கக்கூடிய நிலைமைகளை
உருவாக்கித் தந்தார்கள். ஆனால் இலங்கையிலேயிருந்து வந்த
தமிழன் குட்டிமணியை யாரோ பிடித்துக் கொடுத்தார்கள்.
அவன் இலங்கையிலிருந்து வந்த தீவிரவாதி என்பது தெரியா
விட்டாலும், தமிழன் என்று தெரிந்தே பிடித்துக் கொடுத்தார்கள்.
ஆனால் பிறகு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த புரட்சித் தலைவ
ரவர்கள் அந்தக் குடும்பம் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்று
கருதி அவர்களுக்கு வீடு, அவர்கள் குழந்தை படிப்பதற்கு
வாய்ப்பு வசதிகள், மற்றும் இலங்கையிலிருந்து பாதிக்கப்பட்டு
வந்திருப்பவர்களுக்கு நிவாரண வசதி என்று செய்து இந்தியத்
துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடுதான் மிகப் பெரிய
அளவிற்கு ஆதரவு அளித்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறது
என்பதை ஈரமுள்ள தமிழன் யாரும் மறுத்துவிட முடியாது.

(பிற்பகல் 12-20)

அதுமட்டுமல்ல. இது ஒரு தமிழ்நாட்டுப் பிரச்சினை என்றில்
லாமல் இது ஒரு இந்தியத் துணைக் கண்டத்தின் பிரச்சினை
என்ற வகையில் அதாவது மாநிலப் பிரச்சினை அல்ல,
இந்தியாவின் பிரச்சினை என்பதை எடுத்து வைத்து பல்வேறு
முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து அந்த இலங்கைப் பிரச்
சினையில் தமிழ் தீவிரவாதிகளுக்காகவும், தமிழர்களுக்காகவும்
ஆதரவாக மத்திய மாநில அரசு இணைந்து செயல்படக்கூடிய
ஒரு கட்டத்தை உருவாக்கியது புரட்சித்தலைவர் திரு. எம்.ஜி.ஆர்.
அவர்கள்தானே தவிர இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் இப்படி
இலங்கைப் பிரச்சினை வந்தபோது இப்படி இணைந்து செயல்
படக்கூடிய நிலைமையை உருவாக்கிக் கொள்ளவில்லை.
எவ்வளவோ இணைந்த கரங்களாக அப்போது இருந்தவர்கள்
கூட

ஆகவே இதை எல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது இப்போது இலங்கைப் பிரச்சினைக்காக ஒப்பாரி வைக்கக்கூடியவர்கள் அப்போது அவர்களுடைய உரிமைக்காகப் போராடினார்களா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்பதை நாம் உணர முடியும். ஆக அந்த அடிப்படையில் மிகப் பெரிய அளவிற்கு இன்றைக்கு ஒரு ஆட்சி திருக்குறள் ஆட்சியாக இங்கே இருக்கின்றது. 1,330 அருங்குறள்களைத் திருக்குறளிலே படைத்தார் திருவள்ளுவர். அதிலே 133 அதிகாரங்கள் இருக்கும். இன்றைய தினம் வெற்றி பெற்று வந்திருக்கக்கூடிய ஆளும் கட்சியினுடைய எம்.எல்.ஏ.-க்கள் 133 பேர் அவையிலே இருக்கிறார்கள். இதிலே மூன்றும், மூன்றும் ஆறு. ஆறும் ஒன்றும் ஏழு. இது புரட்சித் தலைவர் அவர்களின் ராசியான எண். எனவே திருக்குறள் ஆட்சி இங்கே நடக்கின்றது. திருவள்ளுவராக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மிக அருமையான ஆட்சிக்கு உறுதுணையாக இந்த நாட்டு மக்கள் இருக்கிறார்கள். எனவே வதந்திகளைப் பற்றி, வேடிக்கைகளைப் பற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை என்பதைச் சொல்லி அவசியத் தேவைகளுக்காகக் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தத் துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது மிகவும் அவசியம் என்று சொல்லி முடிக்கிறேன்.

* **திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற நான் குறிப்பிட விரும்புவது இந்த அரசு ஊழியர்களுக்கு இந்த ஆண்டு மட்டும் 9 தடவை அகவிலைப்படி கொடுத்திருப்பதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இங்கே ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூடச் சொன்னார்கள். 'கூந்தல் உள்ள சீமாட்டி அள்ளி முடிக்கிறாள்' என்று. 9 தடவை அகவிலைப்படி கொடுத்து விட்டார்கள் என்றால் இந்த நிலைமையில் சிறு கடைக்காரர்கள், சிறு தொழில் செய்கின்ற வணிகர்கள் இவர்கள் எல்லாம் என்ன செய்வார்கள்? அவர்களால் இப்படி 9 தடவை அகவிலைப்படி கொடுக்க முடியுமா? எனவே இந்த அரசு உண்மையிலே மக்கள் நல்வாழ்வைக் கருதுகின்ற அரசாக இருக்கின்றது என்பது உண்மையானால் என்ன செய்திருக்க வேண்டும்? விலைவாசிகளைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாமல்



9 தடவை அகவிலைப்படி கொடுத்திருக்கிறோம் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறார்கள். எனவே விலைவாசிகளைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அகவிலைப் படியைக் கொடுத்துகொண்டே செல்வதன் காரணத்தால் பணவீக்கம் ஏற்பட்டு அதனால் ஏற்படுகின்ற சிரமங்கள் சாதாரண மக்களை மிகவும் பாதிக்கின்றது.

இப்படி 9 தடவை அகவிலைப்படி கொடுத்ததன் காரணத்தால் நகராட்சியிலே உள்ள அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? சம்பளம் கொடுப்பதற்குத்தான் பணம் சரியாக இருக்கின்றதே தவிர மக்களுக்குச் சேவை செய்யப் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அதற்கு என்ன வகை செய்திருக்கிறீர்கள்? அவர்களுக்கு மானியம் கொடுத்திருக்கிறீர்களா? அப்படி எல்லாம் ஏற்பாடு செய்யாமல் அகவிலைப் படியை மட்டும் கூட்டிக்கொண்டே செல்வது சரியா? எனவே மக்களை வாழ வைப்பதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிவகாசி நகர சபையைத் தவிர வேறு 5 நகரசபைகளில் ஆணையாளர்கள் கிடையாது. ஆணையாளர்கள் நியமனத்தைப் பொறுத்த வரையில் பல காலங்கள் ஆணையாளர்களே இல்லாத நிலைமை இருக்கின்றது. நகர நல அலுவலர் ஆணை யாளராக இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. அப்படி என்றால் அவரிடம் சென்று எதைக் கேட்பது? சுகாதாரத்தைப் பற்றிக் கேட்பதா அல்லது அங்கே உள்ள நிலைமையைப் பற்றிக் கேட்பதா? இந்த இரண்டைப் பற்றியும் கேட்டால் இவ்வளவையும் என்னால் எப்படிப் பார்க்க முடியும் என்று குறைபட்டுக்கொள் கிறார் அவர். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்றது. இப்படி தனி அதிகாரி இல்லாத நிலைமை இருக்கின்றது. விருதுநகரைப் பொறுத்தவரையில் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து தனி அதிகாரி இங்கே வந்து பணிபுரிகிறார். இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன.

காமராஜர் மாவட்டத்தின் தலைநகராக இருக்கக்கூடிய விருதுநகர் இந்தியாவிலேயே ஏன் உலகத்திலேயே போற்றப்படக் கூடிய வணிகத்தில் சிறந்த ஒரு நகரமாக விளங்குகின்றது. அங்கே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் டெப்போ அமைக்கப்

பட வேண்டும் என்ற நிலைமையில் அங்கே அந்த பேருந்துக்கான டிக்கட் கவுண்டர் கூட இல்லை. அது அமைக்கப்படவிருந்த நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரின் தலையீட்டின் காரணமாக அது வருவது கூட தடையாகி இருக்கின்றது. இதுமட்டுமல்ல. பல முறை சொல்லப்பட்டும் விருதுநகரில் இறங்குவதற்குக்கூட முடியாமல் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. அங்கே ஒரு பை பாஸ் சாலையிலேதான் இறங்க வேண்டியிருக்கின்றது. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மில்களை அரசு ஏற்று நடத்துவதைப் பொறுத்த வரையில் அவ்வாறு ஏற்று நடத்துகின்றபோது அரசின் கையைக் கடிக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆனால் நீங்கள் அந்தப் பிரச்சினையில் வணிக முறையில் அணுகுகிறீர்கள். நீங்கள், தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும், தொழிலாளர்களை வாழ வைக்கவேண்டுமென்ற முறையிலே அணுகவேண்டும்; வணிக முறையிலே இலாபம் கருதாமல் சப்சிடி கொடுத்து அதை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல் சாலை விபத்துக்கள். இராஜபாளையம் வட்டாரத்திலே உள்ள சேத்தூரிலே கடந்த 3 மாதங்களுக்குள்ளாக 4 சாலை விபத்துக்களிலே 4 பேர்கள் இறந்திருக்கிறார்கள். 3 மாதங்களுக்குள்ளாக ஒரு சிறிய கிராமத்திலே சாலை விபத்திலே 4 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்றால், சாலைகள் எப்படி பராமரிக்கப்படுகின்றன என்று தெரியவில்லை. சாலை விபத்துக்களைத் தடுக்க, சாலைகளை ஒழுங்காகப் பராமரிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போல், சாலை விபத்திலே இறப்பவர்களுக்குக் கூடுமான வரையில் உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், உணவு உற்பத்தியிலே தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருக்கிறது; இரண்டாவது இடத்திலே இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், மாவட்டத்திலிருந்து மாவட்டம் நெல்லோ, அரிசியோ இன்னும் செல்ல முடியவில்லை. உதாரணமாக, மதுரையிலே ரூ. 300 விற்கக்கூடிய உயர்ரக அரிசி,





விருதுநகரில் ரூ. 350-க்கு விற்கிறது. 30 மைல் தூரத்திற்குள்ளே. அதற்குக் காரணம் நீங்கள் போட்டிருக்கிற தடை. மாவட்டத்திற்கு மாவட்டம் செல்லக் கூடாது என்ற தடையினாலே, ஊழலுக்கு முன்பு அரிசியை எடுத்துச் செல்ல மூட்டைக்கு ரூ. 5 வாங்கிய நிலை மாறி, இப்போது ரூ. 30 வாங்கக்கூடிய நிலையிலே, மூட்டை ரூ. 50-க்கு மேல் விற்கிறது. இதையெல்லாம் அரசு கவனித்து, மாவட்டத்திலேயிருந்து மாவட்டத்திற்கு அரிசி செல்ல தடையேற்படுத்தியிருப்பதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

அதே போல் சட்டமன்ற உறுப்பினர்கள் தவறுகள் செய்தால், ஊழல் செய்தால் விசாரிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் தலைமையில் ஒரு கமிட்டி இருப்பதாக இப்பொழுது சொன்னார்கள். நான் அதைக் கேட்டேன். அதிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, உள்ளபடியே மனப்பூர்வமாக, ஊழலை ஒழிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், உங்களுக்குத் தெரியாதா, உங்களுடைய ஆட்சியிலே, 1977-லே சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி இருந்தார்கள், 1980-லே பதவி ஏற்கும் போது எப்படி இருந்தார்கள், இப்பொழுது 1984-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட போது எப்படி இருக்கிறார்கள் என்பதெல்லாம் இந்த அரசுக்குத் தெரியாதா? நீங்கள் நியாயமாக அந்த ஊழலை ஒழிக்க வேண்டுமென்று விரும்பினால், உங்களுக்குள்ளே விசாரணை செய்து கொண்டு ஊழலை ஒழிக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவோடு நான் என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கின்றேன், நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபொழுது ஒட்டுமொத்தமாக ஆட்சிப் பொறுப்பிலே உள்ள கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் 1977-லே எப்படியிருந்தார்கள், 1980-லே எப்படி இருந்தார்கள், ஊழல் செய்தவர்கள் என்ற பொருள்படும்படி பேசி இருக்கிறார்கள். அவருடைய பேச்சு சபைக் குறிப்பில் இடம் பெறுவது அவசியம்தானா என்பதை நீங்கள் சொல்லவேண்டும், அதற்குத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது 'உங்களுக்குத் தெரியும்' என்பதுதான். 1977-லே சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி இருந்தார்கள், 1980-லே எப்படி இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்களே உங்களைப் புலன் விசாரணை செய்துகொள்ளலாம் என்றுதான் சொன்னேனே தவிர, யாரையும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடுவதை தவிர்ப்பது நல்லது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீட்டில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். 1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட சீற்றத்திற்காக ரூ. 18.76 கோடி 31ம் தேதி மார்ச் மாதம் 1985 ஆண்டுக்குள் செலவிட இயலும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அறிவித்து இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இயற்கை சீற்றம் என்பது நமது நாட்டில் அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. அப்படி வருகிறபோது மத்திய சர்க்கார் உடனடியாக வந்து பார்வையிட்டு அதற்கான செலவுத் தொகைகளை வழங்குவதில் தேக்க நிலை உள்ளது. எனவே எதிர்காலத்திலாவது இப்படி இயற்கை சீற்றங்கள் வருகிறபோது மத்திய சர்க்கார் உடனடியாக தலையிட்டு இந்த நிவாரணத்தை வழங்குவதற்கு முன் வரவேண்டும். இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்படுவது குடிசைகள், சாலை போக்கு வரத்து மற்றும் விவசாயம். குடிசைகள் பாதிக்கப்பட்டால் இப்போது 200 ரூபாய் பணமும் 5 கிலோ அரிசி, வேஷ்டி, புடவை, மண்ணெண்ணெய் ஆகியவைகள் கொடுக்கப்படுகின்றன. அதை யாரும் வரவேற்காமல் இல்லை. இந்த 200 ரூபாய் என்பது சென்ற ஆண்டிற்கு முன்பு இருந்த நிலையில் கொடுத்தது சரிதான். ஆனால் தற்போது கீற்று விலை உயர்ந்துவிட்டது. மூங்கில், கயிறு போன்றவைகள் கிராமப் புறங்களில் இரண்டு மடங்கு விலை





உயர்ந்து விட்டது. இந்த 200 ரூபாயைக் கொண்டு 200 கீற்றுகள் கூட வாங்க முடியவில்லை. ஆகவே இப்படி விலை உயர்ந்திருக்கிற நிலையில் எதிர்காலத்தில் 300 ரூபாயாகக் கொடுத்தால் தான் குறைந்தபட்சம் குடிசைகளை சீரமைத்துக் கொள்ள உதவியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்பு கிறேன்.

அதேபோல் வேளாண்மை துறைபற்றி முக்கியமான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. வேளாண்மை துறை தான் இயற்கை சீற்றத்தால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது. இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு நஷ்டத்தை ஈடுசெய்திருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் தான் பதிலில் சொல்ல வேண்டும். இதுவரையில் விவசாயிகளுக்கு இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் நஷ்டத்தில் ஒரு பகுதி நிவாரணம் கூட கொடுக்கப்படவில்லை. இங்கே விலை ஏற்றத்தைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். 15 ரூபாய் உரம் கொடுக்கப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டுகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட போது மத்திய சர்க்கார் உயர்ந்த விலை கொடுக்கமாட்டோம் என்று சொல்லியும் கூட, தமிழக சர்க்கார் குவிண்டாலுக்கு 35 ரூபாய் கொடுத்தார்கள். அது விவசாயிகளுக்கு ஆறுதலாக இருந்தது.

ஆனால் இப்போது விவசாயிகள் வாங்குகிற கருவிகள் விலை உயர்ந்து கொண்டே இருக்கிறது. டீசல் விலையை மத்திய சர்க்கார் ஏற்றிவிட்டார்கள். சென்ற ஆண்டில் ஒரு ஏக்கருக்கு 120 ரூபாய் டிராக்டர் வாடகை கொடுத்தார்கள். டீசல் விலை உயர்வினால், வரும் ஆண்டில் ஏக்கருக்கு டிராக்டர் வாடகை ரூபாய் 140-க்கு மேலே உயரக்கூடும். அப்படி இருக்கிறபோது விவசாயிகளுக்கு விலையை மேலும் உயர்த்திக்கொடுக்க வேண்டும். ஆனால் இப்போது 35 ரூபாய் என்பது 15 ரூபாயாக குறைந்து இருக்கிறது.

ஆகவே விவசாயிகளுக்கு எப்படி கட்டுப்படியாகும்? ஆகவே தான் விவசாயிகள் குவிண்டாலுக்கு 200 ரூபாய் கேட்கிறார்கள். அது நியாயமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் தொடர்ந்து விவசாயிகளைப் புறக்கணித்து வந்தாலும், மாநில அரசை

நாங்கள் கேட்டுக்கொள்வது, விவசாயிகள் நலனைக் கருதி அவர்களுக்கு உயர்ந்த விலை கொடுப்பதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். 1982-83 ஆம் ஆண்டில் குவிண்டாலுக்கு 35 ரூபாய் என்று கொடுக்கப்பட்ட பணத்தையாவது அரசாங்கம் இந்த ஆண்டு கொடுக்க முன் வர வேண்டும். உரம் கொடுப்பது சரிதான். ஆனால் அது எப்போது கிடைக்கிறது? எப்போது விவசாயிகளுக்கு தேவைப்படுகிறதோ, அப்போது கிடைக்கவில்லை. காலம் கடந்து கொடுக்கிறார்கள். அதனால் நாற்றின் வயது கூட செல்வதினால் விவசாயிகளுக்கு விளைச்சல் குறைந்து விடுகிறது. ஆகவே அதனை பணமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் விவசாயிகளுக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த வருடம் புகையான், குருத்துப் பூச்சி, மஞ்சள் நோய், துக்கான் நோய் என்று நோய்கள் வந்து விட்டன. இந்த நோய்களுக்கெல்லாம் பூச்சி மருந்துகள் கொடுக்கிறார்கள். அந்தப் பூச்சிகள் பூச்சி மருந்தை தின்று கொழுக்கிறதே தவிர, அவற்றை தடுக்கவே முடியவில்லை. ஆகவே வீரியம் உள்ள பூச்சி மருந்துகள் கிடைக்கவில்லை. எதிர்காலத்திலாவது நல்ல வீரியம் உள்ள, நோய்களைத் தடுக்கின்ற பூச்சி மருந்தை தேடி கண்டு பிடிக்க வேண்டும் அல்லது உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரையில், இப்போது ரொம்ப கெடுபிடி வசூல் நடக்கிறது. நேற்று முன்தினம் கூட ஊருக்குப் போயிருந்தேன். அங்கே சுற்றிப் பார்த்தேன். நிர்வாக அதிகாரிகள் கூட்டமாகப் போய் கட்டாய வசூல் செய்கிறார்கள். வசூல் பண்ணட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. இருக்கிற நிலைமைகளை அனுசரித்துச் செய்ய வேண்டும். அதிகாரிகளைப் பார்த்தால் விவசாயிகள் ஓடி ஒளியக்கூடிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் பிரச்சனையில் ஒரு நல்ல தீர்வு காண அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு 2.25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நல்ல திட்டம், வரவேற்கிறோம். ஆனால் பட்டா இருந்தால்தான் சலுகை கிடைக்கிறது. கடன் கேட்டு மனு போட்டால் 6 மாதம் நிர்வாக விசாரணை செய்வதாகச் சொல்லி, சாதாரண மக்களை அலைய விடுகிறார்கள். அரசாங்க பட்டா மனை இல்லை என்றால் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். அதனால் சம்பந்தப்பட்ட மக்களுக்கு இந்த பலன் கிடைக்கவில்லை. பலன் கிடைத்தாலும் இதிலே தேக்கம் இருக்கிறது. மனைப் பட்டா இருந்தாலும் இல்லாவிட்டாலும் கிராமப்புறத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, வருமானம் இல்லாதவர்களுக்கு, அவர்கள் அனைவருக்கும் இந்தச் சலுகை கிடைக்க எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகளைக் கொண்ட கமிட்டியையாவது போட்டு, சரியான முறையில் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி பற்றி குறிப்பிடும்போது கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் உற்பத்தி செய்வது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கரும்புச் சக்கையில் இருந்து மட்டுமல்ல. தஞ்சை மாவட்டத்தில் நிறைய வைக்கோல் இருக்கிறது மாட்டுக்குப் போக மீதி வைக்கோல் அழிந்து கொண்டிருக்கிறது. அதையும் பயன்படுத்தி தஞ்சை மாவட்டத்தில் ஒரு காகித ஆலை அமைக்க சர்க்கார் சிந்திக்க வேண்டும்; தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டண சலுகை அளித்திருக்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால் நீங்கள் போட்டிருக்கிற நிபந்தனைகளின்படி ஒரு சில ஆயிரம் பேர்களுக்குத்தான் இந்தச் சலுகை கிடைக்கும். இரண்டரை இலட்சம் சிறு விவசாயிகள் இருக்கிறார்கள் என்று நீங்கள் ஏற்கெனவே கணக்கு வைத்திருக்கிறீர்கள். அவர்கள் எல்லோருக்கும் இந்தச் சலுகை கிடைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, 100 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணி தேங்கி இருக்கிறது. அதற்கு என்ன காரணம்? ஏற்கெனவே அமைச்சர் பதில் சொல்லும்போது சொன்னார். 100 கோடி ரூபாய்க்கு கைத்தறித் துணி தேங்கியிருப்பதால் உற்பத்தி

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 25

செய்கிற நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த தேக்கத்திற்குக காரணம் என்னவென்றால் மக்களுக்கு வாங்கும் சக்தி இல்லை. தமிழ்நாட்டில் 67 இலட்சம் பேர்களுக்கு மேல் விவசாயத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். இந்த 67 இலட்சம் பேர்களில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 7 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த 67 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் எந்தவிதமான சொத்தும் இல்லாதவர்கள். அவர்களுக்கு ஏதாவது ஒரு நிரந்தரமான வேலை கிடைத்தால்தான அவர்களுடைய வருமானம் பெருகும், வருமானம் பெருகினால் இந்தத் துணிகளை வாங்கும் சக்தி அவர்களுக்கு ஏற்படும், அவர்களுக்கு உடை வாங்கும் சக்தி அதிகரித்தால் நெசவுத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சம் 320 நாட்களுக்காவது ஆக, இந்த சக்தியை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் வேலை. கைத்தறித் துணி தேக்கத்தினால் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் என்று சொல்கிறார்கள்.

வேட்டி, சேலை கொடுக்கிறார்கள். யாரும் அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் வேட்டி, சேலை கொடுப்பதினால் இநதப் பிரச்சனையைத் தீர்த்துவிட முடியாது, அந்த மக்கள் வாழ முடியாது. 67 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும், கூலி கிடைக்கும். வேலை கிடைக்க வேண்டும். இப்போது கிட்டத்தட்ட 120 நாட்கள்தான் வேலை கிடைக்கிறது. மற்ற நாட்களில் அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமைதான். அவர்களுடைய பட்டினி போக வேண்டும், வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டும். அதற்குத் தகுந்த பாதுகாப்பு இருக்க வேண்டும், நிரந்தர வேலை இருக்க வேண்டும். எதிர்காலத்தில் அரசாங்கம் இதுபற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று காவிரி தண்ணீர் பிரச்சனை இருக்கிறது. 1974 ஆம் ஆண்டு காவேரி தண்ணீர் ஒப்பந்தம் ரத்தாகிவிட்டது. இப்போது 1985. ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. மேட்டூர் அணையில் தண்ணீர் உபரியாக இருந்தால்தான் கடைகோடியில் இருக்கிற எங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். இல்லை என்றால் எங்களுக்கு தண்ணீர்



1985 மார்ச் 25] [திரு. பொ. உத்திராபதி]

கிடையாது. காவிரி டெல்டாவில் இருக்கிற விவசாயிகள் தலையில் கையை வைத்துக் கொண்டு இருகக வேண்டியதுதான். இப்போது தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆதாவு கட்சிதான் ஆட்சியில் இருக்கிறது, மத்திய சர்க்காரிலும் காங்கிரஸ் சர்க்கார் தான் இருக்கிறது. ஆகையால் காங்கிரஸ்காரர்கள் வற்புறுத்தி, கர்நாடக அரசை வற்புறுத்தி, இந்த உபரி நீரை நம்பிக் கொண்டிருக்காமல் மீண்டு 100 ஆண்டு காலத்திற்கு காவிர் தரை நம்பிக் கொண்டிருக்கிற விவ்சாய மக்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் கொடுக்கும் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அவையில் அதற்கு அவை முன்னவர் அவர்கள் வாக்குறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சனை. சிங்கப்பட்டி அருகில் முதலிவாக்கம் அணைக் கட்டும் திட்டம் ஒன்று வெள்ளைக்காரர்கள் காலத்தில் போடப்பட்டது. அதை காங்கிரஸ் ஆட்சியும் நிறைவேற்றவில்லை, அதற்குப் பின்னால் வந்தவர்களும் செய்யவில்லை. அந்தத் திட்டம் உருவாகி, அணை கட்டப்பட்டால், உபரி தண்ணீர் வரும்போது, அதை தேக்கி வைக்க முடியும். அந்த நிலை ஏற்பட்டால் பற்றாக்குறை காலத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; விவசாயத்திற்கு உதவியாக இருக்கும். இந்தத் திட்டத்தைப் பற்றி சர்க்கார் கொஞ்சம் சிந்தனை செய்து, எதிர்காலத்தில் அதற்கு நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து, இந்த ஒரு கோடி ரூபாய் திட்டத்திலே ரசாயன உப்புத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக இந்தச் சட்ட மன்றத்திலே கூறி, பட்டுக்கோட்டையில் உள்ள மறவக்காட்டில், அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களாலே, அடிக்கல் நாட்டு விழா கூட நடைபெற்றது. அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. வருஷம் 5 ஆகிவிட்டது. ஆகவே அந்தத் திட்டத்தை இப்போதாவது சர்க்கார் மனதிலே வைத்துக் கொண்டு அந்த 1 கோடி ரூபாய் திட்டத்தைத் துவக்கினால், அங்கே உள்ள சில ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்படும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 25

இறுதியாக, இந்தச் சர்க்கார் போடக்கூடிய நல்ல திட்டங்கள், ஒதுக்கக்கூடிய பணங்கள், எல்லாம் அந்தத் திட்டங்களுக்காகப் போய்ச் சேருகிறதா என்றால் நிச்சயமாக போகவில்லை. இது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குக் கூட தெரியும். அதிகாரிகள் மட்டத்திலே பணத்தைக் கொண்டு போவதாலே, வீண் விரயம் தான் ஆகிறதே தவிர, மக்களுக்குப் பயன் அளிக்கவில்லை. கடைசியாக (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதலவர் அவர்களுடைய சிகிச்சைக்காக ரூ. 77,1930 லட்சம் என்று கொடுத்து இருக்கிறீர்கள். இதற்கு யாரும் மறுப்பு சொல்லவில்லை. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இன்னும் 10 கோடி வந்தாலும் சரி, சர்க்கார் எடுத்த முடிவுப்படி, சர்க்கார் பணத்தை நாம் செலவு செய்யலாம். அதற்கு எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. ஆனால் இப்போது அறிவித்து இருக்கிற முறையானது, அது மக்கள் மத்தியிலே சந்தேகத்தை உருவாக்கும். இப்போது வரக்கூடிய பணத்திற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு, ஒரு கமிட்டியைப் போட்டு, அந்தப் பணத்தை வரவு வைத்து, இந்த 90 லட்சம் போக, மீதிப் பணத்தை முதலமைச்சர் வாயினாலேயே ஒரு நல்ல திட்டத்திற்காக அறிவித்தால் வரக்கூடிய பணத்திற்கு தமிழக மக்கள் மத்தியிலே ஒரு நல்ல பெயர் கிடைக்கும். இப்போது போனால் ஐந்து ஆயிரம் ரூபாய் கொடு என்று . . . (மணியடிக்கப்பெற்றது).

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான இந்த துணை மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் காவிரி நீர் நமக்கு தங்கு தடையில்லாமல் வேளாண்மைப் பெருக்கத்திற்கும், மக்களுடைய உயிர்நாடியாக இருக்கின்ற உணவுப் பெருக்கத்திற்கும் கிடைப்பதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னபோது, இதே அறிக்கையிலே காகித தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்டு இருக்கக்கூடிய 12 கோடி ரூபாய் எனக்கு நினைவுக்கு வந்தது. தமிழகத்திற்கு தேவைப்பட்ட ஒரு தொழில் முறையான முறையிலே ஆரம்பிக்கப்படுகிறது என்பதிலே நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால்



1985 மார்ச் 25] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

அந்தத் தொழில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கக்கூடிய இடத்தி லிருந்து இன்று காவிரியிலே நீர் வரவேண்டும் என்று கவலைப் படக்கூடிய நாம், வந்து கொண்டு இருக்கக்கூடிய நீர் சுகாதாரக் கேடு இல்லாத முறையிலே வேறு எந்தவிதமான கலப்புகளும், அந்த நீரிலே இல்லாமல் காப்பாற்றுவதற்கு போதிய நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே காவிரிக் கரைகளிலே நீரை அடிப்படையாக வைத்து துவக்கப்பட்டு இருக்கக்கூடிய தொழிற்சாலைகளாலே, காவிரியிலே ஓடி வரக்கூடிய நீர் முழுவதுமே பாதுகாப்பான நீராக இல்லை என்று நம்முடைய துறையிலே பரிசீலிக்கப்பட்டு முடிவு கூறப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் தொடர்ந்து புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கக் கூடிய தொழிற்சாலைகள் எல்லாம் அதன் கரைகளிலே ஆரம்பிக் கப்பட்டு, அதனுடைய கழிவுப் பொருள் எல்லாம் இந்தக் காவிரி நீரிலே கலக்கும்படி செய்தால், நாம் எதிர்பார்க்கிற நன்மைகள் கிடைக்காது என்ற அச்ச உணர்வு ஏற்படுகிறது. ஆகவே அந்த நீரை உபயோகிக்கக்கூடிய தொழிற்சாலைகள், அது புதிதாக ஆரம்பிக்கப்படக்கூடிய காகித தொழிற்சாலையாக இருக் கட்டும், வேறு எந்த தொழிற்சாலையாக இருக்கட்டும், அந்தக் கழிவு நீரை, ஓடிக் கொண்டு இருக்கக்கூடிய அந்த நதியிலே கலக்காமல் அவர்கள் அங்கே அதற்கென்று அதை தனியாக பதனிட்டு, வேறு பகுதிக்குத் திருப்பி விடக்கூடிய காரியங்களை இந்த அரசு எச்சரிக்கையோடு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள், தஞ்சையிலே நெல்லுக்காக குவிண்டாலுக்கு ரூபாய் 15 உரமாக தரக்கூடிய அந்த நிலையைப்பற்றி தங்களுடைய கருத்துக்களைச் சொன் னார்கள். நானும் அதை வலியுறுத்திப் பேச விரும்புகிறேன். ஏன் என்றால், கொடுக்கக்கூடிய பணம் 35 ரூபாயாகக் கொடுத்து, பிறகு 30 ரூபாயாக ஆகி, இப்போது 15 ரூபாயாகக் குறுகி இருப்பது ஒரு நல்ல அறிகுறியாக வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தூண்டுகோலாக தரக்கூடிய அளவிற்கு இல்லை என்பதை நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். அப்படி கொடுக்கக்கூடிய பணம் எதுவாக இருந்தாலும் அதை ரொக்கமாகக் கொடுப்பது என்பது விரும்பத்தகாத ஒரு விளைவை உண்டாக்கும் என்று நான்

சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். ஏனென்றால் இப்படி ஏழை மக்களுக்கு, இல்லாதவர்களுக்கு இதற்கென்று கொடுக்கக் கூடிய சீட்டைக் கூட, அது 15 ரூபாய்க்கான சீட்டாக இருந்தாலும், தங்களுடைய வாழ்க்கைக் கஷ்டத்தின் காரணமாக 10 ரூபாய்க்கு வேறு ஒருவருக்கு அதை ஈடுதருகிற வகையில், அதை அடகு வைத்து விட்டு, அரசாங்கம் தரும் இந்த நன்மையைக் கூட பெற முடியாமல் அந்த விவசாய ஏழை மக்கள், வசதிகளை பெறுவதற்கு மறுக்கப்படுகிறார்கள். ஆகவே, அதையும் அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே மின் துறையிலே செய்யப்பட்டிருக்கக்கூடிய சலுகைகள் மேலோட்டமாக இன்று வரவேற்கப்படுகிறது. ஆனால் பரிந்திறனுக்கு ஆண்டுக்கு 75 ரூபாய் வாங்கக் கூடிய அந்தத் தன்மையை இந்த அவையிலே உள்ள மற்ற உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப்போல நானும் எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒவ்வொரு வட்டாரத்திலேயும் அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக்கக்கூடிய நிலைமைக்கேற்ப, ஆண்டுக்கு எத்தனை மாதகாலம் அந்தச் சலுகையை பயன் படுத்த தக்க அளவிலே நீர்நிலை வசதி அங்கேயிருக்கிறது அல்லது கிடைக்கிறது என்பதையெல்லாம் கணக்கிட்டு அதற்குத் தக்க, அவர்கள் மின்சாரத்தை உபயோகப்படுத்துவதற்கு தக்க வகையில் அந்தச் சலுகையை வழங்கினால் அது அவர்களுக்கு நல்ல பயனைக் கொடுக்கும் என்று நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

அதையடுத்து இன்று நம்முடைய தமிழகத்திலே இரண்டு இடங்களிலே, சமுதாயங்களுக்கிடையே இலேசத்தை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவைகளை இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, இந்த அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய நகர்ப்பகுதியை ஒட்டியிருக்கக்கூடிய ஆவடி 'நகரத்திற்கு அருகில் உள்ள பட்டாபிராமில், கடந்த 5, 6 ஆண்டுக் காலமாக, முறையாக முறைப்படி கட்டப்பட்டு தொழுகையும் நடத்தப்பட்டிருக்கக்





கூடிய பள்ளிவாயில் ஒன்றை அரசு அதிகாரிகள் இடித்து தரைமட்டமாக்கியிருக்கிறார்கள். அப்போது அங்கே நிகழ்ந்த ஒரு நல்ல நிகழ்ச்சியையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவிரும்புகிறேன்.

இப்படிப்பட்ட பள்ளிவாயிலை இடிப்பதற்கான அரசாங்க அதிகாரிகள் வந்தபோது அங்கேயிருந்த சிறுபான்மை முஸ்லீம் சமுதாயத்தினர் எவ்வளவு வேதனைப் பட்டார்களோ அதை விட அதிகமாக அங்கேயிருந்த இந்து சமுதாயத்தினர் வருத்தப் பட்டு, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆர்வம் காட்டி, அதிகாரிகள் இப்படிப்பட்ட செயலில் ஈடுபடக்கூடாது என்று இடித்துரைத்திருக்கிறார்கள். என்றாலும் கூட, இந்த விரும்பத் தகாத சம்பவம் நடந்து முடிந்திருக்கிறது. ஆனால் அதைப் பற்றி அரசு உடனடியாக விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் அந்தப் பள்ளிவாயில் ஏற்கெனவே. (குறுக்கிடு)

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டாபிராம் பள்ளிவாசல் இடிக்கப்பட்ட விவரம் எனக்கும், அந்தப் பகுதி மக்களால் எடுத்துச் சொல்லப் பட்டு. அதற்குரிய விவர அறிக்கையை உடனே தருமாறு கோரியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு அமைச் சருடைய அக்கறையோடு கூடிய உடனடியான பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல மற்றொரு நிகழ்ச்சி. இந்த மாத ஆரம்பத்திலே நாகூரிலே தர்ஹாரி விழா நடந்துக் கொண்டிருந்த போது லட்சோபலட்சம் இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், கிறித்தவ, மக்கள், இந்து சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் அங்கே கூடியிருந்த முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் அங்கே கூடியிருந்த நேரத்தில், அந்த உற்சவத்தினுடைய மிகக் குறிப்பிடத்தக்க ஒரு காலக் கட்டத்தில், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய சுங்க அதிகாரி சோமுராஜன் என்பவர் மிக அத்து மீறிய முறையிலே அங்கிருந்த மக்களிடத்திலேயும் வியாபாரிகளிடத்திலேயும் நடந்திருக்கிறார்கள்.

அவருடைய நடவடிக்கை சரியல்ல என்பதை நம்முடைய அரசினுடைய காவல் துறை அதிகாரிகளே பொறுப்புணர்ச்சியோடு சுட்டிக்காட்டி அவருடைய அந்த மீறலைத் தடுக்க முயற்சித்திருக்கிறார்கள் என்றாலும் கூட, ஒரு வெறி உணர்ச்சியோடு கிட்டத்தட்ட 26 ரவுண்டுகள் சுடியிருந்த அப்பாவி பொதுமக்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் காரணமாக, அந்தக் கூட்டத்திலே பல பகுதிகளிலே பெண்களும், குழந்தைகளும் சிதறி ஓடி, பல விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடந்து ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதைப்பற்றி ஒரு நீதி விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை அந்த ஊரிலுள்ள எல்லா தரப்பு மக்களும் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் டிபார்ட்மென்ட் என்குயரியை நடத்தத்தான் அரசு அறிவித்திருக்கிறது. அதைப் பற்றி அந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு எந்த திருப்தியும் இல்லை. ஆகவே, ஒரு மாவட்ட நீதிபதியைக் கொண்டு, தக்க ஒரு விசாரணைக் கமிஷனை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே நான் பங்கு கொண்டு பேசியபோது, நான் வற்புறுத்தி பேசிய ஒரு கொள்கை பற்றி, மதுவிலக்கை பற்றி காங்கிரஸ் உறுப்பினரும் வற்புறுத்தியது எனக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய முறையிலும், ஆதரவு தரக்கூடிய முறையிலும் அமைந்து இருந்தது. ஆனால் பெருமதிப்பிற்குரிய டாக்டர் சமரசம் அவர்கள் பேச எழுந்தபோது அதைப்பற்றி ஒரு சமரசமான கருத்தை தெரிவிப்பார் என நான் எதிர்பார்த்தேன். அவர் உவமை நயத்தோடு பேசினார். அந்த உவமை நயத்தோடு நான் தொடர்வதானால், அது வெறுப்பிதமான ஒரு சூழலை உண்டாக்கும் என்பதால் நான் என்னையே தவிர்த்துக்கொள்கிறேன். மதுரை கன்னி மாடத்திலே காக்கப்பட்ட ஒரு கனிகைக்கு ஒப்பிட்டு, யாரோ அழைத்து செல்லப்படக்கூடாத பகுதிகளுக்கு அழைத்துச் சென்று விட்டார்கள் என்று சொன்னார். யாரோ செய்த தவறை நாமும் செய்ய வேண்டாம் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏதோ ஒரு நிலைக்கு ஆளாக்கப் பட்டுவிட்டவர்களை அபயம் கொடுத்து காப்பாற்றி அவர்களை





இருக்க வேண்டிய இடத்திலே இருத்தி வைத்து, காப்பகத்திலே வைத்து காப்பாற்றுவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். யாரோ தவறு செய்து விட்டதை நீடிப்பதற்கு உரிய முறையிலே வக்காலத்து வாங்கி பேசவேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான, துணை மானியக் கோரிக்கைகளுக்கும், விரிவான துணை மதிப்பீடுகளுக்கும் இந்தப் பேரவை தங்களுடைய முழு அனுமதியை தரவேண்டும் என்ற முறையில், அதுபற்றிய சுருக்கமான விளக்கத்தை, இந்த துணை மானிய கோரிக்கைகளை பற்றி இந்த அவைக்கு அறிமுகப்படுத்தும் போது நான் தெளிவாக எடுத்துச்சொன்னேன். இங்கே அதுபற்றிய விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஓராண்டிற்கான பொது வரவு-செலவு திட்டத்தில் பொதுவாக என்னென்ன கருத்துக்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமோ, அவை அத்தனையும் எடுத்து சொல்லிவிட்டார்கள். அந்த வகையில் அவர்கள் எல்லாம் திருப்தி அடைந்திருக்கிறார்கள், என்பதிலே எனக்கும் ஒரு திருப்தி. அது மட்டுமல்லாமல் நாளை வைக்க இருக்கின்ற வரவு-செலவு திட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டம் என்று வருகின்றபோதும், அதையொட்டி பொது விவாதம் நடத்துகின்ற போதும் பொதுவான பல கருத்துக்களை உறுப் பினர்கள் பல பேர்கள் எடுத்துச் சொல்வதற்கு நல்ல வாய்ப்புகள் ஏற்படுகின்றன என்பது மட்டும் அல்ல, அதற்குப் பிறகு ஒவ்வொரு துறையாக எடுத்துக்கொண்டு, விரிவாகவும், விளக்கமாகவும் அலசி ஆராய்கின்றபோது, மேலும் பல கருத்துக்கள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. என்றாலும் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு வகையிலே எனக்கு உதவி செய்திருக்கிறார்கள். ஒரு மணிக்குள்ளேயே முடிக்க வேண்டும் என்ற நிலை வருகின்றபோது, [illegible] எட்டு நிமிடம் பேசினால் போதும் என்ற முடிவிற்கு வந்ததில் ஒரு மகிழ்ச்சி.

அந்தந்த துறையினரால் முடித்துக்கொள்ளப்பட வேண்டுமென்றும், அவை பற்றி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளில் துறையினர் ஈடுபட வேண்டுமென்றும், ஒரு பொதுவான ஆணை எல்லா துறையினருக்கும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இங்கே பல்வேறு பிரச்சினைகள் பற்றியும், தொகுதியிலே இருக்கின்ற குறைபாடுகளை நீக்குவதற்கான முயற்சிகள் பற்றியும், நிறைபாடுகளை ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வகைகளிலே இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் அந்தந்த துறையினர் சிறப்பாக ஈடுபடுவார்கள்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் மாதிரியும், மற்ற உறுப்பினர்கள் மாதிரியும், எத்தனையோ பல நேரங்களில் கேள்வி வடிவமாக வந்திருந்தாலும் கூட, தெளிவாகக் கேட்டிருக்கிற நிலைமைகளில் எடுத்துச்சொல்வதற்குக் கூட வழிவகை ஏற்படும். இருந்தாலும் அவை ஏற்கப்பட்ட வினாக்களாகக் கொண்டு, அவற்றுக்கு விளக்கங்களை எந்த அளவிற்குத் தரலாம் என்பது, பொது விவாதத்தின் இறுதியிலே எடுத்துச் சொல்லலாம். இங்கே பல்வேறு உறுப்பினர்கள் காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்தப் பிரச்சினை இந்த அவையில் இருக்கிற 234 உறுப்பினர்களுக்கும் கவலை தரக் கூடிய பிரச்சினையாகத்தான் இருக்கிறது. ஆகவே இந்த பிரச்சினையில் கர்நாடக மாநிலமும், தமிழக மாநிலமும் ஒட்டுமொத்தமான ஒரு உடன்பாட்டிற்கு வந்து, அதை நிறைவேற்றுகின்ற முறையில் நீங்கள் பேசுங்கள், நீங்கள் பேசுங்கள் என்று மத்திய அரசு பல்வேறு கூட்டங்களைக் கூட்டி, அவ்வப்போது எடுத்துச் சொல்கிறது. அவர்கள் எடுத்துச் சொல்லிய கருத்துக்கள் இரு தரப்பினருக்கும் ஒத்துவரவில்லை. நாம் எடுத்துச் சொல்கின்றவைகளுக்கு அவர்கள் ஒத்துவரவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட, கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் இங்கே வந்திருந்தபோது கூட, இந்தப் பிரச்சினையைத் தமிழகமும், கர்நாடகமும் கலந்துபேசி, ஒரு சுமுகமான முடிவிற்கு வரலாம் என்ற அந்த வார்த்தைகளை எடுத்துச்



சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே விரைவிலே அவை பற்றி பேசும்போது, ஒரு முடிவான எண்ணம் ஏற்படும் என்று கருதுவோம். அதற்கு இந்த அவையினுடைய அத்தனை உறுப்பினர்களுடைய கருத்துக்களும், மற்றவைகளும் மிகச் சிறப்பாகப் பயன்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 கொடுக்கப்பட்டது, இப்போது ரூ. 15 கூடுதலாகக் கொடுக்கிறோம் என்ற நிலை வருகிறபோது, ரூ. 35 கொடுக்கும்போது கூட, அதைக் கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசு நம்மை தடுத்து நிறுத்திற்று. நாங்கள் என்ன விலையை ஒரு குவிண்டாலுக்கு நிர்ணயிக்கிறோமோ, அகில இந்திய அளவிலே, அதைத்தான் நீங்கள் கொடுக்க வேண்டுமே தவிர, அதற்குக் கூடுதலாகக் கொடுத்தால் உங்களுக்கு ரிசர்வ் வங்கிக் கிரெடிட் தர மாட்டோம் என்று 2, 3 முறை அவர்கள் மறுத்துவிட்டார்கள். இருந்தாலும் அப்போது ஏற்பட்ட வறட்சி நிலையை, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்ற கொடுமையான நிலையைபொட்டி, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள தாலுக்காக்களில் எல்லாம், அனைத்திற்கும் நூற்றுக்கு நூறு கொள்முதலை அரசாங்கமே ஏற்றுக்கொள்வது என்று மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியோடு செய்தோம். மற்றவைகளைப்பற்றியெல்லாம் பொது விவாதம் வருகிறபோது எடுத்துச் சொல்லலாம் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது பிற்பகல் 1 மணி. விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

பேரவை முன்னுள்ள கேள்வி—

**"1984-85 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20—3—1985 நாளிட்ட மானியக் அறிவிப்பில் 2-வது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும், அவற்றின் எதிரே குறிப்பிடப் பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்களுக்கு 1984-85 ஆம் ஆண்டு கூடுதல் செலவுகளுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."**

(பேரவைத் தலைவர்) [1985 மார்ச் 25

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**நிறைவேற்றப்பெற்ற 1984-85 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.**

A. வருவாய்க் கணக்கில் செலவு.

| | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| கோரிக்கை- | 1—நிலவரித் துறை | 1,49,60 |
| ஷை | 2—மாநில ஆயத் தீர்வைத் துறை | 62,78 |
| ஷை | 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம். | 31,51 |
| | | **31,51** |
| ஷை | 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிர்வாகம். | 2,29,13 |
| ஷை | 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம். | 13,70 |
| ஷை | 6—பத்திரப் பதிவு | 1,07,19 |
| | 7—மாநிலச் சட்டமன்றம் | 6,86 |
| ஷை | 8—தேர்தல்கள் | 9,18,96 |
| ஷை | 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 4,17,55 |
| ஷை | 10—பால் வழங்கு திட்டங்கள் | 1 |
| ஷை | 11—மாவட்ட நிர்வாகம் | 3,71,59 |
| ஷை | 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். | 41,22 |
| ஷை | 13—நீதி நிர்வாகம் | 91,95 |
| ஷை | 14—சிறைச்சாலைகள் | 1,35,94 |
| ஷை | 15—காவல் துறை | 21,54 |



1985 மார்ச் 25]

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| | | 22,88 |
| கோரிக்கை— | 16—தீயணைப்புப் பணிகள் | 40,29,27 |
| ஷை | 17—கல்வி | 7,78,91 |
| ஷை | 18—மருத்துவம் | 9 |
| ஷை | 19—பொதுச் சுகாதாரம் | 29,32,18 |
| ஷை | 20—வேளாண்மை | 2 |
| ஷை | 21—மீன்வளம் | 6 |
| ஷை | 22—கால்நடை வளர்ப்பு | 42,94 |
| ஷை | 23—கூட்டுறவு | 7,63,49 |
| ஷை | 24—தொழில்கள் | 40,08 |
| ஷை | 25—சின்கோனா | 22,25,36 |
| ஷை | 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் | 94,72 |
| 25 | 27—கதர்த் தொழில் | 13,57,34 |
| ஷை | 28—சமுதாய நல் வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 62,65 |
| ஷை | 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். | 8 |
| | 30—சமூக நலன் | 4 |
| ஷை | 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். | 19 |
| ஷை | 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். | 22,60,26 |
| | 34—நகர்ப்பகுதி வளர்ச்சி | 98,63,64 |
| ஷை | 35—நுகர்பொருள் வழங்கல் | [illegible] |
| ஷை | 36—பாசனம் | 1,04,28 |
| ஷை | 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள். | 2,06,31 |
| ஷை | 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும். | 1 |
| ஷை | 39—சாலைகளும் பாலங்களும் | |

மற்றும் பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு, அவர்களும் பதிலைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று எழுந்து போய்விட்டார்கள். பல பேர்கள் இருக்கிறார்கள். சில பேர் பதில் வந்தாலும் சரிதான், வராவிட்டாலும் சரிதான் என்று போய்விட்டார்கள். அந்த வகையில் திருப்தி தான். பொதுப் படையாக உறுப்பினர்கள் பல பேர்கள் எடுத்துச் சொன்ன கருத்துகளுக்கு நேரம் இல்லை என்றாலும் கூட ஒரு வகையில் நான் சொல்ல விரும்புகிறேன்.

நாம் மொத்தத்திலே 976 கோடியே 12 இலட்சம் கேட்டிருந்தாலும், அதிலே ரூ. 336 கோடியே 77 இலட்சம் வருவாய் கணக்கிலும், ரூ. 639 கோடியே, 35 இலட்சம் மூலதன கடன் கணக்கிலும் வருகின்றன என்ற கணக்கை நாம் போட்டாலும் கூட உள்ளபடியே கேட்க இருப்பது, இந்த அவை அனுமதி அளிக்க வேண்டியதாக இருப்பது ரூ. 412 கோடியே 68 இலட்சத்து 30 ஆயிரம் ஆகும். கணக்கிலே ஏன் அப்படி வருகிறதென்றால், ரிசர்வ் வங்கியில் வேஸ் அண்டு மீன்ஸ் என்று சொல்லப்படுகின்ற ஓரளவிற்கு நாம் வாங்கவும், கொடுக்கவுமான ஒருவகையை அரசியல் அமைப்புச் சட்டம் செய்திருக்கிறது. அந்த வாங்கவும், கொடுக்கவும் இருக்கின்ற வகைகளிலே நாம் வாங்குகின்றபோது வரவிலே வைக்கப்படுகிறது, திருப்பி கொடுக்கும்போது செலவு கணக்கிலே எழுதப்படுகிறது. நாம் ரூ. 15 கோடி வாங்கி, திரும்ப 9 கோடி ரூபாய் செலவிடும்போது அந்த 9 கோடி ரூபாய் செலவு கணக்கிலே வருகிறது. அடுத்த வாரம் மறுபடியும் ரூ. 25 கோடி வாங்கி அதில் ரூ. 21 கோடி செலவழிக்கும்போது, அந்த 21 கோடி ரூபாய் செலவு கணக்கிலே வருகிறது. அந்த வகையில் ரூ. 976 கோடியே 12 இலட்சம் என்று கணக்கு வைக்க வேண்டிய முறையில் வைக்கப்பட்டு இருக்கிறதே தவிர, இந்த அவையிலே எல்லோருடைய அனுமதியும் பெற வேண்டி ரூ. 412 கோடியே 68 இலட்சத்து, 30 ஆயிரம் கேட்கப்பட இருக்கிறது. நிதி ஒதுக்க மசோதாவும் இங்கே வர இருக்கிறது. பெரும்பாலும், செய்யப்பட்ட செலவுகளுக்கு இங்கே இந்த அவையினுடைய அனுமதியை கேட்கப்படுகின்ற அளவிற்கு விவரங்களும், விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன. அதைத்தான் இந்த விளக்க ஏட்டிலே எந்த வகைக்கு செய்யப்பட்டது என்பதும், எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பதும், ஏன் செல



வழிக்கப்பட்டது என்பதற்கும் விவரக் குறிப்புகள் தரப்பட்டிருக்கிறது. சில பல திட்டங்கள்தான், 'நியூ ஸ்கீம்ஸ்' புதுத் திட்டங்கள் என்ற பெயரிலே இந்த அவைமுன் அனுமதி பெற்று, கோரிக்கைகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாம் சேர்ந்து ரூ. 412.68 கோடி ரூபாய் வருகிறது. இங்கே பல்வேறு பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எழுப்பியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும் போது அவர் உரையாற்றினார் என்பதைவிட பல வினாக்களை எழுப்பினார் என்று தான் நான் சொல்லவேண்டும். அவர் உரை ஆரம்பத்திலிருந்து கடைசி வரையிலும் பல வினாக்களை எழுப்பியிருக்கிறார்கள். என்ன, எப்படி, எதற்கு என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். அத்தனை வினாக்களுக்கும் விடையளிப்பது என்பது உடனே எளிதல்ல. அதிலே ஐய வினாக்கள் சில பல இருக்கின்றன. அறியா வினாக்கள் சிலபல இருக்கின்றன. அறியா வினா என்றால், அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக கேட்கப்படுகின்ற வினா. ஐய வினா என்பது சந்தேகமாய், இப்படியா, அப்படியா என்று இல்லாமல் இருப்பதற்கு பெயர் ஐய வினா. அறிந்தே கேட்கிற வினாக்களுக்கு அறியும் வினா என்று பெயர். இதில் ஐய வினாக்களும் இருந்திருக்கின்றன. அறியா வினாக்களும் இருந்திருக்கின்றன. அறியும் வினாக்களும் இருந்திருக்கின்றன. ஆனால் அவை பற்றிய குறிப்புகளுக்கெல்லாம் அவர்கள் உடனடியாக எடுத்துச்சொல்வதற்கு இல்லையென்றாலும், 1985-86 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது அவையிலே பொது விவாதம் வருகிறபோது எனக்கு ஏராளமான நேரம் கிடைக்கும் என்று கருதுகிறேன். அப்போது அவர்கள் எழுப்பிய பல்வேறு வினாக்களுக்குத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை மட்டும் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பினாலும், அவைகள் எல்லாம் புறக்கணிக்கப்படத் தக்கன அல்ல. நான் பதில் சொல்லாவிட்டாலோ, அல்லது மற்ற வகைகளிலே எடுத்துச்சொல்லாவிட்டாலோ, அவையெல்லாம் புறக்கணிக்கப்பட்டன அல்ல. இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லிய கருத்துக்கள் அத்தனையும்,

[1985 மார்ச் 25

வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| கோரிக்கை- | 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். | 24,42 |
| டிட்டோ | 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 21,61,07 |
| டிட்டோ | 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 16,63,06 |
| டிட்டோ | 43—பலவகை | |
| டிட்டோ | 44—எழுதுபொருள்-அச்சுத் துறை | 1,48,81 |
| டிட்டோ | 45—காட்டுவளத் துறை | 75,81 |
| டிட்டோ | 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 2,89,69 |
| டிட்டோ | 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். | 57,23 |
| டிட்டோ | 48—ஊரகத் தொழில்கள் | 47,18 |
| | மொத்தம் — வருவாய்க் கணக்கு | 3,18,51,64 |

வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| கோரிக்கை— | 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 2 |
| டிட்டோ | 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 1,87,27 |
| டிட்டோ | 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு. | [illegible] |
| | 52—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | |
| டிட்டோ | 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 1 |



1985 மார்ச் 25]

B வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| கோரிக்கை- | 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. | 11,59 |
| டிட்டோ | 56—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 1,23,37 |
| டிட்டோ | 57—பல்வகை மூலதனச் செலவு. | 7,31,29 |
| | மொத்தம் — B மூலதனக் கணக்கு | 11,09,78 |

C கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை— | 58—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும். | 83,06,88 |
| | பெரு மொத்தம் | 4,12,68,30 |

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஊ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(இ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (26—3—1985) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

124 தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு — நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 30—11—1982-ஆம் நாளிட்ட 1137 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியல் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

125. தமிழ் நாடு மின்னணு நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டு மூன்றாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் செயல்படுவது குறித்த (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

126. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1982-83-ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மற்றும் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (அ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

127. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1981-82-ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு — அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-ஆம் பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

136323